ஸ்ரீ:

ஸ்ரியை நம:

ஸ்ரீமதே நாராயணாய நம:

ஸகல ஜகதுஜ்ஜீவந மூலமான,

ஸ்ரீஸஹஸ்ரநாம பாஷ்யம்.

இஃது

ஸ்ரீமத் கீதாபாஷ்ய பாகவதாதிகளைத் தமிழில்

மொழிபெயர்த்தவரான,

மூசூர்ப்பாக்கம் - கிடாம்பி,

உ. வெ. ரங்காசாரியரால்

தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு,

ஸ்ரீபெரும்பூதூர்

பிரஸந்ந-வெங்கடாசாரியரால்

ஸ்வகீய

ஸ்ரீஹயக்ரீவமுத்திராக்ஷரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

MADRAS.

1896.

விலை ரூபாய் ௧—[illegible]—0.

ஸ்ரீயைநம:

விஞ்ஞாபநம்.

ஸர்வலோக சரண்யனான ஸ்ரீமந்நாராயணனுடைய 'ஆ ஷமான ஸ்ரீவேதவ்யாஸபகவான், தம்முடைய பரமகிருபைய ஹிதார்த்தமாக வேதார்த்தத்தை விவரிக்கவேண்டி பஞ்சமவே ஹாபாரதத்தைச் செய்தருளினார். ஸபாதலக்ஷம் கிரந்தங்கரு அதில் ஸ்ரீகீதை, நாராயணீயம், ஸ்ரீஸஹஸ்ரநாமாத்தியாயம முதலாக ஸாரமான பாகங்கள் பல உண்டாகிலும், அவற்றுள் ஸ்ரீஸஹஸ்ரநாமாத்தி யாயம் மிகவும் ஸாரதமமானது. மற்றவைகளைக்காட்டிலும் இதுஸாரதம மா கைக்குக்காரணம்:—பகவானுடைய ஸ்வரூப ரூப குண விபூதிகளையே பிரதிபாதிக்கையும் "கலௌஸங்கீர்த்ய கேசவம்" என்று ஸங்கீர்த்தந மாத் திரத்தால் இக்கலிகாலத்தில் தர்மாதி ஸகல புருஷார்த்தங்களையும் ஸாதித் துத்தருகையுமாம். இப்படி யிந்த ஸஹஸ்ரநாமம், கேவலம் ஸங்கீர்த்தந மாத்திரத்தால் பலனை அளிக்கவல்லதா யிருந்ததாகில், இதின் பொருள் எத் தகைத்ததாய் விளங்குமோவென்று, அர்த்தவிசாரம்பண்ணி அந்தசுகத்தை அநுபவிக்க வேண்டுமென்கிற அவா, அனைவர்க்கு முண்டாமதே! ஆனது பற்றியே இதற்கு மதத்திரயத்திலும் பாஷியமியற்றப்பட்டது.

இனி இதின்பொருள் அனைவர்க்கும் அவசியமானபின்பு, அதுதான் பாஷியத்தைக்கொண்டு அறியவேண்டி, அந்த பாஷியம் கீர்வாணபாஷை யாயிருப்பதுபற்றி அந்த பாஷையில் பரிக்ஞானமில்லாதவர்கள் "இதின் பொருளாசை நமக்கில்லை" என்கிற குறையுடன் கைவாங்கவேண்டியதாய் நேரிட்டது. இக்குறைதீரவேண்டிய அனேகம் ஆஸ்திக சிகாமணிகளின் நியமநத்தை அவலம்பமாகக்கொண்டு, நாயினேன் அவற்றுள் ஸ்ரீபராசர பட்டாரக விரசிதமான விசிஷ்டாத்வைதபாஷ்யத்தைத் திருநாமந்தோ றும் விடாமல் தமிழில் மொழிபெயர்த்து, ஆங்காங்கு மதபேதமுண்டான விடங்களில் சங்கரபாஷ்யத்தையும் மொழிபெயர்த்துச்சேர்த்து அச்சிடத் துணிபுற்றேன்.

பற்பநாபனுக்குப் பள்ளிகொள்ளிடமாய்ப் பரந்த பாற்கடலை, பகுத் தறிவற்றதோர் பூனை, பருகப புகுவதுபோல, பரிமிதகம்பீரபாஷிகளின் பாஷியத்தை இப்புல்லறிவாளன் பகரமுயன்றது பரிஹாஸாஸ்பதமாயி னும், "காக்கைவாயிலுங் கட்டுரைகொள்வர் காரணகருளக்கொடியானே" என்கிறபடியே, தன்னைப்பழிச்சுவதா யிழிந்தது காக்கையாயினும் அதின் மொழியைக் கட்டுரையாக்கிக் கொள்ளுகின்ற கார்முகில்வண்ணனைக் கட கென்று நம்பியிழிந்தமைகொண்டு இது உசிதமேயாமென்று மகித்து குண நிஷ்டர்களான மஹான்கள் இதில் குணத்தையே சீர்தூக்கிச் சிறியேனைச் சிறப்பிக்கவேண்டுமென வேண்டிக்கொள்கின்றனன்.

వచసామమదూషితోపివిద్వాన్ గుణగంధం నజహాతి వైభవంస్వమ్ ।
జనకేనవిలీఢదుగ్ధసింధుర్న హిగాహేః పదమశ్నుతే పృథుశ్రీః ॥

மு. கி. ர.

விளம்பரம்.

	ரூ.	அ.	தபாலுள்பட		
ஸ்ரீஸஹஸ்ரநாமபாஷ்யம், கிரந்தம் அல்லது தெலுங்கு ச்லோகங்களுடன்	1	12	2	0	0
மேற்சொல்லியபடியே ஸ்ரீமத்கீதாபாஷ்யம்	1	8	1	12	0

1. ஸ்ரீபாகவதம் தசமஸ்கந்தம் கிரந்தலிபி தெலுங்கு லிபிகளில் ச்லோகங்களும், தமிழில் பதவுரையும், தாத்பரியார்த்த விசேஷார்த்தங்களுமாய் அச்சிடப்பட்டு வருகின்றது. இப்பொழுது நாலில் ஒருபாகம் ஆயிற்று; இன்னும் ஒருவருஷத்தில் முடிவுபெறும்; முடிவதற்குள்ளாக ஒரே தடவையாய் பணம் அனுப்புவோருக்கு ரூபாய் 6-க்கும், இரண்டுதடவையாய் அனுப்புவோருக்கு ரூபாய் 8-க்கும், முடிந்தபின்பு வேண்டுவோருக்கு ரூபாய் 12-க்கும் கொடுக்கப்படும். தபாலில் வரவழைக்க நினைத்தவர்கள் சார்ஜ் கொடுத்துக்கொள்ளவேண்டும்.

2. இன்னும் மதக்கிரந்தங்களும் விசேஷமாய் வைஷ்ணவமதக் கிரந்தங்களும் இவ்வச்சுக்கூடத் தலைவர்களில் ஒருவருக்கு எழுதினாலும் அனுப்பப்படும்.

இப்படிக்கு,

ஸ்ரீ மூ. கிடாம்பி. ரங்காசாரியர்.

ஸ்ரீ ஸ்ரீ. பிரஸந்ந. வெங்கடாசாரியர்.

ஸ்ரீஹயக்ரீவமுத்திராக்ஷர சாலாதிகாரிகள்.

நெ. 101. சைனாபஜார்தெரு மட்ராஸ்.



శ్రీరస్తు.

శ్రీమతేనారాయణాయనమః

హరిఃఓమ్॥ శుక్లాంబరధరంవిష్ణుంశశివర్ణంచతుర్భుజమ్।

ప్రసన్నవదనంధ్యాయేత్సర్వవిఘ్నోపశాంతయే॥ *

வெண்மையான வஸ்திரம் தரித்து சந்திரன் போன்ற திருமேனி காந்தியும் நான்கு திருத்தோள்களுமாய், தண்ணளி பொருந்திய திருமுகமண்டலத்தோடு விளங்குகின்ற ஸ்ரீமகாவிஷ்ணுவை ஸகலமான விக்னங்களும் சமிக்கைக்காக த்யாநம் செய்யக்கடவன். (௧)

వ్యాసంవసిష్ఠనప్తారంశక్తేఃపౌత్రమకల్మషమ్।

పరాశరాత్మజంవందేశుకతాతంతపోనిధిమ్॥

வஸிஷ்டருடைய கொட்பேரனும், சக்தியினது பேரனும், பராசரர் மைந்தனும், சுகப்ரம்மத்தின் தாதையும், பாபரஹிதனும், தபோநிதியுமான வியாஸரை வணங்குகிறேன். (௨)

వ్యాసాయవిష్ణురూపాయవ్యాసరూపాయవిష్ణవే।

నమోవైబ్రహ్మనిధయేవాసిష్ఠాయనమోనమః॥

வியாஸர்தான் விஷ்ணுவோ! விஷ்ணுதான் வியாஸரோ! என்றுவிகற்பிக்கும்படியாய், தபோநிதியாய், விளங்குகிற வஸிஷ்டவம்சத்தில் தோன்றியவரான ஸ்ரீவியாஸபகவானை நமஸ்கரிக்கிறேன். (௩)

అవికారాయశుద్ధాయనిత్యాయపరమాత్మనే।

సదైకరూపరూపాయవిష్ణవేసర్వజిష్ణవే॥

ய், சுத்தனாய், நித்தியனாய், பரமாத்மாவாய், எப்பொழு
திருமேனியைப் பரிக்கிரஹித்தவனாய், ஸகலத்தையும
யனாய் விளங்குகிற ஸ்ரீமகாவிஷ்ணுவின் பொருட்டு நமஸ் (௪)

రణమాత్రేణ జన్మసంసారబన్ధనాత్ ।
తేనమస్తస్మైవిష్ణవేప్రభవిష్ణవే ॥

ఓన్నమోవిష్ణవేప్రభవిష్ణవే ।

எவனை ஸ்மரித்தமாத்திரத்தால் புருஷன் ஜன்மம்துடக்கமான ஸம்ஸாரபந்தத்தினின்றும் விடுபடுகிறானோ ஸர்வஸமர்த்தனான அந்தவிஷ்ணுவின்பொருட்டு நமஸ்காரம். (௫)

இந்தக்கிரந்தத்தைப் படனம் செய்பவர் முதலில் தெரிந்துக் கொள்ளவேண்டிய விஷயம்.

1-வது. இதில் சேர்க்கப்பட்ட படத்தில சரதல்ப கதரான பீஷ்மர் ஸஹஸ்ரநாமோபதேசம்பண்ண, அதை தருமபுத்திராதிகளும் கண்ணபிரானும மற்றும் வியாஸாதி மஹர்ஷிகளும் சிரத்தையோடு கேட்கிறதும், அவர்கள் வந்திறங்கின வாஹநாதிகளும் காணப்படும்.

2-வது. ஒவ்வொரு பக்கத்திலும் மேலே மூலசுலோகங்களும், அதின்கீழ் அந்த சுலோகங்களுக்குப் பதவுரையும், அதன்கீழ் அதற்குண்டான விசிஷ்டாத்வைத பாஷியமும், அதன்கீழ் பெரும்பாலும் மதபேதமுள்ளவிடங்களில் அத்வைத பரமானபாஷியமும், அதன்கீழ் அந்தபாஷியங்களில் உதஹரிக்கப்பட்ட ப்ரமாணவசனங்களுமாய் வரையப்பட்டிருக்கின்றன.

3-வது. பாஷியத்தில் உதஹரிக்கவேண்டிய வசநங்களுக்குப்பதிலாக நெம்பர் கொடுத்து, அந்தநெம்பருக்கு சரியாகக் கீழே அவ்வசநம் எழுதபட்டிருக்கிறது.

4-வது. இப்படி பத்திரந்தோறும் கண்டிருக்கிற வசநங்களுக்குத்தக்கபடியே கிரந்தத்தின் கடைசியில் நெம்பர்கொடுத்து அவ்வசநங்களுக்குப பொருள்கூறி, அதற்கு “பிரமாணார்த்த ஸங்கிரஹம்” என்று பெயரிடப்பட்டிருக்கிறது.

5-வது. பத்திரந்தோறும் விசிஷ்டாத்வைதபாஷிய மிதென்று காட்டுவதற்காக (வி.) என்கிற ஒரெழுத்தும், அத்வைதபாஷியமிதென்றுகாட்டுவதற்காக (அ.) என்கிற ஒரெழுத்தும் எழுதப்பட்டிருக்கும்.

6-வது. விசிஷ்டாத்வைத பாஷியத்தில், பத்து திருநாமம், பதினைந்து திருநாமம்சேர்த்து ஒரு ஸங்கதியாய் பகவானுடைய பரவ்யூஹ விபவாதி அவஸ்த்தைகளில் பிரகாசித்த குணசேஷ்டிதங்களைப் பிரதிபாதிப்பதாய் சொல்லப்பட்டிருக்கும்.

ஸ்ரீ:

ஸஹஸ்ரநாமாத்தியாயத்தில் சேராத விஷயமாயினும்,
ஜபத்துக்குபயோகமாக சிஷ்ட ஸம்பிரதாய
மாய் அநுஸந்திக்கப்படும் விஷயங்க
ளாகையால் உரையப்படுகின்றன.

విష్ణుంజిష్ణుంమహావిష్ణుంప్రభవిష్ణుంమహేశ్వరమ్ । అనేకరూ
పదైత్యాన్తంనమామిపురుషోత్తమమ్ ॥అస్యశ్రీవిష్ణోర్దివ్యసహస్రనా
మస్తోత్రమహామంత్రస్యశ్రీవేదవ్యాసోభగవానృషిః ॥ అనుష్టుప్ఛందః॥
శ్రీమహావిష్ణుః పరమాత్మా శ్రీమన్నారాయణోదేవతా ॥ అమృతాం
శూద్భవోభానురితిబీజం॥ దేవకీనందనస్స్రష్టేతిశక్తిః ॥ ఉద్భవఃక్షో
భణోదేవఇతిపరమోమంత్రః ॥ శంఖభృన్నందకీచక్రీతికీలకం॥ శార్ఙ్
గధన్వాగదాధరఇత్యస్త్రం॥ రథాంగపాణిరక్షోభ్యఇతినేత్రే ॥ త్రిసామా
సామగస్సామేతికవచం॥ ఆనందంపరబ్రహ్మేతియోనిః॥ఋతుస్సుదర్శ
నఃకాలఇతిదిగ్బంధః॥ శ్రీవిశ్వరూపఇతిధ్యానం ॥ శ్రీమహావిష్ణుప్రీత్యర్థే
శ్రీసహస్రనామజపేవినియోగః ॥

இது உபதேசகம்யமான ரஹஸ்யமாகையாலே இவற்றிற்குப் பொருள் வரையப்படவில்லை.

ధ్యానం ॥ క్షీరోదన్వత్ప్రదేశేశుచిమణివిలసత్సైకతేమౌక్తి
కానాంమాలాక్లృప్తాసనస్థఃస్ఫటికమణినిభైర్మౌక్తికైర్మండితాంగః
శుభ్రైరభ్రైరదభ్రైరుపరివిరచితైర్ముక్తపీయూషవర్షైరానం
దీనఃపునీయాదరినళినగదాశంఖపాణిర్ముకుందః ॥ (౧)

நிர்மலமான வஜ்ரமணிகளால் பிரகாசிக்கின்ற மணற்குன்றுகளை உடையதான திருப்பாற்கடல கரையில், முத்துமாலைகளால் அலங்கரிக்கப்பட்ட திவ்யாஸனத்தில் எழுந்தருளி ஸ்படிகமணிபோல் பிரகாசிக்கின்ற முக்தாஹாரங்களால் பூஷிதமான திருமேனியை யுடையராய், மேற்புறத்தில் அனேகம் வெண்முகில்கள் அமிருத வருஷத்தை வருஷிக்க, அதனால் நிரம்பவும் ஆனந்தமடைந்தவராய், சங்கு, சக்கரம், கதை, நளினம், இவைகளைத்தரித்தவராய் மோக்ஷபூமியை அளிக்கவல்லரான ஸ்ரீமந். நாராயணன் நம்மைப் பரிசுத்தராக்கவேண்டும்,

భూః పాదౌ యస్య నాభిర్వియదసురనిలశ్చంద్రసూర్యౌ చ నేత్రే
కర్ణావాశాశ్శిరో ద్యౌ ర్ముఖమపి దహనో యస్య వాస్తేయమబ్ధిః ।
అంతస్థం యస్య విశ్వం సురనరఖగగోభోగిగంధర్వదైత్యైశ్చిత్రం రంర
మ్యతే తం త్రిభువనవపుషం విష్ణుమీశం నమామి ॥ (౨)

எவனுக்கு பூமியானது திருவடிகளோ, ஆகாசம் நாபியோ, வாயு பிராணனோ, சந்திரசூரியர்கள் நேத்திரங்களோ, திசைகள் செவிகளோ, சுவர்க்கம் திருமுடியோ, அக்னி முகமோ, ஸமுத்திரம் ஆடையோ, பிரபஞ்சமானது எவனுடைய கர்ப்பத்திலிருந்து தேவர், மனிதர், பறவைகள், பசுக்கள், பாம்புகள், கந்தருவர்கள், அசுரர்கள், முதலியவைகளால் பல்படியாலும் விசித்திரமாய், ரமிக்கப்படுகின்றதோ; எங்கும் பரந்து ஸகலத்துக்கும் நியாமகனான அந்தபகவானை நமஸ்கரிக்கிறேன்.

శాంతాకారం భుజగశయనం పద్మనాభం సురేశం విశ్వాకారం
గగన సదృశం మేఘవర్ణం శుభాంగమ్ । లక్ష్మీకాంతం కమలనయనం
యోగిహృద్ధ్యానగమ్యం వందే విష్ణుం భవభయహరం సర్వలోకైక
నాథమ్ ॥ (3)

சாந்தமான ஆகாரத்தோடு அரவணையின்மீது கண்வளர்ந்து தாமரை பூத்த உந்தியும், பிரபஞ்சாகாரமாய் ஆகாயம்போல் அதிஸூக்ஷ்மமாய் எங்கும் பரந்து கார்மேகம்போல் அழகியதான திருமேனியுமாய், புண்டரீகாக்ஷனாய், யோகிகளால் சிந்திக்கப்படுமவனாய், ஸம்ஸாரபயத்தைப்போக்கடிப்பவனாய், ஸகல லோகத்துக்கும் தனியரசாய் விளங்குகின்ற ஸ்ரீமஹாவிஷ்ணுவை நமஸ்கரிக்கிறேன்.

మేఘశ్యామం పీత కౌశేయవాసం శ్రీవత్సాంకం కౌస్తుభోద్భా
సితాంగం । పుణ్యోపేతం పుండరీకాయ తాక్షం విష్ణుం వందే సర్వ
లోకైకనాథం । (౪)

காளமேகம்போல் கறுத்துப் பீதகவாடையுடுத்து, ஸ்ரீவத்ஸமென்னும் மறுவைத்தரித்து, கௌஸ்துபமென்னு மிரத்தினத்தால் பிரகாசிக்கின்ற திருமார்பும், புண்டரீகம்போல்நீண்ட திருக்கண்களுமாய் புண்ணியபுருஷர்களால் சூழப்பட்டு "ஸர்வலோகத்துக்கு மிவனே தனிக்கோல் செலுத்துமவன்" என்னும்படி விளங்குகின்ற விஷ்ணுவை நமஸ்கரிக்கின்றேன்.

శ్రీరస్తు,

శ్రీమతేరామానుజాయనమః.

விசிஷ்டாத்வைத பரமான

ஸ்ரீ ஸஹஸ்ரநாமபாஷ்யம்.

శ్రీపరాశరభట్టార్యశ్శ్రీరఙ్గేశ పురోహితః ।
శ్రీవత్సాఙ్క సుతశ్శ్రీమాఞ్ఛ్రేయసే మేస్తుభూయసే ॥
ఓన్నమోగజవక్త్రాద్యైః పారిషద్యైః ప్రశాసతే।
శ్రీరఙ్గరాజసేనాన్యై సూత్రవత్యాసమేయుషే॥
నమోనారాయణాయేదం కృష్ణద్వైపాయనాత్మనే।
యదాముష్యాయణా వేదా మహాభారతపఞ్చమాః ॥

உபோத்காதப்ரகரணம்.

ஸ்ரீராமாயணம்போல் ஸ்ரீமஹாபாரதமும் பிரமாணமென்கிறது.

பிரபஞ்சத்தில் பகுத்தறிவுடைய புருஷன் ஒவ்வொருவனும் பிரத்தியக்ஷாதிகளான * பிரமாணங்களைக்கொண்டு § பிரமேயத்தைப் பகுத்தறிந்து [அதாவது விஷயங்களை இதுநன்று இதுதீது என்று பிரித்தறிந்து] அப்படி அறியப்பட்டவிஷயம் சந்தந குஸுமாதிகளைப்போல் தனக்கு அநு

* பிரமாணமென்பது (விஷயங்களை) உள்ளபடியே யறிவிக்குமது. அது பிரத்தியக்ஷம், அநுமாநம், சப்தம் என்று மூன்றுவிதம். பிரத்தியக்ஷமாவது விஷயங்களைப் பிரத்தியக்ஷமாய் கிரஹிக்கும் செவி வாய் கண் மூக்கு முதலிய விந்திரியங்கள். அநுமாநமென்பது ஒரு குறியைக்கண்டு மற்றொன்றை ஊஹிக்கின்ற புத்தி விசேஷம். சப்தமென்பது சாஸ்திரம்.

§ பிரமேயமென்பது, பிரமாணங்களைக்கொண்டு அறியப்படுமது. இது தர்மம், அர்த்தம், காமம், பரதத்வம் என்று நான்குவிதம், இவற்றுள் அர்த்தம் காமம் என்கிற விரண்டும், பிரத்தியக்ஷம் அநுமாநம் என்கிற இருவகைப் பிரமாணங்களாலும் அறியக்கூடியது. தர்மம், பரதத்வம் என்கிற விரண்டும் சாஸ்திரத்திலேயே அறியத்தக்கது என்றறிக.

கூலமாயிருந்ததாகில் அதைக்கொள்ளுகிறான்; அது விஷ சஸ்த்ராதிகளைப் போல் பிரதிகூலமாயிருந்ததாகில் அதை ஒழித்துவிடுகிறான்; காஷ்ட லோஷ்டாதிகளைப்போல் அநுகூலமுமின்றி பிரதிகூலமுமின்றி இருந்ததாகில் அதுவிஷயத்தில் உபேக்ஷையாயிருக்கிறான். அதில், பிரத்தியக்ஷம் முதலான இதரப்பிரமாணங்களுக்கு விஷயம் அர்த்தமும காமமும்; இவ்விரண்டுப் பிரமேயங்களும் மிகவும் அற்பங்களாயும் அநர்த்ததையுண்டுபண்ணுமவைகளாயும், ரஸாபாஸங்களாயும், நிலையில்லாதவைகளாயும், துக்கமிச்சிரங்களாயும், அதிகமாய் வருத்தப்பட்டு ஸாதிக்கவேண்டியவைகளாயும் இன்னுமிப்படி அபரிமித தோஷங்களுக்கிடமாயுமிருக்கின்றன; ஆனதுபற்றி, பிரதிகூலரூபமான இவைகளை ஒழித்துவிடவேண்டுமென்றேற்பட்டது. இனியிருந்த சாஸ்திரமென்னும் பிரமாணத்துக்கு விஷயம் தருமமும் பரதத்துவமும். இவ்விரண்டுப் பிரமேயங்களும் கீழ்ச்சொன்ன தோஷங்கள் சிறிதுமின்றி மஹா மங்களகரமாயிருக்கின்றன. ஆனதுபற்றி இவ்விரண்டையும் [அதாவது தருமத்தையும் பரதத்துவத்தையும்] கைக்கொள்ளவேண்டும்; மேலும் இதை யறிவித்துக் கைப்படுத்துவதான சாஸ்திரத்தையுங் கைக்கொள்ள வேண்டுமென்றேற்பட்டது. இப்படியே [1] இதிஹாஸபுராணஜ்ஞர்கள் சொன்னார்கள். இனி தருமத்தையும் பரதத்வத்தையும் அறிவிக்குமதான அந்த சாஸ்திரந்தான் பதிநான்குவிதம்; அதில பிரதானமானது, வேதம். இதின்பொருளை [2] இதிஹாஸ புராணங்களைக்கொண்டே நிச்சயிக்கவேண்டியிருக்கிறது. இதிஹாஸ புராணங்களுக்குள் புராணங்களைக்காட்டிலும் இதிஹாஸமே சிரேஷ்டமென்று பிராமாணிகர்கள் கொண்டாடிவருகிறார்கள். ஆக விதனால தருமத்தையும் பரதத்துவத்தையும் அறிவிக்குமதான வேதத்தினுட்பொருளை நிர்ணயிப்பதற்கு ஸ்ரீராமாயணமென்னுமிதிஹாஸம் எப்படி பிரமாணதமமாயிருக்கிறதோ அப்படியே ஸ்ரீபாரதமுமாகையால் ஸ்ரீமஹாபாரதம் நமக்குத் தஞ்சமென்றதாயிற்று.

ஸ்ரீமஹாபாரதத்தில் ஸ்ரீஸஹஸ்ரநாமாத்தியாயம் சிறந்ததென்பது.

இந்த மஹாபாரதமோ! இதைப்பலரும் அங்கீகரித்திருக்கின்றமைகொண்டு இது சிறிதும் பழுதின்றி முழுதும் ஸத்யவசநமாயிருக்குமென்று நிர்ணயிக்கப்பட்டு இதிஹாஸமென்னு மேற்றமுடையதாய், புராணங்க

---

1. సత్యంసత్యంపునస్సత్యముద్ధృత్యభుజముచ్యతే । వేదశాస్త్రాత్పరంనాస్తి నదైవంకేశవాత్పరమ్.

2. ఇతిహాసపురాణాభ్యాం వేదంసముప బృంహయేత్ । బిభేత్యల్పశ్రుతాద్వేదో మామయంప్రతరిష్యతి.

[இம்மாதிரியாகவே ஆங்காங்கு சுருதி ஸ்மிருதி இதிஹாஸ புராணாதிகளிலிருந்து பாஷ்யத்தில் உதகரிக்கப்படும் பிரமாணங்களுக்கு பதிலாக மேலே நெம்பர் கொடுத்து, அதற்குத் தக்கபடி கீழே நெம்பருடன் அந்தப் பிரமாணங்களெழுதப்படுமென்றறிக]

ளுக்குள் [3]வாயுபுராணத்திலும் சைவபுராணத்திலும் [4]பவிஷ்யத்புராணத்திலும் [5]மாத்ஸ்யபுராணத்திலும், [6]ஸ்ரீ விஷ்ணுபுராணத்திலும் [7]மார்க்கண்டேய புராணத்திலும் கொண்டாடப்பட்டிருப்பதோடு [8]இதற்குள்ளாகவும் அனேகவிடங்களில் கொண்டாடப்பட்டிருக்கிறது. இப்படி ஸகல அங்கத்தோடுங்கூடிய சுருதி ஸ்மிருதி இதிஹாஸம் புராணம் முதலானவைகள் ஒன்றைப்போல் யாவும் ஏககண்டமாய்ச் சொல்லுகையாலும், இது [9]லவுகிக வைதிகங்களான ஸகல அர்த்தங்களையும் நிர்ணயிப்பதற் கென்றேற்பட்டு ஓரிடத்திலும் பக்ஷபாதமின்றி யிருக்கையாலும், இது புராணங்களைக் காட்டிலும் மிகவும் சிரேஷ்டமென்று புத்திசாலிகளாயிருப்பார்பலரும் அத்தியவஸித்தார்கள். அப்படிப்பட்ட இதில் இதனுடைய ஹிருதயஸ்தானமாயிருக்கின்ற சாந்திபருவத்தில் தாந தர்மவிஷயமாய் ஸகலசாஸ்திரார்த்தங்களையும் நிஷ்கர்ஷித்துச் சொல்லும்பொழுது ஸஹஸ்ரநாமமென்கிற இவ்வத்தியாயம் ஸாரஸங்கிரஹமாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் இதுப் பிரமாணம் என்பதற்கு வேண்டும் உத்கிருஷ்டகாரணங்களும், தத்வார்த்தத்தைப் பிரகாசப்படுத்துவதே இதற்கு முக்கியமான அபிப்பிராய மென்பதற்கு வேண்டும் அடையாளங்களும உண்டாயிருக்கையால், இந்த ஸஹஸ்ரநாமாத்தியாயம் பிரமாணமோ அன்றோ என்பதுமுதலான ஸந்தேஹங்கள் உண்டாகக் கொஞ்சமும் இடமில்லை. மேலும் இது அத்தியந்தம் உத்கிருஷ்டமான அர்த்தத்தைப் பிரதிபாதிக்கின்றமையால போகத்தையும் மோக்ஷத்தையுங் கோரியவர்கள் இதையே அவசியம் கைக்கொள்ளவேண்டுமென்றதாயிற்று.

---

3. మతిమన్థానమావిధ్య యేనాసౌ శ్రుతిసాగరాత్ । జగద్ధితాయ జనితో మహాభారతచన్ద్రమాః.

4. బిభేతి గహనాచ్ఛాస్త్రాన్నర స్త్రీవాదివాపథాత్ । భారతశ్శాస్త్రసారోయమతః కావ్యాత్మనాకృతః.

5. యస్య ద్వైపాయనః పుత్రస్స్వయం విష్ణురజాయత । ప్రకాశో జనితో యేన మహాభారతచన్ద్రమాః

6. కృష్ణద్వైపాయనం వ్యాసం విద్ధి నారాయణం ప్రభుమ్ । కోహ్యన్యో భువి మైత్రేయ మహాభారతకృద్భవేత్.

7. వ్యాసవాక్యజలౌఘేన కుధర్మతరుహారిణా । వేదశైలావతీర్ణేన నీరజస్కా మహీకృతా.

8. యో విద్యాచ్చతురో వేదాన్సాఙ్గోపనిషదాన్ ద్విజః । నచాఖ్యానమిదం విద్యాన్నైవ స స్యాద్విచక్షణః.

9. యదిహాస్తి తదన్యత్ర యన్నేహాస్తి నతత్క్వచిత్.

ஸஹஸ்ரநாமாத்தியாயத்தை ருஷிகள் பலரும் கொண்டாடினார்கள் என்பது.

இவ்விஷயம் மேலே "ఋషిభిః పరిగీతాని" என்பதை வியாக்கியானஞ் செய்யுமிடத்தில் உபபாதிக்கப்படும்.

ருஷிகள் பலருஞ்சொன்ன பகவந்நாமங்களைத்திரட்டி வேதவியாஸர் ஸ்தோத்திரரூபமாக இதைச் சேர்த்தாரென்பது.

மேலும் கிருஷ்ணத்வைபாயநரென்னும் ஸ்ரீவேதவியாஸபகவான் ரொம்பவும் ஆப்தர்; [அதாவது தத்வார்த்தத்தை உள்ளபடியே பிசகாமல் சொல்ல வல்லவரென்றபடி] அதெப்படியெனில் — அவர் ஸ்ரீமந்நாராயணாவதாரமாயிருப்பதனால் அவருக்கு ஞானமும் ஐசுவரியமும் மற்றும் கல்யாணகுணங்களும் நிரதிசயமா யுண்டாயிருக்கின்றமையாலும், முன்னுக்குப் பின் விரோதமாய்ச் சொல்வது முதலான தோஷங்கள் அவர் சொல்லில் சிறிதும் நேரிடமாட்டாவாகையாலும், கலியின் மஹிமையால் ஞானம் குறைந்திருக்கின்ற மனுஷ்யாளிடத்தில் விசேஷகிருபையினால் வேதங்களைப்பிரித்துச்சொன்னவராகையாலும், வேதத்தில் சொல்லப்படும் அர்த்தத்தை யறிவதிலும் அதை யநுட்டிப்பதிலும் ஸந்தேஹாதிகளுண்டானால் அதைத்தெளிவிக்கவேண்டுமென்று ஐந்தாம்வேதமான மஹாபாரதத்தைச்செய்தவராகையாலும், க்ஷத்திரியனான விசுவாமித்திரனைத்தனது வாய்ச்சொல்லாலே பிராம்மணனாகச்செய்த ஸ்ரீவஸிஷ்டபகவானுடைய கொட்பேரனாகையாலும், வஸிஷ்டரும் புலஸ்தியரும் தந்த வரபலத்தால் பரதேவதையை உள்ளபடி யறியவும் புராண ஸம்ஹிதைகள் செய்யவும் வல்லராய் லிங்காதி புராணங்களில் பிரஸித்தமாய்க் கொண்டாடப்பெற்ற ஸ்ரீ பராசரபகவானுடைய திருக்குமாரராகையாலும், ஒப்பற்ற தபஸ் ஸமாதி விசேஷங்களுடையவராதல்கொண்டு ஸகலருஷிகளாலும் பூஜிக்கப்பெற்றவராகையாலும், இவர் யதார்த்தவாதியென்னத்தடையில்லை. இப்படி மஹாவைபவசாலியான இந்தவியாஸபகவான் தம்மைப்போன்ற ருஷிகள் பலருங்கொண்டாடின பகவந்நாமங்களைத் திரட்டி இந்தஸ்தோத்திர ரூபமாகச் சேர்த்தருளினார். இத்தைப்பற்றவும் இது அவசியம் ஆதரணீயமாகிறது.

ஸ்ரீஸஹஸ்ரநாமத்தை பீஷ்மாசாரியர் தம்முடைய முக்கியமதமாக உகந்திருக்கிறபடி சொல்லுகிறது.

மேலும், பீஷ்மாசாரியரும் இவரைப்போலவே மிகவும் விசுவஸிக்கத்தக்க பரமஆப்தர். எப்படியெனில்:—தருமபுத்திரருக்கு ராஜதருமங்களை உபதேசிக்கையில் [10]ஸ்ரீவியாஸபகவானும், ஸர்வேசுவரனான ஸாக்ஷாத்

---

10. శ్రోతుమిచ్ఛసి చేద్ధర్మాన్ నిఖిలేన నరాధిప । ప్రేహి భీష్మం మహాబాహో వృద్ధం కురుపితామహమ్॥ స తే సర్వరహస్యేషు సంశయాన్ మనసిస్థితాన్ । ఛేత్తా భాగీరథీపుత్రస్సర్వజ్ఞస్సర్వతత్త్వవిత్ ॥ సాక్షా

11 ஸ்ரீகிருஷ்ணபகவானும், 12 ஸ்ரீநாரதபகவானும், இவர் அனேகம் பிரும்ம வித்துக்களை ஸேவித்து தீர்க்கமான பிரம்மசரியத்தைப்பெற்று தபஸ் ஸமாதிகளால் ஸகலத்தையும் ஸாக்ஷாத்கரிக்கும்படியானப் பிரபாவம்பெற்றவரென்று விசேஷித்து இவரைக் கொண்டாடினார்கள். மேலும் ஸ்ரீகிருஷ்ணபகவான், பரதத்வத்தையும் தருமத்தையும் பிரவர்த்திப்பிக்கும்படி இவருக்கு வரம்பிரஸாதித்து நியமித்தருளுகையாலும், மாதாபிதாக்களுக்கு சிச்சுருஷைசெய்து அவர்களால் வரம்பெற்றவராகையாலும், இவர் தாமும் பரமார்த்தத்தைத் தாம் உள்ளபடியே கண்டுகொண்டதாகப் 13 பிர

ద్దదర్శ యోం దేవా న్సర్వా ఞ్ఛక్ర పురోగమాన్ ॥ యస్య బ్రహ్మర్షయః
పుణ్యాః నిత్యమాసన్సభాసదః । యస్యనావిదితం కిఞ్చి త్జ్ఞానం జ్ఞే
యేషు విద్యతే॥ స తేవక్ష్యతి ధర్మజ్ఞో ధర్మాన్సూక్ష్మార్థ తత్త్వవిత్ ॥

11. శరతల్పగతో భీష్మ శ్శామ్యన్నివ హుతాశనః ॥ మాం ధ్యాతి
పురుషవ్యాఘ్ర స్తతో మే తద్గతం మనః ॥ దివ్యాస్త్రాణి మహాతేజా యో
ధారయతి బుద్ధిమాన్ । సాఙ్గాంశ్చ చతురో వేదాం స్తమస్మిమనసాగతః॥
సహి భూతం భవిష్యచ్చ భవచ్చ భరతర్షభ । వేత్తి ధర్మభృతాం శ్రేష్ఠ
స్తతో మే తద్గతం మనః॥ తస్మిన్నస్తమితే భీష్మే కౌరవాణాం ధురన్ధరే।
జ్ఞానాన్యల్పీభవిష్యన్తి తస్మాత్త్వాం చోదయామ్యహమ్ యచ్చ త్వాం వ
క్ష్యసే భీష్మ పాణ్డవాయానుపృచ్ఛతే ! వేదప్రలాపా ఇవ తే స్థాస్యన్తి వ
సుధాతలే ॥ యద్ధి భూతం భవిష్యచ్చ భవచ్చ భరతర్షభ । సర్వం తత్
జ్ఞానవృద్ధస్య తవ పాణావివాహితమ్॥ అహం చ త్వాభిజానామి స్వయం
పురుషసత్తమ॥ తపసాసి భవాఞ్ఛక్త స్స్రష్టుం లోకాంశ్చరాచరాన్॥
నతే గ్లానిర్నతే మూర్ఛా॥ సత్త్వస్థం చ మనో నిత్యం తవ భీష్మ భవిష్యతి।
రజస్తమోభ్యామస్పృష్టం ఘనైర్ముక్త ఇవోడురాట్ ॥

12. కృత్స్నాన్విహితవిధాన్ధర్మాం శ్చాతుర్వర్ణ్యస్య వేత్త్యయ
మ్॥ తచ్ఛ్రోతుమనుయుఞ్జీధ్వం సంశయాన్మనసిస్థితాన్॥

13. దాహో మోహశ్శ్రమశ్చైవ క్లమో గ్లాని స్తథారుజః । తవ
ప్రసాదాద్గోవిన్ద సద్యో వ్యపగతానిమే ॥ యచ్చ భూతం భవిష్యచ్చ
భవచ్చ పరమచ్యుత । తత్సర్వమనుపశ్యామి పాణౌ ఫలమివాహితమ్॥

திக்கைபண்ணுகையாலும் இவர் அத்தியந்தம் ஆப்தரென்னக்குறையில்லை. இப்படிபபட்ட பீஷ்மர், [14]இதுதான் தமக்கு மிகவும் ஸம்மதமான மதமென்று இதை அறுதியிட்டார். ஆதலாலும் இது அவசியம் ஆதரணீயமாகக் கடவது.

ஸஹஸ்ரநாமாத்தியாயத்தை சாஸ்திரங்களும் பாலர்களும் ஊமையரு முள்பட யாவரும் பரிக்கிரஹித்திருக் கிறார்களென்பது

இந்த பகவந்நாம ஸஹஸ்ரமோ புவனத்திலெங்கும் பரிக்கிரஹிக்கப்பட்டிருக்கிறது. எங்ஙனேயென்னில்-சாஸ்திரங்களுக்குள்ளாக ஸபாபருவத்தில் எம்பெருமானுக்குககூட இந்த திருநாமஸம்பந்தத்தைக்கொண்டு ஏற்றஞ் [15]சொல்லப்பட்டது. ஸ்ரீவிஷ்ணுதருமத்தில் ஸ்ரீகஜேந்திரமோக்ஷத்தில் [16]சொலலப்பட்டிருக்கிறது. இதற்குள்ளாகவும் முகவுரையிலும் இதின் பலன் சொல்லுமிடத்திலும் பகவத்குணங்கள் விசேஷமாய்க்காணப்படுகின்றன. [என்றால் குணங்களைச்சொன்னபோதே தத்வாசகங்களான திருநாமங்களும்பல உண்டென்று சொன்னதாக வபிப்பிராயம்.] திருஷ்டாதிருஷ்டசாஸ்திரங்களான ஆயுர்வேதம் முதலியவைகளுக்குள் [17]சரக ஸம்ஹிதையிலும், ஆங்காங்குசிதறுண்டுபோய் இப்பொழுது கொஞ்சம்காணப்படும் [18]மேஹப்பிராயச்சித்தத்திலும், [19]குஷ்டப்பிராயச்சித்தத்திலும், [20]ஜ்வரவிசேஷப்பிராயச்சித்தத்திலும், [21]கிரஹாதிப் பிராயச்சித்தத்திலும்,

---

వేదోక్తాశ్చైవయేధర్మాః వేదాన్తనియతాశ్చయే । తాన్సర్వాన్సం ప్రవక్ష్యామివరదానాత్తవాచ్యుత॥ — యువేవచాస్మి సంవృత్తస్త్వదనుధ్యానబృంహితః।వక్తుంశ్రేయస్సమగ్రోఽస్మిత్వత్ప్రసాదాజ్జనార్దన

14. (ఏషమేసర్వధర్మాణాం ధర్మోఽధికతమోమతః)

15. దేవోనామసహస్రవాన్॥

16. సహస్రశుభ నామానమాదిదేవమజంవిభుమ్

17. విష్ణుంసహస్రమూర్ధానం చరాచరపతింవిభుమ్ । స్తువన్నామ సహస్రేణ జ్వరాన్సర్వాన్వ్యపోహతి

18. జప్యంపురుషసూక్తకమ్ — — తత్రైవభగవన్నామసహస్రంభారతోదితమ్.

19. తత్రైవభగవన్నామసహస్రంపరికీర్తయేత్,

20. హోమాస్తుపూర్వవజ్జప్యం త్వష్టూర్నామసహస్రకమ్.

21. ఆసత్తతంమరుత్సూక్తం విష్ణోర్నామసహస్రకమ్,

சொல்லப்படுகின்றது. இன்னுமிப்படி பலவிடங்களிலும் கண்டுகொள்ளலாம். ஸாதாரணமானகவிகளும் இதை ஸர்வஜ்ஞவரனைக்ஷயென்று வருணித்திருக்கிறார்கள். எங்ஙனேயென்னில்:— பட்டபாணன் ஸௌகிகாகிருஹ வருணனையில் [22]சொல்லியிருக்கிறான். லோகத்திலும் இந்த ஸஹஸ்ரநாமத்தைக கிரஹித்தும், தரித்தும், கேட்டும், ஜபித்தும் ஸங்கீர்த்தநஞ்செய்தும், எழுதியும், வியாக்கியாநஞ்செய்தும், இதில் நிஷ்டைபண்ணியும், இதைப் பூஜித்தும், மற்றும் அனேகவிதங்களால், விஷம், பிசாசம், வியாதி, கிரஹம், துஸ் ஸ்வப்நம், துர் நிமித்தம் முதலான அமங்களங்களெல்லாம் சமிப்பதற்காகவும் மஹாபாதகாதிகள் நசிப்பதற்காகவும் இஹபரங்களில் போகம் ஸித்திப்பதற்காகவும் ஸம்ஸாரபந்தம் அவிழ்வதற்காகவும் வைஷ்ணவமான பரமபதம் ஸித்திப்பதற்காகவும், பரமபதம்கிடைத்த பின்பும் எம்பெருமானுடைய குணாம்ருதத்தை ப்பாநஞ்செய்வதற்காகவும், இப்படி எல்லாவற்றிற்கும் ஒரேமருந்தாய், பாலன்முதற்கொண்டு ஊமையன், மூர்க்கன், ஸ்திரீகள், நாஸ்திகனுள்பட யாவராலும் அதிக சிரத்தை, பக்தி, விசுவாஸத்துடன் பரிக்கிரஹிக்கப்படுகின்றது; இதற்குண்டான பரிக்கிரஹாதிசயம் வேதத்திற்குக்கூட கிடையாது; ஏனெனில:—வேதத்தை மூர்க்கன்முதலானோர் பரிக்கிரஹிப்பதில்லையன்றோ? மேலும் அதற்குக் குலமென்றும், சரணமென்றும், கோத்திரமென்றும் நாநாவித வ்யவஸ்தைகள் ஏற்பட்டு, இதை யின்னான் கிரஹிக்கவேண்டியதென்று சாகைகள் தோறும் நிர்ப்பந்தமுண்டாயிருக்கின்றது. இதற்கு அங்ஙனம் ஒரு நிர்ப்பந்தமில்லை. இப்படி இதற்குப் பரிக்கிரஹம் அதிசயிததிருக்கையாலும் இதை அவசியம் கைக்கொள்ளவேண்டுமென்றாயிற்று.

ஸஹஸ்ரநாமம் கீதை நாராயணீயம் முதலானவைகளோடு

ஸமாநார்த்தகமா யிருக்கிறதென்பது.

பாரதத்தினது ஸித்தாந்தமாய் விளங்கும் பகவத்கீதை, நாராயணீயம், யாநம், ஸந்தி, அக்கிரபூஜை, உத்தமாநுசாஸநம் முதலியவிடங்களில் நிஷ்கர்ஷிக்கப்பட்ட தாத்பரியம்போல் இது அவைகளோடு ஒத்திருக்கையாலும் அத்தியந்தம் உபாதேயமாயிருக்கிறது.

இப்படி யிந்த ஆறுகாரணங்களாலும் மிகவும் ஆதரிக்கத்தக்கதென்று நிர்ணயிக்கப்பட்டு, வியாஸர், தேவச்சிரவஸ், தேவஸ்தாநர், நாரதர், வாத்ஸ்யாயநர், அச்மர், ஸுமந்து என்றுவித்தியாசாரியர்களாய் பிரம்மவித்துக்களான தேவரிஷிகளும், பிரம்மருஷிகளும், நம்பூர்வீகருக்கெல்லாம் ஆசாரியனாய் கீதோபநிஷத்தை யருளிச்செய்த ஸர்வேசுவரனும் சுரோதாவாயிருந்து பீஷ்மரிடத்தில் கேட்டு ஸந்தோஷித்ததான இந்த ஸஹஸ்ரநாமாத்தியாயம், எம்பெருமானுடைய திருக்கல்யாண குணங்களை நன்றாய் தெளிந்தறிவதற்காக வியாக்கியாநம் செய்யப்படுகின்றது.

22. అవిచ్ఛిన్నపఠ్యమాన నారాయణనామసహస్రమ్.

அவதாரிகை-முன்னம் பலவிடங்களிலும் பரதத்வவிஷயமானப் பிர தேசங்களில் ஸகலார்த்தங்களையும் நிர்ணயிக்கக்கேட்டு அதனால் திருப்தி யடைந்தவர்போல் யாதொருப்பிரச்னமும் பண்ணாமல் மவுனமாயிருந்த ஜந மேஜயனைப்பார்த்து ஸ்ரீவைசம்பாயனர் தம்முடைய கிருபாதிசயத்தால், இவருக்கு மற்றும் சிலரஹஸ்யார்த்தங்களை யறிவிக்க வேணுமென்று நினை த்துத் தாமே சொல்லுகிறார்.

మూలం ॥ శ్రుత్వాధర్మా నశేషేణ పావనానిచ సర్వశః ।
యుధిష్ఠిర శ్శాన్తనవం పునరేవాభ్యభాషత ॥

(பதவுரை.) ధర్మాన్-தர்மங்களை, అశేషేణ-அவ்வளவையும், పావనానిచ - சுத்திகரங்களையும், సర్వశః - ஸர்வப் பிரகாரத்தாலும், శ్రుత్వా - கேட்டு, యుధిష్ఠిరః - தர்மபுத்திரர், శాన్తనవం - பீஷ்மரை, పునరేవాభ్యభాషత - மறுபடியும் சொன்னார்.

வாரீர் ஜநமேஜயரே! ஸ்ருதிஸ்மிருதி முதலியவைகளில் ராஜ தர்மமென்றும் மோக்ஷதர்மமென்றும தான தர்மமென்றும் பல் படியாகச்சொல்லப்படும (தர்மங்கள்) எவ்வளவுண்டோ (அவ்வள வையும்,) தபஸ் என்றும் தீர்த்தஸேவை என்றும் மற்றும் பல்படி யாகச்சொல்லப்படும் (சுத்தி கரங்களான) வியாபாரங்களையும், பலம், அங்கம், சொரூபம், அதிகாரம் என்று அவைகளுக்குண் டான (ஸர்வப்பிரகாரத்தாலும் கேட்டு தர்மபுத்திரரானவர்,) சந் த்ரமவுசராஜனுக்குங் கங்காதேவிக்குங் குமாரராய்த் தோன்றி மஹாகுலீனராய் விளங்குகின்ற (பீஷ்மரைப்) பார்த்து, அவர் தமக்கு இதமாகக்கைப்பற்றின மதம் இனனதென்று தெரிந்துக் கொள்வதற்காக (மறுபடியும் கேட்கிறார்.) (க)

శ్రీ రస్తు.

శ్రీకృష్ణాయ పరబ్రహ్మణేనమః

அத்வைதபரமான

ஸ்ரீஸஹஸ்ரநாம பாஷ்யம்.

సచ్చిదానన్దరూపాయ కృష్ణాయాక్లిష్టకారిణే ।
నమో వేదాన్తవేద్యాయ గురవే బుద్ధిసాక్షిణే ॥

(அவதாரிகை.) ஸ்ரீவைசம்பாயனர் ஜநமேஜயருக்குச் சொல்லுகிறார்.

பாவநாநி- பாபக்ஷயகாரங்களான தர்ம ரஹஸ்யங்களை.

வி. பா. [ஸத்புருஷர்கள் தம் ஆசாரியன் உகந்து அநுட்டிக்குமதை யநுட்டிப்பார்களே யல்லது கேவலம் பிரமாணத்தையே விசுவஸிக்கமாட்டார்களாகையால் பீஷ்மருடைய ஆசாரத்தில விருப்பத்தாலே கேட்டாரென்றுணாக.]

(அவதாரிகை.) பகுத்தறிவுள்ள புருஷன் பிரமாணத்தைக்கொண்டு பிரமேயத்தைப்பகுத்தறிந்து அதில அநுகூலமானபிரமேயத்தை யாதரிக்குமென்று ஆதியிலதானே சொல்லப்பட்டதன்றோ? அப்படிப்பட்ட பிரமேயம் உபாயமென்றும் உபேயமென்றும் இரண்டுவிதமாயிருக்கும். [உபாயமென்றால் யாதேனும் ஒருபலனைச்சாதிக்கும் ஸாதநம், உபேயமென்றால அந்தஸாதநத்தால ஸாதிக்கப்படும் பலனென்றறிக] அதில் உபேயமானது ப்ரியம ப்ரியதரம் ப்ரியதமம் என்று மூன்றுவிதம். அப்படியே உபாயமும், ஹிதம் ஹிததரம் ஹிததமம் என்று மூன்றுவிதம். [இவ்வுபாயோபேயஙகளிரண்டுக்கும் குணதோஷங்களுண்டாயிருக்கையால, அக்குண தோஷங்களின் ஏற்றக்குறைச்சலுக்குத்தக்கபடி தார தம்மியமுண்டாய் அதனால்முற்கூறிய மூன்று பிரிவுகளும் ஏற்படுகின்றன.] அதில் உபேயத்துக்கு தோஷங்கள்:—ஜந்மா, விருத்தி, பரிணாமம், அழிவு, முதலிய அசேதநத்துக்குரியதருமஙகளும, கிலேசமமுதலானவைகளும, குணங்களோ.—தோஷங்கலவாமல் எந்நாளுமிருக்கும்படியான ஞாநம், ஆனந்தம், ஐசுவரியம் முதலியவைகளாம; உபாயத்துக்கு தோஷங்கள்:— வியயம், மிகுந்த ஆயாஸம, உத்தேசித்த பலனை யுதவாமை, அற்பபல னுடைமை இவைகளாம்; குணங்களோ.—பலனைத்தப்பாது கொடுக்கை, அபாயமில்லாமை, ரொமபவும லகுவாயிருக்கை, அதிக பலனைத்தருகை முதலியவை. இப்படிப்பட்ட குணதோஷங்கள் ஏறக்குறைய விருப்பதனால் தாரதம்மியமுண்டாகக்கூடுமன்றோ? அதில உத்கருஷ்ட்ட தமத்தைவிட நிக்ருஷ்ட்டங்கள் எப்படி த்யாஜ்யமோ, அப்படி உத்க்ருஷ்ட உதக்ருஷ்டதரஙகளும் தியாஜ்ஜியங்களாகவன்றோ விருக்கும். ஆகையால தருமபுத்திரா தமக்கு இஷ்டமாயும் அநிஷ்டமாயு மிருக்கிற நிக்ருஷ்ட விஷயஙகளைத தள்ளி, மிகவும் உத்க்ருஷ்டதமமான விஷயத்தைப பெறவேணடுமென்று நினைத்து, உபாயோபேயங்களை அவற்றின் தார தமமியத்தோடே நன்றாகக்கேட்டுத் தெளியவேண்டுமென்கிற; தம்மபிப்பிராயப்படி அதை ஆறு விதமாகப்பிரித்து இரண்டு சுலோகங்களாலே கேட்கிறார். அதில் உபாயமென்பது உபேயத்தைப்பற்றி வருமதொன்றாகையால், பிரதாநமான அந்த உபேயத்தை முதலில்கேட்பதாக உத்தேசித்து, அது தத்துவ சாஸதிரங்களில் பர தத்வமென்றும் பரமப் பிராப்பியமென்றும் இரண்டு விதமாய்க்

அ. பா. [அற்பப்பிரயாஸமாயும், அதிகப்பலனைத்தருமதாயும், சுகமாய்ச் சம்பாதிக்கக் கூடியதாயும், ஸகலபுருஷார்த்தங்களையும் ஸாதிப்பதாயுமிருக்கிற உபாயம் இதுவரையில சொல்லப்படவில்லையென்று மறுபடியுங்கேட்டாரென்றறிக.] (க)

మూ॥ కిమేకం దైవతం లోకే కింవాప్యేకం పరాయణం॥

(ப-ரை.) లోకే-லோகத்தில், ఏకం-ஒப்பற்ற, దైవతం-தேவதை, కిం-எது? ఏకం-ஒப்பற்ற, పరాయణం-மேலான புருஷார்த்தம், కింవా-எது?

வி. பா. கூறப்படுகையால பரத்துவமென்னுமதை முதலில ப்ரச்நம் பண்ணுகிறார்.]

பரத்துவமென்னும் உபேயவிஷயமானப் பிரசநம்.

சுருதி ஸ்மிருதி முதலான (சாஸ்திரங்களில்) தனக்கு ஸம மாவது அதிகமாவது வேறொரு வஸ்துவில்லாமல் (தன்னந்தனிய தாய்) பிரகாசம் முதலான பரமேச்சுவர குணங்களெல்லாம பொருந்தி யிருப்பதாகச் சொல்லப்படும (தேவதை) இதுதா னென்று நீர் மிகவும் ஸமமதித்தது (எது)?

[சாஸ்திரங்களிலும்அவ்வோ மதங்களிலும். பரதத்வம் ஒன்றுண்டெ ன்று ஒப்புக்கொண்ட ஆஸ்திகர்களும், அந்த பரதத்வம் மாயை முதலிய உபாதிவசத்தால் விகாரமடைந்து ஞாந சக்தியாதிகளை யடைந்திருக்கிற தென்றும், ஸ்வபாவமாகவே ஸகல ஐசுவரியமு முடையதென்றும், இப படி பொதுவில் ஸம்சயப்படுவதோடு, விசேஷித்து ஹரி, ஹரன், அயன் என்கிற தத்வங்களுக்குண்டான உச்சநீச பாவத்திலும் ஸம்சயங்கொள ளக் காண்கையாலே அவ்விஷயந் தெளிவதற்காக இந்தப் பிரச்நம்பண் ணினுரென்றறிக.]

(அவதாரிகை.) பலனைச்சொல்லுகிற சாஸ்திரங்களில் மோக்ஷவிஷய மாய் ஸந்தேகஙகள் பலவுண்டாகின்றன, அதாவது:— மோக்ஷமென்பது ஸ்வரூபாவித்தையால்வருங் குணவிசேஷங்கள் நசிப்பதுதானென்றும், பரமாத்மாவுக்கு ஸமானமான தருமத்தைப் பெறுகைதானென்றும, பர மாத்மாவின் குணங்கள் இவனைப்பற்றுவதுதா னென்றும், பரமாத்மாவி னது சாயை ஜீவனுக்குண்டாவதுதானென்றும், ஆநந்தம் முதலான தனது ஸ்வரூபம் மாத்திரம் பிரகாசிப்பதுதா னென்றும், பரமாத்மாவின் ஸந் நிதியில் நித்தியகைங்கரியம் பண்ணும்படியான தன் தன்மையைப் பெறு கைதானென்றும் இன்னுமிப்படி பல்படியாக ஸந்தேஹ முண்டாயிருக் கையால் அவ்விஷயம் தெளியும்பொருட்டு பரமபுருஷார்த்தம் ஏதென்று பிரச்நம் பண்ணுகிறார்.

பரமப்பிராப்யமென்னும் உபேயவிஷயப் பிரச்நம்.

ஸமாதிகரஹிதமாய், தனித்ததாய், நிர்த்தோஷ நிரதிசய மங்க ள ஸ்வபாவமா யிருக்கையாலே உத்கிருஷ்டமாய் விளங்கும் புரு ஷார்த்தம எது?

அ பா. (லோகே இத்யாதி)லோகத்தில் பரமான கதி எது? என்றால்.—

స్తువన్తఃకంకమర్చన్తఃప్రాప్నుయుర్మానవాశ్శుభమ్॥ (௨)

(ப-ரை.) మానవాః - மனிதர்கள், కం - எவனை, స్తువన్తః தோத்திரஞ்செய்யுமவர்களும, కం-எவனை, అర్చన్తః-அர்ச்சனைசெய்யுமவர்களுமாய் శుభం-சுபத்தை, ప్రాప్నుయుః-பெறுவர்கள். (உ)

வி பா. [ஐஹிகம் ஆமுஷ்மிகமென்கிற விரண்டின் மிகவும் மேலான புருஷார்த்தம் இதுதானென்று நிருகந்தமெது? என்றபடி. இப்படி உபேயம் இரண்டுவிதமாய் கேட்கப்பட்டது.]

(அவதாரிகை.) இனி உபாயமானது, அந்தந்த சாஸ்திரங்களில் கர்மயோகமென்றும் ஞாநயோகமென்றும் பக்தியோகமென்றும் சொல்லப்பட்டு, அவைகள் தனித்தனியே உபாயமென்றும், சேர்ந்து உபாயமென்றும், அங்காங்கி பாவத்தாலே உபாயமென்றும், விவாதமுண்டாயிருக்கையால் அவ்விஷயமாகப் பிரச்நம் பண்ணவேண்டியது ஆவசியகமாயிருக்கிறது; அதுவோ ஸித்தமென்றும் ஸாத்தியமென்றும் ஸாலம்பநமென்றும் மூன்றுவகை; அதில் ஸித்தமான உபாயம் - ஆராதநத்தாலே பிரஸந்நமாய் பலனைத்தருகின்ற தேவதை; அந்ததேவதையை லகுவாயும் குருவாயுமுள்ள இரண்டுவித உபாயங்களாலே ஸாதிக்கவேண்டுகையாலே அதை யிரண்டுவிதமாகப் பிரித்துப் பிரசநம் பண்ணுகிறார்.

லகுவாயும் குருவாயுமுள்ள உபாயங்களால் ஸாதிக்கவேண்டிய

ஸித்தோபாய விஷயப் பிரச்நங்கள்.

மநுஷ்யர்கள் எந்த தேவனை குணஸங்கீர்த்தந மாத்திரத்தால் ஆராதித்துமவனை உபாஸநரூபமான பக்தியால்பூஜித்தும், போகமோக்ஷங்களென்கிற இருவகைச்சுபத்தையும்பெறுவர்கள்? (உ)

(அவதாரிகை.) வாக்கு, மநஸ், காயம், என்கிற த்ரிகரணங்களாலும் ஸித்திக்கும்படியான ஜபம், தியாநம், அர்ச்சனை முதலான தேவதா வசீகரண வியாபாரத்தை ஸாத்திய தர்மமென்கிறது; இதில் உத்தமம் எதென்று கேட்கிறார்.

அ பா. எதினுடைய ஆக்ஞையால் பிராணிகள் பிரவர்த்திக்கின்றனவோ, எதைக்கண்டமாத்திரத்தில் இருதயத்திலுள்ளமுடிச்சு அவிழ்ந்து, ஸகல ஸம்சயங்களுமற்று, ஸகல கர்மங்களும் நசிக்குமோ, எதையறிந்தமாத்திரத்தில் ஆநந்தரூபமான மோக்ஷம் ஸித்திக்குமோ, எதை யறிந்தவன் மற்றையாதொன்றுக்கும் பயப்படானோ, எதில் புகுந்தவனுக்கு மறுபிறவியில்லையோ, எதை யறிவதனால் அதுவேயாய் விடுகிறானோ, எதைவிட்டால் மனிதர்களுக்குவேறுகதியில்லையோ, அப்படிப்பட்டது எது என்றபடி.

మూ॥ కో ధర్మస్సర్వధర్మాణాం భవతః పరమో మతః।
కిం జపన్ ముచ్యతే జన్తుర్జన్మసంసారబన్ధనాత్ ॥ (౩)

(ப - ரை.) సర్వధర్మాణాం-ஸகலதர்மங்களிலும், కః ధర్మః-எந்த தர்மம், భవతః-உமக்கு, పరమః-மேலாக, మతః-ஸம்மதிக்கப் பட்டது, జన్తుః - ஜன்மமெடுத்தவன், కిం జపన్ - எதைஜபித்தால, జన్మసంసారబన్ధనాత్-ஜன்மமென்றும் ஸம்ஸாரமென்றுஞ்சொல்லப் படும பந்தத்தினின்று, ముచ్యతే - விடுபடுகிறான். (கூ)

ஸகலமான தாமங்களிலும தனக்கு ஸமமும உயாவுமின்றி மேலாய் விளங்கும தர்மம் எது நீர் ஸமமதித்தது?

(அவதாரிகை.) அநந்தரம ஸ்தோத்திரம், மந்திரம், சுபாச்ரயம் [அதாவது பகவானுடைய திவ்யமங்கள விக்ரஹம் முதலியன] கெந்தம், புஷ்பம் முதலிய உபகரணங்களைக்கொணடு செய்யவேண்டிய ஸாலம்பனோபாயங்களில் வாசிகமான ஜபமென்னும் ஸாலம் பனோபாய விஷயமானப் பிரச்நம் பண்ணுகிறார்.

[ஜபமென்பது மந்திரம் முதலியவற்றைச் சில நியமங்களோடு ஆவர்த்திபண்ணுவது; ஸாலம்பனோபாயங்களில் காயிக மாநஸங்களான மற்றவிரண்டிலுங்காட்டில் வாசிகம் சிரேஷ்டமென்று [23]சாஸ்திரமாகையால் அதைப் பிரச்நம் பண்ணுகிறாரென்றறிக.]

பரம பதத்தை யடையவொட்டாமல் தடைசெய்கின்ற (ஜந்மம்), ஜரை. மரணம், கர்ப்பவாஸம், நரகவாஸம், யாதனை முதலிய ஸம்ஸாரத்தின் காரியவர்க்கமென்ன;அவித்தை,கர்மவாஸனை, ருசி முதலான ஸம்ஸாரத்தினது காரணவர்க்கமென்ன இவ்விரண்டையும், லோகத்தில் பிறவியெடுத்தவன் எதைஜபித்தால் கடப்பான அதாவது மோக்ஷத்தை யடைவன். (கூ)

[இங்கே மோக்ஷத்தைச்சொன்னது மற்றபலன்களையுஞ் சொன்னபடி; ஏனெனில் - ஜபம்முதலியவை, ஸகல பலங்களையும் ஸாதிக்குமென்பதாக மேலேசொல்லப்படுகிறதன்றோ? இது நிற்க, கீழே "அவ்வளவையும்" "ஸர்வப்பிரகாரத்தாலும்" என்று தொடங்கி, "லோகத்தில்" "மனிதர்கள்" "சுபத்தை" என்றிப்படிசொல்லி யிருக்கையால்

---

[23] జప్యేనైవ తు సంసిద్ధ్యేద్ బ్రాహ్మణో నాత్ర సంశయః। కుర్యాదన్యన్న వా కుర్యాత్ మైత్రో బ్రాహ్మణ ఉచ్యతే ॥ ద్రవ్యయజ్ఞాజ్జపోయజ్ఞో విశిష్టో దశభిర్గుణైః ॥ యజ్ఞానాం జపయజ్ఞోఽస్మి ॥

மூ॥ శ్రీభీష్మ ఉవాచ॥ జగత్ప్రభుం దేవదేవమనన్తం పురుషోత్తమం।
స్తువన్నామసహస్రేణ పురుషస్సతతోత్థితః॥ (౪)

(ப - ரை.) జగత్ప్రభుం-லோகஸ்வாமியாய், దేవదేవం-தேவர்களுக்குத் தேவனாய், అనన్తం-அளவிடப் போகாதவனான, పురుషోత్తమం-புருஷச் சிரேஷ்டனை, పురుషః-புருஷன், సతతోత్థితః - எப்பொழுதும் ஊக்கமுடையனாய், నామసహస్రేణ - நாமங்களாயிரததாலும், స్తువన్-தோத்திரஞ் செய்வதனால், సర్వదుఃఖాతిగః - ஸகல துக்கங்களையுங்கடந்தவனாக, భవేత్-ஆகுவனென்றுமேலோடன்வயம.)

வி பா. காலம், அதிகாரி, அங்கம் என்கிற இவற்றுள்ளும் உதகிருஷ்டமானவைகளைவையென்று கேட்டதாக ஸூசிதமாகிறது.]

(அவதாரிகை.) இந்த ஆறுகேள்விகளுக்கும் பதில் சொல்லுவதாக பீஷ்மர்சொல்லுகிறார். அதில் உபாயத்தைக்கொண்டு உபேயத்தையடைய வேண்டுகையாலே முதலில் உபாய விஷயமான கேள்விக்குப் பதில்சொல்லுவதாக உத்தேசிதது, அதில் கடைசியிலகேட்ட ஜபாலம்பநப் பிரச்நம், ஸமீபித்திருக்கையாலும், தாமும் அதை மிகவிரும்பி யிருக்கையாலும் முதலில் அதற்குப் பதில்சொல்லுகிறார்.

ஐசுவாியத்தாலும பரிசர்யையாலும தேவர்களெப்படி மனிதர்களைக்காட்டிலும உயர்ந்தவரோ, அபபடி அந்த தேவர்களுக்கெல்லாம் தேவனாய், ஒருபடியாலும அளவிடவொண்ணாத வைபவசாலியாய் பரமோதாரனாய் விளங்குகின்ற ஜெகதீசனை அவனது ஆயிரந்திருநாமங்களையுஞ் சொல்லி சேதனன் இடைவிடாமல் ஊக்கத்தோடு ஸ்தோத்திரஞ்செய்து வந்தானாகில் ஸகலமான துன்பங்களையுங கடந்தவனாவான். (ச)

[எம்பெருமானைத் தியானித்தாலும் தோத்திரஞ் செய்தாலும் அது இடைவீடின்றி நடக்குமாகில் அது ரொம்பவும் பிரியமாயும் ஹிதமாயுமிருக்குமென்றும், இடையில் கொஞ்சம் ஓயுமாகில் அது பரம துக்ககரமாயிருக்குமென்றும் [24]சுருதியிலும [25]ஸ்மிருதியிலும் சொல்லப்படுகிறதன்றோ?]

[24] యదా హ్యేవైష ఏతస్మిన్నదృశ్యేఽనాత్మ్యేఽనిరుక్తేఽనిలయనే అభయం ప్రతిష్ఠాం విన్దతే । అథ సోఽభయం గతో భవతి । యదా హ్యేవైష ఏతస్మిన్నుదరమన్తరం కురుతే । అథ తస్య భయం భవతి ॥

[25] యన్ముహూర్తం క్షణం వాపి వాసుదేవో న చిన్త్యతే । సా హానిస్తన్మహచ్ఛిద్రం

மூ॥ తమేవచార్చయన్నిత్యంభక్త్యాపురుషమవ్యయం।
ధ్యాయన్‌స్తువన్‌నమస్యంశ్చయజమానస్తమేవచ॥ (౫)

(ப-ரை.) అవ్యయం-அழிவற்ற, తం-அந்த, పురుషం ఏవ - புருஷனையே, నిత్యం - எப்பொழுதும். అర్చయన్ - அர்ச்சிக்குமவன், భక్త్యా-பக்தியோடு, ధ్యాయన్ - தியானிக்தும், స్తువన్ - தோத்திரஞ் செய்தும், నమస్యన్-நமஸ்கரித்தும், యజమానః - பூஜித்தும் (ஸகலமான துன்பங்களையும் கடப்பான்.) (ரு)

வி பா. [இப்படி ஸாதநியோபாயங்களுள் ஜபமென்னும் ஸாலம்பநோபாயம் சொல்லப்பட்டதென்றறிக.]

அவதாரிகை. அர்ச்சனையும் ஸ்தோத்திரமுமே பரம தர்மமென்று இவருக்குத் தாத்பரியமாகையால், தர்மவிஷயமான ஐந்தாவதுப் பிரச்நத்தைத்தள்ளி, முதலில் அந்த அர்ச்சனை விஷயமாயும் ஸ்தோத்திர விஷயமாயுமிருக்கின்ற நான்காவது மூன்றாவதுப் பிரச்நங்களுக்கு உத்தரஞ் சொல்லுவாராய், அர்ச்சிப்பதற்கு ரொம்பவும் தகுந்தவன் எவனோ அவனையர்ச்சிக்கும் பிரகாரத்துடன் கூடச்சொல்லுகிறார்.

கீழ்ச்சொன்ன ஜபத்துக்கு எவன் விஷயமோ அவனே தான் அர்ச்சனைக்கும் தகுந்தவன்; இப்படியே [26]பிரமாணங்கள் சொல்லுகின்றன. ஆகையால் புண்டரீகாக்ஷனைய் எத்தனைகாலம் அநுபவித்தாலும் குறைவுபடாமல் தனக்கேற்றபடி வளர்கின்ற கல்யாணகுண பூர்ணனாய் விளங்குகின்ற அந்த பரம புருஷனை; பக்தி நிஷ்டனானவன், அவன் [27]நியமித்திருக்கிறபடியே அவனுக்குப் பரிசர்யை செய்தாலல்லது க்ஷணமும் தரிக்கமாட்டாதவனாம் தனக்கு நாதனான அவனிடத்தில் விசேஷ பக்தியுடன்கூட, இடைவிடாமல் பெருகுகின்ற அமிருததாரைபோல் இனியதாயும

సాభ్రాన్తిస్స్యాచ విక్రియా ఇతి ॥ వరంహుతవహ జ్వాలా పఞ్జరాన్తర్వ్యవస్థితిః ॥ నశౌరిచిన్తావిముఖజన సంవాసవైశసమ్ ఇతి ॥ ఏకస్మిన్నప్యతిక్రాన్తే ముహూర్తే ధ్యానవర్జితే । దస్యుభిర్ముషితేనేవ యుక్తమాక్రన్దితుంభృశమ్ ॥

26 తమిమంసర్వసమ్పన్న మాచార్యంపితరం గురుమ్ । అర్చ్యమర్చితుమిచ్ఛామస్సర్వేసమ్యక్తమర్హథ ఇతి ॥ తస్మాత్పూజ్యతమం నాన్య మహమ్మన్యే జనార్దనాత్ ॥ బ్రహ్మణశ్శితికణ్ఠశ్చ యాశ్చాన్యాదేవతాస్స్మృతాః । ప్రతిబుద్ధా నసేవన్తే యస్మాత్పరిమితంఫలమ్ ఇతి ॥ అనన్తన్తుఫలం తేషామ్ ॥

27 మచ్చిత్తామద్గతప్రాణాః ॥

தாபத்ரயத்தையும் நிச்சேஷமாய் போக்கடிப்பதாயு மிருக்கின்ற அவன் குணத்தியானத்தைச்செய்துகொண்டு அந்தத் தியானத்தாலுண்டான ஸந்தோஷாதி சயத்தால் சரீரத்தில மயிர்க்கூச்செழுந்து வாயில் சொல்லெழாமல் தொண்டையில் தடுரும்படி அநதக் குணங்களையே ஸங்கீர்த்தநஞ்செய்து, பக்தி பரவசனாயிருக்கையாலேமமகாரங் கொலைந்து வணக்கமுற்றிருக்கும் அந்தஃகரண பஹிஃகரணங்களாலும்-சரீரத்தாலும்,வாக்கினாலும் "எனதென்றுயான் அபிமானித்தவைகளையெல்லாம் நீ யுனதாககொண்டருளவேண்டு" மென்று எமபெருமானுடைய திருவடிகளில் அஹங்காரத்தாலே தூஷிதமான தன்னை ஸமர்ப்பித்து, தன்னை அவன்விஷயீகரித்த மஹோபகாரத்துக்குத்தக்கப் பிரத்யுபகார மொன்று மில்லாமையிலுண்டான பரபரப்போடும் நிஜமான பக்தியோடும் ஸமபாதிக்கப்பட்டனவாய், அதிமநோஹரமான அர்க்கியம், புஷபம, மதுபர்க்கம் தொடக்கமாய் ஔபசாரிகமென்றும ஸாம்ஸ்பரிசிகமென்றும் ஆப்யவஹாரிக மெனறுஞ் சொல்லப்பட்டவைகளாய், அவன் போகத்துக் கேற்றவைகளாயிருக்கின்ற போகோப கரணஙகள்கொண்டு எம்பெருமானுக்கு அத்தியந்தம் ஆதரத்தோடு திருவாராதநம் ஸமர்ப்பித்து வந்தானாகில ஸகலதுரிதங்களினின்றும் விடுபடுவன். (௯)

[இந்த பக்தியோகமேதான் முக்தியையடைவிக்கின்ற ராஜமார்க்கமென்று வேதாந்தங்களில் சொல்வதாய்க் காணப்படுகிறது. எங்ஙனேயென்னில்:— பரம்பரயாய் உபகரிக்கின்ற வாணாச்சிரமா சாரங்களாலும், அத்யந்தோபகாரிகளான சமதமாதி ஆத்மகுணங்களாலும் ஸித்திப்பதாய்; வேதநம், தியாநம, த்ருவாநு ஸ்மிருதி, முதலான சப்தபேதங்களாலே சொல்லப்படும் புத்தி பரம்பரைகளாலே இடைவிடாமல் எப்போதும் வெள்ளம்போல் பலதடவைகளில ஆவ்ருத்தி பண்ணப்பட்ட ஆதரத்துடன் கூடிய புத்தி விசேஷததாலுண்டாகும ஸம்ஸ்காராதி சயத்தால் ஏர்படுகின்ற விலக்ஷண பரத்தியக்ஷத்தை முடிவாயுடையதாய்; ஸத்வித்தை, ஆநந்தவித்தை, புருஷவித்தை, உபகோஸலவித்தை, முதலான பரவித்தைகளில் ஏர்ப்பட்ட குணோப ஸம்ஹார நியாயஸித்தமாயிருக்கின்றபிரம்மோபாஸநத்தை, ஸ்ரீபாதராயண பகவான், [28]பிரம்ம ஸூத்திரநியாயங்களைக்கொண்டு வேதாந்த [29]வாக்கியங்களைக்கடைந்து மோக்ஷஸாதநமாக நிர்ணயித்தார்.

---

[28]సర్వాపేక్షా చ యజ్ఞాదిశ్రుతేరశ్వవత్ ॥ శమదమాద్యుపేతస్స్యాత్ ॥ ఆవృత్తిరసకృదుపదేశాత్ ॥

[29]తమేవంవిద్వాన్ ॥ బ్రహ్మవిదాప్నోతిపరమ్ ॥ యజ్ఞేనదానేనతపసాఽ

வாக்யகாரரும் அப்படியே [30]நிர்ணயித்தார். இந்த உபாஸநந்தான் பழுத்ததாகில் இதை பக்தியென்கிறார்கள்; அதுவேயல்லது வேறில்லை ஏனெனில்:—ஸம்யோகமென்னும் விதி இரண்டுக்கு மொத்திருக்கின்றது. [அதாவது உபாஸநத்தைப்போலே பக்திக்கும் மோக்ஷ தாயகத்வமுண்டென்பதனால் இரண்டுக்கும் ஒருபலத்தோடே ஸம்யோகம் ஒத்திருக்கிறதென்றபடி] இதுவுந்தவிற? இப்படியே [31]ச்ருதியிலும்[32]பகவத்கீதையிலும், [33]ஆங்கிரஸ ஸ்ம்ருதியிலும் [34]வைஷ்ணவ தர்மத்திலும், [35]ஸ்ரீநாராயணீயத்திலும், [36]ஸ்ரீவாமநத்திலும்சொல்லப்படுகிறது. விதியுமிப்படியேயன்றோ 'உபாஸி' என்றும் 'பஜி' என்றுமிருக்கிறது. உபாஸனையென்றாலும் பஜனையென்றாலும், இரண்டும் ஸேவையேயன்றோ? ஆகையாலன்றோ நிகண்டுக்காரரும், ஸேவை, பக்தி உபாஸனை, என்கிற மூன்றையும் ஸமாநார்த்தகமாக [37]வெடுத்தார்கள். லிங்கபுராணத்திலும் மார்க்கண்டேயபுராணத்திலும், இப்படியே [38]சொல்லுகின்றது. உபாஸிக்கப்படுகின்ற பகவான் நீதற்ற மஹாகுணங்கள்பொருந்தி யிருக்கையாலே இந்த உபாஸநம் அளவற்ற ப்ரீதி ரூபமாயும், அவன் ஒருகாரணத்தாலின்றி ஸ்வபாவமாகவே ஸாவ ஸ்வாமியாயிருக்கையாலே அடிமையில் ருசியுள்ளதாயு மிருக்குமென்று விவேகிக்கபபட்டு இது பக்தியென்று சொல்லலாயிற்று.

నాశకేన॥ శాన్తోదాన్తః॥

[30]వేదనముపాసనంస్యాత్తద్విషయేశ్రవణాత్ ॥

[31]నసన్దృశేతిష్ఠతిరూపమస్య నచక్షుషాపశ్యతి కశ్చనైనమ్ । హృదామనీషా మనసాభిక్లృప్తోయఏనం విదురమృతాస్తే భవన్తి ఇతి॥ న సన్దృశేతిష్ఠతీ త్యుపక్రమ్య భక్త్యాచధృత్యాచసమాహితాత్మా జ్ఞానస్వరూపంపరిపశ్యతీహ ॥

[32]పురుషస్స పరఃపార్థభక్త్యా లభ్యస్త్వనన్యయా ॥ భక్త్యాత్వనన్యయాశక్యః॥ భక్త్యామామభిజానాతి ఇతి ॥

[33]భక్త్యాఽవిచ్ఛిన్నయాముక్తిః ॥

[34]పరమాత్మనిగోవిన్దే భక్తిరవ్యభిచారిణీ। ప్రయచ్ఛతినృణాంముక్తిం మాతేభూదత్రసంశయః ॥

[35]ధ్యేత్వాఽదేవంధ్రువం భక్తాఃపురాణంపురుషోత్తమమ్ । ప్రాప్నువన్తిసదాకామానిహలోకే పరత్రచ । అమోఘాస్తేభవిష్యన్తిభక్తిమన్తశ్చయేనరాః ॥

[36]యేషాంవిష్ణుఃప్రియోనిత్యం యేవిష్ణోస్సతతంప్రియాః । నతేపునస్సమ్భవన్తి తద్భక్తాస్తత్పరాయణాః ॥

[37]సేవాభక్తిరుపాస్తిః ॥

[38]భజఇత్యేష ధాతుర్వై సేవాయాం పరికీర్తితః । తస్మాత్సేవాబుధైఃప్రోక్తా భక్తిశబ్దేనభూయసీ ॥

(வி.) இப்படி பிரியனுயிருக்கின்றமையை யறிவித்துக்கொண்டுதான் உபாஸந விதியில் [39]வசநங்கள் பலவாகப் பிரவர்த்தித்தன.

இந்த உபாஸநம், அடிமையில்தானே ருசியுள்ளதா யிருக்குமென்கைக்கு [40]வசநங்களும்பல. பக்திக்கு, திருநாம ஸங்கீர்த்தநாதிகள் சரீர ஸ்தாநமென்கைக்கும் [41]வசநங்கள் ஸ்பஷ்டமாயிருக்கின்றன.

இந்தபக்தியே ஸகல சாஸ்திரார்த்தங்களிலும் ஸாரமாயிருக்கையால் இது பரம ரஹஸ்யமென்று [42]சொல்லப்பட்டது.

(அவதாரிகை.) ஓ! இந்த பக்தியானது [43]சாஸ்திரத்திற்சொன்னபடியே அனேகமாயிரம் ஜன்மங்களால் ஸம்பாதித்த ஸுக்ருத பரிபாகத்தால் ஸகலபாபங்களையும் போக்கடித்தவர்களும், நெடுநாள் இடைவிடாமல் ஸேவித்தால்மாத்திரம் நிலைக்கும் படியானது; ஆகையால் சாஸ்திரத்திற்சொன்ன யாதொரு உபாயத்தையும் அநுட்டிக்க மாட்டாதப் பிராணிகளுக் கென்ன

---

[39] ప్రియో హి జ్ఞానినోఽత్యర్థమ్ ॥
భజతాం ప్రీతిపూర్వకమ్ ఇతి ॥
తుష్యన్తి చ రమన్తి చ ఇతి ॥
నాథ యోనిసహస్రేషు ఇతి ॥
యా ప్రీతిరవివేకానామ్ ఇతి ॥
తత్స్మృత్యాహ్లాదసుస్థితః ఇతి ॥
తన్నామ స్మరణోద్భూత పులకశ్వాసురపుఙ్గవ ఇతి ॥
సేవా భక్తిసమాఖ్యాతా జ్ఞానవాసనయా కృతా। ఉత్పన్నాయాం తతస్తస్యాం స్నేహభావస్స్వయం భవేత్ ఇతి ॥
పరమాత్మని యో రక్తో విరక్తోఽపరమాత్మని। సర్వేషణావినిర్ముక్తస్స భైక్షం భోక్తుమర్హతి ఇతి ॥
స నో దేవశ్శుభయా స్మృత్యా సంయునక్తు ఇతి ॥

[40] మామనుస్మరన్ ॥ పార్థానుచిన్తయన్ ॥ కృష్ణానుస్మరణం పరమ్ ॥

[41] సతతం కీర్తయన్తః ॥ మన్మనా భవ ॥

[42] ఇదన్తు తే గుహ్యతమమ్ ॥ యద్జ్ఞాత్వా నేహ భూయోఽన్యత్ ॥ సర్వగుహ్యతమం భూయః ఇతి ॥

[43] బహూనాం జన్మనామన్తే జ్ఞానవాన్మాం ప్రపద్యతే ॥ వాసుదేవస్సర్వమితి స మహాత్మా సుదుర్లభః ॥ నరాణాం క్షీణపాపానాం కృష్ణే భక్తిః ప్రజాయతే । జన్మాన్తరసహస్రేషు ॥ తపోధ్యానసమాధిభిః

అనాదినిధనం విష్ణుంసర్వలోక మహేశ్వరమ్ ।
లోకాధ్యక్షంస్తువన్నిత్యంసర్వదుఃఖాతిగోభవేత్ ॥౬
బ్రహ్మణ్యంసర్వధర్మజ్ఞం లోకానాంకీర్తివర్ధనమ్ ।

(ப-ரை.) అనాదినిధనం - ஆதியந்த மற்றவனாய், - విష్ణుం வியாபித்திருக்குமவனாய், సర్వలోకమహేశ్వరం - ஸகலலோக ஈச்வரனாய், లోకాధ్యక్షం - லோகாத்தியக்ஷனாய், బ్రహ్మణ్యం வேதப் பிரதிபாத்தியனாய், సర్వధర్మజ్ఞం - ஸகல தாமங்களுமறிந்தவனாய், లోకానాం - ஜநங்களுக்கு, కీర్తివర్ధనం - கீர்த்தியை விருத்திபண்ணுமவ

(வி.) கதி என்கிற பயத்தைப் போக்குவதற்காக லகுவான உபாயத்தைக் காட்டாநின்றுகொண்டு மூன்றாவது கேள்விக்குப் பதில் சொல்லுகிறார் "தமேவ" என்று தொடங்கி "ஸர்வபூதபவோத்பவம்" என்றுமளவாக.
[ஸர்வப்பிரகாரத்தாலும் புருஷோத்தமனே ஸ்தோத்திரார்ஹனென்கிற அபிப்பிராயத்தால், இதர தேவதைகளைவிட இவனுக்குண்டான பேதங்களை இதில் காட்டுகிறானென்றுணர்க.]

உபாய சூன்னியருக்குத் தியாகம் முதலான
லகூபாயத்தைக் காட்டுகிறது.

(ஆதியந்த மில்லாமையாலே) காலோபாதி ரஹிதனாய், எங்கும் வியாபித்தவனாகையாலே தேசோபாதிரஹிதனாய், (ஸர்வலோகங்களுக்கும் மஹேச்வரனாகையாலே) ஸ்தோத்திரஞ் செய்பவனுடைய மனோரதத்தைப் பூர்த்திபண்ணும்படியான ஐசுவரியமுடையனாய், (லோகத்தைப் பிரத்தியக்ஷமாய்க் காண்பவனாகையாலே) ஸ்தோதாவிற்கு உசித மின்னதென்பதைத் தானாகவேசிந்திப்பவனாய், (அநந்த சாகைகளுடன்கூடிய வேதங்களால் பிரதிபாதிக்கப்படு மவனாகையாலே) ஸ்தோத்திரம் பண்ணுவதற்கு வேண்டும் விஷயங்களுள்ளவனாய், (ஸகல தாமங்களையு மறிந்தவனாகையால்) தன்னைத்துதிப்பது பரமதர்மமென் றறிபவனாய், [44]சாஸ்திரத்திற் சொல்லியபடி எந்தப் பிராணியானாலும் தன்னைத் தோத்திரஞ்செய்தால் அதைத் தன்னைப்போலவே வேதங்களிலும் லோகங்களிலும் புகழும்படி அதற்குக் கீர்த்தியுண்டு பண்ணுமவனாய், (ஸர்வ லோகநாதனாகையாலே) ஸ்தோத்திரம் முதலியஸகல பரிசரணைக்கும்தகுந்தவனாய், [45]உத்யோகபர்வத்தில சொல்லுகிறபடி (சிரதி

[44]యం స్తువన్ స్తవ్యతామేతి ॥

[45]అన్యత్పూర్ణా దపాంకుమ్భా దన్యత్పాదావనేజనాత్ । అన్యత్కుశల సంప్రశ్నాన్నచేచ్ఛతి జనార్దనః ॥

లోకనాథంమహద్భూతం సర్వభూతభవోద్భవమ్॥ (౭)
ఏషమేసర్వధర్మాణాం ధర్మోఽధికతమోమతః।

ஞய், లోకనాథం - லோகஸ்வாமியாய், మహద్భూతం - பெரியதத்வ மாய், సర్వభూతభవోద్భవం - ஸகலப்பிராணிகளுடைய ஸதத்தைக்கும் காரணமாயிருக்கின்ற, తమేవ - அவனையே, నిత్యం - எப்போதும், స్తువన్ - ஸ்தோத்திரஞ்செய்தால், సర్వదుఃఖాతిగః - ஸகலதுன்பங்களை யும் கடந்தவனாக, భవేత్ - ஆகுவன். (எ)

(ப-ரை.) ఏషః - இது, మే-எனக்கு, సర్వధర్మాణాం - ஸகல தருமங்களிலும், అధికతమః - மிகவுமச்ரேஷ்டமான, ధర్మః - தர்மமாக, మతః - எண்ணப்பட்டது; యత్-ஏதென்றால், భక్త్యా -

வி. சயமானமஹத்வமுடையனாய்ப்பெரியனாகையாலே)யாதொரு வருத்தமு மின்றி கேவலம் ஸ்தோத்திரமாத்திரத்தாலே மனமு வக்குமவனாய், அசேதனங்கள்போ லாய்விடாமல் தங்களுக்கு ண்டான அறிவுக்குப் பிரயோஜநமாய் அவனைச்சிந்திக்கும (ஸகல சேதநாக்கும ஸத்தையையுண்டுபண்ணு மவனாகையாலே) அப படிப்பட்டவர்களை அவசியம அநுக்கிரஹிப்பவனாய், விளங்கு கின்ற பரமபுருஷனை பரிபூர்ண பக்தியில்லாமற போனபோதிலும் ஆனபடியே யாகிலும் குணஸங்கீர்த்தநஞ் செய்பவன்; தாபத்திர யமென்னும காட்டுத்தீயைக் கடந்து நிரதிசயாநந்த சீதளமான நீ ராழிபோல விளங்குகின்ற வெம்பெருமானையடைந்துவாழ்வான்.

[இங்கே "ஸ்துவந்" என்பதற்கு ஆனபடியாகிலும் ஸ்தோத்திரஞ் செய்பவனென்று வியாக்கியாநஞ் செய்வதேயுக்தம். ஏனெனில்.—இதற்கு முன்பு ஒருதடவை 'ஸ்துவந்'என்று தியாநம் முதலானவைகளுடன் சேர்த் துப் படிக்கப்பட்டிருக்கையால் அதைப்பெரியஸ்தோத்திரமாகவும், இதை யற்பமாகவும் கொள்ளவேண்டும்; அல்லாதபோது புநருக்தமாகும். மேலும், "ஸ்துவந்தஃகம" என்றுதனித்தப் பிரச்நமாயிருக்கையாலும் மற்றும் அனே கசாஸ்திராந்தரங்களோ டொத்திருக்கையாலும் இது உசிதமாகிறது.]

(அவதாரிகை) ஐந்தாவது பிரச்நத்திற்கு பதில்சொல்லுகிறார்.

ஸ்மரித்தல், கீர்த்தித்தல், பிரணமஞ்செய்தல் இவற்றைவிட பரிசர்யை ஏற்றமுடைய தென்கிறது.

அ. * 'ஸர்வபூதபவோத்பவம்' ஸகலப்ர ஸாரத்துக்குக் காரணமானவனை,

యద్భక్త్యా పుణ్డరీకాక్షం స్తవైరర్చేన్నరస్సదా ॥౮.

பக்தியுடன், పుణ్డరీకాక్షమ్ - புண்டரீகாக்ஷனை, నరః - நரன், స్తవైః - ஸ்தோத்திரங்களால, సదా - எப்போதும், అర్చేత్ - ஆர்ச்சிக்கக்கடவன். (௮)

(வி.) இதைததான் நான் ஸகலதர்மங்களிலும சீரியதாக மதித்திருக்கிறேன்.

[காமங்கள்தான்-ஐஹிகமான புத்திரன், பசு, அன்னம் முதலியவைகளைச் சாதிபபவையென்றும், ஆமுஷ்மிகமான ஸ்வர்க்காதிகளைச் சாதிபபவையென்றும், பலத்தில் ஸங்கமின்றிக்கே எம்பெருமானுடைய ஆராதநரூபமென்கிற நினைவுடனே யநுட்டிக்கபபடும் இஷ்டாபூர்த்தாதி கர்மங்களாலே பரிஷ்கரிக்கபபட்ட தத்வஞ்ஞான ஸமாதிரூபமாய்க்கொண்டு மோக்ஷத்தைச் சாதிக்குமவையென்றும், பிரீதியோடு எம்பெருமானை நினைப்பது, அவன் குணங்களைக் கீர்த்தநஞ்செய்வது, தன்னுடன் ஸமர்ப்பிப்பது முதலாய், அவனுக்கேகாந்தமானவடிமை செய்வதென்றும் நான்குவகை. அந்நான்கினுள் முதல் மூன்றையிட இதற்கு மிகுந்தவேற்றஞ்சொன்னதாக கண்டுகொள்வது.]

அவதாரிகை அதையே உபபாதிக்கிறார்மேல்.

அதாவது-நரனானவன் பக்தியுடன்புண்டரீகாக்ஷனை எப்போதுமஸ்தோத்திரங்களாலே அர்ச்சிககக் கடவன் என்பதாம. (௮)

[இங்கு ‘பகதியுடன்’ என்றது அநுஷ்டாந ஸமயத்திலும் பிரீதியை யுட்கொண்டிருக்கையாலே சுகமாய் அநுட்டிக்கலாயிருக்குமென்கைககாக. இப்படியே 46கீதையில் சொல்லப்பட்டது. மேலும் அத்யந்தம் பிரியனை நாயகனை ஸ்மரிப்பது நாயகிக்குப் பிரியமாகவேயன்றோ விருக்கும்? இதனால் அஸ்வாமிகளான தேவதாந்தரங்களைச் சேவிப்பது, கஷாயபாநம்போல் விரஸமா யிருந்ததேயாகிலும் அதை ஹிதமென்கிற புத்தியோடே அநுட்டிக்க வேண்டுமென்கிற வருத்தமிதற்குச்சிறிதும்இல்லையென்கிறது.

‘புண்டரீகாக்ஷனை’ என்றதனால் ஸேவிக்கப்படுமவன் அழகாயிருக்கிறானகையாலே, விகாரமாய் பயங்கரமான தேவதாந்தரஸேவையைவிட இந்தஸேவைக்கு ஏற்றம் சொல்லப்பட்டது.

‘ஸ்தோத்திரங்களால்’ என்றதனால் ஸ்தோத்திரமென்பது வாக்குமாத்திரத்தாலே ஸாதிக்கலாமாகையாலே, விச்வஜித். சாந்திராயணம் முதலானவைகளைப்போல் இதற்குத் திரவ்யச்சிலவும் அதிக ஆயாஸமும் வேண்டுவதில்லை யென்கிறது, இப்படியே 47வியாஸபகவான் அருளிச்செய்தார்.

---

46 సుసుఖంకర్తుమ్ ।

47 ఘోరేషుచ వ్యాధిషు వర్తమానాః । సఙ్కీర్త్య

(வி.) ஸ்ரீவிஷ்ணு[48] புராணத்திலும், [49]வைஷ்ணவதர்மத்திலும், இன்னும் [50]ஸ்தலாந்தரத்திலும், [51]வைஷ்ணவஸூக்தத்திலும் இப்படியே சொல்லுகிறது.

அர்ச்சிக்கக் கடவன், என்றதனாலே— ப்ரத்யக்ஷத்தில் ஒருபுருஷ விசேஷத்தை ஆராதநம் பண்ணுகிற பாவனையாயிருக்கையாலே, கேவலம் பரோக்ஷமாய் வருத்தமாயிருக்கமாட்டா தென்றுமதையறிவிக்கிறார். இப்படியே [52]கீதையில் அருளிச்செய்தான்.

'நரன்' என்கையாலே ஸகலசேதநர்களுக்கும் அவரவர் யோக்கியதைக்குத் தக்கபடி அர்ச்சனையில் அதிகாரமுண்டென்று தோற்றுவிக்கிறார்.

'நரன்' என்று ஒருவனைச்சொல்லுகையாலே மஹாயாகாதிகளைப் போல் பலரிருந்து செய்யவேண்டுமென்கிற ஸஹாயாபேக்ஷையில்லையென்கிறது.

ஜந்மம், விருத்தி, குணங்கள், இவைகளால் நிந்திக்கும்படியானவனுக்கும் பக்தியென்னும் அபிருசிமாத்திர மிருக்குமாகில எம்பெருமானை நிர்ப்பயமாய்ஸேவிக்கக்கூடுமன்றோ? அப்படி ஸேவிப்பதனால், உடனே கங்காப்பிரவாஹத்தால் ஸகலகல்மஷங்களும ஒழிந்துபோவதுபோல், விஷயப் பிராவண்யங்கொலைந்து பரமதார்மிகனாகிறான். இப்படியே [53]கீதையில் குணஜந்ம விருத்தங்களால் குறைந்தவனும் பக்திபண்ணினானாகில் சிறந்தவனே யென்றருளினான். ஆனால், இப்படி சொன்னானென்று தார

---

[48] అవశేనాపియన్నామ్ని ॥

[49] అజ్ఞానతో౽జ్ఞానతో వా వాసుదేవస్యకీర్తనాత్ । తత్సర్వంవిలయంయాతి తోయస్థంలవణంయథా ॥

[50] శమాయాలంజలంవహ్నేస్తమసోభాస్కరోదయః । శాన్తిఃకలేరఘౌఘస్య నామసఙ్కీర్తనంహరేః ॥ యన్నామసఙ్కీర్తనతో౽పి ముచ్యతే ॥ యన్నామసఙ్కీర్తనతోమహాభయాత్ విమోక్షమాప్నోతి ॥ సకృదుచ్చరితంయేన హరిరిత్యక్షరద్వయమ్ । బద్ధఃపరికరస్తేన మోక్షాయగమనంప్రతి ॥ యస్యనామ్నిస్మృతేమర్త్యస్సముత్క్రాన్తేరనన్తరమ్ । ప్రాప్నోతి వైష్ణవంస్థానం పునరావృత్తివర్జితమ్ ॥ అచ్యుతానన్తగోవిన్దనామోచ్చారణభేషజాత్ । నశ్యన్తిసకలారోగాః సత్యంసత్యంవదామ్యహమ్ ॥ సఙ్కీర్తయేజ్జగన్నాథం వేదంవాపిసమీరయేత్ ॥

[51] ఆస్యజానన్తోనామచిద్వివక్తన-ధ్రువాసో౽స్యకీరయోజనాసః ॥

[52] ప్రత్యక్షావగమం ॥

[53] సమో౽హంసర్వభూతేషు ॥ అపిచేత్సుదురాచారః ॥ మాం— యే౽పిస్యుః పాపయోనయః ॥

(வி) சாரங்கள்கூட தர்மமாகட்டுமென்று நினைக்கவொண்ணாது, அது எம்பெருமானுக்கு அநிஷ்டமென்று [54]வசநங்கள் கோஷிக்கின்றன; ஆனதுபற்றியே கீதையில அவ்வர்த்தஞ்சொன்ன வுடனே, 'தன்னிடத்தில் பக்திபண்ணுமவன் துராசாரனாயிருந்தால் அவன்சீக்கிரத்தில் தார்மிகனாவா'னென்று [55]அருளிச்செய்தான். பக்திக்கு இன்னான் அதிகாரியென்றுமது [56]ஸூத்திரங்களில் நிர்ணயிக்கப்பட்டுளது. மேலும் புருஷன் எந்ததசையிலிருந்தாலும், மாதாவைப்போல் அத்தியந்தம் வாத்ஸல்யமுடையனாய், ஸர்வபந்துவாய், விளங்கும் பரமஸௌஹ்ருத்தான பகவானைப் பெயர்சொல்லிக் கூப்பிடுவது யுக்தமேயன்றோ! அதுவுமின்றி இவ்விஷயம் கஜேந்திராழ்வான், ஜடாயு, காகாஸுரன், இராவணாநுஜன், கோஸலதேசங்களில் பிரஜைகள், இடைப்பெண்கள், மாலாகாரர் முதலானவாளிடங்களில் கண்டுமிருக்கிறோம். ஆனால் உத்தரமீமாம்ஸையில அபசூத்திராதிகரணத்தில் பிரம்ம க்ஷத்ரிய வைச்யர்களென்கிற திரைவர்ணிகளையொழிய மற்றவருக்கு, அதிகாரமில்லை யென்று நிஷேதிக்கப்பட்டதே யென்றால் அங்கும் பகவத்ஸமாச்ரயணத்தை நிஷேதிக்கவில்லை; மற்றப்படி அவர்களுக்கு உபநிஷத்திற்சொன்ன ஸம்ஸ்காரமில்லாமையாலே வேதாந்தங்களாலறியவேண்டிய பரவித்தையை ஸம்பாதித்தும் காரியகரமாக மாட்டாதாகையால் அதிகாரமில்லையென்று ஸித்தாந்தம் செய்யப்பட்டது. ஆகையால் அவர்களுக்கு உபநிஷத்தில் சொன்னப் பிரம்மவித்தையென்கிற மஹாபதத்தில் அதிகாரமில்லையேயன்றி பகவத்பஜநத்துக்கு யாதொரு தடையுமின்று. மேலும், இதிஹாஸ புராணாதிகளில் சண்டாளாதிகளுக்குக்கூட பகவத் பஜநத்தில் அதிகாரஞ்சொல்லப்பட்டது. [57]வைஷ்ணவதர்மத்தில் - 'அவனை வெகுமதிக்கத் தக்கதென்றும் அவனுக்கு மோக்ஷப்பிராப்தியுண்டென்பதாகவும்' சொல்லுகிற வசநங்களுங் கண்டுகொள்ளலாம். இப்படி இவ்விஷயம் வியவஸ்தை பண்ணப்பட்டதாகையால் சாஸ்திரம் கொஞ்சமும் விரோதிக்கமாட்டாது.

இங்கே 'எப்பொழுது' மென்கையாலே இன்னகாலத்திலென்றாவது இன்னவிடத்திலென்றாவது இதற்கு நிர்ப்பந்தமில்லை யென்கிறது. இதனால் அயநம், ருது, மாஸம், பக்ஷம், நக்ஷத்திரம், முகூர்த்தமென்று காலவிசேஷத்தையும், இன்னவிடமென்று தேசத்தையும் அபேக்ஷிக்கிற மற்ற வியாபாரங்களைக்காட்டிலும் இதற்கேற்றஞ் சொன்னபடி ; இவ்விஷயத்தி

---

[54] నావిరతో దుశ్చరితాన్నాశాన్తో నాసమాహితః ॥ అప్రాప్యః కేశవో రాజన్ని
న్ద్రియైరజితైర్నృణామ్ ॥

[55] క్షిప్రం భవతి ధర్మాత్మా ॥

[56] శమదమాద్యుపేతస్స్యాత్ ఇతి ॥ అన్తరా చాపి తు తద్దృష్టేః ॥

வி. லும் பிரமாணங்கள்பலவுண்டு. ஆசாரஹீனனைப்பஜித்தானென்று இவன் ஸம்ஸர்க்கத்தால எம்பெருமானுக்கு ஒருகுறையாவது, இவனுடையசுத்தி முதலிய ஸஹாயம் குறைந்ததென்று அநுக்கிரஹிப்பதில் அஸாமர்த்தியமாவது வருமதன்றே! மற்றபபடி தன் ஸம்பந்தத்துக்குத் தகாதவனாயினும் அவனைபபரிசுத்தனாக்கித் தனக்கு தக்கவனாகச்செய்து ஆள்கொள்ளுமவனன்றே! ஆகையாலன்றே 'அவனைப்பாடுவதில் அசுத்தியில்லை' யெனபது முதலான [58]வசநம் பிரவர்த்தித்தது.

ஆனால் ஸத்என்றும் அஸத்என்றும் அதிகாரிகளில் தாரதம்ய மெதற்காக ஏற்பட்டதெனில—உச்சமாயும் நீசமாயுமிருக்கும் அதிகாரிகளுக்கு பரஸ்பரம் சோக்கையுண்டாய் அதனால் தர்மம் முழுகிப்போ மாகையால் அதைக்காப்பதற்காக.

ஸங்கீர்த்தநம் முதலானது, அல்பஸ்வரூபமா யிருந்ததேயாகிலும் பலன் பெரியதாகவேயிருக்கும். இபபடியே [59]கீதையில் சொல்லப்பட்டது. மற்ற தர்மங்களைப்போல இதை ஆரம்பித்து இடையில் விடுவதனால் கேடுமில்லை; இதற்கும [60]கீதையிலதானே வசநமிருக்கிறது. முறைப்படி யநுட்டிக்கத் தவறுதலாலாவது,ப்ரபல விரோதத்தாலாவது இதற்குப் பிரத்யவாயமில்லை; [61]இதற்கும் வசநமுண்டு. இவ்வசநங்களெல்லாம் அர்த்தவாதமாயிருக்கலாமோவென்று சங்கிக்கவேண்டாம். இது அதிவாதமாகிலன்றோ சங்கிப்பது! மேலும் அர்த்தவாத பதங்களுக்குக்கூடப் பிரபலப் பிரமாணத்தோடு விரோதமில்லாதபோது,ஸ்வயம் பிரமாணமான அவற்றிற்கு அர்த்தமில்லையென்று சொல்வது, ஸாஹஸமும், அநியாயமுமேயாம்.

ஆனால் மிகவும் பெரியதாய் செய்தற்கரியதாய் தபஸ்என்றும், ஸமாதியென்றுஞ் சொல்லப்படுகின்ற மஹாதர்மங்களால் ஸாதிக்கவேணடிய தத்வஜ்ஞானத்தை, கேவலம்வாக்கினால்மாத்திரம் ஸாதிப்பதாகச்சொல்வது அதிவாதமன்றோ! அதனால் பெரியஸாதநங்களை யுபதேசிக்கும் சாஸ்திரங்கள் நிஷ்ப்ரயோஜநமென்பதாய் முடிவதோடு பிரமாணாந்தரங்களோடும விரோதியாதோவென்றொரு கேள்வி பிறக்கலாம், இது பகவத்பிரபாவ மறியாதவர் சொலலும் பேச்சாகையால் ஆதரிக்கத் தக்கதன்று. ஏனெனில்:— பகவத் ஸங்கீர்த்தநம் கேவலம் சிறியதே யாயினும் சுமக்கக்கூடாத சுமையை

[58]చక్రాయుధస్యనామాని సదాసర్వత్రకీర్తయేత్ । నాశౌచంకీర్తనేతస్యపవిత్రంభగవాన్హరిః ॥ ప్రాతర్దవేతికృష్ణేతి గోవిన్దేతిచజల్పతామ్।మధ్యాహ్నేచాపరాహ్నేచయోవసాదస్స ఉచ్యతామ్ ॥

[59]స్వల్పమప్యస్యధర్మస్య త్రాయతేమహతోభయాత్ ॥

[60]నేహాభిక్రమనాశోస్తి ॥ నమేభక్తఃప్రణశ్యతి ॥ యంప్రణమ్యనసీదతి ॥ నవాసుదేవం ప్రణిపత్యసీదతి ॥ జనార్దనం ప్రణిపతితోనసీదతి ॥

[61]ప్రత్యవాయోనవిద్యతే ॥ బద్ధఃపరికరస్తేనమోక్షాయగమనంప్రతి ॥

யும் தாங்குமதே! ஆனால் குருசாஸ்திரங்கள் நிஷ்பிரயோஜனங்களாமென வேண்டா; அவை சக்தியுள்ள அதிகாரிகளாக ஏற்பட்டவைகளாம்; இதுவோ, சக்தியிருந்தாலும் இல்லாமற்போனாலும் எம்பெருமானிடத்தில் அஸாதாரணமான ருசியுண்டாகும்படியான பாக்கியவான்களை அநுஷ்டிக்குமது. குருவான உபாயத்துக்கும் பகவத்ப்ரஸாதமே பலஹேதுவானாலும், லகுவான உபாயத்திலும் அதுவே யாகத்தட்டில்லையே! அதில்பிரயோகம் அதிகமாயிருக்கிறதென்று பகவானே உகந்தானாகில், இதில்இருதயம் சுத்தமாயிருக்கிறதென்று உகக்கிறான். இப்படியே [62]பகவத்வாக்கியங்களும், [63]வியாஸஸ்மிருதிவசனங்களும், [64]விஷ்ணுதர்மவசனங்களுமிருக்கின்றன.

135ఏష హ్యేవానందయాతి ॥ తద్ధేతువ్యపదేశాచ్చ॥ అహం త్వా సర్వపాపేభ్యో మోక్షయిష్యామి ॥

136తేషామేవానుకమ్పార్థమ్ ॥ తేషామహం సముద్ధర్తా ॥

137సంయుక్తమేతత్ క్షరమక్షరం చ వ్యక్తావ్యక్తం భరతే విశ్వమీశః। అనీశశ్చాత్మా బధ్యతే భోక్తృభావాత్ జ్ఞాత్వా దేవం ముచ్యతే సర్వపాశైః ॥ ప్రధానక్షేత్రజ్ఞపతిర్గుణేశః ॥ క్షరాత్మానావీశతే దేవ ఏకః ॥

138 ఈశ్వరస్సర్వభూతానామ్ ॥ దైవీ హ్యేషా గుణమయీ ॥ దైవీ దేవస్య క్రీడతః ॥ క్రీడనకమ్ ॥ సంసారమోక్షస్థితిబంధహేతుః ॥

[నారసింహవపుశ్శ్రీమాన్ కేశవః పురుషోత్తమః ॥]

నారసింహవపుః-நரசிங்கமேனியன், శ్రీమాన్-அழகுடையவன், కేశవః-சிறந்தகுழலுடையவன், పురుషోత్తమః-புருஷரிற்காட்டில்சிறந்தவன்

(வி.) (அவதாரிகை.) தன்னிடத்தில் பக்திபண்ணுமவர்களுக்கு நேரிடும்பிரதிபந்தகங்களைப்போக்கு மவனென்கிறதுமேல்.

நாரஸிம்மவபுః=பக்தரான ப்ரஹ்லாதாழ்வானுடைய பயத்தைப் போக்குவதற்காக அவன் அபேக்ஷித்தக்ஷணத்தில நரசிங்கமென்கிற திவ்வியமான திருமேனியைத் தரித்தவன்.

ஸ்ரீமாந்— இப்படி ஒன்றுக்கொன்று சேராச் சேர்த்தியாயிருக்கின்ற நரரூபமும சிஙகரூபமும கலந்ததிருமேனி யெடுக்கச் செய்தேயும், ஸௌந்தரியம் லாவண்யம் முதலானவைகளால் அதிமநோஹரமாய விளங்குமவன். அப்பொழுது நரங்கலந்த சிங்கமான அவ்வுருவம சோநதிருக்கிற அழகைக கண்டவாகள் பிறகு சுத்த ஸிம்மத்தையாவது சுததநரனையாவது கண்டால இதென்ன விகாரமென்னும்படி அவ்வளவு ஸுந்தரமாய் விளங்கினனென்றறிக.

(அவதாரிகை.) இப்படிப்பட்ட ஸவுந்தரியாதிகளுக்குத் தகுந்த லக்ஷணமிதென்கிறதுமேல்:—

கேசவః— மிகவுங் கொண்டாடும்படி சுருகிகென்று நீலநிறத்தோடு அழகாய் விளங்குமபடியான குடிலகுந்தளங்கள் பொருந்தியவன்.

(அவதாரிகை.) பகவானுக்கு லோகத்தில் காணப்படும் லக்ஷணமுண்டாயிருப்பதாகச் சொல்லவே ஸாதாரணமாய் நினைக்கும்படி யிருக்குமென்று அவனை லோகவிலக்ஷணனென்கிறதுமேல்;—

புருஷோத்தமః=புருஷர்களெல்லாரையுங்காட்டில் ரொம்பவும் உத்கிருஷ்டன்.

[இங்கே 'புருஷ' என்கிறதனால் அறிவுடைமையைச்சொல்லுகிறபடியால் அறிவிழந்த அசேதநத்தைக்காட்டிலும் பகவானுக்கு சிறப்புச்சொல்லி, 'உத' என்று ஏற்றஞ் சொல்லுகையாலே அறிவுடையரானசேதநரைக்காட்டிலும்பகவானுக்கு ஏற்றஞ்சொல்லி, 'தம' என்கிறவிகுதியின்ஸாமர்

(அ.) ஸ்ரீமாந்=நித்தியமாய் லக்ஷ்மீவாஸஞ் செய்யும்படியான மார்பையுடையவன். கேசவః=கః அః ஈசః ச ஏதே வசேவர்த்ததே என்றுதிரிமூர்த்திகளும் வசமாயிருக்கபபெற்றவன். அதவா—கః ஈசః=பிரமனும் சிவனும்; இவர்கள் வசமாயிருக்கப்பெற்றவனெனறுமாம். கேசியைவதம் பண்ணினதனால் கேசவனென்றுமாம்.

[సర్వశ్శర్వః]

సర్వః- எங்கும் செல்பவன், శర్వః-ஹிம்ஸிப்பவன்.

(வி) ச்ரியத்தால கிடைத்த 'தர' என்னும் விருத்தியால் முக்தாத்மாக்களைக்காட்டிலும் ஏற்றஞ்சொல்லி, 'தம' என்பதனால் நித்யர்களைவிட ஏற்றஞ்சொல்லிற்று. ஆதலால் ஸர்வோத்க்ருஷ்டனென்றதாயிற்றென்றறிக.]

இவ்வர்த்தம் மிகவும் மேலான ரஹஸ்யமென்று பகவான் கீதையில் "த்வாவிமௌபுருஷௌ" என்கிறவிடத்தில் அருளிச்செய்தார். இவ்விஷயமாய் [139]ப்ரமாணங்கள் வெகுசாய்க்காணலாம். இந்தபுருஷோத்தம சப்தத்தாலும்; போக்தாவான சேதநனும், போக்யமான ப்ரக்ருதியும், ப்ரேரிக்குமவனான ஈச்வரனுமாகிய மூன்று தத்வங்களும் ஒன்றுக்கொன்று பேதப்பட்டவை யென்பதாய் ஸ்பஷ்டமாய் விளங்குகிறது. இதனால ப்ரம்மமே விகாரப்படுகிறது என்கிறபக்ஷம் நிரஸிக்கப்பட்டதென்றுணர்க.

ப்ரம்மம் விகாரப்படுகிறதென்றும், ப்ரம்மந்தான் அஜ்ஞானத்தால் ஸம்ஸாரத்தையடைகிறதென்றும், ஈச்வரனாய் விளங்குகிற ஸ்ரீமந்நாராயணனைக்காட்டிலும் யாதொரு தன்மையுமின்றிக்கே மற்றொரு ப்ரம்மம் இருக்கிறதென்றும், அவ்யக்தமும், அதில் நின்றும் விடுபட்ட முக்தரும் ஈச்வரனும் ப்ரம்மத்தில் லயித்து அங்கிருந்து முண்டாகின்றார்களென்றும் இப்படியெல்லாம் ஒப்புக்கொள்ளும் பக்ஷங்கள் இந்த புருஷோத்தமசப்தத்தோடும் ஸகலமான வேதாந்த ஸித்தாந்தங்களோடும் விரோதிக்கும்.

(அவதாரிகை.) இப்படி ஒன்றையும் அபேக்ஷிக்காமல் லோகவிலக்ஷணனாயிருக்கிற தன் இருப்புக்குத்தக்கபடி உபேக்ஷையாயிராமல் ஸகலத்தையும் சரீரம்போல் அபிமானித்திருக்கிறானென்கிறது மேல்:—

ஸர்வ:=ஸர்வத்திலும் வியாபித்திருப்பவன்.

[இந்த வியாப்தியைக் கொண்டுதான் பகவானை ஸர்வஸ்வரூபனாகச் சொல்லுகிறது. இதற்கு வசநம் 140.]

ஶர்வ:=(ச்ருணாதி) நாசஞ்செய்யுமவன். அதாவது தனக்குச் சரீரபூதங்களான ப்ராணிகளினது அனிஷ்டங்களை நாசஞ்செய்பவனென்றபடி.

(அ.) சர்வ:=ஸகலப்ரஜைகளையும் ஸம்ஹரிப்பவன்.

---

[139] ద్వావిమౌ పురుషౌ లోకే ॥ భూమిరాపోఽనలో వాయుః ॥ యో మామజమనాదిం చ ॥ అవికారాయ శుద్ధాయ ॥ పరః పరాణాం పరమః ॥

[140] అసతశ్చ సతశ్చైవ సర్వస్య ప్రభవాప్యయః। సర్వస్య చ సదా జ్ఞానాత్ సర్వమేనం ప్రచక్షతే ॥ యేన సర్వమిదం ప్రోతమ్ ॥ స వై సర్వమిదమ్ ॥ సర్వం సమాప్నోషి తతోఽసి సర్వః ॥

[శివః స్థాణుర్భూతాది]

ஶிவ:-மங்களகரன், ஸ்தாணு:-நிலைநின்றவன், பூதாதி:-பிராணி

(வி) சிவ:= அநேகருக்குமேல் சுபத்தையும் உண்டுபண்ணுகிறானென்கிறது. இதற்குப்பிரமாணம் [141] காண்க.

ஸ்தாணு:= அதில் நிலைநின்றவன். அதாவது அநுக்கிரஹிப்பதில நிலைநின்றவனென்றபடி.

[பகவத்ஸம்பந்தமானது, பிராயச்சித்தம் முதலான ஸாமாந்ய தர்மம் போலாவது; காரீரி, சித்ரா, தர்சபூர்ணமாஸாதிகளைப்போலாவது, இதர தேவதைகளைப்போலாவது ஆசைப்பட்ட பொருளெதுவோ அதொன்றைமாத்திரங் கொடுத்துவிட்டு அவ்வளவு மாத்திரத்தில் தன்கடன்தீர்ந்து விட்டதாகமீள்வதில்லை; பிரபலமான விக்கினங்களால் தடைபடுவதும் இல்லை; அழிந்துபோவதுமில்லை. அபஹரிக்கப்படுவதுமில்லை மற்றப்படி ஸகலமான அசுபத்தையும் போக்கடித்து ஸகல அபீஷ்டத்தையும் ஸகல விததாலும்கொடுத்து அப்பொழுதும் ஓய்வுறாமல் சாச்வதமாய் விளங்காநிற்கும். இவ்விஷயத்தில் பிரமாணங்காண்க [112].

(அவதாரிகை.) மேலும் மிகவும் இனியனாயிருக்கையாலே ஸகலபூதங்களாலும் கொள்ளப்படுகிறானென்கிறது மேல்:—

பூதாதி:= பூதங்களால் கிரஹிக்கப்படுமவன் இதற்குப் பிரமாணம் [143] பிருஹதாரண்யகம் முதலியன.

(அ.) சிவ:= குணத்ரயசூன்யனாய் சுத்தனாயிருக்கையாலே மங்களஸ்வரூபன் 'ஸபரம்மாஸசிவ:' என்று ப்ரம்மசிவாதிகளை விஷ்ணுவோடே அபேதமாகச் சொல்லுகையாலே சிவாதிநாமங்களைக்கொண்டு ஹரியையே ஸ்தோத்திரம்பண்ணுகிறது,

பூதாதி:= காரணமாகையாலே பூதங்களுக்கு ஆதியானவன்.

[141] శాశ్వతంశివమచ్యుతమ్॥ స్మృతే సకలకల్యాణభాజనమ్ ॥ మంగళంభగవాన్ విష్ణుః ॥ మంగళాయతనంహరిః ॥ మంగళానాంచమంగళమ్॥ మంగళ్యంమంగళంవిష్ణుమ్॥

[112] ఏకోబహూనాంయోవిదధాతి కామాన్ ॥ ఏతద్ధ్యేవాక్షరంజ్ఞాత్వా యోయదిచ్ఛతి తస్యతత్ ॥ తస్మిన్ ప్రసన్నేకిమిహాస్త్యలభ్యమ్ ॥ సకలఫలప్రదోహివిష్ణుః ॥ రత్నపర్వతమారుహ్య యథారత్నంనరోమునే। సత్త్వానురూపమాదత్తే తథా కృష్ణాన్మనోరథాన్ ॥ ధర్మంమనోరథంస్వర్గం స్వర్గివన్ద్యమచ్యుతమ్। ప్రాప్నోత్యారాధితేవిష్ణౌ ముక్తిమప్యతిదుర్లభామ్ ॥ యద్దుర్లభంయదప్రాప్యంమనసోయన్నగోచరమ్ । తదప్యప్రార్థితంధ్యాతో దదాతిమధుసూదనః ॥

[113] కింప్రజయాకరిష్యామోయేషాంనోఽయమాత్మా ॥ ఏతేవయంసర్వసమృద్ధకామా యేషామయంనోభవితా ప్రశాస్తా ॥

[నిధిరవ్యయః సంభవో భావనో భర్తా ప్రభవః]

களால் அடையப்படுமவன், அவ்யயஃநிதிஃ-அழிவற்ற நிதியாயிருப்பவன், ஸம்பவஃ-எங்கும் அவதரிப்பவன், பாவநஃ-உஜ்ஜீவிக்கச் செய்பவன், பர்த்தா-போஷிக்குமவன், ப்ரபவஃ-உயர்ந்தபிறவியுற

(வி.) (அவதாரிகை.) ஆனதுபற்றியே மஹத்தான ஆசையோடு அருமைச் செல்வமாய் பத்திரம் பண்ணப்படுகிறு னென்கிறதுமேல.

அவ்யயஃ நிதிஃ=ஸர்வதா ஸகலவிதத்தாலும அநுபவித்தாலும் ஒரு கலைகூடக் குறையாமலிருக்கின்ற நிதிபோல விளங்குமவன். இப்படி [144] சாந்தோக்யத்தில் சொல்லுகிறது.

ஸம்பவஃ=ஆங்காங்கு ஸர்வதேசங்களிலும ஸர்வகாலங்களிலும ஸகல அவஸ்தைகளிலும் மத்ஸ்ய கூர்ம வராஹ நரஸிம்ம வாமந ராமகிருஷ்ணாதி ரூபங்கள் ஒவ்வொன்றையும பலதடவைகளிலெடுத்து அடிக்கடி ஆவிர்பவிக்குமவன். இதற்குச்சுருதி [145]

(அவதாரிகை.) இப்படி, தான் பத்ரமாய் நிதிபோல வைக்கப்பட்டிருக்கச் செய்தேயும் தன்னை யிரந்தோரைத் தானநுகவேண்டுமென்கிற த்வரையாலே தோன்றித்தன்னைப்பிரகாசிப்பிக்கிறு னென்கிறதுமேல்:—

ஸம்பவஃ=எப்புறத்திலும தோன்றுமவன்.

(அவதாரிகை.) இப்படி அவதரித்து அநிஷ்ட நிவாரணாதிகளாலே ஸாதுக்களை உஜ்ஜீவிப்பிக்கிறு னென்கிறதுமேல்.

பாவநஃ=காக்குமவன்; இப்படியேகீதையில் [146] சொல்லுகிறது.

(அவதாரிகை.) மேலும் அவர்களுக்குத் தன்னைக்கொடுத்து வளர்க்கிறுனென்கிறதுமேல்.

பர்த்தா=வளர்ப்பவன்.

(அவதாரிகை.) இப்படி யவன் அவதரிப்பது அவனுக்கு மேன்மையென்கிறதுமேல்:—

ப்ரபவஃ=உத்க்ருஷ்ட ஜன்ம முடையவன்.

[இவன் ஜன்மத்திற்கு உத்கர்ஷமாவது-தோஷமென்கிற கெந்தமுமில்லாமலிருக்கையும், இதையறிந்தமாத்திரத்தில் விலங்குபோல் வலியவான

(அ.) நிதிஃ=பிரளயகாலத்தில் ஸகலமும் இவனிடத்தில் வைக்கப்படுகிறதாகையாலே நிதியென்கிறது பர்த்தா=பிரபஞ்சத்தைத்தரிப்பவன்.

ப்ரபவஃ=மஹாபூதங்களை மிகுதியும் உண்டாக்குமவன்.

[144] తద్యథాహిరణ్యనిధిన్నిహితమ్ ॥

[145] బహుధావిజాయతే ॥ బహూని మేవ్యతీతాని । యదాయదాహిధర్మస్య ॥

[146] పరిత్రాణాయసాధూనామ్ ॥

[ప్రభురీశ్వరః॥ స్వయంభూః]

றவன், ప్రభుః-ஸமர்த்தன், ఈశ్వరః-ஐசுவரியமுடையவன், స్వయంభూః தானாய்ப் பிறப்பவன்.

(வி.) ஸகல ஜங்கமங்களும் நிர்மூலமாய்ப் போகுகையுமென்றறிக. இப்படியே [147]புருஷஸூக்தம் முதலியன.

(அவதாரிகை) இப்படி சொல்லத்தரமல்லாத பாரதந்திரியத்தோடிருக்கின்ற மனுஷ்யாதிகளைப்போல் பிறந்தானாகிலும்:—

ப்ரபுஃ=ஸமர்த்தன. அதாவது அவ்வவ்வா பிறவியிலும் பிரம்மேந்திராதிகளுக்கு அதிதுர்லபமான போகத்தையும் மோக்ஷத்தையுங் கொடுக்கவல்லவ னென்றபடி. இந்தவிருத்தாந்தம் சிசுபாலன் சிந்தயந்தி முதலானவர்களுக்கு ஸாயுஜ்யம்தந்ததில் ஸ்பஷ்டமாயிருக்கும்.

(அவதாரிகை) பரமபதத்தில் பரமேஷ்டியா யிருப்பதைப் பார்க்கிலும் அவதரிப்பதில் தனது ஐசுவரியம் அதிகமாய்ப் பயன்படுகையாலே:—

ஈச்வரஃ=(அவதாரத்திலும்) ஐச்வரிய முடையவன்.

[இதற்குக் கீதையில வசநம் காணலாம். [148]]

(அவதாரிகை.) இவ்வளவு வைபவமும் எதினால் வந்தது? என்றால்:—

ஸ்வயம்பூஃ=தானாயப்பிறப்பவன்.

[என்றால், லீலைமுதலிய தன் பிரயோஜநத்துக்காகத் தனது இச்சையால் தனக்கே அஸாதாரணமான பரமஸத்வ மயமானப் பிரகிருதியை தேவதிர்யங் மனுஷ்யாதி ஸஜாதியமாய்ப் பண்ணிக்கொண்டு தானாகவே அவதரிக்கிறபடியால், பிரம்மாதிகளைப்போல் மற்றொரீசனுக்குஆட்படாமையாலே இவ்வளவு வைபவமும் வந்ததென்றபடி. இதற்குப பிரமாணம் [149]சுருதியிலும் [150]ஹரிவம்சாதிகளிலுங்காண்க.]

(அ.) ஸ்வயம்பூஃ=தானாய் உண்டானவன்; ஸகலத்திற்கும் மேலாய் விளங்குமவனென்றுமாம், அல்லது பரமேச்வரன்.

---

147 అజాయమానః ॥ తస్యధీరాః పరిజానన్తి యోనిమ్ ॥ నైషగర్భత్వమాపేదేన యోన్యామవసత్ప్రభుః । ఆత్మనస్తేజసా కృష్ణస్సర్వేషాం కురుతే గతిమ్ ॥ అప్రమేయ మనాద్యన్తం కామాజ్జాతమజన్త్యప్రభుః । పాణ్డవస్తర్పయామాస కర్షిభిర్దేవసమ్మితైః ।

148 మానుషీం తనుమాశ్రితమ్ । పరంభావమజానన్తః ॥ భూతానామీశ్వరోఽపి సన్ ॥

149 స్వయమ్భూర్బ్రహ్మపరమంశకీనామ్ ॥ ప్రకృతింస్వామధిష్ఠాయ సమ్భవామి

150 బ్రహ్మతేజోమయందివ్యమాశ్చర్యం దృష్టవానసి । అహంసభరతశ్రేష్ఠ మత్తేజస్తత్సనాతనమ్ । ప్రకృతిస్సామమపరా వ్యక్తావ్యక్తాచభారత । తాంప్రవిశ్యభవన్తీహ ముక్తాభరతసత్తమ ॥

[శంభురాదిత్యః పుష్కరాక్షో మహాస్వనః ।]

శంభుః ஸுகத்தை யுண்டுபண்ணுமவன், ఆదిత్యః - ஸூரியமண்டலவாஸி, పుష్కరాక్షః - தாமரைக்கண்ணன், మహాస్వనః - பெரியசப்த

(வி.) (அவதாரிகை.) இப்படி யவதரித்து, தனது ஸௌந்தரியம் சீலம் முதலிய குணங்களைக் காட்டுவதால் சுகத்தைத்தருகிறானென்கிறது:—

சம்புஃ=சுகத்தைப் பிறப்பிக்குமவன். இதற்குப்பிரமாணம் 151

(அவதாரிகை.) அநந்தரம் இவ்வவதாரங்களுக்கெல்லாம் உதாஹரணமாக ஆதித்ய மண்டலவாஸியான புருஷனைச் சொல்லுகிறது:—

ஆதித்யஃ=ஸூரியமண்டலத்தி லிருப்பவன்.

[இப்படி பகவான்ஸூரியமண்டலத்திலிருப்பதாகப்பிரம்ம மீமாம்ஸையில் 152சொல்லப்பட்டது? இன்னும் சாந்தோக்யம் முதலான விடங்களிலுங்காண்க.]

(அவதாரிகை.) ஸௌர்யமண்டல வர்த்தியான பகவானைத் தியானிக்க வேண்டுமென்பதாகச்சொல்லி, அவனுக்குத் தாமரை மலர்போன்ற திருக்கண்களுண்டென்பதாய் 153சுருதியிலோதப்பட்டது. ஸர்வேச்வர லக்ஷணமான அவ்வர்த்தத்தைச் சொல்லுகிறதுமேல்:—

புஷ்கராக்ஷஃ=தாமரைக்கண்ணன.

(அவதாரிகை.) அவனுக்கே மற்றொரு லக்ஷணமுஞ்சொல்லுகிறது.

மஹாஸ்வநஃ=பெரும்சப்தமுடையவன்.

[என்றால் 154 சுருதியிற் சொல்லுகிறபடி 'உத்' என்கிற திருநாமமுடையவனென்றபடி; மேலும் ஸூரியமண்டலவர்த்தியான பகவானுடைய

(அ.) ஆதித்யஃ=ஸௌர்யமண்டலத்தி லிருக்கும், ஸுவர்ணமயமான புருஷன்; அல்லது அதிதியென்று அகண்டமான பூமியாய் அந்தபூமிக்குப் பதியென்கிறது; அல்லது. எப்படி ஆதித்யன் ஒருவனே அனேக ஜலபாத்திரங்களில் அனேகமாகப் பிரதிபலிக்கிறானோ அப்படியே பகவானும் அனேக சரீரங்களில் ஒருவனே அனேகமாகப் பிரகாசிக்கிறானென்று ஆதித்யனென்கிறது.

---

151 విశ్వాక్షం విశ్వశంభువమ్ ॥ రూపౌదార్యగుణైః పుంసాం దృష్టిచిత్తాపహారిణమ్ ॥ చన్ద్రకాన్తాననం రామమతీవ ప్రియదర్శనమ్ ॥

152 అన్తస్తద్ధర్మోపదేశాత్ ॥ య ఏషోఽన్తరాదిత్యే హిరణ్మయః పురుషో దృశ్యతే ॥ స యశ్చాయం పురుషే - యశ్చాసావాదిత్యే - స ఏకః ॥ ధ్యేయస్సదా సవితృమణ్డలమధ్యవర్తీ ॥

153 తస్య యథా కప్యాసం పుణ్డరీకమేవమక్షిణీ ॥

154 తస్యోదితి నామ ॥

[అనాదినిధనః]

முடையவன், అనాదినిధనః - ஆதியந்த மற்றவன்,

(வி.) நாமமும் ரூபமும் 155 சுருதியிலோதப்படுகையாலே வேதமெனகிற பூஜ்யமான சப்தமுடையவனென்றுமாம். அன்றியும் ஸாவித்ரி சப்தசதுக்குப் பொருளாயிருக்கையாலே பூஜ்யதமனென்றுமாம். ஆனதுபற்றியே மோக்ஷதர்மத்தில் 156 சொல்லுகிறது.]

(அவதாரிகை.) இப்படி திவ்யமான நாமரூபங்களுடனே சாச்வதமாய் விளங்குகிறானென்கிறதுமேல்:—

அநாதி நிதநः—ஆதியந்தமற்றவன், அதாவது:—நித்திய யவ்வநமுடைகையாலே பிறப்பு மூப்புமுதலியதோஷங்கள் அண்டாமல் நித்தியமாய் விளங்குகிற திவ்ய மங்கள விக்கிரஹமுடையவனென்றபடி. [விக்கிரஹம்=சரீரம்]

[இத்திருநாமம் எம்பெருமானுடைய ஆத்ம ஸ்வரூபத்தைப்பற்றிச் சொல்லுகிறதென்ன வொண்ணாது; ஆத்மஸ்வரூபம் ஆதியந்தமற்றிருக்குமென்கிறவிஷயம், பிரம்மாதிகளான ஸகலாத்மாக்களுக்கும ஸமமாகையால் அதைச்சொல்வதில் சிறிதும் ஏத்தமாக மாட்டாதாகையால் இது திவ்யமங்களஸ்வரூபமான திருமேனிவிஷயமென்றே கொள்ளத்தக்கது. இப்படியே 157 சுருதி ஸ்மிருதிகளில் பலவிடங்களில், எம்பெருமானுக்கு அதி நிர்மலமாய்நீலமாய்பிரகாசித்து, மிகவும்ஸவுந்தரியலாவண்யயவ்வநாதிகளான அவன் உகந்தகுணங்களெல்லாம் பொருந்தியிருப்பதுபற்றி அவனும் விடமாட்டாமல் நித்தியமாய் அங்கீகரிக்கும்படியான திவ்யமங்கள விக்கிரஹமிருப்பதாகச் சொல்லுகிறது. மேலுமிது 158 ஸ்ரீவிஷ்ணுபுராணம் ஸ்ரீராமாயணம் பாராசர்யம் முதலான விடங்களில் வெளிப்படையாய்ச் சொல்லப்படுகையாலும், ஸர்வதா காரணாவஸ்தையி லிருக்கையாலும், ஞாநாதிகளைப்போலே பகவத்ஸ்வரூபத்துக்கு நிரூபகமாயிருக்கையாலும், தமஸ்ஸை

155 సైషా త్రయ్యేవ విద్యా తపతి య ఏషోఽన్తరాదిత్యే హిరణ్మయః పురుషః ॥

156 విద్యాసహాయవన్తం మాం ఆదిత్యస్థం సనాతనమ్ ॥

157 భారూపస్సత్యసఙ్కల్పః ॥ హిరణ్మయః పురుషః ॥ విద్యుతః పురుషాదధి ॥
ఆదిత్యవర్ణం తమసః పరస్తాత్ ॥
సర్వకర్మా సర్వగన్ధస్సర్వరసః ॥
రుక్మాభం స్వప్నధీగమ్యం విద్యాత్తు పురుషం పరమ్ ॥
పురుషః పుణ్డరీకాక్షః ॥

158 సదైకరూపరూపాయ ॥ శ్రీవత్సవక్షా నిత్యశ్రీః ॥ సఏవ భగవాన్ కాలస్స
ర్వమాత్మవశన్నయేత్ ॥
నాస్తి నిష్ఠా పరం తత్త్వం తస్య కాలాత్పరాత్మనః ॥

[धाता]

धाता-தரிப்பவன்,

(வி.) விட்டு அப்புறத்திலிருக்கையாலே ஜநமம்முதலியவிகாரமற்றிருக்கையாலும், அக்ஷரமென்றும் காலாதீதமென்றும் விசேஷித்துச் சொல்லப்படுகையாலும், இந்த விக்கிரகவிசிஷ்டனாயிருக்கிற பகவானை உபாஸிப்பவருக்கு இப்படிப்பட்ட நித்தியமான திவ்யமங்கள விக்கிரஹங்கிடைக்குமென்று சத்க்ருது நியாயமிருக்கையாலும், இத்திருமேனி நித்தியமாய் விளங்குமென்பது திடமாய் ஏற்படுகிறது. இப்படி இவ்விஷயத்தில் [159]சுருதிஸ்மிருதிகள் பலமாயிருக்கும்பொழுது, திருமேனி ஸங்கேதமென்றும் அநித்தியமென்றுஞ் சொல்லுகிற யுக்திகள் சிறிதும் முளைக்கவிடமில்லை. இதற்கிணங்கவே சிலவிடத்தில் பகவானுக்கு ரூபமில்லையென்கிற வசநங்களுக்கும், ஹேய ரூபமில்லையென்பதாகப் பொருள் கொள்ளவடுக்கும். ஸூத்திரகாரரைப்போலே வாக்கியகார பாஷ்யகாரர்களும் ஆதித்யமண்டலவர்த்தியான பரப்பிரம்மத்துக்கு நித்தியசரீரமுண்டென்பதாக [160]நிரூபித்தார்கள். ஆகையாலே அவதாரங்களில்கூட திருமேனிக்கு ஆதியந்தமில்லை; மற்றப்படி லோகத்திலொருவன் திரைக்குள்ளிருந்து வெளியில் வருவதுபோல பரமபதத்தினின்று வந்துபோவது மாத்திரந்தான். இப்படியேதான் [161]ருஷிகளும் இதை ரஹஸ்யமாய்ச் சொன்னார்கள்.]

(அவதாரிகை.) எம்பெருமான் காரணனானவிடத்தில அவனுக்குப் பிரம்மாதிகளிற்காட்டில் வாசிசொல்லுகிறதுமேல்:—

தாதா=தரிப்பவன், அதாவது ஸகலகாரணமாய் அசேதந ஸமஷ்டியானப் பிரம்மாவென்கிற கர்ப்பத்தைத் தரிக்கிறானென்றபடி. இப்படியே[162] பகவத்கீதை மநுவாதிகளில காண்க.

[159] న భూతసఙ్ఘసంస్థానో దేహోఽస్య పరమాత్మనః । న తస్య ప్రాకృతా మూర్తిః మాంసమేదోఽస్థిసమ్భవా ॥

[160] రూపం వాఽతీన్ద్రియమన్తఃకరణప్రత్యక్షనిర్దేశాత్ ॥ ఆజ్ఞానైవ విశ్వస్సృజో రూపమ్ ॥

[161] భుజైశ్చతుర్భిస్సముపేతం మమేదం రూపం విశిష్టం దివి సంస్థితఞ్చ । భూమౌ గతం పూజయతాఽప్రమేయం సదా హి తస్మిన్నివసామి దేవాః ॥ స్వర్లోకమాగచ్ఛ గతజ్వరశ్చిరం సురేన్ద్రగుప్తం గతదోషకిల్బిషమ్॥
వివేశ వైష్ణవం తేజస్సశరీరస్సహానుగః ॥

[162] మమ యోనిర్మహద్బ్రహ్మ తస్మిన్గర్భం దధామ్యహమ్॥
ధాతా క్షేత్రే కర్తృబీజభూతం గర్భం దధాతి ॥
అప ఏవ ససర్జాదౌ తాసు వీర్యమపాసృజత్ ॥

[విధాతాధాతురుత్తమః। అప్రమేయో]

విధాతా-பல்படியாகச்செய்பவன், ధాతుః-பிரமனைக்காட்டிலும், ఉత్తమః-உத்கிருஷ்டன், అప్రమేయః-அளவிடப் போகாதவன்,

(வி.) (அவதாரிகை.) அந்த கர்ப்பத்தை விகாரப்படுத்தி ஆவிர்ப்பவிக்கச் செய்கிறானென்கிறதுமேல்:—

விதாதா=ஆவிர்ப்பக்கச்செய்பவன். [163]இதற்குப்பிரமாணம்

(அவதாரிகை.) இந்தஸ்ருஷ்டிக்குந் தன்மையானது பிரம்மாதிகளுக்கும் ஸமானமாயிருக்கையாலே இவனும் அர்களிலொருவனோவென்னில்:- இவன் அவர்களைக்காட்டிலும் விலக்ஷணனென்கிறது.

தாதுஃ உத்தமஃ=பிரமனிற சிறந்தவன்.

[இதற்குப் பிரமாணம் [164]ச்வேதாச்வதரம், புருஷஸூக்தம், தைத்திரீயம்முதலான விடங்களில் பரக்கக் காணலாம்.

அப்ரமேயஃ= அநதப் பிரம்மாதிகளாலே இவ்வளவென்று (அளவிடப்போகாதவன்) இதற்கு[165]வசநங்காண்க.

(அ.) அப்ரமேயஃ—ஒரு ப்ரமாணத்துக்கும் விஷயமாகாதவன். என்றால்:- சப்தம்முதலிய குணங்களற்றவனாகையாலே பிரத்யக்ஷப் பிரமாணத்துக்கு விஷயமல்லன்; "இதுகாண்கையாலே இப்படி யிருக்கு"மென்று அறியும்படியான அடையாளமில்லாமையாலே அநுமாநப்பிரமாணத்துக்கு விஷயமல்லன், பாகமற்றிருப்பதுபற்றி ஸாத்ருச்யமில்லாமையாலே உபமாநப் பிரமாணத்துக்கு விஷயமல்லன்; அவனன்றி யிதுகூடவில்லை யென்பதற்கு ஒன்றும் ஸம்பவிக்கமாட்டாமையாலே அர்த்தாபத்தியென்கிற பிரமாணத்துக்கு விஷயமன்று; பாவரூபமாய்த் தோற்றுகையாலும் அபாவத்திற்கு ஸாக்ஷியாயிருக்கையாலும் அவனை அபாவத்துக்கு விஷயமென்னவும்போகாது; பிரமாணத்தாலுண்டான வதிசயம் யாதொன்றுங் காணாமையாலே சாஸ்திரமும் பிரமாணமாகமாட்டாது. இப்படியானால் 'சாஸ்த்ரயோநித்வாத்' என்று ஸூத்திரகாரர் சாஸ்திரத்தைப் பிரமாணமாகச் சொன்னாரோ எப்படி கூடுமென்னில்-சொல்லுகிறோம்; பிரமாணப் பிரமேயங்களுக்கு ஸாக்ஷியாய் பிரகாசரூபமாயிருக்கையாலே பரமாத்மா பிர

[163]యోబ్రహ్మాణంవిదధాతిపూర్వమ్ ॥ అథపునరేవనారాయణః ॥ తత్రబ్రహ్మా చతుర్ముఖోఽజాయత ॥ హిరణ్యగర్భంపశ్యతజాయమానమ్ ॥ తస్మాద్విరాడజాయత॥

[164]తత్త్వన్నారాయణఃపరః॥ ఏతేషాంకతమోదేవఃపరఃకోవాఽథవాపరః ॥ పరోనారాయణోదేవః తస్మాజ్జాతశ్చతుర్ముఖః ॥

[165]యన్నాయంభగవాన్ బ్రహ్మాజానాతిపురుషోత్తమమ్ ॥

[హృషీకేశః పద్మనాభోమరప్రభుః। విశ్వకర్మామనుస్]

హృషీకేశః-புலன்களை நியமிப்பவன், పద్మనాభః-கமல உந்தியோன், అమరప్రభుః-தேவநாதன், విశ్వకర్మా ஸகல வியாபாரமு முடையவன், మనుః-மநநஞ்செய்பவன்,

---

(வி·) ஹ்ருஷீகேசः=விஷயேந்திரியங்களை நியமிப்பவன்.

(என்றால:—பிரம்மாதிகளினது கரணங்கள் இவன் வசமான பின்பு அவர்கள் இவனையளவிடுவதெப்படி? யென்றபடி; இதற்குப் [166]பிரமாணங் காண்க.)

(அவதாரிகை.) கீழ்ச்சொன்ன அவர்த்தங்களையேவிவரிக்கிறார்மேல்:-

பத்மநாப:=பிரமனது உதபத்திஸ்தாநமான (பத்மத்தை நாபி)யிலுடையவன். [167] இதற்குவசநங்காண்க.

அமரப்ரபு:=அந்தபிரம்மாதி(தேவர்களுக்கெல்லாம்) ஸ்ருஷ்டிமுதலிய வதிகாரங்களைகொடுத்து (நிர்வஹிக்குமவன்)

[இப்படியே ஸ்ரீராமாயணத்தில் [168]பிரம்மா சொல்லுகிறார். பாரதத்திலுங்காண்க.]

விச்வகர்மா=எல்லாக்கருமமும் செய்பவன்.

[என்றால் கீழ்ச்சொன்னபடி பிரம்ம ஸ்ருஷ்டிக்கு முன்னும் பின்னுமுண்டான ஸகலவியாபாரங்களும் செய்பவனென்றபடி. இதற்குப் [169]பிரமாணங்காண்க]

மநு:=மநநஞ்செய்பவன், என்றால் ஸங்கல்ப லேசமாத்திரத்தால் இவ்வளவு வியாபாரங்களையுஞ் செய்யுமவனென்றபடி.

(அ.) மாணத்துக்கு விஷயமாகாமலிருக்கச்செய்தே, பிரமாணத்துக்கு விஷயமென்பதாக நினைக்கும் பிரமாம்சத்தை நிவர்த்திப்பண்ணுகிற விஷயத்தில் சாஸ்திரம் பிரமாண மாகின்றமையால் சாஸ்திரம் பிரம்மதநில் பிரமாண மென்கிறது.

ஹ்ருஷீகேசः—இந்திரியங்களுக்கு ஈசனான ஜீவஸ்வரூபன். இந்திரியங்களை வசப்படுத்திய பரமாத்மா வென்னவுமாம்; யத்வா—ஸகல ஜகத்துக்கும் ஹர்ஷத்தை யுண்டுபண்ணும்படியான கேசமென்கிற கிரணங்களுடையரான சூரியசந்திர ரூபனென்னவுமாம். இவ்வர்த்தம் மோக்ஷதர்மத்தில் சொல்லப்பட்டது.

---

[166]హృషీకాణీన్ద్రియాణ్యాహుః తేషామీశోయతోభవాన్ । హృషీకేశ స్తతోవిష్ణుః ఖ్యాతో వేదేషు కేశవ ॥ [దుర్భవతి ॥

[167]ధాతో త్తానస్వంవిశతిపద్మ్యవర్ణశతానితు॥ధాతుర్నాభ్యాంపుష్కరం ప్రా

[168]మహార్ణవేశయానో ఽప్సుమాంత్వంపూర్వమజీజనః... ప్రాజాపత్యం త్వయాకర్మ సర్వమ్మయినివేశితమ్ ॥

[169]విశ్వకర్మణస్సమవర్తతాధి ॥ పురుషంవిశ్వకర్మాణ మాదిదేవమజంవిభుమ్ ॥

[త్వష్టా స్థవిష్ఠః స్థవిరో ధ్రువః ।]

త్వష్టా-வகுத்துப்படைப்பவன், స్థవిష్ఠః-மிகவும்பருத்தவன், స్థవిరః -எக்காலத்திலுமிருப்பவன் ధ్రువః சலிக்காதவன்,

(வி.) (அவதாரிகை.) இபபடி நிர்மிக்கப்பட்டதைநாமரூபகங்கள்கொண்டு தேவனென்றும் மனிதனென்றும், திர்யக்கென்றும், தாவரமென்றும் பல்படிவிசித்திரமாகச் சமைக்கிருனென்கிறதுமேல்:—

த்வஷ்டா=நாமரூபங்களாலே வகுப்பவன். இதற்குவசநம்[170]

ஸ்தவிஷ்டஃ—ஆனதுபற்றியே (பருததவன்)

[என்ருல்:—தன்ஸங்கல்பப் பிரகாரம் பல்படியாகப் பரவுவதாயுத் தேசித்து, ஸூக்ஷ்மமான அவ்யக்தம் முதலானக் கிரமத்தாலே தேவர் மனிதர், திரியக்கு, தாவரம் என்றும், அவற்றிற்கு விஷயமான சப்தம் பரிசம் முதலான குணஙகளென்றும், அவற்றிற்கு இடமாய் பதினான்குலோகங்களையு முட்கொண்ட பிரம்மாணடமென்றும், அதற்கு ஆவரணமான ஸூக்ஷ்மவ்யக்தமான வியஷ்டிகாரியமென்றும் இபபடி வ்ஸ்தாரமாய்ப் பரந்தவனென்றபடி. இதில் பிரமாணம் 171.

(அவதாரிகை.) இப்படி ஸங்கல்ப மூலமாய்க் காரணமாகாநின்ருலும் லோகத்தில காணப்படும் மண்முதலிய காரணத்தைக் காட்டிலும் வைலக்ஷண்யங்காட்டுகிறதுமேல்:—

ஸ்தவிரஃ=ஸகலகாலத்திலும் இருப்பவன்.

[என்ருல்:—லீலையாலே காலத்தை யபேக்ஷித்தாலுகிலும் அதற்கு வசப்பட்டவனல்ல னென்றபடி; இதனுல் காலவிசேஷத்தை யபேக்ஷிக்கின்ற தயிர், பால் முதலிய காரண த்ரவ்யங்களைக் காட்டிலும் இவனுக்கு வைலக்ஷிண்ணியஞ் சொல்லிற்று. ஏனெனில்; ஸர்வப்பிரகாரத்தாலும் இவனுக்கு காலமும் வசப்பட்டதன்ருே? இதற்குப 172 பிரமாணமகாணக.

த்ருவஃ=அளவின்றி பரிணமித்தாலும விகாரமில்லாமையாலே ஸ்வருபத்திலிருந்து நழுவாமல (நிலையாயநின்றவ)னென்றபடி. இதில்பிரமாணம் 173

(அ.) த்வஷ்டா—ஸம்ஹார ஸமயத்தில் ஸகலபூதஙகளையும் (சின்ன சின்னதாய்ச்செய்பவன்) அதாவது அழிப்பவனென்றபடி.

[170] త్వష్టారం రూపాణి వికుర్వన్తం విపశ్చిమ్ ॥

[171] నాన్తోఽస్తి మే విస్తరస్య మే ॥ విస్తారస్సర్వభూతస్య విష్ణోస్సర్వమిదఞ్జగత్ ॥

[172] కాలచక్రం జగచ్చక్రం యుగచక్రఞ్చ కేశవః । ఆత్మయోగేన భగవాన్ పరివర్తయతేఽనిశమ్ ॥

[173] అజయ్యశ్శాశ్వతో ధ్రువః ॥ అవికారాయ శుద్ధాయ ॥

[అగ్రాహ్యశ్శాశ్వతఃకృష్ణోలోహితాక్షః ।]

అగ్రాహ్యః—கிரஹிக்கமுடியாதவன், శాశ్వతః—எந்நாளுமுள்ளவன், కృష్ణః-ஆநந்த முறுமவன், లోహితాక్షః-செங்கண்ணன், ప్రతర్దనః-நாசஞ்செய்பவன், ప్రభూతః-பெரியவன். త్రికకుద్ధామ

(வி) (அவதாரிகை.) மண்ணும் நூலும் குயவன் சேணியனுக்கு வசப்படுவதுபோல் இவன் காரணனுயிருக்கின்றமை கொண்டு யாருக்காகிலும் வசப்படவேண்டுமோவென்னில்:—

அக்ராஹ்ய:—ஒருவரால கிரஹிக்க முடியாதவன். இதில் 174 பிரமாணங்காண்க.

சாச்வத:—இப்படியே பிரவாஹம்போல் (எந்நாளும்) ஜகத்வியாபாரஞ்செய்துகொண (டிருப்பவன்.) இதில்பிரமாணம 175காண்க. க்ருஷ்ண:—இப்படிப்பட்ட லீலா ரஸத்தால் ரொம்பவும் (ஆநந்தமுற்றிருப்பவன.) இதற்கு ருஷிகள்செய்த நிருக்தியே 176 பிரமாணம். லோஹிதாக்ஷ:—இப்படிப்பட்ட ஆநந்தத்தையறிவிக்குமதான (சிவந்த திருக்கண்களுடையவன்.)

(அவதாரிகை.) இப்படி ஸகல ஸ்ரஷ்டாவான தானே ஸகலத்தையும் ஸம்ஹரிக்கிருனென்கிறதுமேல்:—

ப்ரதர்தந:—ஹிம்ஸிப்பவன. இதற்கு 177வசநங்காண்க.

ப்ரபூத:—இப்படி ஸர்வ ஸம்ஹாரம் பண்ணினலுங், எந்நாளு மழியாமல் அநந்தமான போகத்துக்கும் உபகரணமாய் பரமபதமுண்டாயிருக்கையாலே (ஸம்ருத்தியுடையவன்.)

(அவதாரிகை.) இப்படி விச்வத்தை ஸ்ருஷ்டிப்பதும் ஸம்ஹரிப்பதுமாகச்சொன்னதெல்லாம் அவன்விபூதிகளில அணுமாத்திரமான லீலாவிபூதியையன்ரே? அதைவிவரிக்கிறது:—

த்ரி ககுப்தாம—முக்கால்பங்கான பரமபதமென்னும்ஸ்தாநத்தையுடையவன்.

இப்படியே "பாதோஸ்ய விச்வாபூதாநி த்ரிபாதஸ்யாம்ருதம் திவி" என்று இவனது விபூதி கால்பங்குதான் விச்வாபூதங்களென்கிற பிரபஞ்

(அ.) ப்ரபூத:—ஞாநம் ஐசுவரியம் முதலியவைகளாலே ஸம்பூர்ணன்.

174 నైనమూర్ధ్వన్న తిర్యఞ్చనమధ్యేపరిజగ్రభత్ ॥

175 అవ్యుచ్ఛిన్నాస్తతస్త్వేతేసర్గస్థిత్యన్తసంయమాః ॥

176 కృషిర్భూవాచకశ్శబ్దోణశ్చనిర్వృతివాచకః । కృష్ణస్తద్భావయోగాచ్చ ॥

177 యస్యబ్రహ్మచక్షత్రఞ్చఉభేభవతఓదనః ॥

[పవిత్రంమఙ్గళంపరమ్]

மூக்கால்பங்கிடமுடையவன், పవిత్రమ్-பரிசுத்தன், పరమ్మఙ్గళం - மிகவும் மங்களமானவன்,

---

(வி.) மென்றும், மூககாலபங்கு அழிவுறாமல்நித்தியமாய்மேலேவிளங்குகிற தென்றும் 178 சுருதியில் ஓதப்படுகிறதன்றோ? இதனால் இது அணுமாத்திர மென்றும் அது பரம மஹத்தென்கிற பெரிய பரிமாணமென்றுஞ் சொன்னதாயிற்று. இதில் ஸ்ரீவிஷ்ணுபுராணத்திசன் 179பிரமாணம். அதவா, 'த்ரிககுப்' என்று ஞாநம் பலம் ஐசுவரியம வீரியம் சக்தி தேஜஸ் என்கிற மூவிரண்டுகளாய், அதற்குத் தர்மியானவனென்றுமாம்; அல்லது ருஷிகள் 180நிருக்தியின்படி வாராஹ அவதாரத்தில் மூன்று முசுப்புகளுடையனென்றுமாம். அந்தபக்ஷத்தில் 'தாம' என்று தனிப்பதமாய் அதற்கு 'தேஜஸ்' என்று பொருள்கொள்ளவேணடும்.

(அவதாரிகை.) இப்படி குணவிபவரூபமான நிரூபகதர்மங்களைச் சொல்லி அவ்வழியே அப்படி நிரூபிக்கப்படும் ஸ்வரூபத்தில் பிரவேசிக்கிறது:—

பவித்ரம்—யாதொன்றிலுந் தட்டாமல் (பரிசுத்தமாய்விளங்குமவன்) பரம்மங்களம்— ஸ்வயம பிரகாசாநந்தரூபமாய் (கலியாணமே வடிவானவன்)

[ஸ்வபாவஸித்தமாய் நித்யமாய் நிரவத்யமாய் எல்லையற்றுக் கணக்கிடக்கூடாமல் குணங்களும் விபவங்களும் அநுபவவைபவங்களும் பகவானுக்கு எந்நாளு முண்டாயிருந்ததேயாகிலும், தனக்குத்தானே ஸகலதோஷங்களுக்கு மெதிர்த்தட்டாய் ஈடின்றி மிகவும் அநுகூலமாய் ஸ்வயம் ப்ரகாசமாய் விளங்கும் ஆதமாநுபவத்தாலுண்டான நிரவகுசமான ஆநந்தத்தால் அமுதக்கடலைக் கீழ்ப்படுத்துமதுபோல் விளங்கும் பாரவஸ்த்தை மாத்திரத்தால் பகவான் யாதொன்றையும் அபேக்ஷிக்காமல் நித்திய திருப்தனாய் விளங்குகிறானென்று நிரூபிக்கை யுசிதமேயன்றோ?]

இப்படியே ஸூத்திரகாரர் 181நிரூபித்திருக்கிறார். 182சுருதியிலுமோதப்பட்டது.

(அ.) பவித்ரம் பரிசுத்தன்— பவி' யென்கிற வஜ்ஜிராயுதத்தினின்று 'த்ர' காக்குமவன்; என்றால் அநிஷ்ட நிவர்த்தகனென்றபடி.

178పాదోఽస్యవిశ్వాభూతాని- త్రిపాదస్యామృతన్దివి॥

179యస్యాయుతాయుతాంశాంశేవిశ్వశక్తిరియంస్థితా ॥

180తత్రైవాసః త్రికకుదోవారాహంరూపమాస్థితః । త్రికకుత్ తేనవిఖ్యాతశ్శరీరస్యప్రమాపణాత్ ॥ 181ఆనన్దమయోఽభ్యాసాత్ ॥

182ఆనన్దంబ్రహ్మ ॥ అతఊర్ధ్వమనిర్దేశ్య పరమానన్దలక్షణమ్ ॥

[ఈశానః]

ఈశానః - ஆளுந்தன்மையன்,

(வி) இங்கே பிரம்மஸ்வரூபம் ஞானமாத்திரமென்றும் ஞானம் முதலிய குணங்களில்லையென்றும் சிலர் சொல்வார்கள்; அதை அகண்ட கண்டந மென்கிற கிரந்தத்தில் அனேகவிதமாய் கண்டித்திருக்கிறது.

பிரம்மம் ஞானஸ்வரூபம் ஆநந்தஸ்வரூபமென்று சுருதியில் சொல்வதற்குக் கருத்தென்னென்னில்-ஞானம் ஆநந்தம் ஐசுவரியம் முதலான குணங்களிருக்கச்செய்தேயும் மிகவும் அநுகூலமாய் தனக்குத்தானே பிரகாசிக்கின்றஞானவடிவமாய் ஆத்மஸ்வரூப மிருக்குமென்றுமதாம. என்போலெனில்:—

இரத்திநம், தீபம், சூரியன் முதலியவைகள் தமது ஒளிக்குவிஷயமானவைகளையும் பிரகாசப்படுத்துகின்றன; தாமும் அந்த ஒளியை அபேக்ஷிக்காமலே பிரகாசிக்கின்றன; அதனால் ஒளியென்றும் ஒளியுள்ளதென்றும் வியவஹாரமுண்டாயிருக்கிறது; அதுபோல பரமாத்மா குணத்தாலும் ஞானத்தாலும் ஸகலத்தையும் பிரத்தியக்ஷமாய்ப் பார்க்கிறான்; தானும் அவற்றை யபேக்ஷிக்காமலே பிரகாசிக்கிறான்; அதுகொண்டு ஞானமென்றும் ஞானமுடையவனென்றும் சொல்லுகிறது; மேலும் ஞானஸ்வரூபன் என்றுசொல்வதற்கே மற்றொரு அபிப்பிராயம்: என்னவெனில்:—அவனுக்குண்டான குணங்களில் ஞானமென்கிற குணம் ஸாரமாயிருக்கையால் அதைக்கொண்டு ஞானஸ்வரூப னென்கிறதாம். இதற்கு [183]ஸூத்திரகாரரும் நியாயஞ்சொன்னார். இதனால் பிரம்மம் ஞானஸ்வரூபமென்றும் ஞானமுடையதென்றும் ஒன்றுக்கொன்று விரோதமாய் தோற்றுகிறதே யென்று ஸந்தேகிக்க விடமில்லை யென்றதாயிற்று; எப்படியெனில்—ஒன்று ஸ்வரூபஞானத்தைச் சொல்லுகிறது; மற்றொன்று குணஞானத்தைச்சொல்லுகிறதென்று இரண்டுக்கும்வழி தாராளமாய்ச்சொன்னோமன்றோ? இப்படியே வார்ஷ்ணேயாத்தியாயத்தில் ஜீவப்ரஸங்கம் வந்தபொழுது [184] சொல்லப்பட்டது.

(அவதாரிகை.) இந்தஸ்வபாவம் ஜீவர்களுக்கும் ஒருவேளை பிரகாசித்தும் ஒருவேளை மறைந்து மிருக்கிறபடியால் அவர்களைவிட பரமாத்மாவுக்கு பேதஞ்சொல்லுகிறது இதில்:—

ஈசாநః—தன்னையும் மற்றும் பதார்த்தங்களையும் ஸகலாவஸ்த்தைகளிலும வைத்து (ஆளும் ஸ்வபாவன்) இதற்குச் [185]சுருதிஸ்மிருதிகள் அநந்தம. இப்படி ஆளுந்தன்மை பகவானுக்கு ஸவ

[183] తద్గుణసారత్వాత్తు తద్వ్యపదేశః ప్రాజ్ఞవత్ ॥

[184] యథాజీవః ప్రకాశాత్మా ప్రకాశ్యోవాయదివామహాన్ ॥ జ్ఞానాత్మానస్తథావిద్యాత్ పురుషం సర్వజన్తుషు ॥

[185] తమీశ్వరాణాంపరమమ్ మహేశ్వరమ్ ॥ సర్వస్యవశీసర్వస్యేశానః సర్వ

[ప్రాణదః ప్రాణో జ్యేష్ఠః]

ప్రాణదః-பிராணனைத்தருமவன, ప్రాణః-பிராணனாயிருப்பவன், జ్యేష్ఠః-மிகவுங்கொண்டாடத்தக்கவன்,

---

(வி.) பாவமென்னுங்கஷ்டமாயிருக்கையாலேபிரமமத்துக்குஐசுவரியமும்ஸர்வஜ்ஞத்வமும் மற்றுங்குணங்களும்கால்பநிகமென்றும உபாதிவசத்தால் வந்தவைகளென்றும் பரிணாமமென்றும் சொல்லுமவர்களுக்கு மூன்றுவகையெள்ளுந்தண்ணீரும் விட்டதாயிற்று.

(அவதாரிகை.) இவனுடைய ஐசுவரியங்களில் முதன்மையான ஐசுவரியத்தைச்சொல்லுகிறது:—

ப்ராணதః=பெலனைத்தருமவன்.

[என்றால, நித்தியசூரிகளுக்கு எப்போதும் தனது ஸேவையென்கிற அநுபவத்துக்கும் கைங்கரியத்துக்கும் வேண்டும்பெலனைக் கொடுக்கிறானென்றபடி. இதில் பிரமாணம 186

ப்ராணః=அப்படியே அவர்களுக்கு உஜ்ஜீவநஹேதுவானவன். இதற்குப்பிரமாணம் 187

ஜ்யேஷ்டః=கொண்டாடப்பெற்றவன்.

[என்றால்:—தானும் சூரிகளும் ஸர்வதா ஸர்வப்பிரகாரத்தாலும் அநுபவித்தாலும் கரைதட்டாமல் அளவற்ற ஐசுவரியம் பொருந்தி யிருக்கையாலே மிகவுங் கொண்டாடத்தக்கவனென்றபடி. இதற்கு வசநம் 188காண்க. அல்லது யாவர்க்கும் முற்பட்டவனாகையாலே விருத்தனென்னவுமாம். இப்படி பாரதவசநம் 189இருக்கிறது.

(அ.) ப்ராணதః—பிராணன்களைக் காலரூபியாய்க்கொண்டு கண்டிக்கிறானென்றும், சோதிக்கிறானென்றுஞ் சொல்லலாம். ப்ராணதః—ப்ராணன்களை யசைவிக்கிறவன் ஜ்யேஷ்டః—ஸர்வகாரணன்.

స్యాధిపతిః సనసాధునాకర్మణాభూయాన్నో ఏవాసాధునాక నీయాః । ఏషసర్వేశ్వరఏషభూతాధిపతి రేషభూతపాల ఏషసేతుర్విధరణ ఏషాంలోకానా మసమ్భేదాయ ॥ ఈశతేభగవానేకస్సత్యమేతద్బ్రవీమి తే ॥

186 యఆత్మదాబలదాః ॥ స ఏవః ప్రాణమవిశతి ॥

187 తతో దేవానాన్నిరవర్తతాసురేకః ॥

188 భగవాన్ వాసుదేవో జ్యాయసీవిభూతిః ॥

189 ఏషః ప్రకృతిరవ్యక్తః కర్తాచైవసనాతనః । పరశ్చసర్వభూతేభ్యస్తస్మాద్వృద్ధతమో ఽచ్యుతః ॥

[శ్రేష్ఠః ప్రజాపతిః । హిరణ్యగర్భో భూగర్భో]

శ్రేష్ఠః - மிகவும் துதிக்கத்தக்கவன், ప్రజాపతిః - ஸூரிகளுக்கிறைவன், హిరణ్యగర్భః - பொன்னுலகுள் ளுறைபவன், భూగర్భః - பூமியைக்கர்ப்பத்தில்வைத்துக்காப்பவன்,

---

(வி.) ஶ்ரேஷ்ட:=அந்த நித்யஸூரிகள், அநவரதமும் அநுபவிப்பதினாலுண்டாகும ப்ரீதிக்குப் போக்குவீடாய் ஸ்தோத்ரஞ் செய்யப்பெற்றவனென்றபடி. இதற்கு வசநம் 190காண்க.

(அவதாரிகை.) இப்படியவர்கள் ஸ்தோத்திரம் செய்யும்படி இவனுக்கும் அவருக்கு முண்டான ஸம்பந்தமேதென்னச் சொல்லுகிறதுமேல்:—

ப்ரஜாபதி:=உத்க்ருஷ்டமாகப் பிறந்தவர்களுக்குத தலைவன் (ப்ரகர்ஷேணஜாயமாநாநாம் பதி:)

[என்றால்:—பத்தரும்முக்தருமான ஆத்மகோடிகளைவிட உத்க்ருஷ்டமாய் விளங்கும் நித்ய ஸூரிகளால ஸர்வதாபரிசர்யை பண்ணப்படுமவனென்றபடி. இதற்குப் பிரமாணம் 191காண்க.]

(அவதாரிகை.) இப்படி அநுபவிக்கத்தகுந்த தேசவிசேஷத்தைச் சொல்லுகிறதுமேல்:—

ஹிரண்யகர்ப்ப:=நிர்த்தோஷமாய் நித்யமாய் பரமஸத்வமயமாயிருக்கையாலே ஸுவர்ணம்போல் விளங்குகின்ற பரமபதத்தினுடுவே நித்தியவாஸம் பண்ணுமவன். இதற்குச் சுருதிஸ்மிருதிகள் அநந்தம் 192

(அவதாரிகை.) அநந்தரம் அவனுக்கு திவ்யமஹிஷிகளுண்டா யிருக்கின்றமையைச் சொல்லுகிறது.

பூகர்ப்ப:=ஹ்ரீயென்றும் க்ஷமையென்றும் சுருதியிற் 193 சொல்லப்படுகிற பூமிப்பிராட்டிக்குத் தனது ஸர்வதா அநுபவத்தைத் தந்து அவளைக் கர்ப்பம்போல் பரிபாலிக்குமவன்.

(அ.) ஹிரண்யகர்ப்ப:—பிரம்மரூபியாய்க்கொண்டு ஸுவர்ணமயமான அண்டத்திலிருப்பவன்.

---

190 తద్విప్రాసో విపన్యవో జాగృవాంసస్సమింధతే- విష్ణోర్యత్పరమంపదమ్ ॥

191 రక్ష్మం రక్ష్మి నామ్న ధ్యేతపన్తమ్-ఋతస్యపదేకవయోనిపాన్తి ॥ యత్రపూర్వే సాధ్యాస్సన్తిదేవాః ॥

192 హిరణ్మయేపరేలోకే విరజం బ్రహ్మనిష్కలమ్। తచ్ఛుభ్రంజ్యోతిషాంజ్యోతిః తద్యదాత్మవిదోవిదుః ॥ నతత్రసూర్యోభాతి ॥

193 మహీందేవీం విష్ణుపత్నీమజూర్యామ్ ॥

[మాధవో మధుసూదనః । ఈశ్వరో విక్రమీ]

மாதவః லக்ஷ்மீவல்லபன், மதுஸூதனః - இந்திரியங்களை சிக்ஷிக்குமவன், ஈச்வரః - ஸ்வச்சந்தமாயிருப்பவன், விக்ரமீ - விரோதிநிரஸநசீலன்,

(வி.) மாதவः=மா என்கிற லக்ஷ்மிக்கு நாயகன்; ஸ்ரிய:பதி யென்றபடி. இதற்குப் பிரமாணம் 194காண்க.

இவளுக்கு ஸ்வரூபத்தைப்போலவே நித்திய நிர்மலமான ரூபமும், ஸ்வாபாவிகமான பரமைசுவரியமும், ஸகல ஜகத்துக்குந் தாயாயிருக்குந் தன்மையும், எம்பெருமானோடு நித்திய ஸம்பந்தமும், அதுவும் ஸ்வாபாவிகமென்றமதுவும் தத்வபர 195சாஸ்திரங்களான ஸ்ரீஸூக்தம் மேதாஸூக்தம் சிரத்தாஸூக்தம், உத்தரநாராயணம், கவுஷீதகீபிராம்மணம் முதலான வேதங்களிலும், விஷ்ணுபுராணம் முதலான ஸ்மிருதிகளிலும் பரக்கச்சொல்லப்படுகின்றன.

(அவதாரிகை.) இப்படி ஸர்வநிர்வாஹகனாயிருப்பதோடு அசுரநிரஸநாதிகளைச் செய்வதனால் எதிரிலலாமல் விளங்குகிறானென்கிறதுமேல்:-

மதுஸூதனः=மதுவைப்புடைத்தவன். அல்லது மதுவென்று இந்திரியமாய் அவற்றைத்தன்னுளொடுக்குமவனென்றுமாம்.

[இதற்கு ருஷிகள் 195சொன்ன நிருக்தம் பிரமாணமாகக்கடவது. இதனால் நித்திய ஸூரிகளினது இந்திரியங்களுக்கு விஷயமாய் எப்போதும தன்னைத்தந்து ரக்ஷிப்பவனென்றபடி.]

ஈசவரः=இப்படி போகபூமி அபாரமாயிருந்ததே யாகிலும் அதில் ஸ்வேச்சையாய விளங்குமவன். இதற்கு 196வசநங்காண்க.

விக்ரமீ=தனது ஸங்கல்பத்துக்கு விரோதமா யேதேனுஞ் சிறிதுநேரிடுவதாக ஸம்பவித்தாலும் அதை நிரஸிக்கும்படியான பராக்கிரமஸ்வபாவன். இதற்கு வசநம் 197

(அ.) மாதவः—மதுவித்தையா லறியப்படுமவன். அதவா வியாஸவசநத்தின்படி மவுநமாயிருக்கையாலும் தியாநம் செய்கையாலும், யோகத்தாலும் மாதவனென்றுமாம்.

194 హ్రీశ్చ తే లక్ష్మీశ్చ పత్న్యౌ ॥ నిత్యైవైషా జగన్మాతా విష్ణోః శ్రీరనపాయినీ॥

195 మదురింద్రియనామా సతతో మధునిషూదనః ॥

196 యత్ర కామగమో వశీ ॥

197 మనసైవ జగత్సృష్టిం సంహారఞ్చ కరోతి యః । తస్యారిపక్ష క్షపణే కియా

న ద్యమవిస్తరః ॥

[ధన్వీ మేధావీ విక్రమః క్రమః । అనుత్తమో దురాధర్షః ॥]

ధన్వీ -வில்லாளி, మేధావీ-கூர்மதியன், విక్రమః - பக்ஷியைக்கொண்டோவோன், క్రమః-மிகவும்பருத்தவன், అనుత్తమః-தன்னைவிடமற்றொருத்தமனில்லாதவன், దురాధర్షః - அலைக்கமுடியாதவன்,

(வி.) தந்வீ=இப்படி ஈடில்லாத பவுருஷத்தோடு கூடியிருப்பதற்குத்தக்கபடி சாரங்கமென்னும்வில்லை எப்போதுமுடையவன். இப்படிசொன்னது மற்றுமுண்டான திவ்யாயுதங்களுக்கும் லக்ஷணம் இதற்குவசநம் 198காண்க

மேதாவீ=ஸ்வபாவஸித்தமான அளவற்ற ஸர்வக்ஞதையுடையவன் இதற்கு வசநம் "யஸ்ஸர்வக்ஞஸ்ஸர்வவித்"

விக்ரம:=வி என்றுபக்ஷியாய் அதைக்கொண்டு 'க்ரம:' செல்பவன்; என்றால். வேதமயனான கருடன் மீதெழுந்தருளி ஆங்காங்கு ஸ்வேச்சையாய் விஹரிப்பவனென்றபடி இதற்குவசநம 199

க்ரம:=இப்படிப்பட்ட மஹாவிபூதியையுடைத்தா யிருக்கையாலே பருத்தவன்:—

அநுத்தம:=தன்னைத்தவிர மற்றொரு தன்னைப்போ லுத்தமனை யில்லாதான். இதில் 200பிரமாணங்காண்க.

துராதர்ஷ:=காம்பீர்யா திசயத்தாலே ஸமுத்திரம்போல் ஒருவரால் அலைக்கமுடியாதவன். இதற்க்கும் வசநம 201காண்க.

இவ்வளவாகச்சொன்ன இந்த கட்டத்தில் ஏற்பட்ட வர்த்தம் என்னவெனில்; சொல்லுகிறோம்:—

கீழ்ச்சொன்ன சுருதிஸ்மிருதி முதலிய வசந ஸஹஸ்ரங்களால் கோஷிக்கப்பட்டதாய், காலங்கடந்து விகாரநாசங்க ளொன்றுமின்றிக்கே தமஸ்ஸுக்கு அப்பால் நித்தியமாய் புநராவர்த்தியில்லாமல் பகவத்ஸ்வரூபம்

(அ.) மேதாவீ—பலக்கிரந்தங்களையும் தரிக்கும்படியான வல்லமையுடையவன். விக்ரம:—பக்ஷியால் செல்பவன்.

க்ருதஜ்ஞ:—பத்திரம் புஷ்பம் பலம் முதலிய அற்பத்திரவியங்கள் கொடுத்தார்க்கும் மோக்ஷத்தைத் தருமவனென்றுமாம்.

198 శార్‌ఙ్గధన్వా వ్యాపీ కేశః పురుషః పురుషోత్తమః । అజితః ఖడ్గధృగ్విష్ణుః

199 తత్పురుషాయ విద్మహే సుపర్ణపక్షాయ ధీమహి । తన్నో గరుడః ప్రచోదయాత్ ॥

200 తస్మాద్ధాన్యన్న పరః కిఞ్చనాస ॥
తేనార్త్తిర్బ్రహ్మణా స్పర్ధితుం క్షః ॥

201 గమ్భీరః పరమో దేవః ॥ మహోదధిరివాక్షోభ్యః ॥

[కృతజ్ఞః కృతిరాత్మవాన్ । సురేశః]

కృతజ్ఞః-செய்நன்றியறிபவன், కృతిః-செய்விப் பவன், ఆత్మవాన్ ஆத்மாக்களை யுடையவன், సురేశః - தேவர்களையாள்பவன்,

---

(வி.) போல்விளங்கும் பரமபதமென்கிற ஸ்தாநவிசேஷத்தில் ஸ்ரீ,பூமியென்கிற திவ்யமஹிஷிகளோடுகூடி, கௌஷீதகியிற்சொன்ன பாயங்கவிதத்தையின்படி ரத்நமயமான திவ்யாஸ்தாநத்தில திவ்யமான மஞ்சத்தின் மீதெழுந்தருளி, அநந்தவைநதேய விஷ்வக்ஸேநாதிகளான முன்சொன்ன நித்ய ஸூரிகளாலே எப்பொழுதும் பரிசர்யை பண்ணப்பட்ட சரணங்களை யுடையனாய் விளங்கும் பகவானுடைய ஸகலவேதரஹஸ்யமான ஸர்வைச்வரியம் விவரிக்கப்பட்டதாயிற்று. இவ்வர்த்தம் [202]சைவபுராணத்தில் ஸபஷ்டம்.

(அவதாரிகை.) அநந்தரம், கீழ்ச்சொன்னபடி ஆத்மாவுக்கு நிலைநின்ற ஸ்வரூபம் எம்பெருமானுக்கு அடிமைசெய்வதென்பதையும், தனக்கென்று ஒன்றுமில்லையென்பதையும் மறந்து, அநாதியான அவித்தையின் மஹிமையாலே தங்களை ஸ்வதந்திரரென்பதாக மதித்து ஜநநமரணாதி ரூபஸம்ஸாரத்தில் அகப்பட்டுழலும் ஆத்மகோடிகள் தன் விஷயத்தில் ஏதேனும் சிறிதுசெய்தாலும் அதையுணர்கிறானென்கிறதுமேல்:—

க்ருதக்ஞ:—செய்ததையறிபவன்.

[இப்படியேயன்றோ [203]கீதையிலருளிச்செய்தான்.]

க்ருதி:—செய்விப்பவன; என்றால் இப்படி அவர்கள் பண்ணும ஸுக்ருதமும் அவனுடைய ப்ரஸாதாதிசயத்தால் வருமென்றபடி. அதற்குப் [204]பிரமாணம். ஆத்மவாந்—ஆத்மாக்களையுடையவன்; என்றால் அப்படிப்பட்ட ஸுக்ருதத்தைப் பண்ணுமாத்மாக்களுடைய ஸ்வரூபம் ப்ரவிருத்தி முதலியவைகள் இவனிட்ட வழக்காயிருக்குமென்றபடி.

ஸுரேச:—தேவநாதன், என்றால்- அந்த ஸம்ஸாரிகளுக்குள் அற்பபலனை யபேக்ஷிக்கின்ற ப்ரம்மாதிகளுக்கு அவரவர் அபேக்ஷிதங்களைக் கொடுத்து ரக்ஷிக்குமென்றபடி [205]இப்படியே

(அ.) ஆத்மவாந்—தனது மஹிமையில் தானே பிரதிஷ்டிக்கப்பட் டிருப்பவன். இதற்குச்சுருதிப் பிரமாணம்.

---

202 నైకస్మిన్తు పరే లోకే శ్రియా సార్ధం జగత్పతిః । ఆస్తే విష్ణురచిన్త్యాత్మా భక్తైర్భాగవతైస్సహ ॥

203 అపి చేత్సుదురాచారః ..సమ్యగ్వ్యవసితోహిసః ॥

204 ఏషఏవసాధుకర్మకారయతి - తంయమేభ్యోలోకేభ్య ఉన్నినీషతి ॥

205 యస్యప్రసాదాదహమచ్యుతస్య భూతఃప్రజాసృష్టికరోఽన్తకారీ । క్రోధాచ్చరుద్రస్థితిహేతుభూతః ॥

[శ్శరణంశర్మ విశ్వరేతాః ప్రజాభవః]

శరణమ్ - ரக்ஷகன், శర్మ ஆநந்தரூபன், విశ్వరేతాః - ஸகல காரிய முந்தனக்காக உடையவன், ప్రజాభవః - பிராணிகளெல்லாந் தனக்காகவுடையவன், అహః - ஈனமில்லாதவன்,

(வி.) ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் ப்ரும்மா சொல்லுகிறார். ௧

சரணம்=உபாயம்; அதாவது ஸகல ப்ராணிகளுக்கும் நிருபாதிகமான உபாயமாய் நின்றவனென்றபடி; இதற்கு ப்ரமாணம [206] ச்வேதாச்வராதிகளில் கண்டுகொள்வது.

சர்ம=ஸுகம; பரம புருஷார்த்தமென்றபடி; இதற்கு ப்ரமாணம் [207] சாந்தோக்யாதிகள்

(அவதாரிகை.) இனி அவன் உபாயமாமதையும் உபேயமாமதையுமே விசாரிக்கிறது:—

விச்வரேதா:=விச்வத்தைக் காரியமாயுடையவன். என்றால்: தன்னையறிந்து தன் திருவடிகளில் பரிசாயை பண்ணுவதற்கென்றே பிரஜைகளுக்கு ஞானேந்திரிய கர்மேந்திரியாதிகளான ஸகலத்தையும் செய்பவனென்றபடி. இப்படியே சாஸ்திரத்தில [208] சொல்லுகிறது.

ப்ரஜாபவ:=பிரஜைகளெல்லாம் தனக்கேயானவன். அதாவது ஸகலமான பிரஜைகளும் அவன் தந்த அந்த உபகரணங்களைக்கொண்டே அவனுக்கு அபிமுகமாவதற்குத் தக்கவைகளாகின்றன வென்றபடி.

அஹ:=ஹீனமாயொருவனையுமுடைய 'அல்லன்' என்றால்—[209] கீதையிலருளிச்செய்தபடி இவன் விஷயத்தில் சிறிது சுகிருதம்செய்தவனும அதர்க்கதியடைய மாட்டானென்றபடி. அதவா, 'அஹ:' என்று பகலாகையால் அநாதியான அவித்தையென்கிற நித்திரையினின்று விழித்தவனுக்குப் பகலாய் நின்றவனென்றபடி.

(அ.) ப்ராஜாபவ:—பிரஜைகளுக்குப் பிறப்பிடம்.
அஹ:—பிரகாசரூபனுகையாலே பகல்போன்றவன்.

[206] తం హ దేవమాత్మబుద్ధిప్రకాశం ముముక్షుర్వై శరణమహం ప్రపద్యే ॥

[207] సర్వగన్ధస్సర్వరసః ॥ కం బ్రహ్మ ఖం బ్రహ్మ ॥

[208] ఏతస్మాజ్జాయతే ప్రాణో మనస్సర్వేన్ద్రియాణి చ । ఖం వాయుర్జ్యోతిరాపః పృథివీ విశ్వస్య ధారిణీ ॥

[209] నహి కల్యాణకృత్కశ్చిద్దుర్గతిం తాత గచ్ఛతి ॥

[అహస్సంవత్సరో వ్యాళః ప్రత్యయస్సర్వదర్శనః అజస్సర్వేశ్వర]

సంవత్సరః-நாற்புறமும்வஸிப்பவன், వ్యాళః-தனக்காக்கிக்கொள்பவன், ప్రత్యయః- நம்பச்செய்பவன், సర్వదర్శనః - ஸகலத்தையுங்காட்டுமவன், అజః-நிரஸிப்பவன், సర్వేశ్వరః-ஸகலரையுமவேகமா யடைபவன்.

(வி.) ஸம்வத்ஸரः=வஸிப்பவன், அதாவது—இப்படி ஆத்மாவானது அவித்தையென்னும் நித்திரையைவிட்டு விழித்துக்கொள்ளுமபொழுது அதற்குத் தன் விஷயமான புத்தியைக்கொடுத்தானுவதற்காகப் பிரதிக்ஷித்துத்திரியுமவனென்றபடி. இப்படி [210] கீதையில் அருளிச்செய்தான்.

வ்யாளः=அப்படி சேர்ந்தோரை வழியே நடத்தித் தன் அதீநமாக்கிக்கொள்ளுமவன்.

ப்ரத்யயः=அநந்தரம் அவர்களைத் தன்னிடத்தில் நம்பச்செய்பவன். இவ்விஷயத்தில் சுவேதாசுவதரம் முதலிய விடங்களில் [211]பிரமாணங்காண்க.

ஸர்வதர்சநः=அதற்குமே லவர்களுக்குத் தனது மஹிமையெல்லாவற்றையுங் காட்டுமவன். இதற்கும [212]வசநம்.

அஜः=(அஜ, கதிக்ஷேபணயோः) நிரஸிக்குமவன். அதாவது அவர்கள் தன்னை யணுகவொட்டாதபடிக்குத் தகைக்கின்ற ஸகலவிரோதிகளையும போக்குமவனென்றபடி. இப்படியே கீதையில் [213]அருளிச்செய்தான்.

ஸர்வேச்வரः=சக்தியுள்ளவைகளும் சக்திஹீநங்களுமான ஸகலப்பிராணிகளையும் சரணுகதியென்கிற அடைந்தமாத்திரத்தில்

(அ.) அஜः—பிறப்பற்றவன்.

---

[210] దదామి బుద్ధియోగం తం యేన మాముపయాన్తి తే ॥

[211] తం హ దేవమాత్మబుద్ధిప్రసాదమ్ ॥

[212] తమక్రతుం పశ్యతి వీతశోకో ధాతుః ప్రసాదాన్మహిమానమీశమ్ ॥ తస్యైష ఆత్మా వివృణుతే తనూం స్వామ్ ॥

[213] తేషామేవానుకమ్పార్థ మహమజ్ఞానజం తమః । నాశయామ్యాత్మభావస్థో జ్ఞానదీపేన భాస్వతా ॥ అహం త్వా సర్వపాపేభ్యో మోక్షయిష్యామి మా శుచః ॥

[సిద్ధస్సిద్ధిస్సర్వాదిః]

సిద్ధః-ஸித்தமானவன், సిద్ధిః-ஸாதிக்கக்கூடியவன்,
సర్వాదిః-எல்லாவற்றிற்கும் முதன்மையானவன்,

(வி.) அவைகளுடைய அநிஷ்டத்தைப் பரிஹரிப்பதற்கென்று வேகமாய் வந்தாட்கொள்ளுமவன். இப்படி [214]ஸ்ரீராமாயணத்தில் சொல்லப்பட்டது.

ஸித்தஃ—அப்படி சரணாகதர்களுக்கு ஒரு ஸாதநவிசேஷத்தாலே ஸாதிக்கவேண்டாதபடி ஸித்தமாயிருப்பவன். இதற்குத் தைத்திரீயத்தில் [215]வசநங்காண்க.

ஸித்திஃ—இதரோபாயங்களாலும் ஸாதிக்கக்கூடியவன். இதற்கு [216]வசநங்காண்க.

ஸர்வாதிஃ—இவர்களனைவர்க்கும் ஸகல புருஷார்த்தங்களையு முண்டுபண்ண முதன்மையாய் நின்றவன். இதற்கு [217]ஸ்ரீராமாயணாதிகளில் வசநம் கண்டுகொள்வது.

ஸ்ரீஸஹஸ்ரநாமபாஷ்யத்தில்

ப்ரதமசதகம்.

ஸம்பூர்ணம்.

(அ.) ஸர்வாதி:—ஸகல பூதங்களுக்கும் ஆதிகாரணன்.

---

214 విభీషణేనాశుజగామసఙ్గమమ్ ॥

215 న్యాసఇత్యాహుర్మనీషిణోబ్రహ్మాణమ్ ॥

216 యదిచ్ఛన్తో బ్రహ్మచర్యఞ్చరన్తి ॥

217 యేత్వాం దేవంధ్రువంభక్తాః పురాణంపురుషోత్తమమ్ । ప్రాప్నువన్తిసదా కామానిహలోకేపరత్రచ ॥

ஸ்ரீ:

த்விதீயசதகம்.

[రచ్యుతః। వృషాకపిరమేయాత్మా సర్వయోగవినిస్సృతః।]

అచ్యుతః-நழுவவிடாதவன், వృషాకపిః-தர்மவராஹ ஸ்வரூபன், అమేయాత్మా - அளவிடப்போகாத ஸ்வபாவன், సర్వయోగవినిస్సృతః-ஸகல உபாயங்களாலும்கிட்டக்கூடியவன்,

---

(வி.) அச்யுதः—கீழ்ச்சொன்னபடி சரணாகதரானப் பிராணிகளைக் கைவிடாதவன். இதற்கு [218]வசநங்காண்க.

(அவதாரிகை.) அச்சுதனையே தர்மவராஹனென்பதாய் ஸமர்த்திக்கிறதுமேல்:—

வ்ருஷாகபிः—தர்மவராஹன். இதற்கு ருஷிகளின் நிருக்தம் பிரமாணம் [219]

அமேயாத்மா—அளவிடவொண்ணாத ஸ்வபாவன்.

[அதாவது ஆச்ரிதரை அநுக்கிரஹிக்கிற விஷயத்தில் [220]புருஷஸூக்தத்திற்சொல்லியபடி அளவிடப்போகாதபெரியஸ்வபாவனா யிருக்குமென்றபடி.]

(அவதாரிகை.) அதாவதெப்படி என்றால்;—

ஸர்வயோக விநிஸ்ருதः—ஸகல உபாயங்களாலும் அடையக்கூடியவன்.

(அ.) வ்ருஷாகபிः—வ்ருஷः என்று தர்மத்தைச் சொல்லுகிறது, கபிः என்றால்-கம் என்று ஜலத்தைச்சொல்லி அதினின்றும் 'அபாத்' என்று உத்தரிப்பவனைச் சொல்லுகையால், கபிः என்று ஜலத்திலிருந்து பூமியையெடுத்தவரைச் சொல்லுகிறது ஆக வ்ருஷாகபிः—என்று இரண்டும்சேர்ந்து ஒருநாமமாய் தர்மஸ்வரூபியான வராஹபகவானைச் சொல்லிற்றுகிறது. இதற்கு வியாஸபகவான் வசநமிருக்கிறது.

ஸர்வயோகவிநிஸ்ருதः—பலவகையாய் சாஸ்திரங்களிற் சொல்லிய ஒருயோகத்துக்கு மெட்டாதவன்.

---

[218] యస్మాన్నచ్యుతపూర్వోऽహమచ్యుతస్తేనకర్మణా। తస్యాహంన ప్రణశ్యామి॥ నత్యజేయంకథంచన ॥

[219] కపిర్వరాహశ్శ్రేష్ఠశ్చ ధర్మశ్చవృష ఉచ్యతే। తస్మాద్వృషాకపింప్రాహ కశ్యపోమాంప్రజాపతిః ॥

[220] అతోజ్యాయాంశ్చపురుషః ॥ భూయాంశ్చాతోజనార్దనః ॥

[వసుర్వసుమనాస్సత్యస్సమాత్మాసంమితస్సమః।అమోఘః]

వసుః-வஸிப்பவன்; వసుమనాః-நிதியில் மனமுடையவன், సత్యః-ஸாதுக்களுக்கேற்றவன், సమాత్మా-ஸமமான மனமுடையவன், సమ్మితః -அளவிடப்பட்டவன், సమః-ஸமமானவன்; అమోఘః-வியர்த்தமாகாதவன்

(வி.) [அதாவது:—சாஸ்திரோக்தமான உபாயங்களென்ன, தந்தாமுக்குத் தோற்றிய உபாயங்களென்ன எதினாலும் சிறிதும வருத்தமின்றி யடையக் கூடியவனென்றபடி. இப்படியே 221சொல்லுகிறது.]

வஸுः=அவர்களிடத்தில் மஹாப்ரீதியோடு வஸிப்பவன்.

வஸுமநாः=நிதியில் மனமுற்றவன். என்றால், நிதியினிடத்தில் எவ்வளவு பிரீதியிருக்குமோ அவ்வளவு அவாளிடத்தில் பிரீதி பண்ணுமென்றபடி. கீதையிலிப்படி 222அருளிச்செய்தான்.

ஸத்யः=அந்தஸாதுக்களுக்கேற்றவன்.

ஸமாத்மா=ஸமமான மனமுடையவன்.

[அவர்கள் குணதிகளால் சிறிது ஏறக்குறைய விருந்தபோதிலும் அதைக் கணிசிப்பவனல்ல னென்றபடி. 223இப்படி கீதையில் அருளினானன்றோ?]

ஸம்மிதः—அவர்களால் (அளவிடப்பட்டவன்.) இவ்விஷயம் தசரதாதிகளிடத்தில் 224காணலாம்.

ஸமः—அவாளிடத்தில் ஸமமாயிருப்பவன்.

அமோகः=அவர்களுக்குத் தன்னிடத்தி லுண்டான ஸம்பந்தத்தைப் பலிப்பிக்குமவன். இவ்வர்த்தம் 225யுத்தகாண்டத்தில் காணலாம்.

(அ.) வஸுः=ஸர்வபூதங்களிலும் வஸிக்கிறனென்றும் இவனிடத்தில் ஸர்வமும் வஸிக்கிறதென்றும் வஸு என்கிறது. வஸுமநாः=ப்ரசஸ்தமான மனமுடையவன். ஸம்மித:=ஸகல அர்த்தங்களையுங்கொண்டு இவ்வளவென்று அளவிடப்பட்டவன். அதவா-அஸம்மித:-என்று ஒன்றாலும் அளவிடப்போகாதவனென்றுமாம்.

ஸம:—நிர்விகாரன்; லக்ஷ்மியோடு கூடியிருப்பவனென்றுமாம்.

221 స్వబుద్ధిమాత్రనిర్జ్ఞాతైః పరమాత్మా జగత్ప్రభుః । సైన్యశ్వర్యాద్యనుభవప్రీతో జ్ఞాతారమనుసేవతే ॥

222 సమమాత్మా సుదుర్లభః ॥

223 సమో౽హం సర్వభూతేషు ॥

224 ఊనషోడశవర్షో మే రామో రాజీవలోచనః ॥ మమాయం తనయో నిజః ॥

225 అమోఘం దర్శనం రామ న చ మోఘస్తవ స్తవః । అమోఘాస్తే భవిష్యన్తి భక్తిమన్తశ్చ యే నరాః ॥

[పుండరీకాక్షో వృషకర్మా వృషాకృతిః॥రుద్రో బహుశిరా]

పుణ్డరీకాక్షః பரமபதவாஸிகளுக்குக்கண்ணானவன், వృషకర్మా-தர்மமானசெயலுடையவன்,వృషాకృతిః-தர்மமான ஆகாரமுடையவன், రుద్రః - அழச்செய்பவன், బహుశిరాః-பன்முடியன்,

(வி.) புண்டரீகாக்ஷ:—ஸ்ரீபாரதத்திற் [226]சொன்னபடி புண்டரீகமென்கிற பரமபதவாஸிகளுக்கு நேத்திரம் போன்றவன். [227]இவ்வர்த்தம் சுருதியிலுங்காணலாம்.

வ்ருஷகர்மா=தர்மமான கர்மமுடையவன். என்றால் இவன் இப்படி பரம உத்கிருஷ்டனா யிருந்தானாகிலும் கீழ்ச்சொன்னபடி நமக்கெல்லாம் நன்மையுண்டாக்குகையாலே தர்மமானகருமங்களைச்செய்யு மென்றபடி.

வ்ருஷாக்ருதி:—அப்படியே திருமேனியும் தர்மரூபமா யிருக்குமென்கிறது.

[அதாவது—தாபத்திரயத்தைப் போக்கும் அமுதவெள்ளம்போல் குளிர்ந்த செயலும் அழகிய வடிவமுமா யிருக்கையால், தர்மமானசெயலும் சரீரமுமுடைய னென்கிறதென்றவுமாம். இவ்விஷயமாய்ப் பிரமாணம் 228 காண்க.]

ருத்ர:=இப்படிப்பட்ட ரூபத்தையும் செயலையுங் காட்டிக் கண்டவர் சிந்தையைக்கரைத்து அவர்களை ஆநந்தக்கண்ணீருடன் அழும்படி செய்விக்குமவன். இப்படிக்கு 229 வசநங்காண்க.

பஹுசிரா:=பலதிருமுடியுடையவன்.

(அ.) புண்டரீகாக்ஷ:=ஹிருதயமென்கிறபுண்டரீகத்தில் வியாபிக்கிறானவன். அல்லது அதில் காணப்படுகிறவன். வ்ருஷகர்மா—தர்மார்த்தமான கருமத்தைச் செய்பவன். வ்ருஷாக்ருதி:—தர்மத்துக்காகச் சரீரமெடுப்பவன். ருத்ர:=ஸம்ஹாரகாலத்தில் பிரஜைகளை யழச்செய்பவன்; துக்கஹேதுவைப் போக்குமவன் என்றுமாம்.

[226] పుణ్డరీకం పరం ధామ నిత్యమక్షరమవ్యయమ్ ॥ తద్భవాన్ పుండరీకాక్షః॥

[227] దివీవచక్షురాతతమ్ ॥

[228] విశ్వమాప్యాయయన్ కాన్త్యా పూర్ణేన్ద్వయుతతుల్యయా ॥

[229] ఆహ్లాదశీతనేత్రామ్బుః పులకీకృతగాత్రవాన్ । సదాపరగుణావిష్టో ద్రష్టవ్యస్సర్వదేహిభిః ॥

బభ్రుర్విశ్వయోనిశ్శుచిశ్రవాః। అమృతశ్శాశ్వతః
[స్థాణుర్వరారోహోమహా]

బభ్రుః-பரிப்பவன், విశ్వయోనిః - ஸகலரையுங்கலப்பவன், శుచిశ్రవాః- தூயகேள்வியன், అమృతః-அமுதமானவன், శాశ్వతఃస్థాణుః - என்றாரு மழியாதான், వరారోహః-சிரேஷ்டமான பிராப்தியுடையவன்,

---

(வி.) பப்ரு:=அவ்வுருவத்தோடு பூமியைத் தாங்குகிறவன். இதற்கு வசநம் [230]காண்க.

(அவதாரிகை.) அநந்தத்தர்மவராகன் பக்த ஸம்ச்லேஷ விசேஷத்துக்காக திருவனந்தாழ்வான் திருமேனியோடொக்க ஸர்வஸாதாரணமாயிருக்கும்படியைச் சொல்லுகிறது:—

விச்வயோநி:= தன்னைச்சேவிப்போரனைவரையும் தன்னோடு சேர்த்துக்கொள்ளுமவன்-

சுசிச்ரவா:=அவர்கள் ஹ்ருதய சுத்தியோடு சொல்லுமவைகளை அவசியங்கேட்பவன். இதற்கு வசநம் [231]காண்க.

(அவதாரிகை.) அவர்களுக்கு மிகவும் இனியனாய்க்கொண்டு ஜரைமரணம் முதலியவற்றை யொழிக்கையாலும், ஸர்வதா அநுபவித்தாலும் போரும் என்று பர்யாப்தி பிறவாதபடியிருக்கையாலும்,

அம்ருத:=அமுதமாயிருப்பவன். இதற்குப் பிரமாணம் [232]ல் காண்க.

இந்தமாதுர்ய சக்தியினது அற்பாம்சத்தைக் கொண்டு ஸமுத்திரஸாரத்தைக்கூட அமுதமென்று வழங்குகிறார்களன்றோ? ஆகையால் அதை விட இவனுக்கு விசேஷம் சொல்லுகிறது.

சாச்வதஸ்த்தாணு:=நித்தியமாய் அழிவுறும விருப்பவன்.

அதாவது அந்த வமுதத்தைப்போல் அநித்தியமின்றிக்கே மறுபடி மீளவொட்டாமல் நித்திய போக்கியமாயிருக்குமென்றபடி.

ஆனதுபற்றியே, வராரோஹ:=உத்கிருஷ்டமானப் பிராப்தியை யுடையவன்; என்றால்—மற்றபுருஷார்த்தங்களைப் பெறுவதென்பது நிக்

(அ.) சுசிச்ரவா:=நல்லநாமங்களுடையவன். அம்ருத:=மரணமற்றவன்.

---

230 యస్యసాసకలాపృథ్వీఫణామణిశిలారుణా।బిభర్తిమాలాంలోకానామ్ ॥

231 శుచీనిశ్రావణీయానిశృణోమీహధనఞ్జయ ॥ నచపాపానిగృహ్ణామితతోహం వైశుచిశ్రవాః ॥

232 అమృతస్యైవనాతృప్యన్ ప్రేక్షమాణాజనార్దనమ్ ॥

(வி.) ருஷ்டமாய் இவனைப்பெறுவதானது அதிஉத்கிருஷ்டமா யிருக்குமென்றபடி. இவ்விஷயத்தில் [233]ல் பிரமாணங்காண்க.

[பரப்பிரம்மமானதுபரம், வியூஹம், விபவம் என்று மூன்றுவித மென்பதாய் பாகவத ஸித்தாந்தம்; பரமாவது:—காரியமன்றிக் காரணமாய்மாத்திரமிருப்பதோடு காரியத்தோடு, ஸம்பந்தப்படாமல், ஷாட்குண்ய பூர்ணமாய் மஹார்ணவம்போல் விளங்கி, அநந்தமாய் நித்தியமாய் விளங்கும் போகவிபூதியை ஒருகுடையின்கீழ் ஆள்வதும், முக்தபுருஷர்களால் ஸேவிக்கப்படுவதும், உபாதி ரஹிதமுமான விருப்பு.

வியூஹமாவது:—மோக்ஷகாமர்களை யுண்டாக்கவேண்டி, அதற்காக ஸ்ருஷ்டிஸ்திதிலய மென்றும், சாஸ்திரமென்றும், அதின் பொருளென்றும், அதற்குப் பயனென்றும், தியாநமென்றும், ஆராதநமென்றும் லீலையென்று மிப்படி செய்யவேண்டுமே காரியத்துக்கு உபயோகமாய் பரஸ்வரூபத்தினது குணங்களைச் சிறிது பிரித்துக்கொண்டு லீலாவிபூதியை நிர்வஹித்து.முக்திக்கு ஸாதநமாய்க்கொண்டு நான்குபடியா யிருக்குமிருப்பு

விபவமாவது:—அந்த வியூஹச்சாயையோடே தேவர் மனிதர் திர்யக்கு என்று சொலலுகிற தனது விபூதியைப்போலவே தன் இச்சையால் எடுக்கும் அவதாரவர்க்கம். இவ்விஷயம் ஸ்ரீஸாத்வத ஸம்ஹிதையில் [234]காணலாம்.

அப்படிப்பட்ட விபவாவதாரங்கள்தான், சிலவைகள் மத்ஸ்யம் கூர்மம முதலியவைகளைப்போல் ஸாக்ஷாத்தாயிருக்கும். மற்றும் சிலவைகள் ருஷியென்னும்படியான மஹிமைதங்கிய புருஷாளிடத்தில் (அதாவது பரசுராமன் வியாஸர்முதலானவாளிடத்தில்) அதிஷ்டித்திருக்கும். மற்றும் சிலவைகள், திரிபுர ஸம்ஹாரகாலத்தில் சிவனுடைய பாணத்தில் தனது சக்தியை ஆவேசிப்பித்தாப்போல் அந்தந்தகாரியகாலத்தில் தனது சக்தியை மாத்திரம் ஆவேசிக்கச்செய்யும். மற்றும் சிலவைகள் அர்ச்சாவிக்கிரஹம் முதலான வியக்திகளில்தானே நேராகவந்து அவதரிப்பதாயிருக்கும்; என்றிப்படி வியூஹம் நான்குவகை.

நல்லதாகட்டும்; பிரம்மாதிகளைப் பரம புருஷனோடு அபேதமாகச் சுருதியிற் சொலலுகையால் அவர்களையும் அவனது அவதாரமாகவே சொலலுவோமேயென்றால்—இது தெரியாதவாள் சொல்லும் விஷயம், ஏனெனில்-நாமும் மற்றும் புற்பூண்டுகளுங்கூட அவனோடு அபேதமாயிருப்பதாகச் சொல்லுகையாலே நம்மையும் அவைகளையுங்கூட அவனவதாரமென்றே சொல்லவேண்டியதாய் வரும். ஸர்வமும் அவனென்பதாகச சுருதி

[233] ఏతే వై నిరయాస్తాత స్థానస్య పరమాత్మనః ॥

[234] షాడ్గుణ్యాద్విగ్రహం దివ్యం భాస్వజ్జ్వలన తేజసమ్। సర్వతః పాణిపాదం తత్ ॥... పరమేతత్సమాఖ్యాతమేకం సర్వాశ్రయం విభుమ్ । ఏతత్పూర్వత్రయఞ్చాన్యత్ జ్ఞానాద్యైర్భేదితం గుణైః ॥ విద్ధ్యేతద్వ్యూహసంజ్ఞం వై నిశ్శ్రేయసఫలప్రదమ్ । ముఖ్యా

[మహాతపాః। సర్వగః]

మహాతపాః - பூஜிக்கும்படியான ஜ்ஞானமுடையவன், సర్వగః - ஸகலத்திலும் உளாப்பவன்,

---

(வி)யிருக்கிறதன்றோ? மேலும் அவர்களை பகவதவதாரக் கணக்கில்விடாமலசேர்க்கவுமில்லை; அவர்களை தேவமனுஷ்யாளைபோல ஸ்ருஷ்டிககு விஷயமானவர்களாகவும் சொல்லப்படுகிறது மற்றப்படி யவர்களை பகவதவதாரஙகளைக்காட்டிலும வேறாக 235பகவத் சாஸ்திரங்களிற்சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விஷயம் ஆங்காங்கு வியவஸ்தைதை பண்ணப்படும்.]

(அவதாரிகை.) வராரோஹஃ என்னுமிதுவரையில்சொன்ன திருநாமங்களால வெகுசாய் பரத்வம் சொல்லப்பட்டது. பிராப்யவிஷயமாய் முதலில் தர்மபுத்திரர்கேட்ட 'கிமேகம்' இத்யாதி கேள்விகளுக்கும் அவற்றின் உத்தரங்களுக்கும் வெகுசாய் இதில்தானே விஷயங்கண்டுகொள்வது இனி 'ஸ்துவந்தஃ கம்' என்பது முதலாக உபாயவிஷயமாய்க் கேட்ட கேள்விகளுக்கும் உத்தரங்களுக்கும் விஷயமாக வியூகம் சொல்லப்படுமென்றறிக.

அதில் வாசுதேவனைப் பரனென்பதாய்க் கீழேவியாக்கியாநஞ் செய்யப்பட்டது. இப்பொழுது ஸங்கஷர்ணன் விஷயம் சொல்லுகிறது.

மஹாதபா:—பூஜ்யமான ஞானமுடையவன்.

[மேலே பகவானுடைய ஆறுகுணங்களும் சொல்லப்படுகின்றன. அதில் ஞாநம் பலம் என்கிற விரண்டும் ஸங்கர்ஷண மூர்த்திக்கு ஊர்ஜிதமானவைகள். அதில் பிராணிகளுக்கு நெடுநாளாய் உண்டான பிறவித்துயரத்தைதயாற்றவேண்டி அவைகளை ஸம்ஹரிக்கவேண்டுமென்கிற இச்சை அவருக்குண்டாகின்றமையால் அதையிங்கே ஞாநசப்தத்தாலே சொல்லிற்றென்றறிக.]

ஸர்வக:—(தரிக்கும்படியான ஸாமர்த்தியமென்கிற) பெலனைக்கொண்டு ஆத்மாவைப்போல தரித்தவனாய் ஸம்ஹரிக்கப்பட்டவைகளிலெல்லாஞ் (செல்பவன்.)

[இப்படி ஸங்கர்ஷிக்கிறான் (அதாவது ஸம்ஹரிக்கிறான்) என்பதைக்கொண்டுதான் ஸங்கர்ஷணனென்கிற திருநாமமுண்டாயிற்றென்று நிருக்தியிற் சொல்லப்பட்டதென்றறிக.]

(அவதாரிகை.) அநந்தரம் ஸம்ஹரிக்கப்பட்டவைகளை ஸ்ருஷ்டிக்க ஒருப்படுகிற ப்ரத்யும்ந மூர்த்தியைச்சொல்லுகிறது.

సువృత్తిభేదేన యుక్తం జ్ఞానాదిభిర్గుణైః॥ నానాకృతి చ తద్వృద్ధి విభవవ్యుత్క్రమస్తదమ్ ॥

235 జ్ఞానోపదేష్టా భగవాన్ కపిలాక్షస్త్వధోక్షజః। విద్యామూర్తిశ్చతుర్వక్త్రో బ్రహ్మా నైలోకపూజితః ॥ తదంశభూతో వై యస్య విశ్వవ్యఞ్జనలక్షణః ॥

[స్సర్వవిద్భానుర్విష్వక్సేనోజనార్దనః। వేదో]

సర్వవిత్ - ஸகலத்தையு மடைபவன், భానుః-பிரகாசிப்பவன்,
విష్వక్సేనః - எப்புறத்திலும்ஸேனையையுடையவன், జనార్దనః-
ஜநங்களைப்பீடிப்பவன், వేదః-அடைவிக்குமவன்,

(வி.) [ஸர்வவித்—ஸகலகாரிய வர்க்கத்தையும (சிருஷ்டிசெய்து) லபிக்கிறவன்.

[ஜகத்தைப் படைக்கும் க்ரியா சக்தியினது விலாஸமான ஐசுவரிய மிங்கே சொல்லப்பட்ட தென்றுணர்க.]

பாநுः=ஸகலத்தையும் நிருமித்தாலும் தான் சிறிதும் விகார மடையாமல் (விளங்குமவன்.)

[இதனால் அவிகாரமென்னும் வீரியஞ்சொல்லப்பட்ட தென்றுணர்க]

(அவதாரிகை.) அநந்தரம் ஸ்ருஷ்டிக்கப்பட்டவைகளை ஸ்தாபிக்கின்ற அநிருத்தனைச் சொல்லுகிறது:

விஷ்வக்ஸேநः=(இமே ந வாத்தந்தே இதி-ஸேநாः) அதாவது ஸ்வாமியோடிருப்பவைகள். இதனால் ரக்ஷகனைப்பற்றிக் கிடக்கின்ற ரக்ஷ்யகோடிகளைச் சொல்லிற்று. அப்படிப்பட்ட ரக்ஷ்யவர்க்கங்கள் (விஷ்வக) எங்குமிருக்கப்பெற்றவனா யாவன், அவனை விஷ்வக்ஸேநனென்கிறது.

ஜநார்த்தநः=ரக்ஷணவிரோதிகளை நிரபேக்ஷமாக நிரஸிக்குமவன்.

[இவ்வர்த்தம் [236]ஸ்ரீபாரதத்தில் காண்க. இங்கே அபேக்ஷையின்றி செய்கையென்கிற தேஜஸ் சொல்லப்பட்ட தென்றுணர்க. பகவானுக்கு எங்கும் மறைவின்றி ஸகல குணங்களும் பரிபூர்ணமா யிருந்ததேயாகிலும இங்கேசொன்ன குணவ்யவஸ்த்தை மூர்த்திகள்தோறு மென்றுணர்க இப்படி மூலஸம்ஹிதையில் ஓதுகிறது.)

(அவதாரிகை.) மறுபடியும் உத்தேசக்கிரமமாய் முதலில் ஸ்ரீஸங்கர்ஷணுழ்வானுடைய சாஸ்திரதாத்ருத்வம சொல்லப்படுகிறது.

வேதः=(அநேந விந்தந்தி) என்றால் ஸ்ருஷ்டியால் கரணங்களைப்பெற்ற ஸகலரும் தன்னிடத்தில் சாஸ்திரங்களை (லபிக்கும படி) யானவன். இப்படியே [237]ஓதுகிறது.

(அ.) விஷ்வக்ஸேநः=நால்புறத்திலும (நடுபடியான சைத்திய) ஸேனையுடையவன்.

[236] దస్యూన్ జ్ఞానార్దనః ॥

[237] వేదాంశ్చ ... ॥

వేదవిదవ్యంగో వేదాంగో వేదవిత్కవిః॥ లోకాధ్యక్షస్సురాధ్యక్షో ధ
[ర్మాధ్యక్షః]

వేదవిత్-வேதார்த்தமறிந்தவன், అవ్యఙ్గః-அங்கத்தால்குறையாதவன், వేదాఙ్గః -வேதத்தை அங்கமாயுடையவன், వేదవిత్-வேததர்மத்தை அநுஷ்டிப்பிக்குமவன், కవిః- இனியவைகாண்பவன், లోకాధ్యక్షః-லோகத்தைக்கண்டறிபவன், సురాధ్యక్షః- தேவர்களைக்கண்டறிபவன், ధర్మాధ్యక్షః-தருமங்களைக்கண்டறிபவன்.

(வி.) [ஆனதுபற்றியேதான் உபாயமென்றும் ஆகமமென்றும், மார்க்கமென்றும், நடத்துமவனென்றும். பிராம்மணனென்றும், ஆசாரியனென்றும் ஸங்கர்ஷண சப்தத்துக்குப் பொருள்சொன்னார்கள்.]

வேதவித்=வேதார்த்தத்தை ஸம்சயப் பிரமாதிகளொன்றுமின்றிககே யறிபவன். இபபடி கீதையில் [238]அருளிச் செய்தான்.

அவ்யங்க:=சநதஸ், கல்பம் முதலிய வேதாங்கங்களைத் தானே கற்பிக்கையாலே அவற்றால் குறைவற்றவன்.

வேதாங்க:=அநநத சாகைகளான வேதங்களைச் சரீரமாயுடையவன்.

[என்றால், வேதங்களை யறிந்தவன் புத்திக்கு எட்டுகிறானென்றபடி. இதில் சுருதிமுதலியன [239]பிரமாணம். சுருதியை அவனது ஆக்ஞையாகச் சொல்லுகையாலே வேதத்தை ஆக்ஞையாகவுடையனென்றுமாம்]

வேதவித்=வேதமென்று வேதார்த்தத்தைச்சொல்லி, அதை 'வித்' அநுஷ்டிப்பிக்கிறபடியால் அவ்வழியாலே லபிக்கிறானென்று 'வேதவித்' என்று ப்ரத்யும்நாழ்வானைச்சொல்லுகிறது. ஆனதுபற்றிதான் இவரைத் தர்மமென்றும் பிரகாசப்படுத்துமவரென்றும் ப்ரவர்த்திப்பிக்கிறவரென்றும் சொல்லுகிறது.

கவி:=இனியதான வைகளைக்காண்பவர். இவ்வர்த்தத்தையே மேல் மூன்று திருநாமங்களா லுபபாதிக்கிறது. லோகாத்யக்ஷ:—ஸுராத்யக்ஷ:—தர்மாத்யக்ஷ:=லோகமென்று தர்மாநுஷ்டாநத்துக்கு யோக்கியரைச்சொல்லி 'ஸுர' என்று அவர்களாராதிக்கும் தேவதைகளைச்சொல்லி, 'தர்ம' என்று அவற்றின் ஸாதநத்தைச்

(அ.) அவ்யங்க:= ஞாநத்தால் குறைவற்றவன்.

[238] వేదవిదేవచాహమ్ ॥

[239] నావేదవిన్మనుతేతంబృహన్తమ్ ॥ విష్ణుస్తేవేదమయంశరీరమ్ ॥

[కృతాకృతశ్చతురాత్మా చతుర్వ్యూహశ్చతుర్దంష్ట్రః]

కృతాకృతః பிரவ்ருத்திதர்மமும் நிவ்ருத்திதருமமுமானவன், చతురాత్మా - நான்குருபன், చతుర్వ్యూహః - நான்குவியூஹமானவன், చతుర్దంష్ట్రః-நான்குபற்களுடையவன்,

---

(வி.)சொல்லி இவைகட்கெல்லாம் 'அத்தியக்ஷ:' என்று அதருஷ்டஸ்தானத்திலிருந்து பலனைத்தரும் அநிருத்தாழ்வானைச் சொல்லுகிறது.

ஆனதுபற்றியே இவருக்கு "தர்மக்ஞனென்றும், உபாயக்ஞனென்றும் அத்யக்ஷனென்றும், ஸத்யஸந்தனென்றும், இவர்தான் புருஷனுக்கு, ஞானத்தைத்தருகிறவனென்றும்" திருநாமங்களுண்டாயிருக்கின்றன.]

க்ருதாக்ருத:—கிருதாகிருதஸ்வரூபி.

[என்றால்: ஸம்ஸாரத்தில் பிரவர்த்திப்பித்து அநித்தியமான பலனைத்தருகையால் க்ருதமென்று பிரவ்ருத்தி தர்மமாய், ஸம்ஸாரத்திலிருந்து நிவ்ருத்திப்பித்து நித்தியமான பலத்தைத்தருகையாலே அக்ருதமென்று நிவ்ருத்தி தர்மமாய் இவ்விரண்டு ரூபமாயும் அநிருத்தாழ்வானிருக்கிறானென்றபடி.]

சதுராத்மா—இப்படி வாசுதேவன், ஸங்கர்ஷணன், ப்ரத்யும்நந், அநிருத்தன் என்று நான்குவிதமாயிருப்பவன்.

(அவதாரிகை.) ஒருவனெப்படி நான்குவிதமாயிருக்கக்கூடுமென்னில் சொல்லுகிறது.

சதுர்வ்யூஹ:—நான்குவிதமான மூர்த்திகளையுடையவன்.

[என்றால்—கீழ்ச்சொன்னப் பிரயோஜநத்துக்காகவும் தியானிக்கவேண்டும் ஸ்வரூபம் இன்னதென்று தெரிவிப்பதற்காகவும் கல்லியாணகுணங்களானவையும் மொத்தமாயும்பிரித்தும் அங்கீகரித்து அந்தந்தகுணங்களுக்குப் பிரகாசகமாயேர்ப்பட்ட அவயவம், வர்ணம், ஆபரணம், ஆயுதம், வாஹநம், த்வஜம் முதலானவைகளோடும், ஜாக்கிரத் முதலான நான்கு அவஸ்தைகளோடுங்கூடி நான்குவகையாய்ப் பிரிக்கப்படுகிறானென்றபடி.]

சதுர்தம்ஷ்ட்ர:—(இப்படிப்பட்ட வியூஹ மூர்த்திகளுக்குக் காரணமான பரஸ்வரூபத்தில்) நான்குபற்களையுடையவன்.

(அ) க்ருதாக்ருத:—காரியமாயும் காரணமாயுமிருப்பவன். சதுராத்மா—ஸ்ருஷ்டிகாலத்தில் பிரம்மா, தக்ஷாதிகள் காலம் மற்றும் பிராணிகள், என்கிற நான்கு விபூதிகளை யுடையவன். இதற்கு விஷ்ணுபுராண வசனங்காண்க. சதுர்வ்யூஹ:—வியாஸ வசநத்தின்படி வாஸுதேவாதிமூர்த்திபேதத்தாலே தன்னை நான்குபடியாக வகுத்து ஸ்ருஷ்டி முதலியவைகளைச்செய்பவன். சதுர்தம்ஷ்ட்ர:—ந்ருஸிம்ஹசரீரத்தில் நான்குகோரப்பற்களுடையவன்.

[చతుర్భుజః॥ భ్రాజిష్ణుర్భోజనం భోక్తా సహిష్ణుః]

చతుర్భుజః-நான்கு தோள்களுடையவன், భ్రాజిష్ణుః-பிரகாசிப்பவன், భోజనమ్-புஜிக்கப்படுமவன், భోక్తా-புசிப்பவன், సహిష్ణుః-ஸஹிப்பவன்,

---

(வி.) [நான்குபற்களுண்டாயிருப்பது, மஹாபுருஷ லக்ஷணமென்று 240 ஸ்ரீராமாயணத்தில் சொல்லுகிறது.]

சதுர்ப்புஜ:=அப்படியே (நான்கு திருத்தோள்களுடையவன்.)

[பரஸ்வரூபம் இப்படியேயன்றோ 241 விஷ்ணு புராணாதிகளில் சொல்லப்படுகிறது?]

ப்ராஜிஷ்ணு:=இவையெல்லாவற்றோடும் தன்னையுபாஸிப்பவருக்குப் (பிரகாசிப்பவன்.)

போஜநம்=அவர்களால் சுகமாய் அநுபவிக்கப் படுமவன்.

போக்தா=தானும் அவநகந்து ஸமர்ப்பித்ததை அற்பமாயினும் அமுதம்போல் திருவுள்ளப்பற்றுமவன்.

[இப்படி கீதையில் 242 அருளினன்.]

ஸஹிஷ்ணு:=ஸஹிக்கும ஸ்வபாவன்.

[என்றால்-அவர்களிடத்தில் ஆதரத்தாலே, அவர்கள் முன்னும் பின்னுமாய் ஸம்பாதித்தவைகளும், புத்திபூர்வகமாயும் புத்தியறியாமலும் எப்பொழுதும் எல்லாப் பிரகாரங்களாலும் சேர்க்கப்பட்டவைகளும், விதிநிஷேதரூபமான தன் ஆக்ஞையைக்கடந்து செய்தவைகளும், ஸாதாரணமானவைகளும், அஸாதாரணமானவைகளும், தன்னையவமானப் படுத்தல் நிந்தித்தல் முதலானவைகளும், எல்லாவற்றையும் பொறுக்கின்ற தன்னாலும் பொறுக்கமுடியாதவைகளும், தனது பக்தவிஷயத்தில் பண்ணவைகளும், இவ்வளவென்று கணக்குக்கு அகப்படாமல் அபரிமிதமானவைகளுமான அபராதங்களை யெல்லாம் ஸஹிப்பவனென்றபடி. இப்படிப்பட்ட பொறுமைக்கு என்ன ஹேதுவென்றால் இது அவனுக்கு ஸ்வபாவமென்கிறது 'ஷ்ணு' என்கிற விகுதி.]

(அவதாரிகை.) இப்படி வியூஹஞ்சொல்லப்பட்டது. இனி விபவங்களைச் சொல்லுவதாய், முதலில் திரிமூர்த்திகளுக்குள் ஒன்றான விபவாவதாரத்தைச் சொல்லுகிறதுமேல்:—

(அ) ஸஹிஷ்ணு:=(ஹிரண்யாக்ஷாதிகளை) ஜயித்தவன்.

---

240 చతుర్దశసమద్వంద్వః చతుర్దంష్ట్రశ్చతుర్గతిః ॥

241 చతుర్భుజముదారాఙ్గం శఙ్ఖచక్రాద్యాయుధభూషణమ్ ॥

242 అశ్నామి ప్రయతాత్మనః ॥ భోక్తారం యజ్ఞతపసామ్ ॥

జగదాదిజః। అనఘోవిజయోజేతావిశ్వయోనిః పునర్వసుః ॥

[ఉపేంద్రో]

జగదాదిజః- ஜகத்திற்கு ஆதியிலிருப்பவன், అనఘః-பாவமற்றவன், విజయః—ஜயகாரணன், జేతా-வெல்புவன், విశ్వయోనిః-ஜகத்காரணன், పునర్వసుః—மறுபடியும் வஸிப்பவன், ఉపేంద్రః—இந்திரனைக்கிட்டினவன்,

(வி) ஜகதாதிஜ:—ஜகதுக்கு ஆதியாய் நின்ற மூவருள் ஒருவனானவன்.

[இப்படியே [243]பிரம்மாசொன்னார். இன்னும் பாரதாதிகளிலும் சொல்லுகிறது.]

அநக:—(இப்படி ஸம்ஸார மண்டலத்தில் பிறந்தாலும்,) பாபத்தை யெதிரப்பவன். விஜய:—விஜயநாமவன்.

(என்றால பிரம்ம ருத்திராளென்கிற மற்ற விரண்டு மூர்த்திகளும் ஸ்ருஷ்டி ஸம்ஹாரரூப வியாபாரங்களால் ஜயம்பெறுவதும் இவனாலென்றபடி. இப்படியே பாரதவசநம் [244]இருக்கிறது.)

ஜேதா—அவர்களையுந் தன்னபிப்பிராயப்படி யிருக்கும்படி வெல்லுமவன். விச்வயோநி:—அவர்முகமாய் காரியப் பிரபஞ்சத்திறகுக் காரணமாமவன்.

புநர்வஸு:—மறுபடியும் அந்தப் பிரம்மாதி தேவர்களிடத்தில் அநதராதமாவாய்வஸிப்பவன்.இதற்குப்பிரமாணம[245]ல் காண்க.

(அவதாரிகை) அநந்தரம் அதிதிபுத்திரர்களில கடைசியாய்ப் பிறந்த அவதாரத்தைச் சொல்லுகிறது.

உபேந்திர:—இந்திரனைத் தம்பியாய்க்கொண்டு கிட்டியவன். இதற்குப் பிரமாணம [246]காண்க.

(அ.) புநர்வஸு:—மறுபடியும் மறுபடியும் க்ஷேத்திரஜ்ஞனென்கிற ஜீவனாகச் சரீரங்களில் வஸிக்குமவன். உபேந்த்ர:இந்திரன் தம்பியானவன், அல்லது இந்திரனில பிறந்தவன்.

[243] యస్యప్రసాదాదహమచ్యుతస్య భూతప్రజాసృష్టికరోన్తకారీ। క్రోధాచ్చ రుద్రస్స్థితిహేతుభూతో యస్మాచ్చమధ్యేపురుషఃపరస్తాత్ ॥

[244] తదాదర్శితపన్థానౌ సృష్టిసంహారకారకౌ ॥

[245] దేవానాంబన్ధునిహితంగుహాసు ॥ తవాన్తరాత్మామమచయేచాన్యేదేహిసంజ్ఞితాః ॥

[246] జఘన్యజస్ససర్వేషామాదిత్యానాం గుణాధికః। ద్వాదశైవాదితేఃపుత్రాః శక్రముఖ్యానరాధిప ॥ తేషామవరజోవిష్ణుః యత్రలోకాఃప్రతిష్ఠితాః॥

వామనః ప్రాంశురమోఘశ్శుచిరూర్జితః। అతీన్ద్రస్సంగ్రహస్సర్గః

వామనః- வாமநன், ప్రాంశుః-உயர்ந்தவன், అమోఘః-பழுதாகாதவன், శుచిః-பரிசுத்தன், ఊర్జితః - பெலமுடையவன், అతీన్ద్రః- இந்திரனைக்கடந்தவன், సంగ్రహః- கிரஹிக்கப்படுமவன், సర్గః- ஸ்ருஷ்டிக்கப்படுமவன்,

(வி.) வாமந:—(அவனே இந்திர ரக்ஷணார்த்தமாக மஹாபலியின் வேள்வியில்) அழகியதான தன் திருமேனி காந்தியால் சுகத்தைத் தருமவன். இதற்கு சுருதி[247] காண்க.

ப்ராம்சு:—எவ்விடத்திலும் தானே வியாபித்தவன். இதில் [248] பிரமாணங்காண்க. இந்த விருத்தாந்தத்தை யுட்கொண்டு தான் வேதமும் [249]கோஷிக்கின்றது.

அமோகஃ—(பலியையும் இந்திரனையும் இப்படி வித்தியாஸமின்றி கிருதார்த்தமாகச் செய்தபடியால்) வியர்த்தம் பண்ணாதவன். இதற்குப் பிரமாணம் [250]காண்க.

சுசி:—இப்படி உபகாரம்பண்ணி யிருக்கச்செய்தேயும் பிரத்தியுபகாரத்தை யபேக்ஷியாமலிருப்பவன்.

ஊர்ஜித:—(நமுசிமுதலிய சத்துருக்களை நிரஸிப்பதில்) திடமான பெலமுடையவன்.

அதீந்த்ர:—இந்திரனுக்குத் தம்பியாய்த்தோன்றி னாலும் ஐச்வரியத்தாலும் சேஷ்டிதத்தாலும் அவனை யதிசயித்திருக்குமவன் இதில் [251]பிரமாணங்காண்க.

ஸங்க்ரஹஃ—இப்படி யிருக்கச்செய்தேயும் பக்தர்களால் யாதொருவருத்தமு மின்றி ஸேவிக்கப்படுகிறவன்.

ஸர்கஃ—திரிவிக்கிரமனாய் உலகமெங்கும் பரவும்படியான திருவடிகளுடன் இப்படி அவர்களுக்காகத் தானே தன்னாலே ஸ்ரு,

[247] ద్రష్ట్రా౽ దృశ్యకాన్త్యా వామాని సుఖాని నయతి ॥

[248] తోయే తు పతితే హస్తే వామనో౽భూదవామనః । తస్య విక్రమతో భూమిం చన్ద్రాదిత్యౌ స్తనాన్తరే ॥ నభః ప్రక్రమమాణస్య నాభ్యాం తౌ సమవస్థితౌ ॥

[249] ఇదం విష్ణుర్విచక్రమే ॥ త్రీణి పదా విచక్రమే విష్ణుః ॥ విచక్రమే పృథివీమేష ఏతాం క్షేత్రాయ విష్ణుః ॥

[250] అనుగ్రహాత్త్వాపి బలేరనుత్తమం చకార యశ్చేన్ద్రపదోపమం తదా । సురాశ్చ యజ్ఞాంశభుజః ॥

[251] అతివాయ్విన్ద్రకర్మాణామ్ ॥

[ధృతాత్మా నియమో యమః॥ వేద్యో వైద్యస్సదా యోగీ వీరహా॥]

ధృతాత్మా-ஆத்மாக்களைத்தரிப்பவன், నియమః-அடக்குமவன், యమః-திருத்துமவன், వేద్యః-அறியக்கூடியவன், వైద్యః-வித்தைகற்றவன், సదాయోగీ - எப்பொழுதும் ஒழித்திருப்பவன், వీరహా - வீரரை ஜெயிப்பவன்,

---

(வி.)ஷ்டிக்கப்பட்டவன். இப்படியே ஸ்ரீராமாயணத்தில் [252]வசநங்காண்க.

த்ருதாத்மா—இப்படி தன்னைத்தந்து ஆத்மாக்களைத் தரிக்கிறவன்.

நியமः—அந்த ஆத்மகோடிகளுக்கு எதிரிகளான பலிசக்கிரவர்த்தி முதலானோரை அடக்கியாண்டவன்.

யமः—இப்படி ஸகலத்தையும் விரோதமின்றி அநுகூலமாயிருக்கும்படி செய்பவன்; இதற்கு வசநம [253]காண்க.

வேத்யः—(இப்படி யவதரித்து, இந்திரியத்துக்கு விஷயமாகாதவைகளையும் பிரகாசிப்பிக்கையாலே யாவராலும் எளிதில்) அறியும்படியானவன்.

வைத்யः—(இப்படியடையுமவர்களை நலிகின்ற ஸம்ஸாரத்தைப்போக்கும் மருந்தான வித்தையைக்) கற்றவன். இதில் விஷ்ணு தர்மம் [254]பிரமாணம்.

ஸதாயோகீ—இப்படி இவ்விஷயத்தில் எப்போதும் விழித்திருப்பவன். இதற்குப் பிரமாணம் [255]காண்க.

வீரஹா—(தன்னையறியப் புகுந்தபொழுது அறியவொட்டாமற் றடைசெய்யும்) வீரரைச்செகுப்பவன். இதற்குக் கீதையில் [256]வசநங்காண்க.

---

[252] నిసృష్టాత్మా సుహృత్సు చ ॥

[253] యః పృథివీమన్తరో యమయతి ॥ య ఆత్మానమన్తరో యమయతి ॥ యమో వైవస్వతో రాజా యస్తవైష హృది స్థితః । తేన వేదవివాదస్తే మా గఙ్గాం మా కురూన్ గమః ॥

[254] మేరుమన్దరమాత్రో౽పి ॥

[255] య ఏషు సుప్తేషు జాగర్తి ॥

[256] తానహం ద్విషతః క్రూరాన్ సంసారేషు నరాధమాన్ । క్షిపామ్యజస్రమశుభానాసురీష్వేవ యోనిషు ॥

[మాధవో మధుః। అతీంద్రియో మహామాయో మహోత్సాహో]

మాధవః- மா என்கிற வித்தைக்கு நாதன், మధుః-தேனைப் போன்றவன், అతీంద్రియః - இந்திரியங்களைக் கடந்தவன், మహామాయః, பெருமாயன், మహోత్సాహః- மஹத்தான உத்ஸாஹமுடையவன்,

(வி.) மாதவஃ=(அநந்தரமதன விஷயமான பரப்ரம்ம வித்தையைப் பிரவாகதிப்பிக்கிறு ஞ்கையாலே) 'மா' என்கிற வித்தைக்கு நாதன். இதற்கு [257] வசநங்காண்க.

மதுஃ=(அந்தப்ரவித்தையில் நிஷ்டையுடையோருக்குத்) தேன் போன்றவன். இதில் [258] பிரமாணங்காண்க.

(அவதாரிகை) அநந்தரம் மதுரமான தேன் கடல்போன்ற ஸ்வரூபமுள்ள இந்த குணவிசிஷ்ட பகவானிடத்தில் கீழ்ச்சொன்ன பரவியூஹவிபவங்களுக்குக் கருத்தான ஷாட்குண்யத்தைச் சொல்லக்கருதி முதலில் ஸ்வரூபத்தைச் சோதிக்கிறது.

அதீந்திரியஃ=ஞானத்துக்கு உபகரணமான இந்திரியம் முதலியவைகளெல்லாவற்றையுங் கடந்தவன்.

(அவதாரிகை) அதாவதெப்படி?

மஹாமாயஃ=பெருமாயன்.

[என்னுடைய தனதாளடைந்தோரை யொழிந்த மற்றையோரெல்லாருக்கும் திரைபோன்ற மாயையால் மூடப்படுகையாலே காணக்கூடாதவனென்றபடி; இதற்கு [259] வசநங்காணக. இங்கே மாயையென்பது பொய்யையல்ல. மற்றபடி இவ்விஷயம் மேலேசொல்லப்படுகிறது; அங்கேகாணலாம்.]

(அவதாரிகை.) ஸாங்கியர்கள் ஆத்மாவை ஞானரூபனென்று ஒப்புக்கொண்டார்களாகிலும், கர்த்தாவல்லனென்றும், தாமரையிலை நீர்போல பிரகிருதியிலொட்டாமல உதாஸீனனாய் அலஸனா யிருக்குமென்றார்கள். அப்படியில்லை யென்கிறது இதில்:—

மஹோத்ஸாஹஃ=கர்த்ருத்வமென்னும் பெரிய ஐசுவரியமுடையவன்.

[ஸ்வாதந்திரிய ரூபமான இந்த கர்த்ருத்வத்தைக்கொண்டுதான் பகவானானவர்; ஸமஸ்தகாரியங்களிலும் ஒருவருடைய ஏவுதலின்றிக்கே தடையில்லாமலிருக்கின்ற தனது ஸங்கல்ப லேசமாத்திரத்தாலே போகரா

---

[257] మావిద్యాచ హరేః ప్రోక్తా తస్యా ఈశో యతో భవాన్ । తస్మాన్మాధవనామాసి ధవస్స్వామీతి శబ్దితః ॥

[258] మధ్వ ఉత్సః ॥ ప్రియో హి జ్ఞానినోఽత్యర్థమ్ ॥

[259] గుణాను మాయాసమావృతః ॥

[మహాబలః॥మహాబుద్ధి]

మహాబలః-மஹத்தான பெலன்கொண்டவன்,

మహాబుద్ధిః-மஹாஞானவான்,

(வி.) தாக்களான ஸகலப் பிராணிகளும்; அநுபவித்ததும் அநுபவியாததுமான விசித்திர கர்மங்களினது தாரதம்மியத்துக்குத் தக்கபடி போகமாயும் அதன் ஸாதநமாயும் பரிணமிக்கின்ற நாநாவிதமான ஜகத்துக்களை அபரிமிதமாய் முன்செய்யாத மாதிரியாகச் செய்யவல்ல சக்தியுடையனுயிருக்கச்செய்தேயும், முன்போலவே ஸ்வபாவநியமத்தையே அநுஸரிக்கவேண்டுமென்பதை மேற்போட்டுக் கொள்ளுகிறான். இந்த சக்தி லேசத்தினது அணுமாத்திரமான அணிமைமுதலிய ஐசுவரியந்தான், பிரம்மாதிகளுக்கு அபரிமிதமான வைபவத்தை யுண்டுபண்ணிக்கொண்டு விளங்குகின்றது.)

மஹாபலః=ஸஹாயாபேக்ஷையில்லாத மஹத்தான பெலனுடையவன்.

[இந்த பலத்தைக்கொண்டன்றோ இவன் அபரிமிதமான செயலைச் செய்தாலும், சிரமந்தட்டாமல் தனது மஹிமையிலிருந்தபடியே மற்றோராதாரத்தை யபேக்ஷியாமல் ஒருவராலும் செய்தற்கரிய வியாபாரங்களையும் எப்போதும் செய்துகொண்டு ஸகலத்தையும் சரீரம்போல் பரிக்கின்றான்? இப்படியே மூலஸம்ஹிதையில் சொல்லுகிறது. இந்த பலத்தில் லேசமாத்திரந்தான் உலகத்தில் ஜலத்திலும் காற்றிலும் மலைகளிலும் புவியிலு மிருக்கின்றது.]

(அவதாரிகை) ஜகத்காரண வஸ்துவுக்கு ஸர்வக்ஞத்வ மில்லையென்றுசொல்லும் மதத்தைக்கண்டிக்கிறதுமேல:—

மஹாபுத்திః=மஹத்தான ஞானமுடையவன்.

(இந்த ஞானந்தான், ஸர்வதேசங்களிலும ஸர்வகாலங்களிலும் ஸர்வஸ்வபாவங்களிலும் தூரமாயும் கிட்டமாயு மிருக்கிற ஸகலத்தையும் விஷயீகரிக்கும். ஸர்வத்தையுமறியுமதாகையாலே ஸம்சயம் பிரமமுதலியவையற்று யதார்த்தமாயிருக்கும் கிலேசம் கருமவிபாகம் முதலியவைகளோடு ஸம்பந்தப்படாமையாலும் ஸ்வபாவஸித்தமா யிருக்கையாலும் நித்தியமாயிருக்கும்; கண்முதலிய கரணங்களை அபேக்ஷியாததா யிருக்கும்; சிலகாலத்தில் ஈசுவர ஸ்வாதந்திரியத்தாலே அக்கரணங்களை யபேக்ஷிக்கவுமபேக்ஷிக்கும்; புண்டரீகாக்ஷனென்றும், சுசிச்ரவஸ் என்றும் சொல்லப்பட்டதன்றோ? ரூபம் ரஸம் முதலியவைகளைக் கிரகிக்கும்பொழுது கரணங்களிருந்தே யாகவேண்டுமென்கிற நியமங்கிடையாது ஏனெனில்-ஸகலத்தாலும் ஸகலகாரியங்களுஞ் செய்யவடுக்கும. ஸாதாரணமாய் திரியக் ஜாதியான ஸர்பபங்கூட கண்ணினலேயே காணபதோடு கேட்கிறதன்றோ? அப்படியிருக்க இது ஸர்வசக்திக்குக்கூடாதா? இப்படியே 260

260 సర్వతశ్శ్రుతిమాంజ్ఞానీయశ్చాక్షుశ్శ్రోత్రవర్జితః ॥

[మహావీర్యో మహాశక్తిః]

మహావీర్యః-மஹத்தானவீரியங்கொண்டவன,

మహాశక్తిః-மஹாசக்தியுடையவன்,

(வி.) ஜய ஸம்ஹிதையில் சொல்லுகிறது. இன்னும் இந்த ஞானம் விசதமாயிருக்கையாலே ஸகலத்தையும் கையிலகு நெல்லிக்கனிபோல பிரத்யக்ஷமாய்க்காணும். ஸமஸ்தத்தையும் நிர்வஹிக்கையாலே அமோகமாயிருக்கும். இப்படி [261]சுருதிமுதலியன. ஸ்ரீமந்நாதமுனிகளு மிப்படியே [262]அருளிச்செய்தார்.

சிலர் கண்ணாலேயே ஸகலத்தையுங் காண்கிறனென்று ஸர்வக்ஞனை பகவானை அவமதித்தார்கள். அது பவுத்தமததைச் சேரக்கடவது. ஏனெனில்- அப்படி ஒப்புக்கொண்டால் ஸகல சாஸ்திரமும் விரோதிக்குமன்றோ? கட்செவியான ஸர்ப்பந்தொடங்கிய காக்கை கோட்டான் முதலியவைகளிடத்திலும், மந்திரம், ஸித்தஔஷதி தபோமஹிமை முதலியவைஸித்திக்கப் பெற்றவாளிடங்களிலும் அந்தந்த கரணங்களைக்கொண்டு அவ்வவற்றின் வியாபாரமேசெய்கிற தென்கிற நியமமின்றி தாரதம்மியமுண்டாயிருக்கக் காண்கையாலே சாஸ்திர ஸித்தமான பகவத் ஸர்வகஞதைக்கு ஒருகுறைவு சொல்வது ரொம்பவும பரிஹாஸாஸ்பதமாம். பகவானுடைய மற்ற குணங்களும் இப்படியே விசித்திரமாயிருக்குமென்பதில் சிறிதும் ஸந்தேகமில்லையென்று கண்டுகொள்வது. இந்த ஞானத்தினது அற்பாம்சந்தான் பத்தர் முக்தர், நித்தியர் என்கிற பிராணிகளிடத்தில் விளங்கிவருகிறது.

மஹாவீர்யः=மஹத்தான வீரியமுற்றவன்.

[தயிர்முதலியவைகளுக்குக் காரணமான பால்முதலியவை, தயிர்முதலியவைகளாக உருப்படும்பொழுது விகாரமடைவதுபோலன்றிக்கே ஜகத்காரணனு யிருக்கச்செய்தேயும் சிறிதும் விகாரமடையானென்றபடி. அகிற்கட்டை, கஸ்தூரி, புஷ்பம் முதலியவைகளின் பரிமளம்போல் பகவான் ஸன்னிதிமாத்திரத்தால் அபரிமித காரியங்களையுஞ் செய்யுமவனன்றோ? இதற்கு வசநம் [263]காண்க. இதில் அணுமாத்திரந்தான் யோகீசுவரர்கள் முதலானவாளிடத்தில் எதிரில்லாமல் விளங்குகிறது.]

மஹாசக்திः=மஹத்தான சக்தியுற்றவன்.

---

[261]విశ్వతశ్చక్షురుత విశ్వతోముఖః ॥ పశ్యత్యచక్షుస్స శృణోత్యకర్ణః॥ సర్వతోఽక్షిశిరోముఖమ్ ॥

[262]యో వేత్తి యుగపత్సర్వం ప్రత్యక్షేణ సదా స్వతః ॥

[263]తస్య సన్నిధిమాత్రేణ గన్ధః క్షోభాయ జాయతే । మనసో నోపకర్తృత్వాత్ తథా సౌ పరమేశ్వరః ॥

[మహాద్యుతిః।అనిర్దేశ్యవపుః]

మహాద్యుతిః - மஹத்தானகாந்தியுடையவன்,

అనిర్దేశ్యవపుః - குறிக்கமுடியாதசரீரமுடையவன்,

(வி.)[என்றால்-பசுபதி மதத்தில் பரப்பிரம்மத்தை நிமித்தகாரணமாக மாத்திரஞ் சொல்லுகிறார்கள்; அப்படியின்றிக்கே உபாதாந காரணமு மாகும்படி மஹத்தான சக்தியுடையவனென்றபடி. இந்த சக்திதான் எப்படிப் பட்டதெனில்-ஸாதனஸமூஹங்களை விநியோகப் படுத்துவதாய் எம்பெருமானுடைய சரீரத்தில் ஏகதேசமான ப்ரக்ருதியைப் பரிணமிப்பித்துக் கொண்டு, ஸாமக்கிரி இருந்தாலும் இல்லாவிட்டாலும் எப்போதும் எல்லாவற்றையும் ஸம்பாதிக்கும்படியா யிருக்கும்;

ஆனால் பிரம்மமொன்றே உபாதாந காரணமும் நிமித்தகாரணமு மென்றால்-ஒன்றுக்கே இரண்டுவித மெப்படியமையுமெனில:—நூற்பூச்சிமுதலியவைகள் ஒன்றே இரண்டுவிதமாகவு மிருக்கப் பிரத்தியக்ஷமாய்க்காணுகிறோமே; ஸர்வக்ஞமான வஸ்துவுக்கு இங்ஙனொருசக்தி யிருப்பதுகூடாததா?

இந்த சக்தியில் துளிதான், பிரதாநமென்கிற பிரக்ருதியிலும், தயிரிலும் பாலிலும் மற்றும் விகாரமடையும் வஸ்துக்களிலும காண்கிறது.

மஹாத்யுதிঃ=மஹத்தான காந்தியுடையவன்.

[என்றால்:—ஸஹாயாந்தரத்தை அபேக்ஷிக்கின்ற இதரகாரணங்களைப்போலன்றிக்கே, இதராபேக்ஷையிலலாத மஹத்தான தேஜஸ்ஸோடுகூடிவிளங்கு மவனென்றபடி.]

இதுதான் உள்ளும் புறம்புமுண்டான இருளை விரோதிக்கின்ற சூரியாதிகளுக்கு அநுகூலமாய், அதற்கெதிராமவைகட்கு பயங்கரமாயிருக்கும. இதினுடைய பிந்துமாத்திரந்தான், சூரியசந்திர மாணிக்காதிகளில பிரகாசித்து வருகிறது. இதுவரையிற்சொன்ன திருநாமங்கள ஆறிலும் சொல்லப்படுகிற 'மஹத்' என்கிற விசேஷணத்தால் இந்த குணங்கள் ஒருகலைமாத்திரத்தால் உச்சநீசங்களான ஸகலகாரியங்களையும் பிரவர்த்திப்பித்து, முழுமைக்கும் விஷயமகப்படாமல் ஸமுத்திரத்திலுண்டான பெருவெள்ளங்கள்போல் அநந்தரூபனான பகவானிடத்தில் நிறைந்துகிடைப்பதாகத் தெரியவருகிறது. இவ்விஷயம் ஸ்ரீராமபக்ஷம் [264]பிரஸித்தம. பகவத்சாஸ்திரங்கள் முழுமைக்கும் இதுதான் விஷயம். ஸௌசீல்யம் வாத்ஸல்யம் என்கிற விரண்டுகுணங்களும் சில பிரயோஜநத்துக்காக இதற்குள்தானே அந்தர்ப்பவிக்கின்றன.

அநிர்தேச்யவபுঃ=இப்படி ஷாட்குண்ய பூர்ணமாயிருக்கை

(அ.) அநிர்த்தேச்யவபுঃ—இது அது என்று குறிக்கக்கூடாமல தனக்குத்தானே விளங்கும்படியான சரீரமுடையவன்,

[264] పరాస్యశక్తిర్వివిధైవశ్రూయతే స్వాభావికీజ్ఞానబలక్రియాచ ॥ తేజోబలై

[శ్రీమానమేయాత్మా]

శ్రీమాన్ - ஆபரணஶ்ரீயுடையவன்,

అమేయాత్మా - அளவிடப்போகாதஸ்வரூபன்,

(வி.)யாலே, 'இவனது திருமேனி இதற்கொத்தது' என்று சொல்லத்தரமல்லாத திருமேனியன். இதற்கு வசனம் [265]காண்க. மூலஸம்ஹிதையிலும் [266] சொல்லப்படுகிறது.

[இவ்விஷயத்தில் நிருக்தியுஞ் செய்யப்பட்டது. எங்ஙனேயென்னில்:—"எவர்கள் புத்தி, மனம், அவயவம் இவைகளுடையவர்களோ அவர்களுடைய விபவம் அசாசுவதமாக விருக்கும்; ஆகையால் பகவானுக்குச் சரீரமிருக்கிறதாகச் சொன்னால் அதென்ன ரூபமாயிருக்கலாம்" என்று பகவானுடைய சரீரம், பஞ்சபூதஸம்பந்தமாயிருக்கலாமாவென்பதாகச் சங்கித்து, அதற்கு உத்தரம் "இந்தசரீரம் பகவத்ரூபமாகவே இருக்கக்கடவது, பகவான் எந்தரூபமோ அதேரூபந்தான் இதுவும்; பகவான் எந்தரூபமென்னில்-ஞானஸ்வரூபம், சக்திஸ்வரூபம், ஐசுவரியஸ்வரூபம். எப்படிபோலென்னில்:—சந்தனக்கட்டை அகில்கட்டைமுதலிய காஷ்டங்கள் ஜ்வலிக்குமாகில் அவையெப்படி முழுதும் அக்கினிமயமாயிருக்குமோ, மதுமயமான பாத்திரத்தைப் பானஞ்செய்தால் அதெப்படி முழுதும் மதுரமாகவே யிருக்குமோ, ஸுவர்ணகட்டியை—உரைக்க உரைக்க எப்படி முழுதும் சுவர்ணமாகவே யிருக்குமோ, ஒரு உப்பரிகையைக்கண்டால் எப்படி பார்க்கப்பார்க்க அழகாகவேயிருக்குமோ இப்படி பகவான் முழுதும ஞானமேயாயும், முழுதும் ஐசுவரியமேயாயும், முழுதும் சக்தியேயாயும், எதைநினைத்தால அதுவுண்டாகும்படியிருக்கும்" என்று இந்தவிதஞ்சொல்லப்பட்டது. இதைத்தான் மேலேபஞ்சோபநிஷத்து மயமான சரீரமென்று சொல்லப்போகிறது இந்தசரீரம் சுத்த ஸத்வமயமாயிருக்கையாலேஸுவர்ணத்திலிருக்குமிரத்னம்போல், பகவானுடைய ஷட்குணங்களையும் பிரகாசிப்பித்துக் கொண்டிருக்கும்; த்ரிகுணமயமான நமது சரீரம்போல் குணங்களை மறைக்கமாட்டாதென்பதுதத்வம். இப்படி உபமான மிட்டுச்சொல்லப் போகாத சரீரமுடையனென்கிற இவ்வர்த்தத்துக்கு ஸ்ரீவிஷ்ணுபுராணம் [267]பிரமாணம்.]

ஸ்ரீமாந்=அப்படிப்பட்ட திருமேனிக்குத் தகுந்த திருவாபரணங்களுடையவன.

அமேயாத்மா=இந்த குணங்களுக்கும் திருமேனிக்குந் தக்க

శ్వర్యమహావబోధ సువీర్యశక్త్యాదిగుణైకరాశిః ॥ జ్ఞానశక్తిబలైశ్వర్యవీర్యతేజాంస్యశేషతః । భగవచ్ఛబ్దవాచ్యాని వినా హేయైర్గుణాదిభిః ॥

265 షాడ్గుణ్యవిగ్రహం దేవం భాస్వజ్జ్వలనతేజసమ్ ॥

266 బుద్ధిమనోఽఙ్గప్రత్యఙ్గవత్తాం భగవతి లక్షయామహే శాస్త్రనిర్దేశ్యాః

267 రూపవర్ణాదినిర్దేశవిశేషణవివర్జితః ॥

మహాద్రిధృత్ ॥మహేష్వాసోమహీభర్తాశ్రీనివాసస్సతాంగతిః॥అని
[రుద్ధస్సురానందోగోవిందోగోవిదాంపతిః॥]

మహాద్రిధృత్ - பெருமலையெடுத்தவன், మహేష్వాసః - மஹத்தான சரங்களைவிடுமவன், మహీభర్తా - பூமியைக்காப்பவன், శ్రీనివాసః - லக்ஷ்மீகரம்பொருந்தியவன், సతాంగతిః - சாதுக்களுக்குக் கதியானவன், అనిరుద్ధః - ஒருவரால்தகையமுடியாதவன், సురానందః - தேவர்களுக்கு ஆனந்தமுண்டுபண்ணுமவன், గోవిందః - துதிக்கலானவன், గోవిదాంపతిః - வேதவாக்கறிந்தவரைக் காப்பவன்,

(வி.) படி அதிகமபிரமான ஸ்வபாவத்துடன் கூடியவன்.

மஹாத்ரித்ருத்—மந்தரமென்னும் பெருமலையைத் தரித்தவன். என்றால் கீழ்ச்சொன்னவைகளுக்குத்தக்க சேஷ்டிததையுடையவனென்றபடி.

மஹேஷ்வாஸ:—ஸேதுபந்தநாராவணவதாதிகளில் அதிமஹாமாய் பாணங்களைப் பிரயோகிப்பவன். மஹீபர்த்தா—லீலையாகவே பூமியைத் தரிக்கும் சீலன்.

ஶ்ரீநிவாஸ:—லக்ஷ்மிக்கு உறைவிடமானவன்.

[என்றால் க்ஷீரஸாகரத்தைக் கடைந்துபெற்ற பெரியபிராட்டியார் உல்லாஸமாய்த்திருமார்பிலேறும்படி செய்துகொண்டவனென்றபடி.]

ஸதாம்கதி:—இப்படி யதேச்சமாய் விஹரிக்கும் பொழுதும் ஆஶ்ரிதாளுக்கு ஹிதஞ்செய்பவன்.

அநிருத்த:—இப்படி ஸகலவிரோதிகளையும் போக்கடித்து ஸகல ஜீவலோகத்துக்கும் ரக்ஷணமாம்படியான திவ்யசேஷ்டிதத்தையுடையவன்.

(அவதாரிகை.) அநந்தரம் அவதாரத்துக்கெல்லாம் கிழங்கான இவ்வநிருத்தாழ்வான் செய்தருளிய ஹம்ஸாவதாரஞ் சொல்லப்படுகிறது.

ஸுராநந்த:—ஆபத்பந்துவா யிருக்கையாலே தேவர்களை யானந்தமுறச் செய்பவன்.

கோவிந்த:—அவர்களுடைய ஸ்துதிரூபமான வாக்குக்கு விஷயமாமவன்.

கோவிதாம்பதி:—வேதம் வல்லவரான ஞானிகளால் ஞாநயக்

(அ) கோவிந்த:—மோக்ஷதர்மத்திற் சொல்லியபடி நஷ்டமான பூமியைப் பெற்றவன்.

[మరీచిర్దమనో హంసస్సుపర్ణో భుజగోత్తమః।]

మరీచిః-கிரணமானவன், దమనః-அடக்குமவன்,

హంసః-ஹம்ஸமானவன், సుపర్ణః-நல்லசிறகுடையவன்,

భుజగోత్తమః- ஸர்பத்துக்குமேலானவன்,

(வி.) ருத்தா லாராதிக்கப்பட்டு அவர்களை ரக்ஷிக்குமவன்; இதற்கு 268வசநங்காண்க.

மரீசி:—கிரணம் போன்றவன்.

[என்றால் —பிறவிக்குருடான ஜந்துக்களுக்கும் நிர்மலமான தனது ரூபத்துடன் பிரகாசிக்குமவனென்றபடி. இப்படியே அவர்தியாநத்தில 269சொல்லுகிறது.)

தமந:—சமிக்கச்செய்பவன்.

[என்றால்—காந்தியென்னும் கங்கைவெள்ளத்தால் ஸம்ஸாரதாபத்தை யணைக்குமவனென்றபடி.]

(அவதாரிகை) இப்படிப்பட்டவன் ஆரென்றால்:—

ஹம்ஸ:—அன்னமானவன்.

[என்றால் "ஹந்தாஸங்காநாம்" என்றுமௌஸலஸம்ஹிதையிற் சொல்லியபடி ஆஸ்ரிதாளுடையஸங்கத்தை நிரஸிப்பவனென்றபடி. இதற்கு 270 வசநம் அவர் தியாநத்தில் காண்க.]

ஸுபர்ண:—நல்ல சிறகுடையவன். ஸம்ஸாரத்தினின்றுங் கரையேற்றுமவனென்றுமாம்.

(அவதாரிகை.) "பத்மநாபோமரப்ரபு:" என்கிறவிடத்தில் வியூஹத்தில் கடைசியான அநிருத்தாழ்வாரை பத்மநாபனென்றதாகச் சொல்லிற்று, இனி இங்கே அவதாரத்தில் முதன்மையான பத்மநாபனைச் சொல்லுகிறது.

புஜகோத்தம:—சேஷனுக்கு நாதன்.

[என்றால் திருவநந்தாழ்வானாகிற படுக்கையில் துயில்பவன். இவ்வர்த்தம் ஆரணியபருவத்திலும் விஷ்ணுபுராணத்திலும் 271காணலாம்.]

(அ.) தமந:—பிராணிகள் தத்தம் மதிகாரத்தைக்கடந்தபொழுது அவைகளைக்கணடிக்குமவன்.

ஸுபர்ண:—"த்வாஸுபர்ணா" என்கிறபடியே அழகிய சிறகுடையவன். அதவா—'ஸுபர்ண: பததாமஸ்மி' என்கிறபடியே கருடனானவன்.

268 హంసమూర్తిమథాత్మానం జ్ఞానయజ్ఞభుజం స్మరేత్ ॥

269 శుద్ధేన్దుస్నిగ్ధకాన్తిశ్చ ॥

270 సత్సత్త్వశుభాశ్రయపరమహంసాయ ॥

271 సుష్వాపభగవాన్విష్ణురప్సుయ్యామేకఏవహి । నాగస్యభోగేమహతి ॥ భోగియ్యాగతశ్చైతే త్రైలోక్యగ్రాసబృంహితః ॥

[హిరణ్యనాభస్సుతపాః పద్మనాభః ప్రజాపతిః॥ అమృత్యు]

హిరణ్యనాభః-ஸுவர்ணத்தையுந்தியிற்கொண்டவன், సుతపాః-நலஞானமுடையவன், పద్మనాభః - கமலத்தை உந்தியிற்கொண்டவன், ప్రజాపతిః-பிரஜைகளுக்கரசன், అమృత్యుః-மிருத்தியுவுக்கெதிரி,

(வி.) ஹிரண்யநாப:=அவனே அழகியநாபியை யுடையவன்.

ஸுதபா:=ஸமீசீந ஞாநாகாரன்.

பத்மநாப:=பத்மத்தை நாபியில்கொண்டவன்.

[பத்மநாபன் ஹிரண்யநாபன் என்கிற இவ்விரண்டு அர்த்தங்களுக்கும் பிராம்ம புராணத்தில் 272வசநங்காண்க.]

ப்ரஜாபதி:=ஆனதினாலே பதமாஸநன் தொடங்கிய ஸகலப் பிரஜைகளுக்கும் பதியானவன்.

(இது நைமித்திக ஸ்ருஷ்டி ப்ரளய விஷயமென்றுகண்டுகொள்வது)

(அவதாரிகை) அநந்தரம் ந்ருஸிம்மாவதாரம் சொல்லப்படும்.

அம்ருத்யு:=மிருத்யுவுக்கு விரோதியானவன்

த்விதீயசதகம்—ஸம்பூர்ணம்.

(அ.) ஸுதபா:=பதரிகாச்ரமத்தில் நரநாராயண ரூபனாய்க்கொண்டு நற்றவமியற்றுமவன்.

அம்ருத்யு:—நாசமற்றவன்.

272కదాచిత్తస్యసుప్తస్యనాభ్యాం కామదజాయత। దివ్యమష్టదళం భూరిపఙ్కజం పార్థివమ్మహత్ ॥ యస్యహేమమయీదివ్యాకర్ణికా మేరురుచ్యతే ॥

ஶ்ரீ:

த்ருதீயசதகம்.

సర్వదృక్సింహస్సంధాతా సంధిమాన్ స్థిరః అజో దుర్మర్షణశ్శాస్తా
[విశ్రుతాత్మా]

సర్వదృక్ - யாவரையுங்காண்பவன், సింహః - ஸிம்மரூபன், సంధాతా - சேரவிட்டுக்கொள்பவன், సంధిమాన్ - ஸந்தியுடையவன், స్థిరః சலியாதவன், అజః - பிறவியற்றவன் దుర్మర్షణః - ஸஹிக்கப்போகாதவன், శాస్తా - ஆள்பவன், విశ్రుతాత్మా - பிரஸித்தவிருத்தாந்தன்,

(வி.) ஸர்வத்ருக் = ஸகலரையுங் காண்பவன்

(என்றால் அந்த நிருஸிம்மன், அநுகூலர், பிரதிகூலர், தடஸ்த்தர் என்கிற யாவரையும் அவரவருக்குத் தக்கபடி பார்க்கிறாரென்றபடி. அவர் ஸர்வதோமுகனன்றோ?)

(அவதாரிகை.) அவன்தானாரென்றால்:—

ஸிம்ஹ: = ஸிம்ஹவரவரூபி.

ஸந்தாதா = (சத்துருவென்கிற மதயானையைப் பிளந்தானாகிலும் தன்னை உகந்தோரான பிரஹ்லாதன் முதலானோர்) தழுவும்படியானவன்.

ஸந்திமாந் = அவர்களோடு நித்தியமாய் ஸந்தித்திருப்பவன்.

ஸ்திர: = அப்படியிருப்பதில அவர்களுடைய அபசாரத்தைக்கண்டகலாமல் ஸ்திரமாய் நின்றவன்.

அஜ: = ஸ்தம்பத்தில் ஸம்பவித்தானாகையாலே இதரரைப்போல் பிறவியில்லாதவன். இதற்கு [273]வசநங்காண்க.

துர்மர்ஷண: = எதிரிகள்கண்டு ஸஹிக்கமுடியாதவன். இப்படியே [274]அவர் தியாகத்தில் சொல்லுகிறது.

சாஸ்தா — இந்த கோலத்தோடு ஸகல துர்ஜநரையும் நன்றாகச் செருத்தவன். இப்படியே ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் [275]காண்க.

விச்ருதாத்மா = பிரஸித்தஸ்வபாவன.

(அ.) ஸர்வத்ருக் — பிராணிகளினது புண்யபாபங்களைக் கணிசிப்பவன்.

ஸிம்ஹ: — ஸ்மரணமாத்திரத்தில் ஸகல பாபங்களையும் போக்குமவன்.

[273]న జాయతే జనిత్రాయం యదజ స్తస్మాద నేకజిత్ ॥

[274]రథాఙ్గశఙ్ఖధారం బహుమూర్తిం సుభీషణమ్ ॥

[275]ఏనా దవిత్రాసితదానవాః ॥ ద్రవన్తి దైత్యాః ॥

సురారిహా ॥ గురుర్గురుతమోధామసత్యస్సత్యపరాక్రమః నిమిషో
[నిమిషస్స్రగ్వీ వాచస్పతి]

సురారిహా- ஸுரசத்ருவைக்கொன்றவன், గురుతమః గురుః- குருக்களுக்கும் குரு, ధామ-இடமானவன், సత్యః- ஸாதுக்களுக்கேற்றவன், సత్యపరాక్రమః-ஸத்தியமானநடவடிக்கைகொண்டவன், నిమిషః-கண்திறவாதவன், అనిమిషః-கண்திறந்தவன், స్రగ్వీ-மாலையுற்றவன், వాచస్పతిః-வாகீசன்.

(வி.) [என்றால்—அவனே எப்போதும் எங்கும் எல்லாராலும் ஆச்சரியப்படும்படி பிரஸித்தமான ஸிம்மாவதார விருத்தாந்தத்தை யுடையவன். இதற்கு வசநம் 276காண்க.

ஸுராரிஹா=ஸுரருக்குப்பகையான ஹிரண்யகசிபுவை மார்பிளவாய்ப் பிளந்தவன். இப்படியே277அவர்தியானம்.

(அவதாரிகை.) அநந்தரம் மத்ஸ்யாவதாரம்.

குருதம: குரு:=ஸகலவித்தைக்கும் பரமாசாரியன். ஹைரண்யகர்ப்ப சாகைகளில இவ்வர்த்தம் 278பிரஸித்தம்279கீதையிலும் அருளிச்செய்தான்.

தாம—இடமனவன்.

[என்றால்-ஸம்ஹாரதசையில் அழிவுறுகின்ற சராசரங்களுக்கு ஆதாரமானவனென்றபடி.]

ஸத்ய:—அக்காலத்தில் ஆச்சிரயித்தமநவாதிஸத்துக்களுக் கெல்லாம் ஸாதுவாய் விளங்கியவன். ஸத்யபராகரம:=அவாளிடத்தில் கபடமில்லாமல் ஸத்தியமான செயல்செய்பவன். நிமிஷ:—அவர் விரோதிகளைக் கண்திறந்து பாராதவன். அநிமிஷ:-ஸத்துககள்விஷயத்தில்கண்மூடாமல் விழித்திருக்கின்ற திவ்யமான மத்ஸ்யசரீரங்கொண்டவன். ஸ்ரக்வீ—இப்படி திர்யக்காய்ப்பிறந்திருக்கச்செய்தேயும் பரத்வத்துக்கு அடையாள

(அ.) ஸத்ய:—ஸத்தியமுரைக்கின்ற தென்கிற தர்மரூபமாயிருக்குமவன். அநிமிஷ:=நித்தியமும் விழித்திருப்பவன், அல்லது மத்ஸ்யரூபன். ஸ்ரக்வீ—பூதக் மாத்திரையின் வடிவமான வைஜயந்தி மாலையையணிந்தவன்.

276 అశేషదేవేశనరేశ్వరేశ్వరైః ॥

277 సత్వత్వకరజశ్రేణీదీప్తేనోభయపాణినా । సంయచ్ఛతే యథా సమ్యక్ఛయా నాంసో౽భయంపరమ్ ॥

278 సపూర్వేషామపిగురుః ॥

279 పూజ్యశ్చగురుర్గరీయాన్ ॥

రుదారధీః ॥ అగ్రణీః గ్రామణీశ్శ్రీమాన్న్యాయోనేతాసమీరణః ।
[సహస్రమూర్ధా]

ఉదారధీః - கெம்பீரஹிருதயன், అగ్రణీః - மேலேகொண்டுசெல்பவன், గ్రామణీః - கிராமத்தையடைவிப்பவன், శ్రీమాన్ - அழகுடையவன், న్యాయః - நியாயமானசெயலுற்றவன், నేతా - நடத்துமவன், సమీరణః - சலிப்பவன், సహస్రమూర్ధా - ஆயிரமுடியன்,

---

(வி.) மான வைஜயந்தியென்னும் மாலையை யணிந்தவன். வாசஸ்பதி:— அவனே ஸ்ரீமாத்ஸ்ய புராணமென்கிற வேத உபப்ரம்மணத்தைச் செய்கையாலே வாக்குக்குப் பதியானவன். உதாரதீ:—இப்படி ஸர்வரும் உஜ்ஜீவிக்கும்படி ஸங்கல்பிக்கையாலே கம்பீரமான திருவுள்ளமுடையவன். அக்ரணீ:—அதேப்பிரகாரமாய் மேல்பதவிக்குக்கொண்டு செல்லுமவன், க்ராமணீ:—நித்திய ஸூரிகளினது கிராமத்தில் கொண்டுபோமவன்.

ஸ்ரீமாந்—"மத்ஸ்ய: கமலலோசந:" என்கிறபடியே பரத்வலக்ஷணமான ஐசுவரியங்களெல்லாம் பிரகாசிக்கப் பெற்றவன். ந்யாய:—பக்தாள் விஷயத்தில நியாயமானவைகளைச செய்பவன். நேதா—அந்தப்பக்தர்கள் நியமித்ததைச் செய்கையாலே நிர்வஹிக்குந் தன்மையன். ஸம்ஸாரத்தில் தான்முழுகி மஹாத்மாக்களைககரையேத்து மவனை இப்படிசொல்வது யுக்தமேயன்றோ? ஸமீரண:—பக்தாளுடைய இஷ்டத்தைச்செய்யுந் தன்மையன். இவ்வர்த்தங்களுக்கு அவர் தியாநத்தில் [280]வசநங்காண்க.

(அவதாரிகை.) அநந்தரம் வித்தையை வெளியிடவென் றவதரித்த இவ்வவதாரத்தைச் சொல்லுகிற புருஷஸூக்தம் முதலிய பரவித்தைகளில் சொல்லுகிற 'ஸஹஸ்ரசீர்ஷா புருஷ:" இத்யாதிப் பிரகாரங்கள் சொல்லப்படுகின்றன.—

ஸஹஸ்ரமூர்த்தா—ஆயிரம் சிரஸ்ஸுக்களுடையவன்.

(அ) க்ராமணீ:—பூதக்கிராமத்தை நடத்துமவன்.
ந்யாய:—பிரமாணத்துக்கு அநுகூலமாய் அபேதத்தை ஸ்தாபிக்கின்ற தர்க்கரூபமானவன்.

---

[280]కృత్వామీనమయీంసద్యః ప్రవివేశరసాతలమ్ । వేదమూర్తిస్తతోవేదానానిన్యేబ్రహ్మణోఽన్తికమ్ ॥ జ్ఞానాదిగుణబృన్దేనపక్షభూతేనభూషితమ్ । స్వోత్థబ్రహ్మమదంశృఙ్గనిస్సృతేనవిరాజితమ్ ॥ కల్పావసానసమయేవహన్త్రైలోక్యవచిన్తయేత్ । నారూపాంవితతాంక్షోణీం ప్రజాపతిగుణాన్వితామ్ ॥ ముక్తాఫలనిభేనైవ వపుషానిర్మ్మితేనచ । అనిమీలితనేత్రశ్చమీనాత్మాయోఽతవాన్కథా ॥

విశ్వాత్మా సహస్రాక్షస్సహస్రపాత్ ॥ ఆవర్తనో నివృత్తాత్మా సంవృత
[స్సంప్రమర్దనః]

విశ్వాత్మా - விசுவாகாரன், సహస్రాక్షః ஆயிரந்திருக்கண்களுடையவன், సహస్రపాత్ - ஆயிரந்தாளுடையவன், ఆవర్తనః - சுழற்றுமவன், నివృత్తాత్మా - உயர்ந்தஸ்வரூபமுடையவன், సంవృతః - மூடப்பட்டவன், సంప్రమర్దనః-பீடிப்பவன்,

(வி.) ஸஹஸ்ராக்ஷ: - ஆயிரந்திருக்கண்களுடையவன், ஸஹஸ்ரபாத்-ஆயிரந்திருவடிகளுடையவன்.

[இங்கே ஆயிரமென்கிறது ஸங்கியையைக்கடந்த தென்கைக்காக; [281]இப்படியே வசநங்கள் சொல்லுகின்றன. மேலும் சிரஸ்ஸு முதலியவைகளைச் சொன்னது மற்றுங் கரணங்களுக்கு லக்ஷணமாய் அந்தந்த கரணங்கள் செய்யும் செயலைச் சொன்னபடி என்று நம்பூர்வர்கள். இதுதான் உசிதமும் அநேகசாஸ்திர ஸங்கதமும்]

விச்வாத்மா—இந்த ஞாநசக்திகளைக்கொண்டு ஜகத்தை வியாபிக்கையாலே விசுவரூபன். இதற்கு வசநம் [282]காண்க.

ஆவர்த்தந:—ஸம்ஸாரமென்னும யந்திரத்தைத் திருப்புமவன். இதற்கு வசநம் [283]காண்க.

நிவ்ருத்தாத்மா —(நிவ்ருத்தம் உத்கதம் ஆத்மாயஸ்யஸ:) என்றால் ஸம்ஸாரவிபூதியைக் காட்டிலும் உயர்ந்த நித்தியவிபூதியென்னும் ஸ்வரூபத்தை யுடையவன்.

ஸம்வ்ருத:—தமோகுணத்தால் மூடமானவர்களுக்கு மறைந்திருப்பவன்.

ஸம்ப்ரமர்த்தந:—ஸம்வரணமான தமஸ்ஸைத் தன்னையறிவ

(அ) நிவ்ருத்தாத்மா—ஸம்ஸாரபந்தத்தினின்றும் நிவ்ருத்தமான ஸ்வரூபத்தை யுடையவன்.
ஸம்வ்ருத:—ஆச்சாதிகை யென்னும் அவித்தையால்மூடப்படுமவன்.
ஸம்ப்ரமர்த்தந:—உருத்திரன் இயமன் முதலிய தன்விபூதிகளைக் கொண்டு நன்றாய்ப் பீடிக்குமவன்.

281 విశ్వతశ్చక్షురుతవిశ్వతోముఖః ॥

282 సభూమిం విశ్వతో వృత్వా ॥

283 తేనేదం భ్రామ్యతే బ్రహ్మచక్రమ్ ॥ భ్రామయన్ సర్వభూతాని ॥ కాలచక్రం జగచ్చక్రం యుగచక్రఞ్చ కేశవః । ఆత్మయోగేన భగవాన్ పరివర్తయతేఽనిశమ్ ॥

[అహస్సంవర్తకో వహ్నిరనిలో ధరణీధరః ।]

అహస్సంవర్తకః நாளைச்சுழற்றுமவன், వహ్నిః-வஹிப்பவன், అనిలః-ஜீவனஹேது வானவன், ధరణీధరః - பூமியைத்தாங்குமவன்,

(வி.) திறல் நாசஞ்செய்யுமவன. இதில் [284] பிரமாணங்காண்க.

அஹஸ்ஸம்வர்த்தகஃ—பகல்முதலிய காலத்தைத் திருப்புமவன்.

[இதற்கு வசநம் [285] காண்க. காலமாவது பூதபவிஷ்யத் வர்த்தமான ரூபமாய்க்கொண்டு பெரியது சின்னதென்கிற ஞாநத்தைப் பிறப்பிப்பதாய், எம்பெருமானுக்கு நித்தியமும் கிரீடாபரிகரமா யிருக்குமதொன்று. அதைப் பரமபுருஷன் ஆறுவித விகாரங்களுண்டாக்குமதாயும், பிரகிருதியையும் புருஷனையும் சேர்க்கவும் பிரிக்கவும் ஹேதுவாயிருக்கும்படியாயும் நியமிக்கிறான். அதைச்சிலர் கீழ்சொன்ன காரியங்களுககென் றேற்பட்டப் பிரகிருதியினது பரிணம பரம்பரையென்பார்கள். மற்றும் சிலர் அதைச்சுதந்திரமென்பார்கள்; எந்தவிதமாகிலும், இதைப்பற்றி ஸ்ரீபவுஷ்கர ஸம்ஹிதையில் விசேஷமாய்ச் சொல்லியிருக்கிறது.]

வஹ்நிஃ=தேசரூபத்தாலே விசுவத்தை வஹிக்குமவன்

[அதில் முதல்தேசம் பரமபதம்; மற்றது அபேக்ஷை யுண்டானபோது அங்கீகரிக்கின்றவைகளான ஆகாசம், திக்கு, அவற்றின்கோணங்கள் முதலியன. இதற்கு வசநம் [286] காண்க. தேசமாவது 'இங்கே இது' என்கிற ஞாநத்துக்குக் காரணமாவது; அதுதான், பத்தர் முக்தர் நித்தியர் என்கிற மூன்றுவகைச் சேதநர்க்கும், அவன் தந்ததேயன்றோ?]

அநிலஃ=இப்படி யாவரையும் உஜ்ஜீவிப்பிக்குமவன்.

[இதினுடைய கலாமாத்திரந்தான் காற்றுவது. இதற்கு வசநம் [287] காண்க.

தரணீதரஃ=பூமியைத்தரிப்பவன்.

(அ) *அஹஸ்ஸம்வர்த்தக:—நன்றாக நாட்களை யெல்லாம் நடத்திப்போருமவன்.*

அநில:—அநாதியானவன்.

தரணீதர:—சேஷனையும் திக்கஜங்களாயும் அல்லது வராஹரூபியாயிருந்து பூமியைத்தாங்குமவன்.

---

[284] తమేవం విద్వానమృత ఇహ భవతి ॥ య ఏతద్విదురమృతాస్తే భవన్తి అథేతరే దుఃఖమేవాపియన్తి ॥

[285] సర్వే నిమేషా జజ్ఞిరే విద్యుతః పురుషాదధి ॥

[286] అస్యామృతన్దివి ॥ స్వే మహిమ్ని స్థితమ్ ॥

[287] ప్రాణాద్వాయురజాయత ॥

[సుప్రసాదః ప్రసన్నాత్మా విశ్వసృగ్విశ్వభుగ్విభుః । సత్కర్తా]

సుప్రసాదః - நலலருளுடையவன, ప్రసన్నాత్మా - தெளிவுறறகிந்தையன், విశ్వసృక్ - உலகத்தைப்படைத்தவன், విశ్వభుగ్విభుః உலகத்தையாளுமபிரபு, సత్కర్తా - ஸத்கரிப்பவன்,

(வி.) [எனைருல-மற்றும் ஆதாரமாய் நிற்பவைகளை யெல்லாம் தரிப்பவன். இதற்கு வசநம 288காணக.]

ஸுப்ரஸாதః=இப்படிக்கெல்லாம் செய்து அதற்குமேல் தன்னிடத்தில் அபிமுகமானவாகளைக் குளிரநோக்குமவன். இதில் பிரமாணம 289காண்க.

(அவதாரிகை.) அதற்கென்ன காரணமெனில்:—

ப்ரஸந்நாத்மா=தனக்குத்தானே ஸகல அபேக்ஷிதங்களு முண்டாகப் பெற்றமையாலே ராகாதிகளாலே கலக்கப்படாத மனமுடையன்.

[இதற்கு வசநம் 290காண்க, பூர்த்தியின்றி இருப்பனாயிருந்தாலன்றோ கிட்டக்கூடாதபடியாயிருக்கும்? அதில்லாமையாலே சுகமேயாராதிக்கும்படி பிரஸந்நனாயிருக்குமென்றபடி.]

விச்வத்ருக்=குணதோஷங்களைக் கணிசியாமல் கேவலம் தாக்ஷிண்யத்தாலே விசுவத்தை ஸ்ருஷ்டிக்குமவன்.

விச்வபுக் விபுः=அப்படியே எங்கும் வியாபித்து ஸகலத்தையும் புஜிக்குமவன். இதில் 291பிரமாணம் காண்க.

ஸத்கர்த்தா=ஸத்கரிப்பவன்.

[இப்படிப்பட்ட ஸுசீலனுகையாலே ஸத்துக்களை எதிர்கொண்டு பூஜிக்குமவனென்றபடி. "ஸஜ்ஜந ப்ரதிபூஜக:" என்கிறதன்றோ?]

(அ.) ஸுப்ரஸாதः—தன்விஷயத்தில் அபகாரஞ்செய்த சிசுபாலாதிகளுக்கும் மோக்ஷந்தந்தவனுகையால் நல்லருள்புரிந்தவன்.

ப்ரஸந்நாத்மா—ரஜஸ்தமஸ்ஸுக்களால் கலக்கப்படாத திருநாமத்தையுடையவன். காருண்யஸ்வரூபனென்றுமாம்.

விபு:—பிரம்மாதிரூபமாய்ப் பல்படியாமவன்.

288సదాధారపృథివీంద్యాముతేమామ్ ॥

289తమక్రతుంపశ్యతివీతశోకోధాతుఃప్రసాదాత్ ॥

290అవిజిఘత్సోఽపిపాసః సత్యకామస్సత్యసఙ్కల్పః ॥ శాన్తిసమృద్ధమమృతమ్ ॥

291సర్వాణిరూపాణి విచిత్యధీరః । నామానికృత్వాఽభివదన్యదాస్తే ॥

[సత్కృతస్సాధుర్జహ్నుర్నారాయణో]

సత్కృతః - பூஜிக்கப்பட்டவன், సాధుః - ஸாதிப்பவன், జహ్నుః மறைபட்டவன், నారాయణః - ஸகலத்திலும் உள்ளும்புறம்புமவியாபித்

(வி.) ஸத்கருதஃ—அவர்களால் தானும் ஸத்கரிக்கப்பட்டவன்

[அவன், அவர்கள் சிரத்தையுடன் ஸமர்ப்பிப்பது அற்பமாயினும், தனது மஹிமைக்குத்தக்கபடி அதைப்பெற்று ரொம்பவும் ஸந்தோஷிக்கிறான். இதில் பிரமாணம 292.

ஸாதுஃ—அவர்கள் அபேக்ஷித்த தூத்தியம் ஸாரத்தியம் முதலிய தொண்டுகளைச் செய்பவன்.

ஜஹ்நுஃ—அபக்தாளுக்குத் தனது மஹிமையைக் காட்டாதவன். இதற்கு 293வசநம்.

(அவதாரிகை.) இப்படி ஸமஸ்த விசேஷங்களாலும் விசேஷித்துச் சொல்லி 294உபநிஷத்துக்களில் சாகைகள்தோறும் ஓதப்படுகின்ற பரவஸ்துவினுடைய அஸாதாரணமான திருநாமத்தைச் சொல்லுகிறதுமேல்:-

நாராயணஃ—நாராயணன்.

[இதற்குச் சுருதியில்தானே 295அர்த்தம் சொல்லப்பட்டது. மற்றுமுண்டான வர்த்தங்கள் ரகஸ்யமாகையாலே அவைகளைச்சொல்லுகிறோமில்லை.]

(அவதாரிகை.) இப்படி ரஹஸ்யமான அர்த்தத்தைப் பொதிந்துகொண்டிருக்கிற இதை வியாக்கியானிக்கிறதுமேல்:—

(அ) ஜஹ்நு;—பிரளயகாலத்தில் ஜநங்களைப்போக்குமவன். பக்தாளைப் பரமபதம்கொண்டு செல்பவன் என்றுமாம்.

நாராயண:—நரமென்று ஆத்மாவாய் அதினின்றுமுண்டான ஆகாசாதிகள்நாரமாய் அவைகளைக் காரணஸ்வரூபனாய்க் கொண்டு வியாபிக்கையாலே நாராயணன்.

292అహోహ్యేతాన్తినస్సర్వాన్ ప్రీణాతిభగవాన్హరిః । విధిప్రయుక్తాంపూజాఞ్చగృహ్ణాతిశిరసాస్వయమ్ ॥ శబర్యాపూజితస్సమ్యక్ ॥ మాలాకారేణ పూజితః ॥

293చక్రన్తద్వాసుదేవస్యమాయయావర్తతేవిభోః । సాపహ్నవంపాణ్డవేషు ఇతిరాజసుసత్తమ ॥

294నారాయణాయవిద్మహే ॥ నారాయణపరంబ్రహ్మ ॥ ఏకోహవైనారాయణఆసీత్ ॥ అథపునరేవనారాయణః ॥ చక్షుశ్చద్రష్టవ్యఞ్చనారాయణః ॥ అథదివ్యోదేవఏకోనారాయణః ॥

295యచ్చకిఞ్చిత్ ॥

నరః॥అసంఖ్యేయోఽప్రమేయాత్మా విశిష్టశ్శిష్టకృచ్ఛుచిః। సిద్ధార్థస్సిద్ధసం
[కల్పస్సిద్ధిదస్సిద్ధిసాధనః।వృషాహీ॥]

தவன், నరః - அழியாத ஐசுவரியமுற்றவன், అసఙ్ఖ్యేయః - எண்ணப்போகாதவன், అప్రమేయాత్మా - அளவிடப்போகாதஸ்வரூபன், విశిష్టః - விலக்ஷணன், శిష్టకృచ్ఛుచిః - தனக்கு அநுகூலமானவர்களைச்சுபமாக்கும்படியானகாந்தியுடையவன், సిద్ధార్థః - ஸகலார்த்தங்களுமஸித்திக்கப்பெற்றவன், సిద్ధసంకల్పః-நினைத்ததெல்லாம் ஸித்திக்கப்பெற்றவன், సిద్ధిదః - ஸித்தியைத்தருமவன், సిద్ధిసాధనః- ஸித்திரூபமான ஸாதனமானவன், వృషాహీ - தர்மரூபமான தினமுடையவன்,

(வி) நர:=சாசுவதமான சேதநாசேதநங்களென்னும விபூதியையுடையவன்.

அஸங்க்யேய:=அவற்றின் ஸமூகங்கள் கணக்கில்லாம லிருக்கப் பெற்றவன். அப்ரமேயாத்மா=இப்படி கணக்கில்லாத சேதநாசேதநங்கள் ஒவ்வொன்றும் அளவின்றி வியாபித்திருக்கையாலே அளவிட வொண்ணாத ஸ்வரூபன்

விசிஷ்ட:=அவைகளை யபேக்ஷியாமல் ஸ்வயமே விலக்ஷணமானவன

சிஷ்டக்ருத்சுசி=மற்றப்படி தனது ஸம்பந்தத்தால் அவைகளைத் தனக்குத்தக்கபடி நன்றாகச்செய்கின்ற காந்தி விசேஷத்தோடு கூடியவன்,

ஸித்தார்த்த:=மேழ்ச்சொன்னபடி ஸகலமும் ஸித்திக்கப்பெற்றவன்.

ஸித்தஸங்கல்ப:=அதற்குமேல் நினைத்ததெல்லாம் ஸித்திக்கப்பெற்றவன். "ஸத்யகாம:, ஸத்யஸங்கல்ப:" என்றன்றோ சுருதி:

ஸித்தித:=ஸாதிக்குமவருக்கெல்லாம் அணிமை,கரிமைமுதலிய ஸித்திகளைத் தருமவன்.

ஸித்திஸாதந:=ஸித்திபோன்ற ஸாதநமுடையவன்.
[என்றால் 'யேது தர்ம்யாம்ருதமிதம்" என்று கீதையில் அருளிச்செய்தபடியே அவனைப்பெறவேண்டி ஸாதநத்தையநுட்டிக்கும்பொழுதுகூட பிரியமாயிருப்பவ னென்றபடி.]

வ்ருஷாஹீ.=தாமமான தினமுடையவன்.

(அ.) நர:—கொண்டுசெலபவன.
அஸங்க்யேய:—கணக்கிடத்தக்க நாமரூபாதிகளற்றவன்.

వృషభో విష్ణుర్వృషపర్వా వృషోదరః। వర్ధనో వర్ధమానశ్చ వివిక్తశ్శ్రుతి
[సాగరః।]

వృషభః - வர்ஷிப்பவன், విష్ణుః - வியாபித்தவன், వృషపర్వా தர்மத்தைப்படியாக்கிக்கொண்டவன், వృషోదరః - தார்மிகமான திருவயிறுகொண்டவன், వర్ధనః வளர்ப்பவன், వర్ధమానః- வளருமவன், వివిక్తః- ஏகாந்தமானவன், శ్రుతిసాగరః-வேதத்திற்குக்கடலானவன்,

(வி.) என்றால்—இவனை யடைகின்ற பிரதமதினம் ஸகல மங்களங்களுக்கும் அங்குரார்ப்பணம் பண்ணும் தினம்போல தர்மரூபமாயிருக்குமென்றபடி. இதில் பிரமாணம் 296காண்க.

வ்ருஷப:—இப்படி வந்தடைகின்ற ஸம்ஸாரிகளின் தாபந்தீரும்படி வர்ஷிக்கிறவன்.

விஷ்ணு:—இப்படி வர்ஷித்துக்கொண்டே வியாபிக்குமவன்.

[என்றால் பிராணிகளுக் கெந்தெந்த காலத்தில் எது எதுவேண்டுமோ அவையவை யதற்குவேண்டும் க்ஷணத்தில்தானே கொடுத்துக்கொண்டு கூடவேயிருப்பவன். இதற்குக் கீதையில் 297வசநங்காண்க.

வ்ருஷபர்வா—தர்மத்தைப் படியாயுடையவன்.

[என்றால்—வர்ணாச்ரம தர்மங்களைத் தன்னையடைவிக்கும் வழிக்கு அநுகூலமாக்கிக்கொண்டவ னென்றபடி.]

வ்ருஷோதர:—ஆராதிப்பவர்கள் ஸமர்ப்பித்ததைக் கொண்டு நிறைவாய்க் கொள்ளுகையாலும், ஆர்த்தியடைந்தவர்களனைவர்க்கும் அண்டயிட மாகையாலும மிகதார்மிகமான உதரத்தையுடையவன். வர்த்தந:—தாய்போல் அவர்களை வயிற்றில் வைத்து வளர்க்குமவன்.

வர்த்தமாந:—அவர்களையும் வளர்த்துத் தானும் வளருமவன்.
[இப்புடைகளாலே அளவிடப்போகாத ஸமிருத்திபொருந்தியவன்.]

விவிக்த:—இப்படி லோகத்திலில்லாத மாதிரியான விருத்தாந்தமுடைய ஞகையாலே ஏகாந்தமானவன்.

ஸ்ருதிஸாகர:—இப்படிப்பட்ட குணங்களைப் பிரதிபாதிக்கின்ற ச்ருதிகளுக்கெல்லாம், நதிகளுக்கிடமான ஸமுத்திரம்போலே முடிவான பூமியாயிருப்பவன். இதற்கு வசநம் 298காண்க.

296 అద్య మే సఫలం జన్మ సుప్రభాతా చ మే నిశా । యదున్నిద్రాబ్జపత్రాక్షం విష్ణో
297 న తదస్తి వినా యత్స్యాన్మయా భూతం చరాచరమ్ ॥ [ప్రి]తస్యామ్యవాప్తుఘుమః ॥

[సుభుజో దుర్ధరో వాగ్మీ మహేంద్రో వసుదో వసుః । నైకరూపో]
[బృహద్రూప]

సుభుజః-சுந்தரத்தோளன், దుర్ధరః- தரிக்கமுடியாதவன், వాగ్మీ-கொண்டாடத்தகுந்தவாக்கையுடையவன், మహేంద్రః-பூஜிக்கும்படியான ஐசுவரியமுற்றவன், వసుదః - தநமளிப்போன், వసుః-செல்வமானவன், నైకరూపః - அநேகரூபந்தரித்தவன், బృహద్రూపః-பெரிய திருமேனியன்,

(வி.) ஸு - புஜ: = ஆஸ்ரிதாளுடைய பாரத்தைத தாங்கும்படியான அழகியதோள்களுடையவன்.

துர்த்தர: = அப்படிப்பட்ட புஜபலத்தாலே, பிரளயகாலத்திலுண்டான ஸமுத்திரவேகத்தைப் பிள்ளைகள் விளையாட்டில் மணலாற்கட்டிய அணையானது தாங்கமாட்டாதாபபோலே ஒருவராலுந் தாங்கமுடியாத வேகம்பொருந்தியவன் வாக்மீ—அப்படியே மிகவுங்கொண்டாடும்படியான வாக்கையுடையவன்.

[அவன்வாக்கைக் கொண்டாடுவதுதான், அது வேதரூபமாயும ஐயசீலமாயும் மதுரமாயும் கெம்பீரமாயும் பிரியமாயும் ஹிதமாயு மிருக்கையாலே. இதற்குவசநம் 299]

மஹேந்த்ர: = இப்படியெங்கும் ப்ரஸித்திகையலே கொண்டாடும்படியான பரமைச்வர்யத்தோடு விளங்குமவன்,

வஸுத: = இபபடி ஒருவராலும சமிப்பிககமுடியாமல் மஹாமஹிமை தங்கியிருக்கச் செய்தேயும தநம முதலிய அறபபுருஷார்த்தத்தை அபேக்ஷிககினைப அறபாகட்கு அவறறைக் கொடுக்குமவன். வஸு: = மஹாத்மாக்களுக்குத் தானே தநமாயிருப்பவன்.

(அவதாரிகை.) கீழ்ச்சொன்ன மஹிமைக்குத தகுந்த விசவரூபத்தைச் சொல்லுகிறதுமேல்.

நைகரூப: = அவரவா விருப்பத்துக்கபடி நாநாவிதமான ரூபங்கள் தரித்தவன் 300 ப்ருஹத்ரூப: = அந்த ரூபஙகள் ஒவ்வொன்றுமே திசைகளையும ஆகாசத்தையும் அளாவும்படி பெரிதாயிருககும்படி யானவன 301.

(அ)ப்ருஹத்ரூப: = பூமியைததாஙகும் வராஹாதி ரூபமான பெரியமேனியுடையவன்.

299 వాగ్విన్యాసో ... ॥ ... యుక్తా చ వక్తా వాచస్పతిర్యథా । భూయః కథయతి ... నాస్తి ... ॥

300 ... ॥

301 ద్యావాపృథివ్యోరిదమన్తరం హి వ్యాప్తం త్వయైకేన దిశశ్చ సర్వాః ॥

[శిపివిష్టః ప్రకాశనః ఓజస్తేజోద్యుతిధరః ప్రకాశాత్మా ప్రతాపనః ।]
[ఋద్ధస్స్పష్టాక్షరో మంత్ర]

శిపివిష్టః-கிரணங்களால்பிரவேசிப்பவன், ప్రకాశనః-பிரகாசிப்பவன், ఓజస్తేజోద్యుతిధరః - பலம், பராக்கிரமம், காந்தி இவைகளைத்தரிப்பவன், ప్రకాశాత్మా-விளங்கும்ஸ்வரூபன், ప్రతాపనః-தபிப்பவன், ఋద్ధః-ஸம்ருத்திபொருந்தியவன், స్పష్టాక్షరః-வேதத்தைப்படைத்தவன், మన్త్రః-மநநஞ்செய்தோரைக்காப்பவன்,

(வி.) சிபிவிஷ்ட:=கிரணங்களால் பிரவேசித்தவன். இப்படியே யாஸ்கர் [302]சொன்னார், ருஷிகளும் சொன்னார்கள் [303]

ப்ரதர்சந:=இந்த திவ்யரூபத்தைத் தாங்கள் காணவேண்டுமென்று ஆசைப்பட்ட அர்ச்சுனாதிகளுக்குப்பிரகாசிப்பிக்குமவன்.[304]

ஓஜஸ் தேஜோ த்யுதிதர:=பெலம, வெல்லுந்திறமை, கீர்த்தி, காந்தி இவைகளைத் தரிக்குமவன் [305] ப்ரகாசாத்மா=மூர்க்கருங்கூட ஒப்புக்கொள்ளும்படி ப்ரகாசமான உத்கிருஷ்டப்பிரபாவன். இப்படியே திருதராஷ்ட்ரன் ஒப்புக்கொண்டான் [306]ப்ரதாபந:=உக்கிரமான காந்தியுடையவன். ரித்த:=(இப்படிபருவகாலத்தில் கரைபுரளுங் கடல்போன்ற) ஸம்ருத்தியுடையவன் [307]

ஸ்ருஷ்டாக்ஷர:=(இந்த ஸம்ருத்தியைகொண்டு வேதவாக்கியங்களுக்குப் பொருளுண்டாக்குகையாலே) வேதாக்ஷரங்களை ஸ்ருஷ்டிப்பவன். மந்த்ர:=(இப்படிகளை மநநஞ்செய்வோரைக்

(அ)சிபிவிஷ்ட:=சிபி என்று பசுக்களாய் அவற்றுள் யக்ஞரூபியாயிருக்கிறானென்று சிபிவிஷ்ட: என்றுயக்ஞரூபனைச்சொல்லுகிறது. ப்ரதாபந: சூரியன் முதலான விபூதிகளைக்கொண்டு பிரபஞ்சத்தைத் தபிக்குமவன். ரித்த:=தர்மம், ஞானம் வைராக்கியம் முதலியவைகளால் பரிபூர்ணன். ஸ்பஷ்டாக்ஷர:=ஸ்பஷ்டமான ஓங்காரமென்னும் அக்ஷரத்தையுடையவன். மந்த்ர:-ருக்யஜுஸ்ஸாமம் என்கிற மந்திரங்களுக்குப் பொருளாமவன்.

302 శిపయోఽత్ర రశ్మయ ఉచ్యన్తే తైరావిష్టః ॥

303 శిపివిష్టేతి యచ్చాస్య హీనం రోమచయద్భవేత్ । తేనావిష్టం యత్కించిచ్ఛిపివిష్టం హి తత్స్మృతమ్ ॥ 304 దివ్యం దదామి తే చక్షుః పశ్య మే యోగమైశ్వరమ్ ॥

305 యథా ప్రదీప్తం జ్వలనం పతంగా విశన్తి నాశాయ సమృద్ధవేగాః ॥

306 త్వమేవ పుణ్డరీకాక్ష సర్వస్య జగతః ప్రభుః । తస్మాన్మే యాదవశ్రేష్ఠ ప్రసాదం కర్తుమర్హసి ॥ 307 తతస్స పురుషవ్యాఘ్రస్సజ్జగాద పునస్స్వయమ్ । తాన్దివ్యామద్భుతాం శుభ్రాం ఋద్ధిమత్తామరిన్దమ ॥

[శ్చంద్రాంశుర్భాస్కరద్యుతిః ॥ అమృతాంశూద్భవో భానుః శశబిం]
[దుస్సురేశ్వరః । ఔషధం]

చన్ద్రాంశుః - ஆஹ்லாதகரமானகாந்தி பொருந்தியவன், భాస్కర ద్యుతిః-வெல்லுந்திறமையுற்றவன், అమృతాంశూద్భవః- சந்திரனுக்குப்பிறப்பிட மானவன், భానుః - விளங்குமவன், శశబిన్దుః - குடிலமான வற்றைநிமிர்ப்பவன், సురేశ్వరః- தேவர்நாதன், ఔషధమ్-மருந்தானவன்,

---

(வி.) காக்கின்றமையால்) யந்திரமானவன். இப்படியே பிராம்ம புராணத்திலும்ஸ்ரீவாராஹ புராணத்திலும் சொல்லப்பட்டது 308

சந்த்ராம்சு:—இபபடி மநஞ்செயவோருக்குண்டான வாட்டத்தைப்போக்கி ஆஹ்லாதத்தை யுண்டுபண்ணும்படியான காந்தி பொருந்தியிருப்பவன 309. பாஸ்கரத்யுதி:—சத்துருக்களைப் பரிபவிக்கும்படியானப பிரபாவந்தங்கி யிருப்பவன் 310

அம்ருதாம்ருதபவ:—சந்திரனுக்குப் பிறப்பிடமானவன்.

[என்றால்—ஸர்வதாபத்தையும் ஹரிக்கும்படி ஆப்யாயநமாய், ம்ருத ஸஞ்ஜீவநமான அமிருதகிரணங்கள் பொருந்திய சந்திரனுங்கூட பரமபுருஷனுடைய ஹ்ருதயததிலுண்டான சைதயஸம்பந்தத்தால் அப்படி யுண்டானனென்றபடி. 311]

பாநு:—அதிகப்பிரகாசமான சூரியன்கூட இவன்தேஜஸ்ஸைக் கொண்டு பிழைக்கும்படி விளங்குமவன 312. சசபிந்து —வக்கிரமாககமாய்ப் போமவர்களை யெல்லாந் திருப்புமவன். ஸுரேச்வர:—அப்படியே ஸந்மார்க்கத்தில் போமவர்களுக்கு நிர்வாஹகனானவன் 313. ஔஷதம—ஸம்ஸாரமென்கிற தீவ்ரவிஷத்தைப்போக்கும் பிரபாவசாலியாகையாலே. 314

(அ.) சசபிந்து:—சந்திரன்போல் பிராணிகளைக் குளிர்ந்து போஷிப்பவன்.

---

308 త్ర్పష్టాతోయసమాకీర్ణాత్ ఘోరాత్సంసారసాగరాత్ । అపారాత్పారమాప్నోతి యోమాంస్మరతినిత్యశః ॥ స్థితేమనసిసుస్వస్థేశరీరేసతియోనరః । ధాతుసామ్యేస్థితేస్మర్తావిశ్వరూపఞ్చమామజమ్ ॥ తతస్తంమ్రియమాణన్తు కాష్ఠపాషాణసన్నిభమ్ । అహంస్మరామిమద్భక్తం నయామిపరమాఙ్గతిమ్ ॥

309 తేతంసోమమివోద్యన్తంద్పష్ట్వా ॥

310 రక్షాంసిభీతానిదిశోద్రవన్తి ॥

311 చన్ద్రమామనసోజాతః ॥

312 యస్యాదిత్యోభాముపయుజ్యభాతి ॥

313 సర్వజిహ్మంమృత్యుపదమార్జవంబ్రహ్మణఃపదమ్ ॥

314 దేవాదేవర్ష్యశ్చైవయంచిదుర్దుఃఖభేషజమ్ ॥

[జగతస్సేతుస్సత్యధర్మపరాక్రమః ॥ భూతభవ్యభవన్నాథః పవనః]
[పావనోఽనలః । కామహా]

జగతస్సేతుః லோகத்துக்கு அணையானவன், సత్యధర్మపరాక్రమః-ஸத்திய மான தருமமும் பராக்கிரமமுமுற்றவன், భూతభవ్యభవన్నాథః- இருந்தன நிகழ்வன வருவனவைகட்கிறைவன், పవనః - வீசுமவன், పావనః - பரிசுத்திகரன், అనలః - திருப்தியடையாதவன், కామహా- ஆசையைத்துறப்போன்,

(வி.) ஔஷதமானவன். ஜகதஸ்ஸேது:-(நன்மை தீமைகளை கலக்கவொட்டாமல் பிரிக்கையாலே) லோகத்தில் [315]ஸேதுவானவன் ஆகையாலன்றோ பிராணிகளுக்குத்தாம்செய்யாதகருமத்திற்குப லன்வந்தும், செய்ததற்குப்பலன் வாராமலு மிருப்பதில்லை. இதற்கு வசநம் [316]காண்க. ஸத்ய தர்ம பராக்ரம:—இப்படிப்பட்ட தர்மங்களும் கல்யாண குணங்களும், பராக்கிரமங்களும், சேஷ்டிதங்களும் ஸத்தியமாயிருக்கப்பெற்றவன். இப்படியேயன்றோ [317]அருச்சுனன் குணசேஷ்டிதங்கள்தொடக்கமானவையெல்லாம் ஸத்தியமென்பதாகச்சொன்னது. பூதபவ்யபவந்நாத.—இப்படிப்பட்ட ஐசுவரியம் த்ரிகாலத்திலு முண்டாயிருக்கப்பெற்றவன். [318]

பவந:—இப்படி எப்போதுமெங்கும ஸ்வபாவமாகவே வீசித்திரியுமவன். இவனுடைய கெந்தலேசத்தைக்கொண்டன்றோ காற்றுங்கூட எப்போதும் வீசுந்திறமை யுடைத்தாயிருக்கிறது.

பாவந:—அப்படியே தன் ஸம்பந்தம்பெற்ற கங்காதிகளையும் ஜகத்துக்கெல்லாம் பரிசுத்தி கரங்களாகும்படி செய்பவன் [319]

அநல:—இப்படிப் பல்படியாய் உபகரித்தும்போருமென்று ஆறியிருக்கமாட்டாத அருளுடையவன்-இப்படிப்பட்ட சக்தியினது லேசத்தைக் கொண்டுதான் அக்கினிகூட 'அநலன்' என்று பெயர்பெற்றது.

காமஹா—இப்படிப்பட்ட தனது குணாதிசயங்களை யெல்லாங் கண்டவருக்கு சபதாதிவிஷயத்தி லாசையைப்போக்கடிப்பவன் [320]

(அ.) அநல:—பிராணனைப் பயனுடையதாகச் செய்பவன்; அதாவது ஜீவஸ்வரூபன், போருமென்கிற பரியாப்தியில்லாதவனென்றுமாம்.

[315] ఏష సేతుర్విధరణ ఏషాంలోకానా మసమ్భేదాయ ॥

[316] యథా ధేనుసహస్రేషువత్సోవిన్దతిమాతరమ్ । తథాపూర్వకృతంకర్మ కర్తారమనువిన్దతి ॥ శుభకృచ్ఛుభమాప్నోతిపాపకృత్పాపమశ్నుతే ॥

[317] సర్వమేతదృతమ్మన్యేయన్మాంవదసికేశవ ॥

[318] భూతభవ్యభవన్నాథః కేశవః కేశిసూదనః ॥

[319] పావనస్సర్వలోకానాంత్వమేవరఘునన్దన ॥

[320] నకామకలుషంచిత్తంమమ తేపాదయోస్స్థితమ్ ॥

[కామకృత్కాంతః కామః కామప్రదః ప్రభుః యుగాదికృద్యుగావర్తో]

కామకృత్ - ஆசையைத்தருமவன், కాంతః - மனோஹரமானவன், కామః - அழகன், కామప్రదః - கோரினதைத்தருமவன், ప్రభుః - ஸமர்த்தன, యుగాదికృత్-யுகத்தின் ஆதியைச்செய்தவன்,

---

(வி.) காமக்ருத—மற்றும் போகமோக்ஷாதிகளையும் ஆசைப்படும்படி தானே செய்யுமவன். காந்தஃ—ஸௌந்தரிய ஸௌகுமாரியம முதலான திருமேனி குணங்களாலே அதிமனோஹரமா யிருப்பவன். காமஃ—சீலம் ஔதாரியம் முதலியகுணங்களால் மிகவும் இனியனாயிருப்பவன்.

[இந்த குணங்களினது லேசமாத்திரத்தாலன்றோ மன்மதனும் லோகத்தைப பிசசேற்றுகிறான்.]

காமப்ரதஃ—தன்னை வேண்டுவோர்க்கும் மற்றும் க்ஷுத்ர புருஷார்த்தங்களை வேண்டுவோர்க்கும் அவரவருக்குத்தக்கபடி அபீஷ்டத்தைக் கொடுப்பவன்[321]. ப்ரபுஃ—இந்த மனோஜ்ஞாதிசயத்தாலே ஸகலப்பிராணிகளுடைய ஹ்ருதயத்தையும ஹரிப்பதில் ஸமர்த்தனானவன்[322].

த்ருதீயசதகம்—ஸம்பூர்ணம்.

சதுர்த்தசதகம்.

(அவதாரிகை.) அநந்தரம் அபரிமிதமான ஆச்சரியரூபனாயிருக்கையைச் சொல்லுவதாய் முதலில் வடபத்திரசாயியை உதாஹரணமாகச்சொல்லுகிறது.

யுகாதிக்ருத்—யுகாந்தகாலத்திலும் யுகாதியைச்செய்பவன்.

[இவந்தான், பிரளயத்தில்கூட ஜகத்தை முழுகிப்போகவொட்டாமல் பிரவர்த்திக்கிறானன்றோ?]

யுகாவர்த்தஃ—தான் பண்ணும் தர்மவ்யவஸ்தையைக் கொண்டு கிருதம்முதலான யுகங்களை அடிக்கடி திருப்புமவன்.

(அ.) காமக்ருத்—காமனென்கிற ப்ரத்யும்நனைப்பெற்றவன்.

யுகாதிக்ருத்—யுகம்முதலான காலபேதத்தைச் செய்யுமவன்; யுகாதிகளை ஆரம்பிக்குமவனென்றுமாம்.

---

321 ఏకో బహూనాం యో విదధాతి కామాన్ ॥

322 రామః కమలపత్రాక్షస్సర్వసత్త్వమనోహరః ॥

[నైకమాయో మహాశనః । అదృశ్యో వ్యక్తరూపశ్చ]

యుగావర్తః - யுகங்களைத் திருப்புமவன், నైకమాయః - பலவித ஆச்சரியங்கள் செய்பவன், మహాశనః - பேருணவுண்பவன், అదృశ్యః - காணவரியன், వ్యక్తరూపః - ஸுலபமாய் அறியக்கூடிய ரூபத்தை

(வி) நைகமாயः—சிறியபாலகனுருவாயிருப்பது, அபரிமிதமான லோகங்களை உமிழ்வது, யாதொரு ஆதாரமுமின்றி ஒரே வெள்ளமாயிருக்கையில் ஒரு ஆலிலையில் கண்வளர்ந்தருளுவது முதலாய், இப்படியென்று ஊஹிக்கமுடியாத அனேகம் ஆச்சரியமுற்றவன்.

[இத்திருநாமத்திற்சொன்ன மாயையென்னும் சப்தம் மித்யையான விஷயத்தைச் சொல்லுகிறதென்று நினைக்கவேண்டாம். ஸத்யமான விஷயங்களிலும் மாயையென்னும் சப்தத்திற்குப் பிரயோகம் அதிகமாயிருக்கிறது. எங்ஙனேயென்னில்:—"மாயாந்து ப்ரக்ருதிம் வித்யாத்" என்று அநேகம் அர்த்தங்களையும் அனேகம் காரியங்களையும் செய்கின்ற ஸத்தியமானப்பிரகிருதியினிடத்திலும், "மாயா வயுநம் ஞாநம்" என்றும "ஸங்க்யாதா தேவமாயயா" என்றும், "விச்வாநி தேவவயுநாநிவித்வாந்" என்றும் ஞாநத்திலும், "தேநமாயா ஸஹஸ்ரம்தத் சம்பரஸ்யாசுகாமிநா என்றுதொடங்கி ஞாநத்தால் போக்கமுடியாததாய் அஸ்திரத்தாலேயே போக்கவேண்டியதாய் சொல்லப்பட்டது. இன்னும் பாரதத்தில் ஆரணியபர்வதத்தில் மார்க்கண்டேயாதிகளின் [323]வசநங்களிலுங்காண்க.]

மஹாசந:—ஸகல ஜகத்தையும் விழுங்குகையாலே பெரிய ஆகாரம் புசிப்பவன் [324]. அத்ருச்யः—இவ்விதமென்று ஊஹிக்கமுடியாத விருத்தாந்தமுடையவன் [325]. வ்யக்தரூபः—அப்படியிருக்கச் செய்தேயும் ஆச்ரிதரான மார்க்கண்டேயாதிகளுக்கு சுகமாய்க் காணும்படியான வடிவுடையவன். [326]

---

[323] తతో మే పృథివీపాల విస్మయస్సుమహానభూత్ । లోకన్ దృష్ట్వా సమస్తాంశ్చ ఇత్యుక్త్వా న్తర్హితస్తాత స దేవః పరమాద్భుతః । ఆశ్చర్యం భరతశ్రేష్ఠ ॥

[324] యచ్చ కించిన్మయా లోకే దృష్టం స్థావరజఙ్గమమ్ । తదపశ్యమహం సర్వం తస్య కుక్షౌ మహాత్మనః ॥

[325] కథన్త్వయం శిశుశ్శేతే లోకే నాశముపాగతే । తపసా చిన్తయంశ్చాపి తం శిశుం నోపలక్షయే ॥

[326] అతసీపుష్పసఙ్కాశః శ్రీవత్సకృతలక్షణః । సాక్షాల్లక్ష్మ్యా ఇవావాసః స సదా ప్రతిభాతి మే ॥ తస్య తామ్రతలౌ తాత చరణౌ సుప్రతిష్ఠితౌ । సుజాతమృదురక్తాభిరఙ్గులీభిరలఙ్కృతౌ ॥ ప్రణతేన మయా మూర్ధ్నా గృహీత్వా హ్యభివన్దితౌ ॥

[సహస్రజిదనంతజిత్ ॥ ఇష్టోవిశిష్టశ్శిష్టేష్టఃశిఖండీనహుషోవృషః ।]

யுடையவன், ஸஹஸ்ரஜித்-ஆயிரங்காலம் விளங்குமவன், அனந்தஜித்-அளவின்றிவிளங்குமவன், இష్టః-விரும்பப்பட்டவன், అవిశిష్టః-விலக்ஷணன், శిష్టేష్టః - சிஷ்டர்களுகந்தவன், శిఖండీ கொண்டையுடையவன், నహుషః-கட்டுமவன், వృషః-தெளிப்பவன்

(வி.) ஸஹஸ்ரஜித்=ஆயிரயுகங்கொண்டகலபமமுழுதும அப்படிகண்வளர்ந்தபடியே விளங்குமவன். [327]

அநந்தஜித்—இப்படி சிறியபாலகனு யிருக்கச்செய்தேயும் தன்னுடைய மஹிமாதிசயத்தை ஒருவரும் ஒருக்காலும்ஒருவிதத்தாலும் அறியக்கூடாதபடி விளங்குமவன். [328]

இஷ்டః அவிசிஷ்டః=இப்படி திருவயிற்றில் தரிக்கப்பட்டப் பிராணிகளை தாரதம்மியமின்றி தனது கிருபாமாத்திரத்தால் தாய்போல இஷ்டமாய் காத்தருளுமவன்.

சிஷ்டேஷ்டః=பண்டிதச் சிரேஷ்டாளான மார்க்கண்டே யாதிகளாலெல்லாம் உத்கிருஷ்ட புருஷார்த்தமாக விரும்பப்பட்டவன். [329]

சிகண்டீ—அபரிமிதமாய், ஒருவராலும் திரஸ்கரிக்க முடியாத ஐசுவரியமான பரமதேஜஸ் ஸென்னும் சிகரத்தையுடையவன்.

நஹுஷః—தன்மாயையால் ஜீவர்களைக் கட்டுப்படுத்துகிறவன். [330]

வ்ருஷః—கடலில் அலைந்து சிரமப்பட்ட மார்க்கண்டேயாதிகளின் தாபம்தீரும்படி அமுதத்துக் கொப்பான தன் காந்தியாலும் வார்த்தையாலும் குளிரவர்ஷிப்பவன். [331]

(அவதாரிகை) அநந்தரம் பரசுராமவிருத்தாந்தத்தைத் தெரிவிக்கிறார்.

(அ) ஸஹஸ்ரஜித் - (அசுரர்களின்) ஆயிரத்தை ஜயித்தவன்,

அநந்தஜித் - ஸகலப்பிராணிகளையும் யுத்தத்திலேயாகிலுமாம் கிரீடையிலாகிலுமாம் சிந்தை யொன்றிலே ஜயிப்பவன்.

சிகண்டீ-சிகண்டமென்கிற கலாபத்தையணிந்த கோபவேஷம்பூண்டவன்.

---

327 యావద్యుగానాంవిప్రర్షే సహస్రంపరివర్తతే తావత్ స్వపిమి ॥

328 అస్తశ్శరీరేతస్యాహంవర్షాణామధికంశతమ్ । నహిపశ్యామితస్యాహమన్తన్దేవస్యకర్హిచిత్ ॥ ఆసాదయామినైవాన్తం తస్యరాజన్మహాత్మనః ॥

329 సత్వస్థానిరహఙ్కారాః నిత్యమధ్యాత్మకోవిదాః । మామేవసతతంవిప్రాశ్చిన్తయన్తఉపాసతే ॥

330 తస్మింశ్చాన్యోమాయయాసన్నిరుద్ధః ॥

331 తతోమామబ్రవీద్ బాలస్సపద్మనిభలోచనః । శ్రీవత్సధారీద్యుతిమాన్ వాక్యంశ్రోతిసుఖావహమ్ ॥ జానామిత్వాపరిశ్రాన్తన్తదావిశ్రమకాఙ్క్షిణమ్ ॥

[క్రోధహా క్రోధకృత్కర్తా విశ్వబాహుర్మహీధరః । అచ్యుతః]

[ప్రథితః ప్రాణః]

క్రోధహా - சினத்தைவென்றவன், క్రోధకృత్ — சினமுண்டு பண்ணுமவன், కర్తా - அறுத்தவன், విశ్వబాహుః - எங்கும் பரந்த தோள்களுடையவன், మహీధరః - புவியைத்தரித்தவன், అచ్యుతః - நழுவாதவன், ప్రథితః - பிரஸித்தன். ప్రాణః - பிராணனானவன், ప్రాణదః - பெலன் ஈந்தவன், వాసవానుజః - இந்திரனபின்பிறந்தவன், అపాంనిధిః - ஜலங்களைத்தரிப்பவன்,

---

(வி.) க்ரோதஹா — காசியபரிஷி பிரார்த்தித்த மாத்திரத்தில் இருபத்தொரு தடவை க்ஷத்திரியாளைத் திரஸ்கரித்துக் கோபத்தைப் போக்கியவன்.

க்ரோதக்ருத் — முதலில் அவர்களுக்குக் கோபமூட்டினவன்.

கர்த்தா — அப்படிபபட்ட கோபத்துக்கு மூலமான கார்த்தவீரியனை யறுத்தவன். 332 விச்வபாஹு: — இப்படி துஷ்டநிராஸார்த்தமாக எங்கும் பரந்த தோளுடையன்.

மஹீதர: — இப்படி பாரத்தையொழித்து பூமியைக்காத்தவன்,

அச்யுத: — பிரம்மாதிகளோடொக்க அவதரித்தகாலத்திலகூட ஐசுவரியம் நழுவாமலிருபபவன். 333

ப்ரதித: — இத்தன்மையனென்பதாகப் பிரஸித்தியடைந்தவன். 334

ப்ராண: — தன்னை ஆசிரயித்தோருக்கெல்லாம் ஜீவனமாயிருப்பவன். 335

(அவதாரிகை.) அநந்தரம் கூர்மாவதாரத்தை ஸூசிப்பிக்கிறது

ப்ராணத: — தேவர்களுக்குக் கடலைக் கடையும்படியான பெலனைத் தந்தவன். வாஸவாநுஜ: — அமுதத்தைக்கோரிய இந்திரனுக்காக அவன் பின்தோன்றியவன். அபாம்நிதி: — கடைகையில் கடலைத்தரித்தமையால் ஜலத்துக்கிடமானவன்

(அ.) க்ரோதஹா - சாதுக்களின் கோபத்தைப் போக்குமவன்.

க்ரோதக்ருத் - துஷ்டாளிடத்தில கோபத்தை யுண்டுபண்ணுமவன்.

அச்யுத — பாவவிகாரங்களாறுமற்றவன்.

---

332 నిఃక్షత్రియాం యశ్చకార మేదినీమ్ ॥

333 చ్యవనోత్పత్తియుక్తేషు బ్రహ్మేంద్రవరుణాదిషు । యస్మాన్న చ్యవసే స్థానాత్ తస్మాత్సంకీర్త్యసేఽచ్యుతః ॥

334 ఖ్యాతనామా మహాయశాః ॥ యశసశ్చైకభాజనమ్ ॥

335 ప్రాణోఽస్మి ప్రజ్ఞాత్మా తం మామాయురమృతమిత్యుపాస్వ ॥

[ప్రాణదో వాసవానుజః। అపాంనిధిరధిష్ఠానమప్రమత్తః ప్రతిష్ఠితః॥]
[స్కందస్స్కందధరో ధుర్యో వరదో వాయువాహనః। వాసుదేవో]

అధిష్ఠానమ్-அதிஷ்டானமானவன், అప్రమత్తః- மிகவும்ஜாக்கிரதையாயிருப்பவன், ప్రతిష్ఠితః-நிலைபெற்றிருப்பவன். స్కన్దః-சோஷிப்பிக்கிறவன், స్కన్దధరః-கந்தனையுந்தரிப்பவன், ధుర్యః பாரத்தைவஹிப்பவன், వరదః-வரமளிப்பவன், వాయువాహనః காற்றைவீசச்செய்பவன், వాసుదేవః - வியாபித்துக்கொண்டு விளையாடுமவன்,

(வி.) அதிஷ்டானம்—சுழன்றுவரும் மந்தரபர்வதத்திற்கு அதிஷ்டானமானவன்.[336] அபரமத்த.—இவைகளைக் காப்பதில்ரொம்பவும் ஜாக்கிரதையா யிருப்பவன்.

ப்ரதிஷ்ட்டித:—மற்றொன்றை அபேக்ஷியாமல் தனது மஹிமையில் தானே பிரதிஷ்ட்டிதஇருப்பவன்.[337] ஸ்கந்த:-ஸ்வயம் அஸுரர்முதலானோரை சோஷிப்பிக்கிறவன். ஸ்கந்ததர:—அப்படிப்பட்ட தேவதைகளின் சேனாபதியான கந்தனைக்கூடத் தரிக்குமவன். கந்தனைக்கூடத்தனது விபூதியாகவன்றோ கீதையில் அருளிச்செய்தான்? [338]

துர்ய:—புவனங்களின் பாரத்தை வஹிப்பவன். வரத:—மற்றும் லோககாரியத்தை நிர்வஹிப்பவருக்கும் அந்தந்த வரங்களை தருமவன்.

அதாவதெப்படியெனில்—வாயுவாஹந:—ஜகத்துக்கு பிராணனாய் விளங்கும வாயுவைவீசும்படியாய்ச் செய்பவன்.

(அவதாரிகை.) அநந்தரம் ஈராறுன அத்தியாத்மவிஷயம்.

வாசுதேவ:—வாஸு: என்றால் சூரியன் கிரணங்களால் மூடிக்கொள்வதுபோல் பிரபஞ்சத்தை வியாபித்துக்கொண்டு தன்னில் அவைவஸிக்கும்படிசெய்து, அதில் தான் வஸிக்கிறவனென்றபடி. தேவ:—என்றால் கீழ்ச்சொன்னபடி விளையாடுகிறவன். ஜயங்கோருகிறவன், விளங்குகிறவன், ஸ்தோத்திரம் பண்ணப்படுகிறவன், போகிறவனென்றபடி. ஆக, ‘வாசுதேவ:’ ஜகத்வியாபகனுய்க்கொண்டு ஜகத்திலுறைந்து விளையாடுகிற

(அ) அதிஷ்டானம் - பூதங்களுக்கு உபாதான காரணமாய்க்கொண்டு அதிஷ்டானமானவன்.

ஸ்கந்த:—அமிருதரூபமாய்ப் பெருகுமவன். வாயுரூபமாய் சோஷிப்பிக்கிறனென்றுமாம்.

ஸ்கந்ததர:—தர்மமார்க்கத்தை ஸ்தாபிப்பவன்.

[336] మన్దరాద్రేరధిష్ఠానం భ్రమతోఽభూన్మహామునే ॥
[337] స భగవక్వప్రతిష్ఠితః ? స్వే మహిమ్ని ॥
[338] సేనానీనామహం స్కన్దః ॥

[బృహద్భానురాదిదేవః పురందరః॥ అశోకస్తారణస్తారః శ్శూరః]

బృహద్భానుః-பெரியகிரணங்களுள்ளவன், ఆదిదేవః - முதலில் கிரீடிபபவன், పురందరః-புரங்களைப்பிளந்தவன், అశోకః - சோக விரோதி, తారణః-காப்பவன், తారః-தப்புவிக்குமவன், శూరః

(வி.) வன் என்றதாயிற்று. 339இது ஸகல சாஸ்திர ரஹஸ்யமாகையால் இதை அதிகமாய் விவரிக்கிறோமில்லை.

(அவதாரிகை.) இதையே விவரிக்கிறதுமேல்-அதில் போகவிபூதியான பரமாகாசமாய் விளங்கும் பிரகாரத்தைச் சொல்லுகிறது.—

ப்ருஹத்பாநு:—பெரியகிரணஙகள் பொருந்தியவன்.

(அ-கை.) லீலாவிபூதியாய்க்கொண்டு விளையாடும்படி சொல்லுகிறது.

ஆதிதேவ:—முதலில் விளையாடிமவன்[340].

(அவதாரிகை.) பிரபஞ்சத்தை மூடிக்கொண்டிருக்கையாலே அஸத்துக்களை நிவாரிக்கும்படி சொல்லுகிறதுமேல், நான்கு திருநாமங்களால்;-

புரந்தர:—அஸுரரூபமான புரஙகள் மூன்றையும பொடிசெய்தவன்.

[இப்படி சொன்னதனுல், அசுரர், பிசாசங்கள், இடி, சாபம், முதலிய ஆதிதைவிகங்களினின்றும் ரக்ஷிக்கும்படி சொன்னபடி.]

அசோக:—ஆத்தியாத்மிகங்களான சோகம், மோஹம், பசி முதலியவைகளினின்றுங் காக்குமவன்.

தாரண:—ஆதிபௌதிகங்களான சத்துருக்கள், கள்ளர், வியாதிமுதலியவைகளினின்றுங் காக்குமவன்.

தார:—ஸகல ஸம்ஸாரபயத்தினின்றும் காப்பாற்றுமவன். இப்படியே அதர்வசிரஸில் சொல்லுகிறது.[341]

(அவதாரிகை.) ஜயிக்குந்தன்மை யுடைமையைச் சொல்லுகிறது:—

சூர:—ஜயசீலன்.

(அ) ப்ருஹத்பாநு:—தன்னுடைய பெரிதான கிரணங்களாலே சூரியசந்திராதி ரூபியாய்க்கொண்டு ஜகத்தை பிரகாசிப்பிப்பவன்.

339ఛాదయామి జగత్సర్వం భూత్వా సూర్య ఇవాంశుభిః। సర్వభూతాధివాసశ్చ వాసుదేవస్తతస్స్మృతః॥ సర్వత్రాసౌ సమస్తఞ్చ వసత్యత్రేతి వై యతః। తతస్స వాసుదేవేతి విద్వద్భిః పరిపఠ్యతే॥

340సంప్రయోజ్య వియోజ్యాయం కామకారకరః ప్రభుః। క్రీడతే భగవాన్॥

341గర్భజన్మజరామరణాది సంసారసాగర మహాభయాత్తారయతీతి తస్మాదుచ్యతే తారః॥

[శౌరిర్జనేశ్వరః । అనుకూలశ్శతావర్తః పద్మీ పద్మనిభేక్షణః ।]
[పద్మనాభోఽరవిందాక్షః పద్మగర్భః]

ஜயசீலன், శౌరిః - சூரன்மைந்தன், జనేశ్వరః - ஜநங்களுக்கு ஈசுவரன், అనుకూలః - கரையைஅநுஸரித்தவன், శతావర్తః - நூறுசுழியுற்றவன், పద్మీ - பதுமங்கொண்டவன், పద్మనిభేక్షణః கமலத்தைநிகர்த்தபார்வையன், పద్మనాభః-பதுமத்தைநாபியி லுடையவன், అరవిందాక్షః-தாமரைமலர்போன்றகண்களுடைய வன், పద్మగర్భః-பதுமத்துள்ளுறையன்,

---

(வி.) (அவதாரிகை) இதையெல்லாம் தன்னிடத்தில் விசேஷபக்தாளுக்குக் காட்டுவதாக அவர்களிடஞ் செல்லும்படி சொல்லுகிறது.

சௌரிः=சூரனென்கிற வசுதேவர்க்கு மைந்தனானவன்.

[என்றால்-அவர்க்குத் தனது மஹிமையெல்லாம் காட்டினனென்றபடி.]

ஜநேச்வர:=(இப்படி ஸர்வமும் முழுகும்படி உஜ்வலிக்கின்ற ஐசுவரியமென்கிற மஹாப்பிரவாகத்தை யுடைத்தாயிருக்கையாலே) ஜநங்களுக்கெல்லா மீசுவரன்.

(அ-கை.) இப்படி யிருக்கச்செய்தேயும் ஸ்வபாவமாகவே பெரியனாகையாலே கெர்வம், மதம், அபிமாநம் முதலியவைகளற்றிருக்கையால்.—

அநுகூல:=கரைபுரளாமலிருப்பவன். [342]பக்தர்களுக்கு வசமாயிருப்பவனென்றுமாம்.[343] சதாவர்த்த:=நூறுசுழிபொருந்தியன்.

[என்றால்—இப்படி கரைபுரளும்படியான தன் ஐசுவரியத்தைக் கரைபுரள வொட்டாமற் றடுப்பதனால், இடுக்கான விடங்களிற்செல்லமாட்டாத வெள்ளம் சுழிபடுவதுபோல் சுழிபட்டுக் கிடக்குமென்றபடி.]

(அவதாரிகை) இப்படி வாசுதேவனது குணங்களை விவரித்து ரூபத்தை விவரிக்கிறதுமேல்:—

பத்மீ=லீலாரவிந்தத்தோடு நித்தியமாய் விளங்குமவன்.

பத்மநிபேக்ஷண:=நிர்மலமான கமலம் அசைந்தாடுவதுபோல், ஆச்ரிதாளுடைய சிரமந் தீரும்படி, ரமணீயமான வீக்ஷணமுடையவன்.

பத்மநாப:=பதுமம்போன்ற நாபியையுடையவன். அரவிந்தாக்ஷ:=அரவிந்தம்போல் அழகிய திருக்கண்களுடையவன். பத்மகர்ப்ப:=தனனைப்போல் பரிமளித்து மிருதுவாய் விளங்குகின்ற ஆஸநபதுமத்திலுறை

(அ.) சதாவர்த்த:=தர்மத்தைக் காப்பதற்காக நூறுதடவை யவதரிப்பவன். நாடிகள் நூற்றிலும் பிராணரூபியா யிருப்பவனென்றுமாம்.

---

[342] వీర్యవాంశ్చ వీర్యేణ మహతా స్వేన విస్మితః ॥

[343] హస్తావలంబనో హ్యేష భక్తిక్రీతో జనార్దనః ॥

[శరీరభృత్ । మహర్ధిః ఋద్ధో వృద్ధాత్మా మహాక్షో గరుడధ్వజః ॥]
[అతులశ్శరభో భీమ]

శరీరభృత్-சரீரத்தை நப்போஷிப்பவன், మహర్ధిః-ஸமிர்த்தியுற்றவன், ఋద్ధః-ஸமிர்த்தன், వృద్ధాత్మా-வளர்ந்தஸ்வரூபன், మహాక్షః-பூஜ்யமானரதாவயவத்தையுடையவன், గరుడధ్వజః-கெருடக்கொடியன், అతులః ஒப்பற்றவன், శరభః-சிக்ஷிப்பவன், భీమః-பயங்

(லி) பவன். அதவா-தன்னை உபாஸிப்பவர்களின் இருதயகமலத்தில் எழுந்தருளியிருப்பான். 344

சரீரப்ருத்—இப்படி சுபமான ஆசிரயமாய் விளங்கும் தன்குணங்களாலே தன்சரீர பூதர்களான உபாஸகர்களைப்போஷிப்பவன். உபாஸிக்கப்படும் பரமபுருஷனுடைய குணங்களேயன்றோ உபாஸகர்களுக்குபபோஷணம்? 345உபாஸகந்தான் அவனுக்கு ஆத்மாவும் சரீரமும்போலன்றோ? 346

(அவதாரிகை) அநந்தரம் விபூதியாலும் அவனையே விவரிக்கிறது.

மஹர்த்தி: = அவர்களுடைய யோகக்ஷேமத்துக்குப் போரும்படி அபாரமான விபூதியுடையவன். ரித்த:-அவர்களுக்கு ஸமிருத்தியுண்டானால் தானும் ஸமிருத்தியாயிருப்பவன்347. வ்ருத்தாத்மா=இப்படிப்பட்ட மஹத்தான மஹிமையையெகதேசத்தில் அடக்கிக்கொள்ளும்படி மிகவும் வளர்ந்திருக்கிற திவ்யாத்மஸ்வரூபமுடையவன்.

மஹாக்ஷ:=பூஜ்ஜியமான ரதாவயவத்தையுடையவன்.

[என்றால்—வகிக்குந் தன்மைகொண்டு ரதத்தின் அவயவத்தோடொத்திருக்கையாலே அக்ஷமென்று வேதமயனான கெருடனைச்சொல்லி அவரை வாஹநமா யுடையவனென்றபடி.]

கருடத்வஜ:=அந்தகெருடனையே கொடியிற்கொண்டவன். ஸர்வேசுவரனென்கைக்கு இதொரு முக்கியமான அடையாள மன்றோ? அதுல:-ஒப்பற்றவன். சரப:—தனது வியவஸ்த்தையைக் கடந்தவர்களைச் சிதைப்பவன். பீம:—ஆனதுபற்றியே அவர்களுக்குப பயங்கரமாயிருப்பவன்.

(அ.) வ்ருத்தாத்மா - நெடுநாளாயுண்டான ஆத்மஸ்வரூபத்தையுடையவன். சரப.—சரமென்று சரீரங்களாய் அவற்றுள் ஜீவரூபியாயிருப்பவன். பீம;—பயங்கரன்; அல்லது "அபீம." என்று ஸந்மார்க்கவர்த்திகளுக்குப் பய முண்டுபண்ணாதவன்.

344 దహరం విపాప్మం పరవేశ్మభూతం యత్పుండరీకమ్ ॥

345 వసతి హృది సనాతనే చ తస్మిన్ భవతి పుమాన్ జగతోఽస్య సౌమ్యరూపః ॥ బ్రహ్మవిద ఇవ సోమ్య తే ముఖం భాతి ॥

346 రక్షతే భగవాన్విష్ణుః భక్తానాత్మశరీరవత్ ॥

347 అభిషిచ్య చలజ్జాయామ్ ॥ ... విజ్వరః ప్రముమోద హ ॥

సమయజ్ఞో హవిర్హరిః। సర్వలక్షణలక్షణ్యో లక్ష్మీవాన్ సమితింజయః

கரன்; ஸமயஜ்ஞ:-ஸமயங்களைத் தெரிந்தவன், ஹவி:-குடுக்கல் வாங்கல் செய்பவன், ஹரி:-போக்கடிப்பவன், ஸர்வலக்ஷணலக்ஷண்ய:-ஸகல லக்ஷணங்களுமுள்ளவனாகவறியத்தக்கவன், லக்ஷ்மீவான்-லக்ஷ்மியோடுகூடியவன், ஸமிதிஞ்ஜய:-யுத்தத்தை ஜயிப்பவன்,

(வி.) இவனிடத்தில் பயத்தாலன்றோ வாயுமுதலான தேவர்கள் தநதாமுடைய வியவஸ்தையைக் கடவாமலிருக்கிறார்கள்? 348

ஸமயஜ்ஞ:—ஸமயமறிந்தவன்.

[என்றால்-அந்த அக்கினிமுதலியதேவதைகளில், அக்கினி உயரவே ஜ்வலிக்கவேண்டுமென்றும், வாயு எப்பொழுதும்வீசவேண்டுமென்று மிப்படிக்கெல்லாம் அவரவர்க்குத் தக்கபடி அதிகார நியமத்தைக்கண்டறிபவனென்றபடி. அல்லது. பக்தர்களுக்குத் தன்னைத்தரவேண்டிய ஸமயந்தெரிந்தவனென்றபடி. அல்லது, அவர்களுக்கு அபயப்பிரதானம் பண்ணுகிற விரதந் தெரிந்தவ னென்றபடி. 349

ஹவி.—சுருதி ஸித்தமான ஸமயமறிந்து அவர்களுக்கு ஸ்ரீயைக்கொடுப்பவன். அவர்கள் தரும் ஹவிஸ்ஸைப்பெற்றுக்கொள்பவன்.

ஹரி.—அவர்களுக்கு நேரிடும் விக்கினங்களைப் போக்குமவன். 350

(அவதாரிகை.) அநந்தரம்லக்ஷ்மீபதியான மூர்த்தியைச்சொல்லுகிறது.

ஸர்வலக்ஷண லக்ஷண்ய:—ஸாக்ஷாத் லக்ஷ்மீதேவியானவள் எப்போதும் ஆலிங்கநம் பண்ணிக் கொண்டிருக்கிறாளென்பதை யறிவிக்கின்ற ஸகல லக்ஷணங்களோடுங் கூடியிருப்பதாக அறியத்தகுந்தவன். 351

லக்ஷ்மீவாந்—லக்ஷ்மியோடு நித்தியமாய்க் கூடிவிளங்குமவன். 352

ஸமிதிஞ்ஜய:—சண்டையில் ஜயிப்பவன்,

[என்றால்—பிதாவைப்போல் ஹிதஞ்செய்கையாலே ஸகல லோக பிதாவான தன்னிடத்தில் அடிமைசெய்யும விஷயத்தில் விவாதம்பண்.

(அ.) ஸமயஜ்ஞ:—ஸ்ருஷ்டிமுதலிய ஸமயங்களறிந்தவன். அதவா-ஸகல பூதங்களிலும் ஸமமாயிருக்கையே யக்ஞமாகக் கொண்டவனென்றுமாம்,

ஹவிர்ஹரி:—யக்ஞங்களில் ஹவிர்ப்பாகங்களைக் கொண்டுபோமவன்

348 భీషాస్మాద్వాతః పవతే ॥

349 తస్య తావదేవ చిరం యావన్న విమోక్ష్యే అథ సంపత్స్యే ॥

350 హరిర్ హరతి పాపాని దుష్టచిత్తైరపి స్మృతః ॥

351 ధ్యాయేత్కమలగర్భాభం దేవం లక్ష్మీపతిం తతః । కమలాలయహేతీశవిభూషితః రహస్యామ్ ॥

352 ద్వాసుపర్ణైన్యో పరిణయే లీలయైవ సమర్పయన్ । ప్రకాశయన్నానాదిత్వమాత్మనా ప్రోక్తే స్వహా ॥

[విక్షరో రోహితో మార్గో హేతుర్దామోదరస్సహః ।]
[మహీధరో మహాభాగో వేగవానమితాశనః ।]

విక్షరః-குறையாதவன், రోహితః-சிவந்தவன், మార్గః - தேடப்படுமவன், హేతుః-காரணன், దామోదరః - உலகத்தைவயிற்றில்கொண்டவன், సహః-ஸஹிக்கிறவன், మహీధరః-புவியைத்தரிப்பவன், మహాభాగః-மஹத்தானஸௌபாக்கியமுற்றவன், వేగవాన్-வேகசாலி, అమితాశనః - அளவற்றஆஹாரமுண்பவன்,

(வி.) ஐவீக்கிற ஜீவகோடிகளை இந்த லக்ஷ்மியைக்கொண்டு வசப்படுத்திக்கொள்ளுமவன் என்றபடி.]

விக்ஷர:—இப்படி பக்தாளிடத்திலுண்டானப் பிரீதிமாறும விருப்பவன். ரோஹித:—(லக்ஷ்மீபதியான மூர்த்திக்குத் தாமரையின் உட்புறம் போன்ற திருமேனியாகையாலே) சிவந்தவன். மார்க்க:—இஷ்டஸித்திக்காக உபாஸகர்களால் தேடப்படுமவன். ஹேது:—இஷ்டஸிததிக்கு ஹேதுவானவன். தாமோதர;—லோகங்களை வயிற்றிற்கொண்டவன். [353]

[கயிற்றால் கட்டுண்டபடியாலும் தாமோதரன் என்றபடி. என்றால்—இப்படி லக்ஷ்மியும் ஆசைப்படும்படியான சாதுரியம் விஞ்சியிருக்கச்செய்தேயும் ஆச்சிரிதாளிடத்தில் வாத்ஸல்யத்தால் யசோதையினது கட்டுக்கப்பட்டிருந்தானென்றபடி.]

ஸஹ:—(இப்படி அவள்கட்டவும் அடிக்கவும் மிரட்டவும்) பொறுத்திருந்தவன். மஹீதர:—அவனே பூபாரத்தைப் போக்குகையாலே பூமியைத்தாங்குமவன்.

மஹாபாக:—மஹத்தானஸௌபாக்கியத்தையுடைத்தானவன்.

[என்றால்-ஸ்ரீதேவி தொடக்கமான பதினாறாயிரந் தேவிமார்களும் திவ்யகன்னிகையான ருக்மணிப் பிராட்டியும், ஸத்தியபாமை, ஜாம்பவதி தொடக்கமான நாய்ச்சிமார்களும் தாம் ஆசைப்பட்டு வரிக்கும்படியான ஸௌபாக்கிய முடைத்தானவன் என்றபடி.]

வேகவாந்-(மனிதரைப்போல் விளையாடும் பொழுதும் எதிரிடக்கூடாத பரமைசுவரிய முடையனாயிருக்கையாலே), வேகசாலியானவன். அதாவதெப்படி?. அமிதாசந:—அபரிமிதமாக இந்திரனுக்கென்றிடையர்களிட்ட பெருத்த ஆஹாரத்தை யமுதுசெய்தவன். [354]

(அ) ஹேது:—உபாதாந நிமித்தங்களென்கிற இரண்டுவிதகாரணமுமானவன். தாமோதர:—தாம என்று ஸாதநமாய் அதனால் அடையப்படும் (உதரா) உத்கிருஷ்டகதியானவன், உத்பவ:—ஸம்ஸாரத்தினின்றும் மேற்கிளம்பினவன். என்றால்அதீதனென்றபடி.

[353] దామాని లోకనామాని భాన్తి యస్యోదరాన్తరే । తేన దామోదరో దేవః ॥ తస్సదామోదరతాం ప్రయయా దామబన్ధనాత్ ॥ [354] దేవో వా దానవో వా త్వమ్ ॥

[ఉద్భవః క్షోభణో దేవః శ్రీగర్భః పరమేశ్వరః। కరణం కారణం కర్తా]

ఉద్భవః - ஸம்ஸாரநிவர்த்தகன, క్షోభణః - கலக்குமவன், దేవః - கிரீடிப்பவன், శ్రీగర్భః - திருவைவளர்ப்பவன், పరమేశ్వరః - பரமேசுவரன், కరణం - ஸாதகதமன், కారణం - காரணமானவன், కర్తా - கர்த்தா,

(வி) உத்பவः—"தாமோதரம் பந்தஹாரம்" என்கிறபடியே தனது பந்தத்தை நினைத்தவர்களுக்கு ஸம்ஸார பந்தத்தைப்போக்குகை யாலே ஸம்ஸாரம் நீங்கியவன். க்ஷோபணः—பந்தத்துக்கு உரிய வர்களையும் பந்திக்கின்ற பிரகிருதியையும் அலக்கழிப்பவன்.

தேவः—மாயையென்னும் பாசத்தால் ஜீவர்களைக் கட்டுப்படுத்தி, காடி புலி பன்றிகளை யிழுத்து விளையாடுவதுபோல் விளையாடுமவன். ஶ்ரீகர்ப்பः—இம்மாதிரியான போகக்கிரீடைகளுடன் கூடி, பெரிய பிராட்டியாரைமனமுவக்கச்செய்துவளர்ப்பவன்[355].

பரமேச்வரः—இப்படி பெரியபிராட்டியார் உகந்து கூடியிருக்கப் பெறுகையாலே தனது பரமைசுவரியத்துக்குப் பயன்பெற்றவன்.[356] கரணம்—ஸ்வப்ராப்தி ஸாதநங்களுள்தான், தலையாயிருப்பவன்.

[லோகத்தில் ஞாநகரணங்களான செவிகண் முதலியவைகளும், கிரியோப கரணங்களான கரசரணாதிகளும், இவனது சக்திலேசத்தைப்பெற்றிருக்கையாலே கரணமென்று பெயர்படைத்திருக்கின்றன.[357]]

காரணம்—அந்த கரணங்களைக்கொண்டு பிராணிகளுக்கு அதததன் வேலையைச்செய்விக்கும் தெய்வமானவன்.

கர்த்தா-கர்த்தாவானவன் என்றால்—செய்கைகளுக்கு அதிகாரியாய் அவற்றின் பயனைப்புசிக்கும் ஜீவன் எப்படி தனது இன்பதுன்பங்களுக்கு அபிமானியா யிருக்கிறானோ அப்படியே ஸர்வேசுவரனும் அந்த ஜீவர்களை விட அதிகமாய் அவர்கள் இன்பதுன்பங்களுக்குந் தான் அபிமானியாயிருக்

(அ.) ஶ்ரீகர்ப்ப:—ஜகத்ரூபமான ஶ்ரீயை கர்ப்பத்தில் கொண்டவன்.
காரணம்—உபாதாந காரணமும் நிமித்தகாரணமு மானவன்.
கர்த்தா—ஸ்வதந்திரன். விகர்த்தா—விசித்திர புவநத்தைச்செய்தவன்.

355 విష్ణోః శ్రేషాऽనపాయినీ ॥

356 అతీవ రామస్సుశుభేఽభిరామయా విభుః శ్రియా విష్ణురివామరేశ్వరః ॥

357 చక్షుశ్చ ద్రష్టవ్యఞ్చ నారాయణః శ్రోత్రఞ్చ శ్రోతవ్యఞ్చ నారాయణః ॥

[వికర్తాగహనో గుహః। వ్యవసాయో వ్యవస్థానః]

వికర్తా - விகாரமடைபவன், గహనః - கோசரமாகாதவன், గుహః - ரக்ஷிப்பவன், వ్యవసాయః - கட்டுப்படுத்துமவன், వ్యవస్థానః - வியவஸ்த்தைபண்ணுமவன், సంస్థానః - வைக்கப்படுமவன்,

(வி.) கிறான்[358] ஆகவே தான் 'பஹுஸ்யாம்' என்று தானே பஹுவாகிறதாக அபிமானிக்கிறான். அல்லாதபோது "பஹுஸ்யாம்" என்று இரானே!

விகர்த்தா—ஆகவே தான் ஜீவர்கள் அந்தபலனை அநுபவித்தபோது, தான் ஹர்ஷசோகங்களுக்கு இளைத்து விகாரமடைகிறான்.

பிரம்மத்துக்கு விகாரமுண்டாயிருப்பதாகச் சொன்னால் தோஷமன்றோ வென்றால்-தனக்காக விகாரப்பட்டால மாத்திரம் தோஷமேயொழிய பிறர்க்காக அடையும் விகாரம் தோஷமாகமாட்டாதென்றறிக. இப்படியன்றாகில் பிறருடைய துயரத்தைக்கண்டு துக்கபபடுவதெனகிற தயைமுதலிய குணங்கள் இவனுக்குண்டென்பதாகச் சொல்வது எப்படிகூடும்?

கஹநః—புத்திக்கெட்டாதவன்.

[என்றால்-இப்படி பிராணிகளுடைய ஞாநாயதநமான ஆத்மாவுக்கும் போகத்துக்கும் அதன் உபகரணஙகளுக்கும் தான் அபிமானியாயிருக்கிறானென்கிற மஹாகுணம பொருந்தியிருக்கையாலே அவ்விஷயத்தில் இன்னபடியென்றுசொல்ல புத்திக்கெட்டாதவ னென்றபடி. 359]

குஹః—இப்படி ரக்ஷிக்குமவன்.

அநந்தரம் த்ருவமூர்த்தியைச்சொல்லுகிறது:—

வ்யவஸாயః—தேஜஸ் சக்கிரஙகளையெல்லாம்அதிகமாய் தன்னில் கட்டுப்படுத்தும்.

[துருவ மூர்த்தியானவர் நக்ஷத்திரங்களுக் கெல்லாம் ஆதாரமான ஆகாச சரீரனாகையாலே இங்ஙனஞ் சொல்லுகிறதென்றறிக. 360]

வ்யவஸ்த்தாநః—கலையென்றும் முகூர்த்தமென்றும் மற்றும் பல்படிகளாகச் சொல்லப்படும் காலமும் தனனிடத்தில் தானே ஸ்தாபிக்கபபட்டிருப்பவன்.

ஸம்ஸ்த்தாநః—ஸர்வமும் தன்னில் முடியும்படியானவன்.

(அ.) வ்யவஸ்த்தாநః—லோகபாலாளுடைய அதிகார வியவஸ்தையையும் ஜராயுஜம், அண்டஜம் ஸ்வேதஜம், உத்பிஜ்ஜம் என்கிற ஜந்மவ்யவஸ்தையையும், பிராம்மண க்ஷத்திரியாதி ஜாதிவியவஸ்தையையும், அவற்றின் தர்மவியவஸ்தையையும், செய்தவன்.

[358] వ్యసనేషు మనుష్యాణాం భృశం భవతి దుఃఖితః । ఉత్సవేషు చ సర్వేషు పితేవ పరితుష్యతి ॥

[359] న హ్యస్య తే న్నవిజానన్తి దేవాః ॥ [360] ధ్రువ చక్ర భృతం ద్రువమ్ ॥

[స్థానదో ధ్రువః । పరర్ధిః పరమస్పష్టస్తుష్టః పుష్టశ్శుభేక్షణః ॥]

స్థానదః-ஸ்தாநத்தைத்தருமவன், ధ్రువః - ஸ்திரமாக்கச்செய்பவன், పరర్ధిః - உத்கிருஷ்டமான ஐசுவரியமுற்றவன், పరమస్పష్టః - பரத்வம்ஸ்பஷ்டமானவன், తుష్టః-ஸந்தோஷமுற்றவன், పుష్టః-பரிபூர்ணன், శుభేక్షణః - சுபமானபார்வை வயுற்றவன்,

(வி.) ஸ்தாநதஃ=பரமபதமென்னும் ஸ்தாநத்தைத் தருமவன்.

த்ருவஃ=த்ருவமாகப் பண்ணினவன்.

[என்றால்-உத்தமமான தனது ஸ்தாநத்தைத் தருகையாலே ஸாதாரணமான த்ருவனென்பவனையும் தருவமாக (அதாவது சாசுவதனாகச்) செய்தவன் என்றபடி.]

(அவதாரிகை.) அநந்தரம் ம்ருத ஸஞ்ஜீவநமான ராம வ்ருத்தாந்தம் சொல்லப்படும்.

பரர்த்திஃ=ஸர்வேசுவரனு யிருக்கையிற்காட்டில் உத்கிருஷ்டமான ஐசுவரியத்தை யுடையவன்.

["விஷ்ணுநா ஸத்ருசோவீர்யே ஸோமவத் ப்ரியதர்சநஃ" என்று ஸ்ரீ ராமனுடைய குணத்தின் ஏகதேசத்துக்கு திருஷ்டாந்தமாகச் சந்திராதிகளைச் சொன்னுப்போலவே அநுத்க்ருஷ்டாளான அந்தசந்திராதிகளோடொக்கப் பரனையும் திருஷ்டாந்தமாகச் சொல்லிற்றன்றே? மேலும் பரத்வாவஸ்த்தையும் இந்த அவதாரத்திலேயேயன்றே சொல்லப்பட்டது.[361]]

பரமஸ்பஷ்டஃ=தனது பரத்வம் ஸ்பஷ்டமாய் தெரியும்படி விளங்குமவன்.[362] துஷ்டஃ=பிரீதியடைந்தவன்.

[என்றால்-மற்றொருவர்க் கேலாத பாரத்வதசையிற்காட்டில் இவ்வவதாரத்தில் இதர மநுஷ்யாதிகளுக்கும் யோக்கியமான தசரத புத்திரனுகுந் தன்மையோடுகூட ஜகத்பாலநமு முண்டாகப் பெறுகையாலே ரொம்பவும் பிரீதனுயிருக்கு மென்றபடி.[363]]

புஷ்டஃ=இப்படி மஹாகுணங்களால் பரிபூர்ணன். சுபேக்ஷண:=

(அ) த்ருவஃ—நாசமடையாதவன், சுபேக்ஷணஃ—மோக்ஷகாமருக்கு மோக்ஷத்தையளிப்பதும், போககாமருக்கு போகத்தைத் தருமதும், ஸர்வஸந்தேஹங்களையும் நீக்குமதும், ஸகல கர்மங்களையும் நசிப்பிப்பதும், அவித்தையை நிவர்த்திப்பதுயான பார்வையுற்றவன்.

[361] అవ్యక్తమక్షరం బ్రహ్మనిర్మితమ్ । దేవానాంహృదయం సౌమ్యంసహ్యారాఘఃపరన్తపః ॥

[362] వ్యక్తమేషమహాయోగీపరమాత్మాసనాతనః ॥

[363] పితరంరోచయామాసతదాదశరథంనృపమ్ ॥

[రామో విరామో విరతో మార్గో నేయో నయో]

రామః - ரமிக்கச்செய்பவன், విరామః - ஒழிப்பவன், విరతః - ஒழிந்தவன், మార్గః - தேடப்படுமவன், నేయః - நியமிக்கத்தக்கவன், నయః - ஆகர்ஷகமானவன்,

(வி.) இவ்விக்ரமானைச்வரியம், சீலம் முதலியவைகளின் அதிசயத்தைக் கோழ்ச்சொல்லுமவைகளாய், குளிர்ந்து விசாலமாய் கெம்பீரமாய் விளங்குந் தாமரைபோல் அழகிய திருக்கண்களுடையவன். [364]அதவா, தன்னைக்காண்பதும் தான்காண்பது மிரண்டும் சுபமாயிருக்கும்படி விளங்குமவன். [365]

ராமः = தன்குணரூபங்களைக்கண்டு வசப்பட்ட ஸகலப்பிராணிகளும் தன்னில் ரமிக்கும்படி [366]விளங்குமவன். விராமः = ஒழிப்பவன்.

[என்றால்-வரந்தரும் மிடுக்குடையரானப் பிரம்மாதிகளும், அழிவில்லாமை முதலிய அவர்கள் தந்த வரங்களும், அந்தவரம்பெற்ற ராவணாதிகளும், இவனிடத்தில் செல்லமாட்டாமல் ஒழிவர்களென்றபடி. [367]]

விரதः = ஸ்வபாவமாகவே நிரபேக்ஷனுகையால் அதிக்ஷுத்ரமான ராஜ்யாதிகளைக் கணிசியாமல் உபேக்ஷித்துக் கைவொழிந்தவன். [368]

மார்கः = பரத்துவாஜாதி முனிகளால் தேடப்படுமவன்.

["விரஜோமார்க்கः" என்று பாடமாகில் நிர்தோஷமான வழியைக் காட்டுமவன் [369]என்று கொள்வது.]

நேயः = ஸுஹ்ருத்துக்கள் ஏவும்படி ஸுலபமானவன். [370] நயः = அவர்களும் அப்படியே தன்சொல்வழி வரும்படி [371]விளங்குமவன்.

சதுர்த்தசதகம்—ஸம்பூர்ணம்.

(அ.) விரஜः—என்றபொழுது, விஷயத்தில் ராகமற்றவனென்றுபொருள்.

[364]సుభ్రూరాయతతామ్రాక్షః సాక్షాద్విష్ణురివ స్వయమ్ ॥

[365]యశ్చ రామం న పశ్యేత్తు యం చ రామో న పశ్యతి । నిన్దితస్స వసేల్లోకే స్వాత్మాప్యేనం విగర్హతే ॥ [366]రామో రమయతాం శ్రేష్ఠః ॥ గుణాభిరామం రామం చ ॥

[367]బ్రహ్మా స్వయమ్భూశ్చతురాననో వా ॥

[368]నచాస్య మహతీం లక్ష్మీం రాజ్యనాశో ఽపకర్షతి ॥

[369]యా గతిర్యజ్ఞశీలానామాహితాగ్నేశ్చ యా గతిః ॥

[370]ఆజ్ఞాప్యోఽహం తపస్వినామ్ ॥ అయమస్మి మహాబాహో బ్రూహి యత్తే వివక్షితమ్ । కరిష్యామి హి తత్సర్వం యత్త్వం వక్ష్యసి భారత ॥

[371]రక్షితవ్యాస్త్వయా శశ్వద్గర్భభూతాస్తపోధనాః ॥

ஸ்ரீ:

பஞ்சமசதகம்.

[నయః । వీరశ్శక్తిమతాం శ్రేష్ఠో ధర్మో ధర్మవిదుత్తమః ॥ వైకుంఠః]

అనయః - நயம்படாதவன், వీరః - வீரன் శక్తిమతాం శ్రేష్ఠః - சக்தியுள்ளவரிற்சிறந்தவன், ధర్మః - தர்மன், ధర్మవిదుత్తమః - தருமந்தெரிந்தவர்தலைவன், వైకుణ్ఠః - கலக்கச்செய்பவன்,

(வி) அநய:—கெடுமதியான ராவணாதிகளுக்குச் சிறிதும் நயமின்றி யிருப்பவன். அதவா-லோகத்திற்குத் தன்னைத்தவிர வேறு சுபமான விஷயமில்லாதபடி [372]விளங்குமவன்.

வீர:—ராக்ஷஸர்களைப் பயந்தோடச்செய்பவன்.[373]

சக்திமதாம் ச்ரேஷ்ட்ட:—சக்தியுடையோரான தேவாதிகளால் ரொம்பவுங் கொண்டாடப்படுமவன். இப்படியே பராசரமன் [374]கொண்டாடினார்.

தர்ம:—போகமோக்ஷங்க ளிரண்டுக்கும் ஸாதநமாயிருக்கையாலே தர்மமானவன். இப்படியே [375]பிரம்மா சொன்னார். இளைய பெருமாளும் [376]இப்படியே அருளிச்செய்தார்.

தர்மவிதுத்தம:—தருமந்தெரிந்த வஸிஷ்டர், வாமதேவர், மார்க்கண்டேயர், முதலானோரும் இங்கேகேட்டுணரும்படி அவர்களில் தலையானவன்.[377]

வைகுண்ட:—ஸகலத்தையும் உறவாக்குமவன்.[378]

(அ) அநய:—தனக்கோர் நியாமகனில்லாதவன். தர்ம:—ஸர்வ பூதங்களுக்கும் தாரணமானவன். தருமங்களால் ஆராதிக்கப்படுமவன் என்றுமாம்.

[372] ఏతే వయం సర్వసమృద్ధకామా యేషామయం నో భవితా ప్రశాస్తా ॥

[373] బ్రహ్మదణ్డప్రకాశానాం విద్యుజ్జ్వలితవర్చసామ్ । స్మరన్ రాఘవబాణానాం వివ్యథే రాక్షసేశ్వరః ॥

[374] అక్షయ్యం మధుహన్తారం జానామి త్వాం సురేశ్వరమ్ ॥

[375] బ్రహ్మవిదాం వరః ॥ లోకానాం త్వం పరో ధర్మః ॥

[376] ధర్మాత్మా సత్యసన్ధశ్చ రామో దాశరథిర్యది । పౌరుషే చాప్రతిద్వన్ద్వశ్శరైనం జహి రావణిమ్ ॥

[377] సర్వదాఽభిగతస్సద్భిః సముద్ర ఇవ సిన్ధుభిః ॥

[378] మయా సంశ్లేషితా భూమిరద్భిర్వ్యోమ చ వాయునా । వాయుశ్చ తేజసా సార్ధం వైకుణ్ఠత్వం తతో మమ ॥

[పురుషః ప్రాణః ప్రాణదః ప్రణమః పృథుః ।]
[హిరణ్యగర్భశ్శత్రుఘ్నో వ్యాప్తో]

పురుషః - பரிசுத்தன், ప్రాణః - ஜீவனமானவன், ప్రాణదః - பிராணனைத்தருமவன், ప్రణమః - வணங்கவைப்பவன், పృథుః - பருத்தவன், హిరణ్యగర్భః - ஸுவர்ணத்துக்குள்ளுறைபவன், శత్రుఘ్నః - பகைவரைவெல்பவன், వ్యాప్తః - வியாபித்தவன்,

(வி.) [இப்படியே யன்றோ இவ்வவதாரத்தில் இவன் ஸன்னிதியில் பிராணிகள் ஒன்றையொன்று [379]அபேக்ஷிக்கிறதும், இவன் அஸந்நிதியில் ஒன்றும் வேண்டாதபடி [380]விரக்தியா யிருக்கிறதும்?

புருஷ:—பரமபாவநன் [381]. ப்ராண:—ஸகலரையும் பிழைக்கும்படி செய்பவன். ப்ராணத:—பிராணன்களைத் தருமவன். ஆகையாலன்றோ இவரைப் பிரிந்தபொழுது மரங்களும் வாடிப்போயின? ப்ரணம:—தனது குணங்களால் சராசரங்களை வணங்கச்செய்பவன் [382]. ப்ருது:—கீர்த்தியால் பருத்தவன் [383].

(அ-கை.) அவதார அஸம காலவர்த்திகளால் தியானிக்கப்படுகையாலே அவர்களுக்கும் சுபாச்ரயமாய் விளங்கி உபகரித்தபடி சொல்லுகிறது:—

ஹிரண்யகர்ப்ப:—இதமாயும் ரமணீயமாயு மிருக்கிற தியாநயோகிகளின் உள்ளத்துக்குள் பிரகாசிப்பவன். சத்ருக்ந:—அப்படி தியாநிப்பவர்களுக்கு விரோதியான சப்தாதி விஷயங்களை ராவணனையழித்ததுபோல் அழிப்பவன் [384]. வ்யாப்த:—குழந்தை விருத்தர்கள், ஸ்வாமி, ஸேவகன், சத்துரு, மித்திரன் முதலானோர் யாவரிடத்திலும வாத்ஸல்யம் ஸமமாகையாலே எங்கும் வியாபித்தவன். [385]

(அ.) ப்ராணத:—பிரளயகாலத்தில பிராணிகளின் பிராணனைக்கண்டிப்பவன், ஸ்ருஷ்டியில் பிராணனைத் தருமவனென்றுமாம்.

ஹிரண்யகர்ப்ப:—ஹிரண்யகர்ப்பனென்கிற பிரம்மாவின் பிறப்பிடமான ஸுவர்ணமயமான அண்டத்தை வயிற்றிற்கொண்டவன்.

379 రామమేవానుపశ్యన్తో నాభ్యహింసన్పరస్పరమ్ ॥

380 వ్యసృజన్కబళాన్నాగా గావో వత్సాన్నపాయయన్ ॥

381 పావనస్సర్వలోకానాం త్వమేవ రఘునన్దన ॥

382 హృదయాన్యామమన్థేవ జనస్య గుణవత్తయా ॥

383 పృథుశ్రీః పార్థివాత్మజః ॥ రామో నామ జనైః శ్రుతః ॥

384 దశేన్ద్రియాననం ఘోరం యో మనోరజనీచరమ్ । వివేకశరజాలేన శమం నయతి యోగినామ్॥ 385 పౌరాన్ స్వజనవన్నిత్యం కుశలం పరిపృచ్ఛతి । పుత్రేష్వగ్నిషు దారేషు ప్రేష్యశిష్యగణేషు చ ॥ రిపూణామపి వత్సలః ॥

[వాయురధోక్షజః ॥ ఋతుస్సుదర్శనః కాలః]

[పరమేష్ఠీ పరిగ్రహః ॥ ఉగ్ర]

వాయుః - செல்பவன், అధోక్షజః - குறைவுபடாதவன், ఋతుః - நலம்பொருந்தியவன், సుదర్శనః - நன்குகாணக்கூடியவன், కాలః - கவர்ந்துக்கொள்ளுமவன், పరమేష్ఠీ - பரமபதத்திலிருப்பவன், పరిగ్రహః - எங்கும்கிரஹிப்பவன், ఉగ్రః - உக்கிரமானவன்,

(வி.) வாயுః—தானே ஆங்காங்கு அவர்களிருப்பிடம் தேடிப்போமவன். 386

அதோக்ஷஜః—இப்படித்தான் அமுதக்கடல்போல் யாவராலும் எப்போதும் அநுபவிக்கப் படாநின்றாலும் குறைவுபடாதவன். ருதுః—எப்போதும் நூதனமாய் ஸகலருக்கும் உல்லாஸத்தைத் தரும்படியான குணங்களோடுகூடியவன்[387]. ஸுதர்சநః குணப்ரபாவ மறியாதவர்களுக்குக்கூட தனது தர்சநமே சுபமாயிருக்கும்படி விளங்குமவன். காலః—இப்படிப்பட்ட தனது ஆத்மகுணங்களைக்கொண்டு சராசரங்களையுந் தன்னுள் சேர்த்துக் கொள்ளுமவன்.

பரமேஷ்டீ—இப்படி ராவணவேட்டையாடியும் லோகத்தை ரக்ஷித்தும் விஹரித்து, மறுபடியும் பரமபதத்தில்தானே விளங்குமவன்[388].

பரிக்ரஹః—எங்குள்ளவைகளையும் கிரஹித்துக் கொள்பவன்.

[என்றால்-தனது ஸம்பந்தம்பெற்ற பட்டணவாஸிகளும் கிராமவாஸிகளுமான பிராணிகளென்ன, இன்னும் தத்ஸம்பந்திகளான செடிகொடி முதலியவைகளென்ன இவையெல்லாவற்றையும் பரமபதத்தேறக்கொண்டுசென்றவன்.]

(அவதாரிகை.) அநந்தரம் அஸாதுக்களை சிக்ஷிக்கின்ற பாதாளவாஸியான கல்கிவிருத்தாந்தம் சொல்லப்படும்.

உக்ரః—யுகத்தின் முடிவில் பாபம் அதிசயித்து வர்ணாசிரம வியவஸ்தைகளெல்லாங் குலையும்பொழுது உக்கிரமாய் விளங்குமவன். 389

(அ.) ருது:—ருதுவென்கிற காலத்தால் காணப்படுமவன். பரிக்ரஹః—பக்தர்கள் அளித்த அற்பபதார்த்தங்களையும் பரிக்கிரஹிப்பவன்.

386 సోఽభ్యగచ్ఛన్మహాతేజాః శబరీం శత్రుసూదనః ॥

387 ఘర్మాభితప్తాః పర్జన్యం హ్లాదయన్తమివ ప్రజాః ॥

388 వివేశ వైష్ణవం తేజః సశరీరస్సహానుగః ॥

389 సంహారమూర్తయే కాలవైశ్వానరాత్మనే ॥

[సంవత్సరోదక్షో విశ్రామో విశ్వదక్షిణః ॥ విస్తారస్థావరస్థాణుః]
[ప్రమాణంబీజమవ్యయం ।]

సంవత్సరః - வஸிப்பவன், దక్షః-ஸமர்த்தன், విశ్రామః-இளைப்பாரு மிடமானவன், విశ్వదక్షిణః - எதிலும் ஸமர்த்தன், విస్తారః - விஸ்தரிக்கச்செய்பவன், స్థావర-స్థాణుః - நிலைநிறுத்தியடங்குமவன், ప్రమాణమ్ - பிரமாணமானவன், బీజమవ్యయమ్ - அழியாத விரைமுதல்,

(வி.) ஸம்வத்ஸரः—பாதாளத்தில் ஸம்ஹாரத்துக்கேற்ற பரிகரங்களோடு ஸமயத்தை யெதிர்பார்த்துக்கொண்டு திருவநந்தாழ்வான் மீதெழுந்தருளி யிருப்பவன். 390

தக்ஷः—திருடரையழிப்பதில் சீக்கிரமாயிருப்பவன்391. விச்ராமः— பாவத்தையும் அதன்பயனையும் அநுபவித்து அதனால்களைத்தப் பிராணிகளுக்கு இளைப்பாரு மிடமானவன்.

(அவதாரிகை.) அபசாரப்பட்டவர்கள் விஷயத்தில் எப்படி ஹிதஞ் செய்யுமென்னில் சொல்லுகிறது:—

விச்வதக்ஷிணः—இஷ்டத்தைச் செய்தாலும் அநிஷ்டத்தைச்செய்தாலும் எல்லாரிடத்திலும் தாக்ஷிண்யமா யிருப்பவன்392. அபகாரிகளைக்கூட பொறுப்பதன்றோ தாக்ஷிண்யமாவது?

அதவா—அசுவமேதத்தில் விசுவம்பரையென்னுந் தக்ஷிணையுடையவனென்றுமாம். விஸ்தாரः—கலியின் பெலனையழித்து கிருதயுகத்தை ப்ரவர்த்திப்பிக்கவேண்டி வேதமரியாதையை 393விஸ்தரிப்பிப்பவன்.

ஸ்தாவரஸ்தாணுः—இப்படி தருமத்தை நிலைக்கச்செய்து பிறகு ஆறியிருப்பவன். ப்ரமாணம்—அநந்தரம் கிருதயுகப் பிராணிகளுக்கு இது ஹிதமென்றும் இது அஹிதமென்றும் வியவஸ்தைபண்ணித் தருமவன். இவனது சக்திலேசத்தைக்கொண்டுதான் பிரத்தியக்ஷாதிகளும் பிரமாணமாகின்றன. இதற்கு 394வசநம்.

பீஜம் அவ்யயம்—(இப்படி கலிமுதலிய துஷ்காலங்களாலே தருமமார்க்கன் தலையழிந்தபோது அதை மறுபடியும் முளைக்கச் செய்கையாலே) அழியாத முதலானவன்.

390 అనన్తశయనారూఢంచక్రాద్యాయుధబృన్దైనమూర్తేనపరివారితం ॥

391 క్షిప్రకారీజనార్దనః ॥

392 సఇమంసకలంలోకంప్రసాదముపనేష్యతి ॥

393 తతోధర్మవినాశో వైధర్మవృద్ధిశ్చభారత ॥ భవిష్యతికృతేప్రాప్తేక్రియా వాంశ్చజనస్తథా ॥

394 తచ్ఛీలమనువర్తన్తేమనుష్యాలోకవాసినః ॥

[అర్థో௨నర్థో௨మహాకోశోమహాభోగోమహాధనః ॥ అనిర్విణ్ణ]

అర్థః - புருஷார்த்த மானவன், అనర్థః - யாசிக்கப்படாதவன, మహాకోశః - பெரிய பணச்சாலை யுடையவன், మహాభోగః - மஹத்தான போகன், మహాధనః - அதிகதந முடையவன், అనిర్విణ్ణః - ஆலஸ்யமுறாதவன்,

(வி.) அர்த்தః—(அநந்யப் பிரயோஜநனாய் பக்தியொன்றையே பற்றிய வதிகாரிக்குத்தானே) புருஷார்த்தமாய் நின்றவன்.[395]

அநர்த்தః—அல்பஸுகிருதம் செய்த அர்த்தகாமன் அர்த்தத்தைஅபேக்ஷிக்கையால் அவனால் ஸ்வயம் புருஷார்த்தமாய் அர்த்திக்கப்படாதவன்.

மஹாகோசః—எப்போதும் எல்லாருக்கும் எல்லாவிதத்தாலும் வழங்கினாலும் குறையாமல், பெரிதாயிருக்கின்ற சங்கம் பதுமம முதலிய நிதிகளையும் மேருமுதலிய பருவதங்களையும் தநசாலையாகவுடையவன்.

மஹாபோகः—அர்த்தத்தால் ஸாதிக்கவேண்டிய போகமும் தன்னால் விசேஷமாய்க் கிடைக்கும்படி விளங்குமவன்.[396]

மஹாதநः—அளவிடப்போகாமல் மஹத்தான தனமுடையவன். இவ்வர்த்தங்களை யெல்லாம் [397]ஸ்ரீப்ரஹ்லாதாழ்வான் அருளிச்செய்தார்.

அநிர்விண்ணः—இப்படி ஸ்ருஷ்டி முதலியவைகளையும், அவரவர்க்கு இஷ்டதானங்களையும் அடிக்கடி செய்துவரச் செய்தேயும், ஸம்ஸாரிகள் சப்தாதிவிஷயத்திலுண்டான ப்ரீதியால் தன்னைக்கணிசியாதபோது தான் பண்ணின க்ருஷிநிஷ்பலமானாலும், மீண்டும் அவர்களை ஸ்வாதீநம் செய்யலாமோவென்கிற துராசையால் சற்றும் ஓய்வின்றி மறுபடி முயற்சிசெய்பவன். இத்தைப்

(அ) அநர்த்த:—தான் ஆசைப்படும்படி யாதொன்று மில்லாதவன், மஹாகோசः—அன்னமயாதிகளான மஹாகோசங்களுள்ளவன். அநிர்விண்ணः—வெறுப்பில்லாதவன்.

[395]జ్ఞానవాన్మాంప్రపద్యతే । వాసుదేవస్సర్వమ్ ॥

[396]లభతేచతతః కామాన్ మయైవవిహితాన్ హితాన్ ॥

[397]మరీచిమిశ్రైర్దక్షేణతథైవాన్యైరనన్తతః । ధర్మః ప్రాప్తస్తథాచాన్యైరర్థః కామస్తథాపరైః ॥

[స్థవిష్ఠో భూర్ధర్మయూపో మహామఖః నక్షత్రనేమిర్నక్షత్రీ క్షమః]

స్థవిష్ఠః - பருத்தவன், భూః - ஸர்வாதாரன், ధర్మయూపః - தருமத்தைக்கலப்பவன், మహామఖః - பெரியயக்ஞத்தை அவயவமாயுடையவன், నక్షత్రనేమిః - நக்ஷத்திரங்களை நடத்துமவன், నక్షత్రీ - நக்ஷத்திரவடிவமெடுத்தவன், క్షమః - வஹிப்பவன், క్షామః - குறை

(வி.) பற்றியன்றோ இவனுக்கு ஜகத்வியாபாரம ஒப்வுறுமலிருக்கிறது?[398] ஸ்தவிஷ்டஃ=சிம்சுமாரமென்கிற முதலைவடிவமாய்[399] பருத்திருப்பவன்.

பூஃ=துருவனைத்தாங்குகையாலே ஸர்வாதாரமானவன்.[400]

தர்மயூபஃ=தருமமென்கிற தத்வத்தைத் தலையாகச்சமைத்துக்கொண்டவன்[401]. மஹாமகஃ=தர்ம சரீரனுகையாலே பூஜ்யமான யக்ஞத்தை அவயவமாகக் கொண்டவன்.

நக்ஷத்ரநேமிஃ=ஜோதிச்சக்கிரத்தை நடத்துமவன்.[402]

நக்ஷத்ரீ-சிம்சுமாராகாரமான நக்ஷத்திர ரூபந்தரித்தவன்.[403]

க்ஷமஃ=இப்படி ஸகலபுவந பாரத்தையும் லக்ஷியமின்றி வஹிப்பவன்.

க்ஷாமஃ=அவாந்தரத்திலுண்டான க்ஷயத்தாலே சில நக்ஷத்திரங்களால் குறைவுபட்டிருப்பவன்.[404]

(அ) ஸ்தவிஷ்டஃ—விராட்ரூபமா யிருப்பவன். அபூஃ—பிறப்பிலி.

மஹாமகஃ=தனக்கெஅறு ஸமர்ப்பித்த யாகங்களெல்லாம் மஹாயஙங்களைத் தருகையாலே மஹத்தாகும்படி விளங்குமவன்.

க்ஷாமஃ—ஸர்வவிகாரங்களுமற்று. ஸ்வஸ்வரூபமாயிருப்பவன்.

398 అవుభ్యుచ్ఛిన్నాస్తతస్త్వేతే సర్గస్థిత్యన్తసంయమాః ॥

399 తారామయం భగవతః శింశుమారాకృతి ప్రభోః ॥

400 తస్య పుచ్ఛే ధ్రువః స్థితః ॥

401 ధర్మో మూర్ధానమాశ్రితః ॥

402 ఏవ భ్రమన్ భ్రామయతి చన్ద్రాదిత్యాదికాన్ గ్రహాన్ । భ్రమన్తమనుతం యాన్తి నక్షత్రాణి చ చక్రవత్ ॥

403 శింశుమారాకృతి ప్రోక్తం యద్రూపం జ్యోతిషాన్దివి । నారాయణో యనస్థానం తస్యాధారః స్వయం హృది ॥

404 యావన్త్యత్ర పదే శేతు సైన్యే యావన్తి తో ధ్రువః । క్షయమాయాన్తి తావత్తు భూమేరాభూత సంప్లవే ॥

[క్షామస్సమీహనః ॥ యజ్ఞ ఇజ్యో మహేజ్యశ్చ క్రతుస్సత్రం సతాంగతిః]
సమీహనః - நியமிப்பவன், యజ్ఞః- யக்ஞஸ்வரூபன், ఇజ్యః-யஜிக்கப் படுமவன், మహేజ్యః - பெரியயக்ஞரூபன், క్రతుః - ஆராதிக் கப்படுமவன, సత్రమ్ - இருப்பவன், సతాంగతిః - ஸத்துக்களுக்குக்

(வி.) ஸமீஹந:=அநந்தரம் ஸ்ருஷ்டியில் ஸகலரையும் எப்போதும் தீந்தம் அதிகாரங்களில்[405] நியமிப்பவன்.

யக்ஞ:=யக்ஞமாயும் அதன் ஸாதநமாயும் அதன்பலனாயும் சொல்லப்படுகையாலே[406] யக்ஞஸ்வரூபன்.

இஜ்ய:=காமாதிகாரிகளால் இந்திரன் முதலிய தேவதா முகமாய் ஆராதிக்கப்படுமவன்[407]. மஹேஜ்ய:=(காமத்தி விச்சையற்ற விலக்ஷணாதிகாரிகளாலே நேரே தன்னை உத்தேசித்துப் பண்ணப்படும்) மஹாயக்ஞரூபமானவன்.[408]

க்ரது:-(பஞ்சமஹா யக்ஞங்கள்; ஔபாஸநாதிகள், ஏழு பாகயக்ஞங்கள், சுருதியிற்சொன்ன அக்கினிஹோத்திரம் முதலியவைகள், ஏழுஹவிர்யக்ஞங்கள், யக்ஞசப்தத்தாலே சொல்லப்படும அக்னிஷ்டோமாதிகள், ஏழுஸோம ஸவநங்கள், இவைகளால் ஆராதிக்கப்படுகையாலே) க்ரதுஸ்வரூபன்.

ஸத்ரம்=நெடுநாள் அநேகம் யஜமாநர்கள்கூடி யாகோபவாஸாதிகளிருந்து செய்யவேண்டும ஸத்திரயாகத்தால் எப்போதும் ஆராதிக்குமபடியானவன்.

(அவதாரிகை) இப்படி இதுவரையில் பிரவ்ருத்திதர்மநிஷ்டருக்குக் கதியென்றதாயிற்று. மேல் நிவ்ருத்தி தர்மநிஷ்டருக்குக கதியெனகிறது.

ஸதாம்கதி:=ஸத்துக்களுக்குக் கதியானவன்.[409] ஸாவதர்சீ=இவ்விருவகைத் தருமத்தையும அத்தியக்ஷனாய்க்கொண்டு காணுமவன்.

(அ) மஹேஜ்ய:—யாகம்செய்யவேண்டிய தேவர்களில் இவன் மோக்ஷதாதாவாயிருக்கையாலே மஹத்தானவன். ஸத்ரம்—ஸத்துக்களைக்காப்பவன்

---

405 తాంభూతాన్యుపపర్యావర్తన్తే ॥

406 ఇజ్యాఫలస్య భూరేషా ఇజ్యా చాత్ర ప్రతిష్ఠితా ॥

407 యేయజన్తి పితౄన్దేవాన్ బ్రాహ్మణాన్ సహుతాశనాన్ । సర్వభూతాన్తరాత్మానం విష్ణుమేవ యజన్తి తే ॥

403 యేతు సర్వాణి కర్మాణి ॥

409 నిర్ధూతదోషపఙ్కానాం యతీనాం సంయతాత్మనామ్ । స్థానస్తత్పరమం విప్ర పుణ్యపాపపరిక్షయే ॥

[సర్వదర్శీ నివృత్తాత్మా సర్వజ్ఞో జ్ఞానముత్తమం ॥]
[సువ్రతస్సుముఖస్సూక్ష్మస్సుఘోషస్సుఖదస్సుహృత్ ।]

கதியானவன், సర్వదర్శీ - ஸகலத்தையுங்காண்பவன், నివృత్తాత్మా - நிவர்த்தித்தமன முடையவன், సర్వజ్ఞః - ஸகலமுமறிபவன், జ్ఞానముత్తమమ్ - உத்தமஞானஸ்வரூபன், సువ్రతః - நல்லவிரதம் பூண்டவன், సుముఖః - ஸுமுகமானவன், సూక్ష్మః - ஸூக்ஷ்மஸ்வரூபன், సుఘోషః - நல்லகோஷமுற்றவன், సుఖదః - சுகத்தைத்தருமவன், సుహృత్ - நல்லஹ்ருதயமுற்றவன்,

(வி.) (அவதாரிகை.) அதில் நிவ்ருத்தி தர்மாசாரியனான நரநாராயணாவதாரஞ் சொல்லுகிறது:—

நிவருத்தாத்மா=பரமவைராக்யத்தைப் பிரகாசிப்பிப்பதற்காக விஷயங்களினின்றும் மனதைத் திருப்பியவன். 410

ஸர்வஜ்ஞ:=அப்படியே ஸர்வப்பிரகாரத்தாலும் தன்னை யறிபவன்.

ஜ்ஞாநம் உத்தமம்=உத்தமமான வைஷ்ணவ தர்மங்களனைத்து மறிந்த ஞாநஸ்வரூபன். 411

ஸுவ்ரத:="நமேபார்த்தாஸ்தி கர்தவ்யம்" என்று தான் தனக்கென்று சிறிதும் செய்யவேண்டாமலிருக்கச்செய்தே பிறருக்காகச் செய்கையாலே சோபநமான விரதத்தை யநுட்டிப்பவன். 412.

ஸுமுக:=ஜபம்முதலியவைகள் அநுட்டிக்கும் பொழுதும் விகாரமடையாமையாலே தெளிந்த முகத்தையுடையவன் 413.

ஸூக்ஷ்ம:=தனக்குத்தானே ஸமாதிக ரஹிதமான ஸூக்ஷ்மதத்வத்தை ஸாக்ஷாத்கரித்தவன்.

ஸுகோஷ:=உபநிஷத் ஸம்பந்தமான நல்லகோஷத்தை யுடையவன்.

ஸுகத:=இப்படி ஸதாசாரமான ஸமாதியைக் கறபிக்கையாலே அந்த நிஷ்டையுடையவருக்குப் பயனான பரமஸுகத்தைத் தருமவன்.

இப்படி யிவன் பரோபகார சீலனாயிருக்கைக் கடியென்னென்னில்:—

ஸுஹ்ருத்=நல்ல ஹ்ருதயமுடையவன்.

[என்றால்-உபகாரம் பண்ணாதவன்விஷயத்தில்கூட இவனுக்கென்ன

(அ) ஸர்வஜ்ஞ:—ஸர்வஸ்வரூபனா யிருக்கச்செய்தே ஞாநாகாரமானவன்,

410అత్ర ధ్యానపరాయణాయ ॥

411పర స్తమునిశంశా స్త్రింపశ్చురా త్రిపురస్సరమ్ ॥

412ఏక పాదేనతిష్ఠ న్తమూహర న్తం చమూదుతమ్ । పక్షమాసోపవాసాంశ్చదిశ న్తమనుచి న్తయేత్ ॥

413ఓంకారలక్షణంమంత్రంజపన్నా న్తరలక్షితం॥ కృష్ణాయకమలదళామలనేత్రాయ ॥

[మనోహరో జితక్రోధో వీరబాహుర్విదారణః ||]

[స్వాపనస్స్వవశో వ్యాపీ]

మనోహరః - மனதைஹரிப்பவன், జితక్రోధః - கோவத்தைஜயித்தவன், వీరబాహుః-வீரமானதோள்களுடையவன், విదారణః-பிளந்தவன், స్వాపనః - தூங்கச்செய்பவன், స్వవశః - ஸ்வதந்திரன், వ్యాపీ-வியாபிக்குமவன்,

(வி.) வேண்டுவது! நாமென்செய்யலாம்! என்று நன்மையைததேடும்படியான ஹிருதயமுடையவனென்றபடி.]

மநோஹரஃ—இப்படி ஸ்வபாவமாகவே ஸுஹ்ருத்தாயிருக்கையாலே அவர்களுடைய மனதைக் கொள்ளைகொள்ளுமவன்.

ஜிதக்ரோதஃ—அவர்களுடைய கோபம்முதலியவைகளை ஜெயித்தவன்.

[அதவா-மற்றொருயோஜனை:—

ஸுமுகஃ—அமுதங் கொண்டபோதிருந்த இருப்பைச் சொல்லுகிறதாய், அழகிய திருமுக மண்டலத்தையுடையவன். 414

ஸூக்ஷ்ம:-அசுரர்விஷயத்தில் மறைந்த அபிப்பிராயங் கொண்கையாலே ஸூக்ஷ்மன்.

ஸுகோஷஃ—தேவாசுரர்களிடும்கோஷத்தோடுகடைகிறகோஷமும் கூடியிருக்கையாலே அத்புதமான கோஷமுடையவன்.

ஸுகத:—அமுதந்தருவது முதலான சுகத்தைத்தந்தவன்.

ஸுஹ்ருத்—அதற்குக்காரணமான நல்ல ஹிருதயமுடையவன். அசுரரைமயக்குந் தன்மையனுகையாலே மநோஹர:-மனதைத்திருடுமவன்415. ஜிதக்ரோதஃ—தன்னிடத்தில் ஆச்சரியத்தைக்காட்டி அதனால் தேவர்களிடத்தில் அசுரர்க்குண்டான கோபத்தை ஜயித்தவன்.]

வீரபாஹுஃ—(மணிமயமான கஙகணமும் தோள்வளையும் முதலானவடங்களும் திருமாலையும் அலையும்படி, க்ஷீரஸாகர மதநத்தில் நான்முன்னே நான்முன்னேயென்று பாபரக்கின்ற) அதிபராக்கிரமமுள்ள திண்டோள்களுடையவன். விதாரண:—(திவ்வியாஸ்திரங்களாலே ராஹு முதலானோரைப்) பிளந்தவன்.

ஸ்வாபந:—(அப்படி யொழிந்தவர்போக மற்றும் மிகுந்தோரையும் அதிஸுந்தரமான தனது புன்சிரிப்பாலும் இனியதான கடாக்ஷத்தாலும் புருவங்களின் விலாஸத்தாலும் மயக்கிப் பரவசமாய்) உறங்கச்செய்பவன்.

ஸ்வவச:—அவர்களிங்ஙன முறங்கவே தமக் கன்பரான தேவாகளோடு யதேஷ்டமாய் விஹரித்தவன். வ்யாபீ—தேவர்கள், மந்தரபர்வதம்,

(அ) வ்யாபீ—ஆகாசமபோல் எங்கும் பரந்தவன்.

414 ఆనన్దామృతసంపూర్ణవదనేనేన్దుకాన్తినా । కలశాకృతిరూపేణకరస్థేనవిరాజితమ్ ॥

415 త్రైలోక్యవిస్మయకరం కాన్తకృతిపరంస్మరేత్ ॥

[𑌨𑍈𑌕𑌾𑌤𑍍𑌮𑌾 𑌨𑍈𑌕𑌕𑌰𑍍𑌮𑌕𑍃𑌤𑍍 । 𑌵𑌤𑍍𑌸𑌰𑍋 𑌵𑌤𑍍𑌸𑌲𑍋 𑌵𑌤𑍍𑌸𑍀 𑌰𑌤𑍍𑌨𑌗𑌰𑍍𑌭𑍋
𑌧𑌨𑍇𑌶𑍍𑌵𑌰𑌃 ॥ 𑌧𑌰𑍍𑌮𑌗𑍁𑌪𑍍]

𑌨𑍈𑌕𑌾𑌤𑍍𑌮𑌾 - அநேகஸ்வரூபன், 𑌨𑍈𑌕𑌕𑌰𑍍𑌮𑌕𑍃𑌤𑍍 - அநேகவியாபாரங்களைச்செய்யுமவன், 𑌵𑌤𑍍𑌸𑌰𑌃-வஸிப்பவன், 𑌵𑌤𑍍𑌸𑌲𑌃-பிரீதியுற்றவன், 𑌵𑌤𑍍𑌸𑍀-கன்றுகளையுடையவன், 𑌰𑌤𑍍𑌨𑌗𑌰𑍍𑌭𑌃- இரத்தினத்தையுட்கொண்டவன், 𑌧𑌨𑍇𑌶𑍍𑌵𑌰𑌃 - தனத்துக்கீசுவரன், 𑌧𑌰𑍍𑌮𑌗𑍁𑌪𑍍 - தர்மத்தைரக்ஷிப்பவன்,

(வி.) வாசுகிமுதலானோருக்கு சக்திக்குறைவுபட்டபொழுது அவர்கள் தனது சக்தியைக்கொண்டு இளைப்பாறும்படி அவர்களிடத்தில் வியாபித்தவன்.

நைகாத்மா—(அவ்வேளையில் பிரம்மரூபமாயும், கூர்மரூபமாயும் மோஹினிரூபமாயும் மற்றும்) அநேகரூபமாய் விளங்கினவன்.

நைககர்மக்ருத—(மத்தான மந்தராசலத்தைத் தாங்கியும், அசுரரைப் புடைத்தும், அமுதத்தைதிரட்டியும் மற்றும்) அநேகம் காரியங்களைச் செய்தவன்.

(அவதாரிகை) இனி தர்ம ஸ்வரூபியைச் சொல்லுகிறது.

வத்ஸர:—(புருஷார்த்தங்களை வியவஸ்த்தை பண்ணுவதற்காக யாவருள்ளத்திலும்) வஸிப்பவன். [416]

அதற்குக் காரணம் “வத்ஸல:” வத்ஸர்களான (அதாவது தன்னிடத்தில் விருப்பங்கொண்ட) சேதநர்களை விரும்புமவன்.

[இவன்தான்-சேதநகோடிகளிடத்தில நெடுங்காலமான பரிசயமிருக்கச்செய்தேயும், அவர்கள் சரணமென்றுமாத்திரம் அடைந்தாராகில் இன்னகாரணத்திற்காக இப்படியாயிருனென்றறிய ப்போகாமல், அப்பொழுதுதானீன்ற கன்றினிடத்தில் பசுவானது ஹம்பங்காரத்தோடு கூடினதாய் மடியிற் சுரந்தபாலை அது ஊட்டுகிறதற்குள் இன்னது செய்யவேணுமென்பது தெரியாமல் தடுமாறுவதுபோல் அலைந்துபோகிறானென்கிற விஷயம் [417] ராவணாநுஜனிடத்திலுங் காணலாம். இப்படிப்பட்ட உதாரசீலனான பகவானுக்கு உபகரணமாயிருப்பதுபற்றி யன்றோ ஸாதாரணமான தர்மத்துக்கும அந்த தன்மை யுண்டாயிருக்கிறது?]

வத்ஸீ—(இப்படி நித்தியமாய் தன்னால் போஷிக்கப்படுகின்ற ஆத்மவர்க்கங்களாகிற) கன்றுகளை அதிகமாயுடையவன்.

ரத்நகர்ப்ப:—அவர்களில் தனத்தைக்கோரியவர்களுக்குக் கொடுக்கவேண்டும்படியான விசேஷதநமுடையவன்.

தநேசுவர:—(அவரவரிஷ்டப்படுகின்ற தனத்தை) விரைவில் அளிப்பவன். தர்மகுப்—(இப்படிதான் தந்த அர்த்தகாமங்கள் துர்விஷயத்திற் செலலவொட்டாமற் றடுத்து அவைகளைக்கொண்டு) தர்மத்தைக் காப்

[416] 𑌸𑌰𑍍𑌵𑌾𑌵𑌾𑌸𑌤𑍍𑌵𑌾𑌚𑍍𑌚𑍈𑌤𑌦𑍍𑌧𑌰𑍍𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑍇 ॥

[417] 𑌵𑌿𑌦𑌿𑌤𑌸𑍍𑌸𑌹𑌿 𑌧𑌰𑍍𑌮𑌜𑍍𑌞𑌃 𑌶𑌰𑌣𑌾𑌗𑌤𑌵𑌤𑍍𑌸𑌲𑌃 ॥

[ధర్మకృద్ధర్మీ సదసత్ క్షరమక్షరం ॥]

ధర్మకృత్ - தர்மத்தைச்செய்தவன், ధర్మీ - தர்மமுடையவன், సత్ అక్షరమ్ - ஸத்தாய்அழியாமலிருப்பவன். అసత్ క్షరం - அஸத்தாய் விகாரிப்பவன்,

(ஸி) பாற்றுமவன்[418]. தர்மக்ருத்—இப்படி ஸகலரையும் தார்மிகர்களாகச் செய்யவேணுமென, தனது அநுக்ரஹத்துக்குக் காரணமான தர்மத்தையா தொருகாரணமுமின்றி யுண்டுபண்ணுகையாலே தர்மஞ்செய்பவன[419].

தர்மீ—(பிரஸித்தமாய் லோகத்தில் வழங்குஞ் சருமமும் இவனுக்கு ஸர்வஸாதாரணமான உபகரணமாகையால்) தர்மத்தை யுடையவன்.

ஸத்—இத்தருமங்களிற் சிறந்தவன்.

[இத்தருமத்தை ஸத்தென்று கொண்டாடுவதுதான் இதனால் ஸாதிக்கப்படும் பகவான் ஸத்தாயிருப்பதுபற்றி அவன் ஸததாயிருப்பதுதான் அவனெப்போதும் ஸத்தாயிருப்பதுபற்றி யென்றுணர்க.]

அக்ஷரம்—இப்படி நித்தியனாய் நிருபாதிகமான ஸத்பாவத்தோடுகூடி ஸாதுவாய் விளங்குகையாலே, குறைவுஅழிவுமுதலிய விகாரங்களொன்றுமின்றிக்கே விளங்குமவன்.[420]

[க்ஷரமாகில் சிலவிடத்தில சிலகாலத்தில் நாசமுறும். இவனுக்கு அதில்லாமையாலே அக்ஷரனென்றறிக. இதைத்தானே "ஸதேவஸோம்யேதமக்ர ஆஸீத்" என்று சுருதியிற் சொல்லுகிறது.]

அஸத் க்ஷரம்—ஹேயமான பாவத்தில் பற்றினவர்களின் விஷயத்தில் அஸத்தாயும் க்ஷரமாயு மிருப்பவன்.

[அஸத்துக்களுக்கு நித்தியமாய் நிரவதிகமான ஸம்ஸாரபயத்தைத் தருகையா லிங்ஙனஞ் சொல்லுகிறது. இவ்விரண்டு விஷயமும் சுருதியில்[421] ஓதப்பட்டது.]

(அவதாரிகை.) அதில் ஸாதுக்களிடத்தில் அபராதங்கள் மிக்கிருக்கக் கண்டானாகில் தண்டிக்காமல் அவைகளைப் பொறுத்துக்கொள்ளுகிறானென்பது மாத்திரமன்று மற்றப்படி:—

---

418 సాధుమార్గస్థితానాంచ సంయచ్ఛన్దం ధియా చ తే ॥

419 ధర్మసామాన్యమమలమనాదినిధనం విభుమ్ । దుర్లభం యత్ప్రబుద్ధానాం తత్ప్రసాదధియా వినా ॥

420 అపక్షయవినాశాభ్యాం పరిణామర్ధిజన్మభిః । వర్జితశ్శక్యతే వక్తుం యస్సదాఽస్తీతి కేవలమ్ ॥

421 ఏషఏవ సాధుకర్మ కారయతి తం యమేభ్యో లోకేభ్య ఉన్నినీషతి ఏషఏవాఽసాధుకర్మ కారయతి తం యమధో నినీషతి ॥

[அவிஜ்ஞாதா ஸஹஸ்ராம்சுர் விதாதா]

அவிஜ்ஞாதா - அறியாதவன், ஸஹஸ்ராம்சு: - ஆயிரம்ஞானமுடையவன், விதாதா-விதிப்பவன்,

---

(வி.) அவிக்ஞாதா-அபராதமுண்டென்பதையறியுமவனேயல்லன்.

["உச்யமானோபி பருஷம்நோத்தரம் ப்ரதிபத்யதே" பெருமான் தம்மைப்பருஷமாகச் சிலவார்த்தைகள் சொல்லக் கேட்டாராகிலும், அதற்கு மருமாற்றஞ்சொல்ல உணர்ந்திலர்போலும், என்கிறபடியே, ஆச்ரிதானுடைய அபராதங்களைக் கணக்கிடாமையும் குணமேயாகவன்றோ ஸ்ரீவத்ஸாங்கமிச்ரரும் அருளிச்செய்தார்?]

[சிலர் "பரமபுருஷன் ஞானமாத்திர னாகையாலே ஞாத்ருத்வமில்லாமைகொண்டு இங்கே அவிக்ஞாதாவென்கிறது" என்று ஸர்வக்ஞனை அஞ்ஞனென்பதாக இங்கே வியாக்கியானம் செய்தார்கள். அவர்கள் சுருதி, ஆசாரியஸேவை, ஔசித்யம், நியாயம் இவற்றை யறியாமையாலே அங்ஙனம் சொன்னார்களாகையால் அவர்கள் விஷயத்தில் நாம் வியஸநப்படவேண்டுமேயல்லது நிரஸிப்பதற்குத் தகுந்தவர்களல்ல ரென்றுணர்க.]

ஸஹஸ்ராம்சு:=அபரிமித ஞானங்களுடையவன்.

[நல்லது! ஆச்ரிதானுடைய அபராதத்தை யொழிந்த மற்ற விஷயத்தில் ஸர்வக்ஞனென்பது எப்படி சேருமென்னில்—அபராதங்களை யறியாமையாவதென்? அபராதத்தைக் கவனிக்காமல உபேக்ஷிப்பது தானே? அப்படியே பகவான் உபேக்ஷிக்கிறானன்றோ?[422]]

(அவதாரிகை.) ஆச்ரிதபாபத்தை அவன்கணிசியாமற்போனாலும் பாபத்தின்பலனும், அதைவிடாமல் அனுபவிப்பிக்கும் யமன் யாதனை முதலியவைகளும் பாதிக்கமாட்டாவோவென்னில்-அவைகளும் பகவானுக்கு ஆதீனமாகையாலே பாதிக்கமாட்டாவென்கிற அபிப்பிராயத்தாலே சொல்லுகிறதுமேல்:—

விதாதா=அவைகளையும் விதிப்பவன். இப்படி [423]யமனே சொன்னானன்றோ!

[இவ்வர்த்தத்தில், பிராம்மம், வைஷ்ணவம், வாமநம், நாரஸிம்ஹம், லைங்கம், விஷ்ணுதர்மம், ஸ்ரீவிஷ்ணுதத்வம், பாகவதம் முதலானவிடங்களிலுண்டான யமகிங்கர ஸம்வாதங்களெல்லாங் கண்டுகொள்வது.]

(அ) அவிஜ்ஞாதா—ஆத்மாவிடத்தில் கர்த்ருத்வாதிகளெல்லாம் கல்பிதமாகையால், அந்தவாஸனையாலே ஜீவனைஜ்ஞாதாவென்கிறது; அந்த ஞாத்ருத்வமில்லாமையாலே பரமாத்மா அவிஜ்ஞாதாவாகிறான்.

---

[422] தோஷோ யத்யபி தஸ்ய ஸ்யாத் ॥ அபி சேத் ஸுதுராசாரோ பஜதே மாமநந்யபாக் ॥

[423] அஹமமரவரார்ச்சிதேந தாத்ரா ஸமஇதி லோகஹிதாஹிதே நியுக்த: ॥

[కృతలక్షణః॥ గభస్తినేమిస్సత్త్వస్థస్సింహః]

కృతలక్షణః - லக்ஷணஞ் செய்தவன், గభస్తినేమిః - பிரகாசிக்கின்ற திருச்சக்ரந்தரித்தவன், సత్త్వస్థః-ஸத்துவத்திலிருப்பவன், సింహః -சிங்கம்போன்றவன்,

(வி) (அவதாரிகை.) இப்படி இவன் தோஷத்தை ஸஹிக்குமாகில், தியஜிக்கவேண்டு மவைகட்கும் கிரஹிக்கவேண்டு மவைகட்கும் வாசியென்னென்னில் சொல்லுகிறதுமேல்:—

க்ருதலக்ஷண:=லக்ஷணம் ஏர்ப்படுத்தினவன். ஸ்ரீராமாயணபாரதாதிகளில் கிரஹிக்கத்தக்கவைகளிவையென்று அவனே லக்ஷணஞ் சொல்லியிருக்கிறபடியால் [424]விஷ்ணு ஸப்பந்தமபெறறவன உபாதேயனென்று லக்ஷணம் ஏர்ப்பட்ட பின்பு மற்றது தியாஜ்யமென்றாயிற்று. இனி பக்ஷபாதாதிகளான தோஷத்துக்குப் பிரஸக்தியில்லை.

(அவதாரிகை.) இந்த லக்ஷணமுள்ளவர்கள் யமனாலும் அவன் கிங்கராலும் வருத்தப்படார்கள்; ஏனெனில் இவர்களுக்கிவனே ரக்ஷகனாகவன்றோ விருக்கிறானென்கிறதுமேல்:—

கபஸ்திநேமி:=இவர்களை ரக்ஷிப்பதற்காக அதிகப் பிரகாசமாய் ஆயிரம் இலைகள் பொருந்திய சக்கிரந் தரித்தவன்[425].

(அ-கை) மேலும் இவர்களை வருந்தச்செய்யுங் கர்மமுமில்லாமையாலே யமாதிகள் கிட்டவிடமில்லை; கருமமில்லாத காரணமேதென்ன:—

ஸத்வஸ்த:=ஸத்வத்திலிருப்பவன்.

[என்றால்-இவர்கள் ஸத்வத்தில் எம்பெருமானிருக்கையாலே கருமங்களிருந்தவிடந்தெரியாமலோடிப்போயின வென்றபடி. இப்படியே விஷ்ணுபுராணாதிகளில். [426]சொல்லுகிறது.]

(அவதாரிகை.) இதையறியாமல் ஒருக்கால் யமன் முதலானோர் அவர்களைக் கிட்டினார்களாகில்:—

ஸிம்ஹ:=அப்பொழுது சிங்கம்போல் அவர்கள்மீது பாய்பவன்.

(அ.) க்ருதலக்ஷண:—ஸஜாதியாதி லக்ஷணங்களற்றவன்.
கபஸ்திநேமி:—தேஜோமண்டலங்களில் சூரியனாயிருப்பவன்.
ஸிம்ஹ:—விக்கிரமசாலியாகையாலே ஸிம்மம்போன்றவன்.

[424] మిత్రభావేన సంప్రాప్తం న త్యజేయం కథంచన ॥ (?)
[425] వసతి మనసి యస్య సోఽవ్యయాత్మా పురుషవరస్య న తస్య దృష్టిపాతే । తవ గతిరథవా మమాస్తి చక్రప్రతిహతవీర్యబలస్య సోఽన్యలోక్యః ॥
[426] స్ఫటికమణిశిలామలః క్వ విష్ణుః మనసి నృణాం క్వ చ మత్సరాదిదోషః ॥

[భూతమహేశ్వరః । ఆదిదేవో మహాదేవో]
[దేవేశో దేవభృద్గురుః ఉత్తరో]

భూతమహేశ్వరః - பூதங்களுக்கு ஈசுரானவருக்கெல்லாம் ஈசுவரனானவன், ఆదిదేవః - முதலில் விளையாடுமவன், మహాదేవః - பெரிய விளையாட்டுக்காரன், దేవేశః - தேவர்க்கீசன், దేవభృత్ - தேவர்களைப்பரிப்பவன், గురుః - குருவானவன், ఉత్తరః - தாண்டுவிப்பவன்,

(வி.) [இவ்வர்த்தம் லிங்கபுராணத்தில் மார்க்கண்டேயர்சொன்ன வசநத்திலும் 427அங்குதானே கௌசிகோபாக்கியான வசநங்களிலுங்காண்க.]

(அவதாரிகை) கீழ்ச்சொன்ன விஷயங்களில் அவன் ஸமர்த்தனாகைக்குக் காரணமென்னென்னில்:—

பூதமஹேச்வர:=பூதங்களுக்கு ஈசுவரர்களான பிரம்ம ருத்திராதிகளுக்கெல்லாம் நியாமகனாய் அவர்களுக்குங் காரணமாய், அவர்களை யடக்கியாளுந் திறமையுற்றப் பிரபாவந்தங்கியவன். ஆதிதேவ:=யாவர்க்கும் ஆதியாய் விளங்குமவன்.

மஹாதேவ:=அந்தப் பிரம்மாதிகளை யெல்லாம பந்துகள் போல் வைத்துக்கொண்டு விளையாடுமவன்.

தேவேச:=அவர்களுக்கெல்லாம் நாதன்.

தேவப்ருத்—அவர்களைத் தக்கபடி விநியோகங் கொள்ளத் தருந்தவன். குரு:=வேதங்களைக்கொண்டு அவரவர் அதிகாரமின்னதென்று அவர்களுக்கு உபதேசிக்கையாலே குருவானவன். 428இந்த குருத்வந்தான் ஹயக்கிரீவோபாக்கியாநப் பிரஸித்தம்.

உத்தர:=(இத்தேவர்களுக்கு அசுரர்களால் நேரிடும் ஆபத்தினின்றும் இவர்களைத் தப்புவிப்பவன்[429].)

(அ.) மஹாதேவ:—ஸகலபாவங்களுமற்று மஹத்தான யோகைசுவரியத்திலிருக்கையாலே மஹாதேவன்.

தேவப்ருத் குரு:-ஸகலவித்தைகளையும் பரிப்பவன்.

427 వాసుదేవపరం దృష్ట్వా వైష్ణవం దగ్ధకిల్బిషమ్ । దేవా విభీతాస్సంయాన్తి ప్రణిపత్య యథాగతమ్ । దృష్ట్వా యమోఽపి విభ్రష్టం వైష్ణవం దగ్ధకిల్బిషమ్ ॥ ఉత్థాయ ప్రాఞ్జలిర్భూత్వా నానామరవినన్దనః ॥

428 యో వై వేదాంశ్చ ప్రహిణోతి తస్మై ॥

429 ఏవం స్తుతస్స భగవాన్ పురుషస్సర్వతోముఖః । జహౌ నిద్రామథ తదా వేదనకార్యార్థముత్థితః ॥

[గోపతిర్గోప్తా జ్ఞానగమ్యః పురాతనః । శరీరభూతభృద్భోక్తా కపీంద్రో]
గోపతిః - வாக்குகளுக்குப்பதியானவன், గోప్తా - பரிபாலிப்பவன், జ్ఞానగమ్యః - ஞானத்தால் அடையக்கூடியவன், పురాతనః - தொன்றுதொட்டுள்ளவன், శరీరభూతభృత్ - சரீரமானவைகளைத்தரிப்பவன், భోక్తా - புசிப்பவன், కపీంద్రః - வானரர்கோமான்,

---

(வி.) கோபதிః=(சங்கஸ் என்றும் பாஷையென்றும் வழங்கப்படும்) சொற்களுக்கெல்லாம பதியானவன்.

கோப்தா- இப்படி ஸகலவித்யைகளையும் ரக்ஷிக்கையாலே) ரக்ஷகன். ஜ்ஞாநகம்யః=பரவித்தையா லறியப்படும் ஸமாதியால் அடையக்கூடியவன்.

புராதந=இப்படி வித்தையைப் பிரவர்த்திப்பிப்பது இப்பொழுது மாத்திரமன்று; மற்றப்படி கல்பந்தோறுமாகையால் புராதநன்-அதாவது அநாதியாய் பிரவர்த்திப்பிக்கிறானென்றபடி.

பஞ்சமசதகம்—ஸம்பூர்ணம.

ஸ்ரீః

ஷஷ்டசதகம்.

சரீர பூத ப்ருத்=தனக்குச் சரீரமான தத்வங்களையெல்லாம் பரிப்பவன்[430]. போக்தா=ஹவ்யகவ்யங்களைப் புசிப்பவன்.

கபிந்த்ர:=வானரர் கோமான்.

[என்றால் - இப்படி தனக்குத்தகாத மனுஷ்யாவதாரத்தைச் செய்தருளி அதில் வேதோக்த கர்மங்களைப் பிரவர்த்திப்பித்தவனாய், தன்னைப போலவே (வாநரரூபமான) மாறுவேஷந்தரித்த தேவர்களுக்கெல்லாம் இந்திரனாய் விளங்கினவன் 431.]

(அ.) ஜ்ஞாநகம்ய:-கர்மத்தாலாவது, கர்மஜ்ஞாநங்களாலாவது அடையக்கூடியவனல்லன்; மற்றப்படி ஞாநமாத்திரத்தாலே அடையக்கூடியவன்.

கபீந்த்ரః=வராஹமூர்த்தியாய் விளங்கியவன். வாநரர்களுக்கெல்லாம் இந்திரனாய் விளங்கின ஸ்ரீராகவனென்றுமாம்.

---

[430] తస్య మూర్ధా సమభవత్ ద్యౌః సనక్షత్రదేవతా ॥

[431] సర్వలోకేశ్వర స్సాక్షాత్ లోకానాం హితకామ్యయా ॥ సర్వైః పరివృతో దేవైర్వానరత్వముపాగతైః ॥

[భూరిదక్షిణః॥సోమపోఽమృతపస్సోమః పురుజిత్పురు]

భూరిదక్షిణః - அதிகதக்ஷிணை யளிப்பவன், సోమపః - ஸோமலதையைப்பிழிந்தவன், అమృతపః-அமிருதபானமபண்ணினவன், సోమః - சந்திரன்போன்றவன், పురుజిత్ - பலரை ஜயித்தவன், పురుసత్తమః - பஹுமான்களிடத்திலிருப்பவன்,

வி) பூரிதக்ஷிணா:=அதிகதக்ஷிணையுடையவன.

[என்றால்—லோகத்தையெல்லாம் திருத்துவதாக அசுவமேதம் முதலான யாகங்களை யநுஷ்டித்து அதில் விசேஷதக்ஷிணையை யளித்தவன.]

ஸோமப:=ஆங்கே ஸோமஸவநஞ் செய்தவன்.

அம்ருதப:=கீதையிலருளிச் செய்தபடியே ஹவிஸ்ஸின்பரிணாம ரூபமான அமுதத்தைப்பானம்பண்ணுமவன். [432]தனது அநுஷ்டானத்தை பின்சென்றவர்களைப் பரமபதமேறக்கொண்டு சென்று தனது ப்ரமமாநுபவத்தை அவர்களுக்குத் தந்து அதனால் தனது அநுபவத்தைப் பரிபாலிக்குமவன [433].

ஸோம:=தனக்கும் தன்னை யநுபவிப்போருக்கும் அமுதமாய் விளங்குமவன[434]

புருஜித்—பலபெயர்களை ஜயித்தவன் [435]. புருஸத்தம:=தனது குணமிருத ஸாகரத்தைப் பானம்பண்ண ஆசைப்பட்ட ஹநுமான் முதலானோரிடத்தில் நித்தியமாயிருப்பவன்[436].

(அ.)அம்ருதப:=அமிருதமயமான தனது ஆத்மாநுபவம பண்ணுமவன். அதவா கடைந்தெடுத்த அமுதத்தை அசுரர்கொண்டு போகவொட்டாமல் ரக்ஷித்து தேவர்களுக்குக்கொடுத்துத் தானும் பானம்பண்ணுகையாலே "அம்ருதப:" என்கிற தென்றுமாம்.

ஸோம:=சந்திர ரூபியாயிருந்து ஓஷதிகளைப் போஷிக்கையாலே ஸோமனென்கிறது; பார்வதியுடன்கூடிய சிவனென்றுமாம்.

[432] అహం హి సర్వయజ్ఞానాం భోక్తా చ ప్రభురేవ చ ॥

[433] యత్ర దేవా అమృతమానశానాస్తృతీయే ధామన్నధ్యైరయన్త ॥

[434] త్రిపాదస్యామృతం దివి సోమ ఆసీత్ ॥ అమృతస్యేవ నాతృప్యన్ ప్రేక్షమాణా జనార్దనమ్ ॥

[435] స త్యేన లోకాన్ జయతి దీనాన్ దానేన రాఘవః । గురూన్ శుశ్రూషయా వీరో ధనుషా యుధి శాత్రవాన్ ॥

[436] స్నేహో మే పరమో రాజన్ త్వయి నిత్యం ప్రతిష్ఠితః । భక్తిశ్చ నియతా వీర భావో నాన్యత్ర గచ్ఛతి ॥

[సత్తమః । వినయో జయస్సత్యసంధో దాశార్హస్సాత్వతాంపతిః ॥]
[జీవో వినయితా సాక్షీ]

వినయః - சிக்ஷிப்பவன், జయః - விதேயமாயிருப்பவன், సత్యసన్ధః - ஸத்தியமானப்ரதிக்ஞையுடையவன், దాశార్హః - தாநத்துக்கேற்றவன், సాత్వతాంపతిః - பாகவதாளுக்குநாதன், జీవః - பிழைப்பிப்பவன், వినయితా - ரக்ஷகன், సాక్షీ - காண்பவன்,

---

(வி.) விநய:=மாரீசன் தொடக்கமான துர்ஜநர்களையும தமது வீரியம் முதலிய குணங்களைக்காட்டித் திருத்தியவன்.

ஜய:=ஆச்ரிதாளாலே ஜயிக்கப்படுமவன்[437].

ஸத்யஸந்த:=அந்த மஹான்களிடத்தில் பண்ணின பிரதிக்ஞை ஸத்தியமாயிருக்க நடந்தவன்[438].

தாசார்ஹ:='தாச' என்று தாநமாய் அதற்குத் தக்கவனென்கிறது.

[என்றால்-தனது பக்தர்களுக்குத் தன்னைக்கொடுக்கவும், அப்படியே அவர்கள் தங்களை தன்னிடத்தில் ஸமர்ப்பிக்கவுந் தகுந்தவனென்றபடி. அதவா—கிருஷ்ணவதாரத்தில் தசார்ஹ வம்சத்தில் அவதரிக்கையாலே தாசார்ஹனென்றுமாம்.]

ஸாத்வதாம்பதி:=பரமஸத்வ நிஷ்டாளாய் தனது திருவடித் தாமரைகளையன்றி மற்றொன்றை யுன்னாத பாகவதாளுக்கெல்லாம் பதியாய் விளங்குமவன். ஸாத்வத வம்சமான யாதவகுலத்தில் அவதரித்து அதற்கு நிர்வாஹகனாய் விளங்குமவனென்றுமாம். ஜீவ:=அந்த பாகவதாளை ஆத்மநாசம் பிறக்கவொட்டாமல் காப்பாற்றித் தனது பரிசரிணையைத் தந்து ரக்ஷிப்பவன்[439]

விநயிதா=ராஜகுமாரனை லாலநம் செய்வதுபோல் அவர்களை லாலனாதிகள்செய்து ரக்ஷிப்பவன். ஸாக்ஷீ=அவர்கள் ஹிதததி

(அ) தாசார்ஹ:=தாநத்துக்குத் தகுந்தவன். தாசார்ஹவம்சத்தில் பிறந்தவனென்றுமாம்

* அஸாக்ஷியென்று பிரித்து, அப்பொழுது ஆத்மஸ்வரூபத்தைத் தவிர மற்றொன்றைக் காணாதவனென்று பொருள்கொள்ளக்கடவது.

---

437 ఆజ్ఞాప్యోఽహం తపస్వినామ్ ॥

438 అప్యహం జీవితం జహ్యాం త్వాం వా సీతే సలక్ష్మణామ్ । నతు ప్రతిజ్ఞాం సంశ్రుత్య బ్రాహ్మణేభ్యో విశేషతః ॥

439 ఆనన్దమూర్తిర్భగవాన్ హరిస్త్రైలోక్యపూజితః । దృష్టస్సహతే జీవ క్లిష్టాన్ స్వపరిచారకాన్ ॥

[ముకున్దోఽమితవిక్రమః । అంభోనిధిరనన్తాత్మా]
[మహోదధిశయోఽన్తకః ॥ అజో]

ముకున్దః - மோக்ஷபூமியைத்தருமவன், అమితవిక్రమః-அபாரமாணபவுருஷமுற்றவன், అమ్భోనిధిః - ஜலத்தில் வைக்கப்பட்டவன், అనన్తాత్మా - ஆதிசேஷனுக்கு ஆத்மாவானவன், మహోదధిశయః-மஹோததியில்படுப்பவன், అన్తకః-நாசகரன், అజః-அகாரத்துக்குப்பொருளானவன்.

(வி.) லேயே பிரவர்த்திப்பதற்காக அவர்கள் செய்யும் நடவடிக்கைகளைக் கணிசிப்பவன்.

முகுந்த:—தந்தாலல்லது யாந்தரியோமென்று அவர்கள் பிரார்த்தித்தபோது அவர்களுக்கு முக்தி பூமியைத்தருமவன்.

அமிதவிக்ரம:—அவர்கள் தன்னைத் தியானிக்கும் பொழுதும் ஆராதிக்கும்பொழுதும் அநுஸந்திக்கப் படுகின்ற தத்வஸமுதாயங்களையெல்லாம் தரிக்கின்ற ஆதாரசக்தியென்கிற அபரிமிதமானபலத்தைப் படைத்தவன்[440].

அம்போநிதி:—ஜலத்தில் வைக்கப்பட்டவன்.

[என்றால்-பாதாளத்தில் கர்ப்போதகத்தில் ஸகல ஜகத்தையுந்தரிக்கும்படியான ஆதி கூர்மமாய் எழுந்தருளியிருப்பவ னென்றபடி[441].]

அநந்தாத்மா—அதற்குமேல் ஜகத்துக்கெல்லாம் ஆதார ஸ்தம்பமான ஆதிசேஷனுக்கு அந்தராத்மாவாய் விளங்குமவன். ஸ்ரீஜயஸம்ஹிதையில் இவ்வர்த்தம் [442]கண்டுகொள்வது.

மஹோததிசய:—(அவனே பிரளயகாலத்தில் அந்த ஆநந்தனுகிற படுக்கையில்தானே சயனிக்கிறபடியால்) மஹோததியில் சயனிப்பவன். அந்தக:—(அப்பொழுது ஸகலத்தையும்) நாசம் பண்ணுமவன்[443]. அஜ:—அகாரத்துக்குப் பொருளானவன்.

[என்றால்-அக்காலத்தில் ஸகல தத்துவங்களும் லயிக்கவே அப்பொழுது இவன் ஸ்வரூபத்தை கேவலம் ப்ரணவத்துக்குப் பிரகிருதியாய்

440 కాలవైశ్వానరశ్చాయం నానాస్యాధోనివాసినః। ఆధారశక్తిసంజ్ఞస్య హ్యమూర్తస్య చ వై విభోః । అభిమానతనుర్హ్యేవై నానాభేదైశ్చ వర్తతే ॥

441 అనన్తబలశక్తయే భువనభృతే కచ్ఛపాత్మనే ॥

442 ఆధారశక్త్యుపరి విమలందీప్తవిగ్రహమ్ । జ్వాలాశతసమాకీర్ణం శఙ్ఖచక్రగదాధరమ్ ॥ అనన్తేశం న్యసేత్ ॥

443 అన్తే పృథివ్యాం సలిలే దృశ్యసే త్వం మహోరగే ॥

[మహార్హః స్వాభావ్యో జితామిత్రః ప్రమోదనః ।]
[ఆనందో నందనో నందస్సత్యధర్మా]

మహార్హః - பூஜிக்கத்தக்கவன், స్వాభావ్యః- சொத்துக்களாலே பாவிக்கப்படுமவன், జితామిత్రః - சத்துருக்களை வென்றவன், ప్రమోదనః - ஸந்தோஷத்தை உண்டுபண்ணுமவன், ఆనందః-ஆநந்திப்பவன், నందనః - ஆநந்திக்கச்செய்பவன், నందః - ஸம்ருத்திபொருந்தியவன், సత్యధర్మా- ஸத்தியமான தருமத்தையுடையவன்,

(வி.) ஸகல சப்தத்துக்குங் காரணமான அகாரத்திற்குப் பொருளாயிருப்பதாக ஸ்மரிக்கப்படுமென்றபடி[444].]

மஹார்ஹः= அப்பொழுது ப்ரணவத்தாலே பூஜிக்கத்தக்கவன்[445].
ஸ்வாபாவ்யः= தன் சொத்துக்களால் பாவிக்கப்படுமவன்.

[என்றால்-இப்படி இந்தப் பிரணவமென்கிற மந்திரத்தைக் கொண்டு தனது சொத்துக்களான ஆத்மகோடிகள் தன்னை வழிபடும்படி ஸ்வாமியாய் நின்றவனென்றபடி[446].]

ஜிதாமித்ரः= இந்த ரஹஸ்யார்த்தத்தை அறியவொட்டாமல் விரோதிக்கின்ற அவர்கள் அஹங்காரமமகாராதிகளையெல்லாம்போக்கடிப்பவன்.
ப்ரமோதநः= இப்படிதன் ஸம்பந்தம் பெற்றவர்களை அவர்கள் முதலில்தன்னை அநுஸந்திக்கும்போதே அவர்களுக்கு ஸந்தோஷமுண்டாகச் செய்பவன்.

(அவதாரிகை.) அநந்தரம் கபிலமூர்த்தியை வர்ணிக்கிறது:—
ஆநந்தः= ஆநந்தவல்லியில் அளவிடுவதாய் விசாரிக்கப்பட்ட வாசாமகோசரமான ஆநந்தத்துக்கு நிலமானவன்.

நந்தநः= அந்த ஆநந்தத்தை முக்திதசையில் சேதநவர்க்கத்துக்களித்து களிக்கச்செய்பவன் [447].

நந்தः= இப்படி அபரிமிதமான போக்தாக்களாலும் போக்யவஸ்துக்களாலும் போகோபகரணங்களாலும் ஸம்ருத்தியாயிருப்பவன். ஸத்யதர்மா = (இப்படி தன்னை ஆச்ரயித்தவர்களை

[444] తస్య ప్రకృతిలీనస్య యః పరస్స మహేశ్వరః ॥

[445] బ్రహ్మణే త్వామహాస ఓమిత్యాత్మానం యుఞ్జీత తద్వై మహోపనిషదం దేవానాం గుహ్యమ్ ॥

[446] సర్వాజీవనే చాప్యయది తే స్వసత్తా యాంస్ప్రహేయదిఅత్త దాస్యం హరేః స్వామ్యం స్వభావంచ సదా స్మర ॥

[447] ఏష హ్యేవానన్దయాతి ॥

[త్రివిక్రమః ॥ మహర్షిః కపిలాచార్యః]
[కృతజ్ఞో మేదినీపతిః । త్రిపద స్త్రిదశాధ్యక్షః]

త్రివిక్రమః - வேதத்தில்வியாபித்திருப்பவன், మహర్షిః - மஹர்ஷியானவன், కపిలాచార్యః - கபிலரென்கிற ஆசாரியனானவன், కృతజ్ఞః - செய்ததை யறிபவன், మేదినీపతిః - பூமியைத் தரிப்பவன், త్రిపదః - மூன்றுபதங்களுடையவன், త్రిదశాధ్యక్షః - தேவர்களுக்குத்தோழன்,

---

(வி.)முதல்தொடங்கி கடைசிபரியந்தம் நேராகநடத்துகையாலே) ஸத்யமான வியாபாரத்தையுடையவன்.

த்ரிவிக்ரமஃ—த்ரிஃ என்கிற வேதத்தில் வியாபித்தவன் [என்றால்—இப்படி மஹாமஹிமை சாலியாயிருக்கையாலே வேதத்துக்கெல்லாம இவனே பொருளாகும்படி விளங்குமவனென்றபடி 448]

மஹர்ஷிஃ=இந்த வேதத்தைத்தான் பிரத்தியக்ஷமாய்க் காணவல்ல கபில மஹர்ஷியானவன். இப்படியே அவாந்தியாகத்தில் சொல்லப்படும் 449.

கபிலாசார்யஃ—கபிலாசாரியரென்று பிரஸித்தமாய் விளங்கியவன்

க்ருதஜ்ஞஃ—தன்விஷயத்தில் அபராதம் பண்ணின ஸகரபுத்திரர்களுக்காக அவர்கள் புத்திரனை அம்சுமான் வணங்கிப் பிரார்த்திக்க அதையே பெரிதாக நினைத்தவன் 450.

மேதிநீபதிஃ—பூமியை பரிப்பவன் 451.

த்ரிபதஃ—வராஹ ரூபந்தரித்தபொழுது மூன்று முசிப்புடன்கூடி யிருந்தவன் 452.

த்ரிதசாத்யக்ஷஃ—இந்த வராஹ ரூபியான பகவானே பிரளயாபத்தில் ஸஹாயமாயிருக்கையாலே பிரம்மாதிதேவர்களுக் கெல்லாம் கடகாக நின்றவன்.

---

448 త్రిరిత్యేనం త్రయో వేదాః కీర్తితా మునిసత్తమైః । క్రమతే తాంస్తథా సర్వాన్ త్రివిక్రమ ఇతి స్మృతః ॥

449 శ్రుతీ ఋగాద్యా వక్త్రేభ్యః పాద్రిరస్తమతః స్మరేత్ ॥

450 కపిలముపగమ్య భక్తినమ్రః తదా తుష్టావ-సచైనం భగవానాహ ॥

451 యస్యేయం వసుధా సర్వా వాసుదేవస్య ధీమతః । కాపిలం రూపమాస్థాయ ధారయత్యనిశం ధరామ్ ॥

452 త్రైవా సంత్రికకుదో వారాహం రూపమాస్థితః ॥

[మహాశృంగః కృతాంతకృత్ ॥ మహావరాహో]

[గోవిందస్సుషేణః కనకాంగదీ । గుహ్యోగభీరో]

మహాశృంగః - பெரியபல்லுடையவன், కృతాంతకృత్ - யமனை அறுத்தவன், మహావరాహః - பெரிய வராஹமானவன், గోవిందః - பூமியை அடைந்தவன், సుషేణః - நல்லஸேனையுடையவன், కనకాంగదీ - பொன்தோள்வளையுடையவன், గుహ్యః - மறைக்கப்படுமவன், గభీరః - கம்பீரன்,

---

(வி.) மஹாச்ருங்கஃ=பூமண்டலத்தை நுனியிற்கொண்ட பெரிய கோரப்பல்லுடையவன்[453].

க்ருதாந்தக்ருத்=யமன்போன்ற ஹிரண்யாக்ஷனைச் செகுத்தவன்[454]. வாராஹஸ்ம்ருதி வாராஹபுராணங்களில் தனது ஸித்தாந்தத்தை வெளியிட்டவனென்றுமாம்.

மஹாவராஹஃ=பெரிய வராஹரூபியாய் விளங்கியவன்.

கோவிந்தஃ=ஸ்ரீபாரதத்திற் சொல்லியபடி. [455]நஷ்டமான பூமியைமீண்டும் பெற்றமையாலே கோவிந்தனென்னப்படுமவன்.

(அவதாரிகை,) இனி ரஹஸ்யமான விஷயம் சொல்லப்படும்.

ஸுஷேணஃ=நல்ல சேனையுற்றவன்.

[என்றால்—பத்தர், முக்தர், நித்தியர் என்கிற மூவகைச் சேதநகோடிகளையும் ஜயிப்பதற்கு உபகரணமாயிருக்கையாலே சேனைபோல் விளங்கும் சுத்த ஸத்வமயமான ஐந்து உபநிஷத்தத்வங்களையும் திருமேனியாகவுடையவன்.]

கநகாங்கதீ=கீழ்ச்சொன்ன திருமேனிக்கேற்ற ஸுவர்ணமயமான தோள்வளைமுதலிய திருவாபரணங்களணிந்தவன். ஸுவர்ணமென்றால்-அப்ராக்ருதத் திரவியமான பஞ்சோபநிஷத்தென்னும் தத்வங்களைச்சொன்னபடி.

குஹ்யஃ=இப்படி பஞ்சோபநிஷத்துமயமான திருமேனியால் மூடப்பட்டிருப்பவன். கபீரஃ=அதிநிர்மலமான மேனியில் தனது ஈசுவரத்வத்துக்கேற்ற காம்பீர்யம் விளங்கும்படியானவன். இவனுடன் கலந்த மாத்திரத்தில் அநாதியான அவித்தையால் கலங்கிய ஸம்ஸாரிசேதநனும் தேக்தாங்கொட்டையைத் தேய்த்த

---

453 ఏకశృంగో వరాహ స్త్వమ్ ॥

454 హతో హిరణ్యాక్షో మహాసురః ॥

455 నష్టాంచ ధరణీం పూర్వమవిందం యద్గుహాగతామ్ । గోవింద ఇతి తేనాహమ్ ॥

[గహనో గుప్తశ్చక్రగదాధరః ॥ వేధాస్స్వాఙ్గోఽజితః కృష్ణో]

గహనః- புகுதற்கரியன், గుప్తః- ரக்ஷிக்கப்பட்டவன், చక్రగదాధరః- சக்கிரமுமகதையுந்தரித்தவன், వేధాః - செய்பவன், స్వాఙ్గః- நல்ல அங்கங்களுடையவன், అజితః- அஜிதையென்னும்பட்டணமுடையவன், కృష్ణః-சாமளாகாரன்,

---

(வி.) தீரத்தடமேபோல் தெளிந்து அதிகம்பீரனாய் விளங்குகிறானென்றால, ஸ்வபாவமாகவே பிரகாசமானனாய் விளங்குகிற பகவான் அப்படி விளங்கக் கேட்கவேண்டுமா?

கஹநः=புகவரிதானவன்.

[என்றால்—ரத்நாகர மென்கிற ஸமுத்திரமானது உள்ளுக்குள்ளிருக்கு மவைகளெல்லாம் ஸ்படிகமாய்க்காணும்படி தெளிவுற்றிருந்த போதிலும் காலிட்டிழிவதென்றால் அரிதாமாபபோல், எம்பெருமானுடைய திவ்யமங்கள விக்கிரஹம் திவ்யாத்மஸ்வரூபத்துக்குப் பிரகாசமாய் விளங்கிற்றேயாகிலும் புகுவதற்கரிதா யிருக்குமென்றபடி.]

குப்தः=அதினெக்கு ரயமறிந்த நம்பூர்வாசாரியர்களால் ரக்ஷிக்கப்பட்டவன்.

(அவதாரிகை) எங்கே எந்தலக்ஷணத்தோடு ரக்ஷிக்கப்படுகிறானென்னில் சொல்லுகிறது.

சக்ரகதாதரः=ஸ்ரீராமாயணத்திற் சொன்னபடியே, கீழ்ச்சொன்ன நித்தியமான திவ்யமங்கள விக்கிரஹமும் திவ்யபூஷணங்களும்போல் பஞ்சசக்தி மயமான சக்கிரம், கதை, முதலிய திவ்யாயுதங்களுடன்கூடி பரமபதத்தில் ரக்ஷிக்கப்படுகிறவன்.

வேதாः=இப்படி அளவிடப்போகாத மஹாவைபவம் எப்பொழுதும் விளங்கும்படி பண்ணுமவன்.

ஸ்வாங்கः=அங்கே தனது ஆதிராஜ்யத்துக்குத் தகுந்த சத்திர சாமராதிகளான ஸகல அங்கங்களோடுங்கூடி விளங்குமவன்.

அஜிதः=கீழ்ச்சொன்ன பஞ்சோப நிஷத்துக்களால் சமைந்து நித்தியமாய் விளங்குகையாலே லீலாவிபூதியைப்போல் உத்பத்தி விநாசாதிகளாலே ஜயிக்கப்படாத அஜிதையென்னும் திவ்யநகரமுடையவன்[456]. க்ருஷ்ணः=காளமேகம்போல் அதிசியாமளமானதிருமேனியன்

(அ.) அஜிதः—ஒருவராலும் ஜயிக்கப்படாதவன். [கவன், க்ருஷ்ணः=கிருஷ்ணதவைபாயநரென்கிற வியாஸரூபியாயவதரித்

---

456 పురం హిరణ్మయీం బ్రహ్మ వివేశాపరాజితా ॥

[దృఢస్సంకర్షణోచ్యుతః। వరుణో వారుణో]
[వృక్షః పుష్కరాక్షో మహామనాః॥]

దృఢః - திடமானவன், సంకర్షణః - ஸங்கர்ஷணனென்னும்திருநாமம்பூண்டவன, అచ్యుతః - நழுவாதவன், వరుణః - வரிப்பவன், వారుణః - வரிப்பவரையுடையவன், వృక్షః - விருக்ஷம்போன்றவன், పుష్కరాక్షః - போஷிக்கும்படியான திருக்கண்களுடையவன், మహామనాః - உதாரமான திருவுள்ளமுடையவன்,

(வி) [வராஹாதி அவதாரங்கள்கூட அந்த பஞ்சோப நிஷத்துமயமென்றே சொல்லப்[457]படுகிறது. இதுநிற்க கீழ்ச்சொன்ன அர்த்தங்களெல்லாம் ஸ்ரீவிஷ்ணு தத்வத்தில் விஸ்தாரமாய்ச் சொல்லியிருக்கிறது[458].]

த்ருட:=(இந்த நித்யசரீரத்தில்தானே உபாஸகாளை அநுக்கிரஹிப்பதற்காக வியூஹமாய் வகுக்கப்பட்டு அதில்கொஞ்சம்) ஸ்தூலமானவன். ஸங்கர்ஷண:= இப்படி ஸ்தூலமானவந்தான் ஆரென்னில, ஸ்ரீஸங்கர்ஷண பகவானென்கிறது.

அச்யுத:=நழுவாதவன்; வருண:=சூழ்ந்தவன்; வாருண:= தன்னைவரிப்பவர்ப் பலருண்டாகப்பெற்றவன்[459]

வ்ருக்ஷ:=அப்படி தன்னைவரிப்பவர்களில் எவர்களானால் தன்னை நிழல்போல் அநுவர்த்தித்திருக்கிறார்களோ அவர்களுக்குத் தனது ஸர்வஸ்வத்தையுமளித்து அவர்களுடைய அபராதசதங்களையும் பொறுத்துக்கொண்டு அவர்களை வரிப்பவன்[460].

புஷ்கராக்ஷ:=அவாளிடத்தில் கிருபையை வர்ஷித்து ரக்ஷிக்கும்படியான திருக்கண்களுடையவன்,

மஹாமநா:=அவாளிடத்தில் அதிக உதாரமான திருவுள்ளத்தோடுகூடி விளங்குமவன்.

(அ) த்ருட:=தனது ஸ்வபாவத்திலிருந்து சிறிதும நழுவாதவன்.

வ்ருக்ஷ:—விருக்ஷம்போல் சலியாமலிருப்பவன்.

மஹாமநா:—ஸ்ருஷ்டி ஸ்திதியாதிகளை மனதினாலேயே செய்கிறபடியால் பெரியமனமுடையவன்.

[457] కృషామి మేదినీం పార్థ భూత్వా కార్ష్ణాయసో మహాన్ । కృష్ణో వర్ణశ్చ మే యస్మాత్ తేన కృష్ణోహమర్జున ॥

[458] మత్స్యకూర్మ వరాహాణాం అవిర్భావో మహాత్మనః । అనయైవ ద్విజశ్రేష్ఠ నాన్యయా తద్విరోధతః ॥ [459] తేషుచాప్యహమ్ ॥

[460] నివాసవృక్షస్సాధూనాం ప్రపన్నానాం పరాగతిః ॥

[భగవాన్ భగహా౽నందీ వనమాలీ హలాయుధః ।]

[ఆదిత్యో జ్యోతిరాదిత్య]

భగవాన్ - ஐசுவரியமுடையவன், భగహా-ஷாட்குண்யபூர்ணன், నందీ- ஸந்தோஷிப்பவன், వనమాలీ - வனமாலையணிந்தவன், హలాయుధః-கலப்பையை ஆயுதமாய்தரித்தவன், ఆదిత్యః-அதிதிகுமாரன், జ్యోతిరాదిత్యః-தேஜோமயமான ஆதித்தியன்,

(வி.) பகவாந்—இப்படி ஸகல தோஷங்களுக்கும் எதிர்த்தட்டாய் கல்யாணஸ்வரூபனுயிருக்கையாலேமிகவும் பூஜ்யனாய் விளங்குமவன். பகஹா—ஐசுவரியாதி குணங்களாலும் அப்படியே விளங்குமவன். இங்கே ஸ்ரீ விஷ்ணு புராணத்திற் சொல்லுகிற பகவத்சப்த நிர்வசநத்தை அநுஸந்திப்பது [461].

நந்தீ:—இப்படி வியூஹத்தில் ஸங்கர்ஷணனாய் விளங்கி, தனது பலபத்ராவதாரத்தில் நந்தனைத் தமப்பனையடைந்தவன். அதவா, கோபிகைகளையும் மநுவையும் அநுபவிப்பதனால் ஆநந்தமுறுமவனென்றுமாம். வநமாலீ—தனது ஸ்ருஷ்டியி லகப்பட்டதாய் கெந்தத்துக்கு அபிமானியான வைஜயந்தியென்னும் திருமாலையை எப்போதும் அணிந்தவன்.

ஹலாயுதஃ—கீழ்ச்சொன்ன பூதங்களுக்கு ஸமிருத்தியை உண்டுபண்ணுகின்ற கலப்பையென்னும் ஆயுதந்தரித்தவன் [462] இப்படியேசொல்லப்படுகிறது. ஆதித்யஃ-தனக்கு வாசகமான அகாரத்துக்குபொருளானவன்.

[ஸங்கர்ஷண பீஜமந்திரம் அகாரமாகையாலே இங்ஙனம சொல்லுகிறதென்றுணர்க. அல்லது, முன்பிறவியில் அதிதியாயிருந்த தேவகீதேவிக்குத் தனயனாய் பிறந்தவனென்றுமாம். இப்படியே விஷ்ணு தர்மத்தில் தேவியைப்பார்த்து பகவான் அருளிச்செய்தார் [463].]

(அவதாரிகை.) அநந்தரம் நாராயணன் விஷயமசொல்லப் படுகிறது.

ஜ்யோதிஃ ஆதித்யஃ—ஜோதிஸ்வரூபனான ஆதித்தியன்.

(அ) பகஹா—பிரளயகாலத்தில ஸகல ஐசுவரியத்தையும் அழிப்பவன்.

வநமாலீ—பூததந்மாத்திரையின் வடிவமான வைஜயந்தி யென்னும் மாலையணிந்தவன்.

ஜ்யோதிராதித்ய:—சோதியான ஸௌரியமண்டலத்தில் விளங்குமவன்.

[461] ఐశ్వర్యస్య సమగ్రస్య వీర్యస్య యశసః శ్రియః । జ్ఞానవైరాగ్యయోశ్చైవ షణ్ణాం భగ ఇతీరణా ॥

[462] బలభద్రం సమృద్ధ్యర్థం సీరకర్షణకీర్తయేత్ ॥

[463] దాక్షాయణీ త్వమదితిః సంభూతా వసుధాతలే । నిత్యైవ త్వం జగద్ధాత్రీ ప్రసాదం వై కరోమ్యహమ్ ॥

[సహిష్ణుర్గతిసత్తమః । సుధన్వా ఖండపరశుః]
[దారుణో ద్రవిణప్రదః]

సహిష్ణుః - ஸஹிக்குமசீலன், గతిసత్తమః - கதியாய்நின்றவன், సుధన్వా - நல்லவில்லைதரித்தவன், ఖణ్డపరశుః - பரசுவென்னும் ஆயுதத்தைக் கண்டித்தவன், దారుణః பயங்கரன்; ద్రవిణప్రదః த்ரவிணங்கொடுப்பவன்,

(வி.)[அதென்? ஜ்யோதிஸ்வரூபனை ஆதித்யனென்றால் ஜ்யோதியில்லாத ஆதித்தன் ஒருவனிருப்பதுபோல் காண்கிறதே என்னில்—ஸத்யம்—பரம புருஷனுடைய தேஜஸ்ஸுக்கெதிரே சூரியதேஜஸ்ஸானது அந்தகாரத்துக்குநிகராயிருக்கும். இப்படியே ஸ்ரீபாரதத்தில் ஸ்ரீநாராயணீயத்தில் 464 வசநங்காண்க.]

ஸஹிஷ்ணுஃ—பிரம்மாதிகளின் அபராதங்களைத் தத்காலத்தில் ஸஹித்தவன் 465. கதிஸத்தமஃ—அவனே பரமமான தர்மங்களை உபதேசிப்பதற்கு ஆசாரியனாய் விளங்குகையால் கதியென்று நம்பி அடையும்படியானவன் 466. ஸுதந்வா—அமிருதார்த்தமாக தேவாசுரர்களுக்குக் கலஹம் நேரிட அக்காலத்தில் அசுரரைத்தகர்க்கவேண்டி நல்லவில்லேந்தினவன்.

கண்டபரசுஃ—ருத்திரசம்பந்தமான யுத்தத்தில் பரசுவைக் கண்டித்தவன் 467 தாருணஃ—இப்படி பாஹ்யசத்துருக்களையும் ஆந்தரசத்துருக்களையும் கண்டிக்கையாலே பயங்கரன்.

(அவதாரிகை.) அநந்தரம் வியாஸாவதாரம் சொல்லப்படும்.

த்ரவிணப்ரதஃ—தனம்போல் அதிச்லாக்கியமான ஸகல சாஸ்திரங்க

(அ.) ஸஹிஷ்ணு:—வெப்பம் குளிர்ச்சிமுதலியவைகளைச் சகிப்பவன்.

ஸுதந்வா—இந்திரியமான சார்ங்கமென்னும வில்லுடையவன்.

464 తయోర్భవేన యుధ్యతోః । నిష్ప్రభాణి చ తేజాంసి బ్రహ్మా చైవాసనాచ్చ్యుతః ॥

465 ప్రసాదయామాస భవో దేవం నారాయణం ప్రభుమ్ । శరణం జగామాద్యం వరేణ్యం వరదం హరిమ్ । తతః స వరదో దేవో జితక్రోధో జితేన్ద్రియః । ప్రీతిమానభవత్తత్ర రుద్రేణ సహ సఙ్గతః ॥

466 అహో హ్యనుగృహీతోద్య ధర్మ ఏభిస్సురైరిహ ॥

467 అథ రుద్రవిఘాతార్థం ఇషీకాం నర ఉద్ధరన్ । మన్త్రైశ్చ సంయోజయామాస సోభవత్పరశుర్మహాన్ । క్షిప్తశ్చ సహసా రుద్రే ఖణ్డనం ప్రాప్తవాంస్తదా । తతోహం ఖణ్డపరశుః ॥

[దివిస్పృక్సర్వదృగ్వ్యాసో వాచస్పతిరయోనిజః ॥]
[త్రిసామా సామగస్సామ నిర్వాణం]

దివిస్పృక్-பரமபதத்தைப்பரிசிப்பவன், సర్వదృక్ - ஸமஸ்தமுங் காண்பவன், వ్యాసః - வியாஸனானவன், వాచస్పతిః-வாக்குக்கெல்லாம்பதி, అయోనిజః - யோனியிற்பிறவாதவன், త్రిసామా - மூன்றுஸாமமுடையவன், సామగః-ஸாமகானம்பண்ணுமவன், సామః - நாசஞ்செய்பவன், నిర్వాణమ్-பரமகதிக்குநிமித்தன்,

---

(வி) ளையும் அவற்றின் அர்த்தங்களையும் கொடுப்பவன் 468

திவிஸ்ப்ருக் — பரவித்தையினால் பரமபதத்திலிருக்கும் தத்வரஹஸ்யத்தையும் ஸ்பரிசித்தவன். என்றால் பரமார்த்தவித் தென்றபடி. இப்படியே அவர் மந்திரம் 469.

ஸர்வத்ருக்—மற்றுமுண்டான ஸகல வைபவங்களையுங் காணவல்லவன். வ்யாஸ:—யுகாநுஸாரமாய் மந்தமதிகளான மனுஷ்யாளுடைய க்ஷேமத்துக்காக வேதங்களைப் பிரித்தவன் 470.

வாசஸ்பதி:—ஐந்தாவது வேதமான ஸ்ரீபாரதவாக்கியங்களுக்குப்பதியானவர். அயோநிஜ:—ஸாரஸ்வதாவதாரத்தில் எம்பெருமானுடைய வாக்கினின்றுமுண்டாகையால் அயோநிஜர்471. த்ரிஸாமா—ப்ருஹத், ரதந்தரம், வாமதேவ்யம், என்கிற மூன்று ஸாமங்களாலும் பாடப்படுமவன்.

ஸாமக:—தானும் ஸ்வாநுபவத்திலுண்டான ப்ரீதியாலே அப்படிப்பட்ட ஸாமங்களைப்பாடுமவன்.

ஸாம—தன்னைப்பாடுமவர்கள் பாபத்தைப் போக்கவல்லவன்.

நிர்வாணம்—இப்படிபாவங்கள் தொலையப் பெற்றவர்களுக்குப் பரமகதியான ஆநந்தமானவன்.

(அ.) வ்யாஸ:—(ருகவேதத்தை இருபத்தோரு விதமாயும் யஜுர்வேதத்தை நூற்றொருவிதமாயும், ஸாமவேதத்தை ஆயிரம் விதமாயும் அதர்வணவேதத்தை ஒன்பதுவிதமாயும் வகுத்து, மற்றும் புராணங்களையும் பரவச்செய்கையாலே) பிரித்தவன்.

---

468 వహన్త్యేవామహస్తేన సర్వశాస్త్రార్థసఞ్చయమ్ । దక్షిణేనచశాస్త్రార్థా నాదిశంశ్చ్యుధాస్థితాః ॥

469 విదితపరమార్థః ॥

470 యుగానుసారబోధానాం అక్షేదజననాయవై । విభజంస్తుచతుర్ధావై వేదమేకం త్రికాలవిత్ ॥

471 అథభూమాయోజగత్స్రష్టా భోశబ్దేనానునాదయన్ । సరస్వతీముచ్చచార తత్రసారస్వతోభవత్ ॥

[భేషజంభిషక్ । సన్న్యాసకృచ్ఛమశ్శాంతో నిష్ఠాశాంతిః]
[పరాయణం ॥ శుభాఙ్గ]

భేషజమ్ - மருந்தானவன், భిషక్ - வைத்தியன், సన్న్యాసకృత్ - ஸந்நியாஸத்தால்ஒழிப்பவன், శమః-சாந்தியைஉபதேசிப்பவன், శాన్తః - அடங்கியிருப்பவன், నిష్ఠా - நிலையிடமானவன், శాన్తిః - அடக்குமவன், పరాయణమ్-பரமபக்தியுண்டுபண்ணுமவன், శుభాఙ్గః-சோபனமானஅங்கங்களுடையவன்,

---

(வி.)பேஷஜும்—அஸாத்தியமான ஸம்ஸாரமென்கிற வியாதிக்கு பரம ஔஷதமானவன். பிஷக்—வியாதிமூலத்தைக்கண்டு சிகித்ஸைசெய்யவல்ல வைத்தியனானவன்.

(அவதாரிகை.) அவன் சிகித்ஸை பண்ணுகிறபடிதா னெப்படிப் பட்டதென்றால்:—

ஸந்யாஸக்ருத்—ஸந்யாஸத்தால் அறுப்பவன்.

[என்றால்—விஷயங்களில் வைராக்யத்தையும், தான் தனது என்கிற அபிமானத்தையு மொழிக்கைஎன்கிற ஸாத்விகமான ஸந்யாஸத்தைக் கொண்டு ரஜஸ் தமஸ்ஸுக்களைப்போக்குமவனென்றபடி.]

(அவதாரிகை) ஸந்யாஸமென்றால் பர்த்தாவான பரமபுருஷனிடத்தில் தனது பாரத்தைச் சுமத்துவது; இதையேயன்றோ எம்பெருமான் சிகித்ஸையாகச் செய்கிறான் 472. இதற்காக இச்சை, பயம், கோபம் முதலியவைகளை யடக்கவேண்டுமென்று உபாயம் சொல்லுகிறானுகையால்:-

சமஃ—சாந்தியை உபதேசிப்பவன்.

சாந்தஃ—ஸமுத்திரம்போல் அபாரமஹிமை யுண்டாயிருக்கச்செய்தேயும் அலையடங்கி ஸ்தப்தமாயிருக்கிற ஸமுத்திரம்போல் சிறிதும் அஹங்காரமின்றி சாந்தனாய் விளங்குமவன்.

நிஷ்ட்டா—விரக்தரான மஹான்களுடைய சுபமான உள்ளங்கள் நிலைக்கு மிடமானவன். சாந்திஃ—அவர்கள் பரமஸமாதியிலிருந்து தன்னை யநுபவிக்கும்பொழுது, நாம் இந்த நிலையிலிருக்கிறோமென்கிற தம்மதிகாரத்தை மறந்திருக்கும்படி விளங்குமவன்.

பராயணம்—அப்படி ஸமாதியில் நின்றவருக்கு உடனே மோக்ஷத்தை அளிக்குமதான பரமபக்தியைத் தருகின்ற உபாயமானவன். இதற்கெல்லாம் கீதையில் வசனங்காண்க 473.

சுபாங்கஃ—இப்படி தன்னிடத்தில் பக்திபண்ணுவதற்கு அநுகூலமான யமநியமாதி அங்கங்களைத் தருமவன்.

(அ) பராயணம்—புநரா வ்ருத்தியில்லாத கதியுடையவன்.

---

472 వేదాన్తవిజ్ఞానసునిశ్చితార్థాః ॥

473 నిర్మమశ్శాన్తః ఇత్యుపక్రమ్య ॥ మద్భక్తింలభతేపరామ్ ॥

[శాన్తిదస్స్రష్టా కుముదః కువలేశయః । గోహితో గోపతిర్గోప్తా]

శాన్తిదః - சாந்தியைக் கொடுப்பவன், స్రష్టా - ஸ்ருஷ்டிப்பவன், కుముదః - பூமியில் உகப்பவன், కువలేశయః - பூமியில் ஸஞ்சரணத்திரியும் ஜீவர்களைத் திரியச் செய்பவன், గోహితః - பிரகிருதிக்கும் வியவஸ்தையை உண்டுபண்ணுமவன், గోపతిః - சுவர்க்கத்துக்கு நாதன், గోప్తా - ரக்ஷகன்,

(வி) சாந்திதః—இப்படி பக்தியோகம் கைவந்தவர்களுக்கு மறுபடியும் ஸம்ஸாரமார்க்கத்தில் திருமபாதவண்ணம் தனது ஸாயுஜ்யமென்னும் சாந்தியைத்தருமவன் 474.

ஸ்ருஷ்டா—இப்படி மோக்ஷாபேக்ஷையுடையோரை பிருகிருதியினின்றும் விடுவித்து, போகத்தில் அபேக்ஷையுடையரான சேதநவர்க்கங்களை அவரவர் கருமத்துக்கேற்க ஸ்ருஷ்டிப்பவன்.

குமுதః—இப்படி பிரம்மாதி ஸ்தம்பபரியந்தமுண்டான பிராணிகளுக்கு அவரவர் நிலைக்குத்தக்கபடி விஸ்தாரமான போகத்தை யுண்டுபண்ணும பூமியான பிரகிருதி மண்டலத்தில அவைகளைச்சேர்த்து அநுபவிக்கச்செய்து தான் ஸந்தோஷிப்பவன 475.

குவலேசய:—(கௌ வலமாநாந் ஈசாந்சயச்சதி என்று வ்யுத்பத்தி.) என்றால்-இந்த ஸம்ஸாரமண்டலத்தில் முழுதுந்திரிந்து, தமது தேஹம் இந்திரியம் முதலியவைகளுக்குத் தம்மையே ஈசுவரனாகப் பாவித்திருக்கும் ஜீவர்களை அம்மாதிரியாகவே பாவித்துத்திரியும்படி நியமிப்பவன்.

கோஹித:—'கோ' என்று பூமியாய், அதனால் ஸம்ஸாரமென்கிற வித்தைவிதைக்கும் பூமியான பிரகிருதிமண்டலத்தைச்சொல்லி அதற்கு வியவஸ்தையைப் பண்ணுமவனென்கிறது 476

கோபதி:—போகபூமியான சுவர்க்கத்துக்கும் பதியானவன்.

கோப்தா—கருமப்பயனை இந்த சக்கிரத்தை ரக்ஷிப்பவன்.

ஷஷ்ட்டசதகம—ஸம்பூர்ணம்.

(அ.) குவலேசய:—குவலமென்று ஜலமாய் அதில் ஆதிசேஷன்மீது படுத்தவன் கோஹித:-கோவர்த்தநகிரியைத்தாங்கி ரக்ஷிக்கையாலே கோக்களுக்கு ஹிதமானவன் .கோப்தா—தன்னைத் தனது மாயையால் மூடுமவன்.

474 ఏకస్య స్యైకం పరివేష్టితారం జ్ఞాత్వా శివం శాన్తిమత్యన్తమేతి ॥ మత్ప్రసాదాత్ పరాం శాన్తిం స్థానం ప్రాప్స్యసి శాశ్వతమ్ ॥

475 అనీశశ్చాత్మా బధ్యతే భోక్తృభావాత్ ॥

476 యో యోనిం యోనిమధితిష్ఠత్యేకో యస్మిన్నిదం సఞ్చ విచైతి సర్వమ్ । త మీశానమ్ ॥

ஸ்ரீ:

ஸப்தமசதகம்.

[వృషభాక్షో వృషప్రియః ॥ అనివర్తీ-నివృత్తాత్మా సంక్షేప్తా]

వృషభాక్షః - தர்மத்தை சக்கிரக்கூடமாயுடையவன், వృషప్రియః - தர்மத்தை உகந்தவன், అనివర్తీ - நிவர்த்திப்பியாதவன், నివృత్తాత్మా - நிவ்ருத்தியடைந்த ஆத்மாக்களுடையவன், సంక్షేప్తా - சுருங்கச் செய்பவன்,

---

(வி) வ்ருஷபாக்ஷ:—வ்ருஷமென்ற தர்மமாய் அதையே 'அக்ஷ: சகிரத்தின் கூடமாய் வைத்திருப்பவன்.

[என்றால்-முற்கூறிய கர்மபலனுக்குத் தர்மம் ஸாதநமாயிருக்கையாலே அதைச் சக்கிரமென்றபோது, அதற்காதாரமான இதைக்கூடமென்கிறது என்று கண்டுகொள்வது.]

வ்ருஷப்ரிய;—இப்படி. ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளைச் செய்யுந் தர்மங்களிரண்டும் பிரியமாயிருப்பவன்.

[அவனுக்குப்பிரியமா யிருக்கையாலன்றோ கர்மங்களைத் தருமமென்கிறது? சுருதியில் 'செய்யக்கடவன்' என்று விதிக்கிறவிதியும் அவனுடைய பிரீதியையே யன்றோ விளக்குகிறது? இவ்வாதத்தை த்ரமிடாசாரியர் உதஹரித்தார் 477.

அநிவர்த்தீ—அதில் பிரவ்ருத்தி தர்மத்தில் நிஷ்டையுடையோரை தூமாதி மார்க்கத்தாலே பிதருலோகாதிகளை யடைவித்து மீண்டும் திருப்புகையாலே அவர்களை ஸம்ஸார மண்டலத்தனின்றும் கரையேறாதவன்.

[ஆனதுபற்றி யன்றோ ஸம்ஸார சக்ரமென்கிறது 478]

நிவ்ருத்தாத்மா—நிவ்ருத்தி தர்மநிஷ்டர்களான ஆத்மாக்களும் தன்னதானவன். ஸங்க்ஷேப்தா=ப்ரவ்ருத்தி தர்மநிஷ்டர்களுடைய ஸ்வாபாவிகமான ஞானத்தை ஸங்கோசிப்பிக்கிற ஸ்வபாவன் 479.

(அ.) வ்ருஷபாக்ஷ:—ஸாவாபீஷ்டங்களையும் வர்ஷிக்கும்படியான கண்களுடையவன் ஸங்க்ஷேப்தா—விஸ்தாரமான ஜகத்தை ஸம்ஹார ஸமயத்தில சுருக்குமவன்.

---

477 ఫలసమ్బన్ధత్వయా హి కర్మభిరాత్మానం ప్రీణయన్తి స్వప్రీతిర్ఫలం ఫలాయ ఇతి హి శాస్త్రమర్యాదా ॥

478 ధూమో రాత్రిస్తథా కృష్ణః షణ్మాసా దక్షిణాయనమ్ । తత్ర చాన్ద్రమసం జ్యోతిర్యోగీ ప్రాప్య నివర్తతే ॥

479 యయా క్షేత్రజ్ఞశక్తిః సా వేష్టితా నృప సర్వగా ॥

[క్షేమకృచ్ఛివః శ్రీవత్సవక్షాః శ్రీవాసః శ్రీపతిః శ్రీమతాంవరః శ్రీదః]

క్షేమకృత్ - க்ஷேமத்தைச்செய்பவன், శివః - நன்மைசெய்பவன், శ్రీవత్సవక్షాః - சிரீவத்ஸத்தை மார்பிலுடையவன், శ్రీవాసః - லக்ஷ்மிககிருப்பிடமானவன், శ్రీపతిః - லக்ஷ்மீநாயகன், శ్రీమతాంవరః - சிரீமான்களில்சிறந்தவன், శ్రీదః-லக்ஷ்மியைக்கொடுப்பவன்,

(வி.) க்ஷேமக்ருத்—நிவ்ருத்தி தர்மநிஷ்டர்களுக்கு அந்த ஞானஸங்கோசத்தைப்போக்கி க்ஷேமத்தை யுண்டுபண்ணுமவன்.

சிவ:=இப்படி போகத்திலும் மோக்ஷத்திலும் அபேக்ஷையுடையோரான யாவர்க்கும் மங்களத்தைச்செய்பவன் [480].

(அவதாரிகை.) அநந்தரம் இவனைச் சிவனென்று மங்களகரனாகச் சொல்லுகைக்கு வேண்டும் உபபத்திகளை மேலேசொல்லுகிறது:—

ஸ்ரீவத்ஸவக்ஷா:=நியாம்ய கோடிகளான சேதநகோடிகளைக் காட்டிலும் இவனை வேறுபடுத்திக் காட்டுமதாய் லக்ஷ்மீவல்லபனாயிருக்கும் அத்ருஷ்டத்துக்கு ஸூசகமான ஸ்ரீவத்ஸமென்னும் சிந்நமுடையவன்[481]. ச்ரீவாஸ:=சிரீமஹா லக்ஷ்மியானவள் நித்தியமாய் யதேச்சவிஹாரம்பண்ணும் கல்பகவிருக்ஷ உத்யாநம் போன்றவன் [482].

ச்ரீபதி:—"துல்யசீலவயோ வ்ருத்தாம்" என்கிறபடியே அந்த பெரிய பிராட்டியாருக்குத் தகுந்த ஸ்வயம்வர நாயகன்[483].

(அவதாரிகை.) ஸ்ரீமஹாலக்ஷ்மியானவள் ஆதரத்துடன் அநவரதமும் தன்கண்களாரக்கண்டு மகிழும் பரிபூர்ண பாத்திரம் பகவான், பிரம்மாதிகளோ அவள் எப்போதோ ஒருகாரியாந்தரத்தைக் கடாக்ஷிக்கும்பொழுது அதில் விதிவசமாய் விழுகின்ற கடாக்ஷ லேசத்துக்குப் பாத்திரர்களாய் அதினால் ஸாம்ராஜ்ய லக்ஷ்மியை அடைந்து ஸ்ரீமாந் என்கிற பெயரை வஹிக்கிறார்கள் ஆகையால் அப்படிப்பட்டப் பிரம்மாதிகளுக்கெல்லாம் சிரேஷ்டனென்கிறது.

ச்ரீமதாம்வர:=சிரீமான்களுக்கெல்லாம் சிரேஷ்டன்.

ச்ரீத:=நித்தியமாய் தனது நிர்வ்யாஜமான பிரேமரஸத்தின் அழகை அவளுக்குக் கொடுப்பவன் [483].

(அ) ஸ்ரீபதி:—லக்ஷ்மீபதி-பராசக்திக்குப் பதியென்றுமாம்.

[480] సంసారమోక్షస్థితిబన్ధహేతుః ॥

[481] శ్రీవత్సవక్షాః ॥

[482] శ్రియో నిత్యస్వైరవిహారకల్పద్రుమోద్యానమ్ ॥

[483] తుల్యశీలవయోవృత్తాం ॥ అస్యేశానా జగతో విష్ణుపత్నీ ॥

[శ్రీశః శ్రీనివాసః శ్రీనిధిః శ్రీవిభావనః । శ్రీధరః శ్రీకరః శ్రేయః శ్రీమాన్]

శ్రీశః - லக்ஷ்மியைப் பத்நியாகவுடையவன், శ్రీనివాసః - லக்ஷ்மியைத் தாங்குமவன், శ్రీనిధిః - லக்ஷ்மிக்கு நிதியானவன், శ్రీవిభావనః - லக்ஷ்மியால் பிரஸித்தியடைந்தவன், శ్రీధరః - லக்ஷ்மீதரன், శ్రీకరః - லக்ஷ்மியைச் செய்வித்துக்கொள்பவன், శ్రేయశ్శ్రీమాన్ - புருஷார்த்தங்களுக்காக ஆச்ரியிக்கப்படும் லக்ஷ்மியை நித்தியமாய் உடையவன்,

(வி.)[என்றால்—அவளுக்கு ஜீவநாதாரமாயிருப்பவனென்றபடி. அவனை ஆச்ரயித்திருக்கையாலன்றோ அவளை ச்ரீயென்கிறது[484].]

சரீசः—அவளுக்கும் அப்படிப்பட்ட தன்மையுண்டாகைக்குக் காரணனாகையால் ஈசனானவன். அதவா, ஸகல அவஸ்த்தைகளிலும் அவள் நியமிக்கப்பெற்றவன். இதற்கு வசநம் [485]காண்க.

ச்ரீநிவாஸ—கற்பகக் கொடிக்குக் கல்பக விருக்ஷம்போல் அவளுக்குக் கொள்கொம்பாய் விளங்குமவன்.

சரீநிதி—ஆபரணப்பெட்டியில் வைத்த ரத்தினமாலைபோல் அவளை வைத்து வாழ்பவன்.

ச்ரீவிபாவந:—அவள் ஸம்பந்தத்தாலே பிரஸித்தி யடைந்தவன்.[486]

ச்ரீதர—ஒளியை இரத்தினமும், பரிமளத்தைப் புஷ்பமும், நிலவைச் சந்திரனும், இனிமையை அமுதமும்போல் அவளை ஸ்வபாவமாகவே தரித்தவன்[487].

ச்ரீகர—பரத்வமான நிலையிற்போல் வியூஹம் அவதாரம் முதலிய நிலைகளிலும் தனக்குத்தக்கபடி அவளைச் செய்துக்கொள்ளுமவன்[488]. ச்ரேய: ச்ரீமாந்—ஸகல புருஷார்த்தங்களும் ஸித்திக்

(அ.) ச்ரீவிபாவந:—பிராணிகளுக்குக் கர்மானுரூபமாய் நாநாவிதமான ச்ரீயை உண்டுபண்ணுமவன்.

[484] నచసీతాత్వయాహీనా నచాహమపి రాఘవ । ముహూర్తమపి జీవావో జలాన్మత్స్యావివోద్ధృతౌ ॥

[485] ఆదావాత్మగుణత్వేన భోగ్యరూపేణ విగ్రహే । ఆధారకస్వరూపేణ దాసీభావేన వా సదా ॥

[486] అప్రమేయం హి తత్తేజో యస్య సా జనకాత్మజా ॥

[487] నహి హాతుమియం శక్యా కీర్తిరాత్మవతా యథా ॥

[488] దేవత్వే దేవదేహేయమ్ ॥

[లోకత్రయాశ్రయః॥స్వక్షస్స్వంగశ్శతానందో నన్దిర్జ్యోతిర్గణేశ్వరః]

లోకత్రయాశ్రయః - உலகமூன்றுக்குமுறைவிடம், స్వక్షః - நல்ல கண்களுடையவன், స్వఙ్గః - நல்ல அவயவங்களுடையவன், శతానన్దః- அளவற்ற ஆநந்தங்கொண்டவன் నన్దిః- ஸம்ருத்தியுடையவன், జ్యోతిర్గణేశ్వరః- ஜோதிக்கணங்களுக்கிறைவன்,

(வி.) கும்பொருட்டு ஆச்ரியிக்கவேண்டியவளான பெரிய பிராட்டியாரோடு நித்தியமாய் கூடிவிளங்குமவன [489].

லோகத்ரயாச்ரயः—ஜகந்மாதாவான அவளுடன்கூடி எப்போதும் ஸகலத்துக்கும ஆச்ரயமாய் விளங்குமவன் [490].

ஸ்வக்ஷः—அவள் ஸௌந்தரியமாகிற அமுதக்கடலைக் கரைகாணும்படியான கண்முதலிய கரணங்களுடையவன்.

ஸ்வங்கः—அவளும் மேல்விழுந்து விரும்பும் படியான திருமேனியுடையவன்.

சதாநந்தः—ஒருவர்க்கொருவர் பிரணய ரஸம் வெள்ளமிடும்படி அபரிமிதமான ஆநந்தமுறுமவன்.

நந்திः—இப்படி எப்பொழுதும் எங்கும் எல்லாப் பிரகாரத்தாலும் இவளால் ஸம்ருத்தி பொருந்தியிருப்பவன.

ஜ்யோதிர்கணேச்வரः—இருவர்க்கும் அநுகூலர்களாய் தேஜோரூபிகளாய் விளங்குகின்ற அநந்த கெருடவிஷ்வக் ஸேநாதிகளான பரிசாரக கணங்களால் ஸேவிக்கப்படுகையாலே அவர்களுக்கு ஈசுவரனுய் விளங்குமவன்.

[ஜோதிः என்கிற சபதம, புருஷ ஸூக்தத்தில் [491]சொல்லியபடி எப்பொழுதும் பிரகாசிக்கின்ற நித்திய ஸூரிகளைச் சொல்லக்கடவதாயிருக்குமென்றறிக.]

(அவதாரிகை.) இப்படி பரத்வாவஸ்தையில் கடைசிவரையிலுண்டான ரஹஸ்யம் சொல்லப்பட்டது. இனி ஸௌசீல்யத்தின் பரமாவதியிலுண்டான ரஹஸ்யம் சொல்லப்படும்.

(அ.) சதாநந்த:—பராநந்தனுன தான் ஒருவனே பலவிதமாயாகிருனென்று சதாநந்தனென்கிறது.

489 యస్యాంహిరణ్యంవిన్దేయంగామశ్వంప్రురుషానహమ్ ॥

490 త్వంమాతా సర్వలోకానాం దేవదేవో హరిః పితా ॥

491 మరీచీనాం పదమిచ్ఛన్తి వేధసః ॥ సాధ్యాస్సన్తి దేవాః ॥

[విజితాత్మా విధేయాత్మా సత్కీర్తిశ్ఛిన్నసంశయః ।]
[ఉదీర్ణస్సర్వతశ్చక్షురనీశశ్శాశ్వతస్థిరః ॥]

விஜிதாத்மா - ஜயிக்கப்பட்டவன், விதேயாத்மா - வசப்பட்டவன், ஸத்கீர்த்திः-நல்லபுகழ்கொண்டவன், சின்னஸம்சயः-ஸந்தேகந்தீரப்பவன, உதீர்ணः - விளங்குமவன், ஸர்வதச்சக்ஷுः - எங்குங்கண்கணுடையவன, அநீசः-பராதீனன, சாச்வதஸ்திரः - எப்போதும் அசையாமலிருப்பவன்,

(வி) விஜிதாத்மா = ஸ்ரீமஹாலக்ஷ்மியினுடைய நித்திய ஸம்பந்தம்பெற்று அதிகஸம்பந்நனாய் நிரபேக்ஷமாய் விளங்குகின்றானாகிலும், தனது தாளடைந்தவர்களுக்கு வசப்பட்ட மனதையுடையவன்.

விதேயாத்மா—அவர்களுக்கு விதேயனாமிடத்தில் அவர்கள், இங்கேவா, இங்கே இரு, இங்கேஉட்கார், இதைப்புசி என்று விதிக்கும்படியாய் விளங்குமவன்.

ஸத்கீர்த்திः=இப்படிப்பட்ட ஸௌசீல்ய மிருக்கச்செய்தே பெரிய கீர்த்தியுடையவன் 492.

சிந்நஸம்சயः=இப்படி அத்தியந்தம் ஸௌசீல்யமுடையனா யிருக்கையாலே, தன்னையறிவதும், தன்னைஸாதிப்பதும், தன்னை அடைவதும் ஸாலபமோ துர்லபமோ அவ்விஷயத்திலுண்டான ஸம்சயத்தையெல்லாம் போக்கடிப்பவன் 493. எப்படி?

உதீர்ணः=கர்மசக்ஷுஸ்ஸுக்களுக்கும் ப்ரத்தியக்ஷமாய்க்காணலாம்படி அவதரித்தவன். ஸர்வதः சக்ஷுः=அப்படி அவதரிக்கையாலே நம் போல்வாருடைய கண்களையெல்லாம் நேர்கொடு நேரேகடாக்ஷிப்பவன்,

[இதனால் ஸம்சயம் அற்றபடி. சொல்லித்தாயிற்று. ஸ்பஷ்டமாய் பிரத்தியக்ஷமான விஷயத்தில் ஸம்சயமுண்டோ?]

அநீச:=அப்படியே சேதனனிட்டவழக்காய் ஸ்நாநம், அலங்காரம் கோஷ்டிமுதலிய தனது வியாபாரங்களெல்லாம் அவர்களுடைய ஆதீனமாயிருக்கையால் பரதந்த்ரமாயிருப்பவன்.

சாச்வத: ஸ்திர:=அப்படியே எப்பொழுதும் பிரத்தியக்ஷமாய்க்கண்டனுபவிக்கும்படி அனேக பிம்பங்களைத் திருமேனியாய்த் தரித்து எப்போதும் மறையாமல் 494எழுந்தருளி யிருப்பவன்.

(அ.) சிந்நஸம்சய:—ஸம்சயந்தீர்ந்தவன்.

492 యదస్యకీర్త్యై తేతదస్తీతావదితి నతుయావదస్తీతావదితితదధికంవా ॥

493 తంహదేవమాత్మబుద్ధిప్రసాదమ్ ॥

494 బిమ్బాకృత్యాత్మనాబిమ్బేసమాగమ్యావతిష్ఠతే ॥

[భూశయో భూషణో భూతి ర్విశోక శ్శోకనాశనః ॥ అర్చిష్మా నర్చితః]

భూశయః - புவியில்படுத்தவன், భూషణః - அலங்கரிப்பவன், భూతిః-ஐசுவரியமானவன், విశోకః-சோகமற்றவன்; శోకనాశనః-சோகந்தீர்ப்பவன், అర్చిష్మాన్ - காந்தியுடையவன், అర్చితః-பூஜிக்கப்பட்டவன்,

(வி.) பூசயஃ=பக்தர்கள் தன்னுடைய நித்திய ஸாந்நித்யத்தை அபேக்ஷித்து, ஸ்வயம் வ்யக்தமான மனுஷ்யாதி ரூபமாய் விளங்குகிற ஆயாதநாதி பூமிகளைக்காட்டி இதிலிருக்கவேண்டுமென்றார்களாகில் அவர்களை அநுக்கிரஹிப்பதிலுண்டானஸௌகாதிசயத்தாலே அவைகளில் ஆவிர்ப்பவிப்பவன்.

பூஷணஃ=இப்படி யாவர்க்கும் ஹிதமாய் நடந்துகொள்வதென்கிற குணாதிசயத்தால் தன்னை பூஷித்துக்கொள்பவன்:

[நல்ல ஸ்ரீமான்களான புருஷர்கள்; தரித்திராளுடைய கிருகத்திற்கு அதிதியாய்வந்து, அவர்கள்தந்த அல்பமான உணவுகளை யருந்தி, அவர்களோடு ஒருகோர்வையா யிருந்தால் அது அவர்களுக்கு தூஷணமாகுமோ? ஆகமாட்டாது; மற்றபடி பூஷணமே யாமென்றுணர்க.]

பூதிஃ=யாதொரு உபாயமும் தெரியாத அவர்களுக்கு ஸர்வஸம்ருத்தியான ஐசுவரியமானவன்.

[என்றால்—அவர்களுக்கு புத்திரன், பசு, போஜநம், பந்துமுதலிய வெல்லாந் தானாயிருப்பவனென்றபடி]

விசோக:=இப்படி பிராணிகளொன்றையும் நாதனற்றதாக விடாமையாலே அவ்விஷயத்தில் சோகந்தீரந் திருப்பவன். சோகநாசந:=அவர்களுக்கு தன்னைப் பிரிவதிலுண்டாகும் சோகத்தைப் போக்குமவன்[495].

அர்சிஷ்மாந்=தன்பிரபாவங்களை யெல்லாம் மறைத்துக்கொண்டே அவர்களுடைய உட்கண் வெளிக்கண் ணென்கிற விரண்டுந் திறக்கும்படியான திவ்யதேஜஸ் ஸுடையவன்.

அர்ச்சிதஃ=இப்படிக்கெல்லாம் விளங்கும் அர்ச்சாவதாரத்தைக்கொண்டருளுமவன்.

[இவ்வவதாரந்தான், பரத்வம்போல் வெகுதூரத்திலிராமலும், ஸுந்தராதி அவதாரங்கள்போல் எப்பொழுதோ எங்கோ ஓரிடத்தி லிராமலும், எப்பொழுதும் ஸகலமான க்ஷேத்திராயதநங்களிலும் பிரத்தியக்ஷமாயிருக்கும். இதினுடைய தத்வரஹஸ்யம், பகவத் சாஸ்திரம் போதாய

(அ) அநீச:—தனக்கோரீசனில்லாதவன். பூசய:—லங்கையின் வழியைத்தேடவேண்டி ஸமுத்திரதீரத்தில் படுத்தவன்.

495 సోహం భగవశ్శోచామి తమ్మా భగవాన్ శోకస్య పారం తారయతు ॥

[కుంభో విశుద్ధాత్మా విశోధనః । అనిరుద్ధో ప్రతిరథః]

కుంభ్యః - விரும்பப்பட்டவன், విశుద్ధాత్మా பரிசுத்தஸ்வபாவன், విశోధనః - சோதிப்பவன், అనిరుద్ధః-அநிருத்தன், అప్రతిరథః- எதிர்த்தேரில்லாதவன்,

---

(வி.) நஸ்மிருதி, வைஷ்ணவ ஸ்மிருதிபுராணம் முதலானவைகளில்கண்டு கொள்வது. இன்னும் வைஷ்ணவ தர்மத்திலும் ஸுலபம் 496.]

கும்ப.—ஆங்கே அவ்வவர்கள் தாம் தாம் பரிசயம்பண்ணிய ஸவுந்தரியாதிகளைப்போலவே பகவானுக்கும் இருப்பதாக ஆசைப்படப்பட்டவன்; அதவா-கு என்று பூமியாய் தியாநம் ஆராதநம முதலானவைகளுக் கெல்லாம் எல்லே நிலமாய் விளங்கும் அர்ச்சா விக்ரஹத்தில் ஆச்ரிதாளுக்கு யமகிங்கராதிகளா லுண்டாகும் மஹாபயத்தையும் போக்கும்படி விளங்குமவன் என்றுமாம்.

[இப்படி-எம்பெருமான் அர்ச்சாஸமாதிகொண் டருளிய திவ்யக்ஷேத்திரங்களில் சரீரத்தை விட்டவர்களுக்கு அவரவர் சுத்திக்குத்தக்கபடி எம்பெருமான், தானேயாவது, தனது பக்தாளைக்கொண்டாவது அவர்களைச் சோதித்து, அவர்களுக்கு அந்த ஜந்மத்திலோ அல்லது புண்யமான ஜந்மாந்தரங்களிலோ கிரமமாய் தனது பிராப்தியைத் தருவதாய் 497சொல்லப்படுகிறது.]

விசுத்தாத்மா=தன்னை ஆச்ரியித்தவாளிடத்தில் தாரதம்யமின்றி யாவர்க்கும்தனது ஸர்வஸ்வத்தையும் வழங்குகையாலே பரிசுத்தஸ்வபாவன்.

விசோதந:—தனது க்ஷேத்திரங்களில் சரீரத்தைவிட்டவர்களை ச்சோதித்து தனது பிராப்திக்கு உரியவாளாகச் செய்துகொள்பவன்.

(அவதாரிகை.) அநந்தரம் க்ஷேத்திர விசேஷங்களில் எழுந்தருளும் பொழுது முன்சொன்ன வியூஹரூபமாயும் விபவரூபமாயும் எழுந்தருளியிருக்கும்படி சொல்லுகிறது.

அநிருத்த:—ருஷிகள் திருக்தியின்படி 498 பூமியில் வாஸுபாண்டமென்கிற க்ஷேத்திரத்தில் ஜநார்த்தனனென்கிற திருநாமம்பூண்டு எழுந்தருளிய அநிருத்தஸ்வரூபன்.

அப்ரதிரத:—அவனே ஜநார்த்தநனுகையாலே அநிஷ்டமான ஜநங்களை நாசம்செய்யும் விஷயத்தில் தனக்கு எதிராய் மற்றொரு ரதம் நிற்கவொட்டாமல் விளங்குமவன்.

496సురూపాం ప్రతిమాం పిష్ణోః ప్రసన్నవదనేక్షణామ్ । కృత్వాత్మనః ప్రీతికరీం సువర్ణరజతాదిభిః ॥ తామర్చయేత్ ॥

497అధ్యావనిషు సర్వాసు నిత్యం కుర్వన్ హి సన్నిధిమ్ । ముక్తయే సర్వభూతానాం విశేషేణ తు వైభువి ॥

498జనార్దనాఖ్యయా దేవస్త్వనిరుద్ధో జగత్ప్రభుః । భూభాగే వాసుభాణ్డాక్ష్యే నిత్యసన్నిహితస్థితః ॥

[ప్రద్యుమ్నో౽మితవిక్రమః। కాలనేమినిహా వీరశ్శౌరిః]
[శూరజనేశ్వరః। త్రిలోకాత్మా త్రిలోకేశః]

ప్రద్యుమ్నః - தோற்றுமவன், అమితవిక్రమః - அளவற்றபராக்கிரமன், కాలనేమినిహా - காலசக்கிரத்தையழித்தவன், శౌరిః - சௌரியென அவதரித்தவன், శూరః - சூரன்மைந்தன், శూరజనేశ్వరః - சூராளான ஜநங்களுக்கு ஈசுவரன். త్రిలోకాత్మా - மூன்றுலோகமும் எப்போதும் திரிபவன், త్రిలోకేశః - விசுவேச்வரன்.

(வி.) ப்ரத்யும்ந:- தன்னைத் தோற்றுவிக்குமவன் அமிதவிக்ரம:= மூவுலகத்திலும் அடங்காத பராக்கிரமசாலி. காலநேமிநிஹா- கீழ்ச்சொன்னக்ஷேத்திரங்களிலிருந்தபடி கலிகல்மஷமென்னுங்காலசக்கிரத்தைப் போக்கியவன்.
[இப்படியே யன்றோ காலநேமி நாசகனுடைய தியாநத்தில் சொல்லப்பட்டது 499]

சௌரி:= உத்பலாவதக க்ஷேத்திரத்தில் சௌரியென்னும் திருநாமம் பூண்டெழுந்தருளியவன்.

சூர:= சித்திரகூட பர்வதத்தில் ஸகலராக்ஷஸ ஸம்ஹாரகர்த்தாவாய் விளங்கும் ராமனென்னும் சூரனவன் 500.

சூரஜநேச்வர:= சூராஜநகெல்லாம் ஈசுவரன்.

த்ரிலோகாத்மா= மகததேசத்தில் த்ரிலோக நாதனென்று ப்ரஸித்தமாய் எழுந்தருளி யிருப்பவன் 501.

[த்ரிலோகத்துக்கும் ஆத்மாவென்றால் பக்தாளை அநுக்கிரஹிப்பதற்காக எந்தவேளையும் மூன்றுலோகமும் ஓடித்திரியுமவனென்றபடி.]

த்ரிலோகேச:= ப்ராக்ஜோதிஷ பட்டணத்தில் விசுவேசுவரனென்கிற திருநாமத்தோடு விளங்குமவன் 502.

(அ) காலநேமிநிஹா:— காலநேமியென்னும் அசுரனைக்கொன்றவன்.

499 అవిద్యాఖ్యాచయానేమిః కాలచక్రస్యదుర్ధరా। సామయాయంసమాశ్రిత్యవిగ్రహంవిధునోతిచ॥ ధ్యాయేత్తత్ప్రసరఘ్నం దేవమ్॥

500 ధరాధరేచిత్రకూటేరక్షఃక్షయకరో మహాన్। సంస్థితశ్శూరరామఃపద్మపత్రాయతేక్షణః॥

501 మగధామణ్డలేవిప్రమహాబోధధరాశ్రితః। సంస్థితో లోకనాథాత్మా దేవదేవో జనార్దనః॥

502 శుభమాసాద్యభూభాగం ప్రాగ్జ్యోతిషపురేతథా। దేవంవిశ్వేశ్వరాఖ్యస్తు స్థితమేత్యస్వగోచరాత్॥

[కేశవః కేశిహా హరిః ॥ కామదేవః కామపాలః]

[కామీ కాంతః కృతాగమః। అనిర్దేశ్యవపు]

కేశవః - கேசவப்பெருமாள், కేశిహా - கேசியைச்செருத்தவன், హరిః - ஹரி, కామదేవః - காமதேவப்பெருமாளானவன், కామపాలః புருஷார்த்தங்களைக்காப்பவன், కామీ-விரும்பப்படுமவன், కాంతః - இனியனுனவன், కృతాగమః - ஆகமங்கள்செய்தவன், అనిర్దేశ్యవపుః-குறிக்கப்போகாததிருமேனியன்,

(வி) கேசவ:—மதுரையிலும காசியிலும கேசவனென்னுந திருநாமமபூண்டு எழுந்தருளியிருப்பவன் [503].

கேசிஹா—கேசியைக்கொன்றவன்.

[என்றால் "கேசவம் கேசிஹந்தாரம்" என்று கேசவனென்னுந்திருநாமம் பூண்டவனென்றபடி.]

ஹரி:—கோவர்த்தன பர்வததநதில ஹரியென்னுந் திருநாமத்தோடு எழுந்தருளியிருப்பவன்.

காமதேவ:—சங்கராலய க்ஷேத்திரத்தில் ஸகலருக்கும் ஸகல புருஷார்த்தங்களையுங் கொடுத்துக்கொண்டு காமதேவனென்னும் பெயர் பூண்டுஅப்ஸரஸ்ஸால் பூஜிக்கப்பட்டு விளங்குமவன்.

காமபால:—அப்படி தான்தந்ததைத் தானே பரிபாலிப்பவன்.

காமீ—புருஷார்த்தங்களை அதிகமாய் கொடுக்கையாலே ஆசைப்படும்படிவிளங்குமவன்

காந்த:—தானும் மனோக்ஞனு யிருப்பவன்.

[ஆகவேயன்றே அப்ஸரஸ் அர்ச்சிக்கிறது? இப்படியே மேலும ஆங்காங்கு திருநாமத்தின் ஸாமர்த்தியத்தால் அந்தந்த க்ஷேத்திர ஸம்பந்தம் உளஹிக்கததக்கது.]

(அவதாரிகை,) அநந்தரம் சக்தீசாவதாரம் சொல்லப்படும்.

க்ருதாகம:—நானுவித மந்த்ர வித்தைகளைச் செய்தவன்.

அநிர்த்தேச்யவபு:— அந்தநத யுகத்துக்கேற்றபடி திருமேனியெடுக்கையாலே இதுதானென்று குறிப்பிடப்போகாத சரீரமுடையவன்.

(அ.) கேசவ:—பிரம்மருத்திரர்களுக்குக் காரணன்.

ஹரி:—ஸம்ஸாரததை வேர் பிடுங்கலாகப்போக்குமவன்.

காந்த:—பிரம்மாவின் வாழ்நாளான த்விபரார்த்தத்தின் முடிவில் பிரமனைமுடிப்பவனென்றுமாம்,

503 కేశవః క్లేశహారిత్వాత్ కేశిద్వేష్యేణ కీర్తితః। మధురాయ్యామహాక్షేత్రే వారాణస్యామపి ద్విజ ॥

[విష్ణుర్వీరోఽనంతో ధనంజయః॥బ్రహ్మణ్యోబ్రహ్మకృత్॥]

విష్ణుః-வியாபித்தவன், వీరః-வீரன், అనన్తః-அளவற்றவன், ధనఞ్జయః-தனத்தை ஜயித்தவன், బ్రహ్మణ్యః - பிரகிருதிக்கும் ஆத்மாவுக்கும் ஹிதமானவன், బ్రహ్మకృద్బ్రహ్మ - நான்முகனுக்கும் நியாமகனானவன்,

(வி) விஷ்ணுః=இப்படி. தனது நியமநசக்தியைக்கொண்டு வியாபித்தவன். வீரః=ஸாதுக்களுக்கு ஸந்தாபத்தை உண்டுபண்ணுமவர்களை தனது கதை, சக்கிரம் முதலிய ஆயுதங்களாலேயே நிரஸிப்பவன் [504].

அநந்தః=தேசத்தாலாவது காலத்தாலாவது வஸ்துவாலாவது அளவின்றியிருப்பவன்[505].

[எப்போதும் எங்கும் ஸகலவிதத்தாலும் பிரவர்த்திப்பவனென்றபடி.]
(அ-கை.) குணமும் விபூதியும் இப்படியே அளவற்றிருக்குமென்கிறது.

தநஞ்ஜயः= தனத்தை ஜயித்தவன்.

[அதாவது, இதைநாம் அடையவேண்டுமென்கிற ஆசையும், ஸம்பாதித்தால் அதில் லோபமும், அதைக்காப்பாற்றுவதும், அதைக்கொண்டு ஜீவநம் பண்ணுவதும் எல்லாம் தனத்தைவிட இவனிடத்தில் அதிகமாய் உண்டாயிருக்கையாலே பொன், ரத்நம் முதலிய தநங்களையெல்லாம் விட மேலாய்விளங்குமவனென்றபடி.]

ப்ரம்ஹண்யః—பெரியவைகட்கு இதமானவன்.

[என்றால்—அபரிமிதமான போகமோக்ஷங்களிரண்டையும் கர்மஞானங்கள்கொண்டு அநுபவிக்கிறபடியால் பெரிதாயிருக்கும் சேதநத்துக்கும், அளவிறந்த போகஉபகரணங்களாகப் பரிணமிக்கிறபடியால் பெரிதாயிருக்கும் அசேதனத்திற்கும், ஸ்திதி, போகம் முதலான ஸகலாவஸ்தைக்கும் ஹேதுவாய் ஹிதமாயிருப்பவனென்றபடி.]

ப்ரம்ஹக்ருத் ப்ரம்ஹா=பிரகிருதியின் காரியவர்க்கமான மஹத் அஹங்காரம் முதலிய விஸ்தாரங்களைச் செய்கின்ற சதுர்முகப் பிரம்மாவுக்கும் பெரியவனுய்க்கொண்டு நியமிப்பவன்.

(அ.) தநஞ்ஜய:=திக்விஜயகாலத்தில் தநம் ஸம்பாதித்தமைகொண்டுதனஞ்ஜயனென்னப்படும் அர்ச்சுனரூபியானவன்.

[504] ఆజ్ఞాం ప్రతీక్షతే నైవ గదాచక్రద్వయేన తు । వీరోఽతే నహినస్త్యాశు సాధుసన్తాపకారిణః ॥

[505] నాన్తః స్తోవి స్తరస్య మే ॥ అద్వైత స్యైవా నన్తోనా స్తియద్బ్రహ్మ ॥ సత్యం జ్ఞానమనన్తం బ్రహ్మ ॥

[కృద్బ్రహ్మా బ్రహ్మ బ్రహ్మవివర్ధనః । బ్రహ్మవిద్బ్రాహ్మణో బ్రహ్మీ బ్రహ్మజ్ఞో]
[బ్రాహ్మణప్రియః ॥]

బ్రహ్మ - பெரியவன், బ్రహ్మవివర్ధనః - தருமத்தை வளர்ப்பவன், బ్రహ్మవిత్ - வேதமறிந்தவன், బ్రాహ్మణః - பிராம்மணனவன், బ్రహ్మీ - பிரமமத்தையுடையவன், బ్రహ్మజ్ఞః - வேதார்த்தமறிந்தவன் బ్రాహ్మణప్రియః வேதாதிகாரிகளிடத்தில் அன்புகூர்ந்தவன்,

---

(ஸ) ப்ரம்ஹ=இப்படி வியக்தமாயும் அவ்யக்தமாயு மிருக்கின்ற ஸமஷ்டி வ்யஷ்டி புருஷர்களைப் பருக்கச்செய்வதோடு, தானும் நிரதிசயமான கல்யாண குணங்களாலும் விபவங்களாலும் பருத்து ஸகல வேதாந்த வேத்யமான பரப்பிரமஸ்வரூபமாய் விளங்குமவன் 506

ப்ரமஹவிவர்த்தந:=இப்படி விருத்தி யடைகின்ற பிரபஞ்சத்துக்கு ஆதிகரணமான, தவம் முதலிய தருமங்களை விருத்தி பண்ணுமவன்.

ப்ரமஹவித்=பரப்பிரம்மத்துக்கு வாசகமாகையாலே பிரம்ம மெனப்படுகிற வேதத்தை முழுதும் அறிந்தவன் 507.

ப்ராமஹண:=அந்த வேதத்தில் அறியவேண்டிய விஷயங்களை வியவஸ்தை பண்ணுவதற்காகத் தான் அத்திரிவம்சத்திலும் மற்றும் அனேகப்பிராம்மண வம்சத்திலும் தத்தாத்திரேயாதிரூபப் பிராம்மணனாய் அவதரிப்பவன்.

ப்ரம்ஹீ=இப்படிப் பிரமாணப் பிரமேயரூபமாயுள்ள ஸகல வஸ்துக்களும் தனதாக உடையவன் 508.

ப்ரம்ஹஜ்ஞ:=வேதங்களை அர்த்தபரியந்தம் ஸாக்ஷாத்கரிப்பவன் 509. ப்ராமஹணப்ரிய:=வேதாதிகாரிகளான பிராமமணரிடத்தில் பிரீதிபண்ணுமவன் 510

---

506 బృహత్త్వాద్బృంహణత్వాచ్చ బ్రహ్మేతి పరికీర్త్యతే ॥

507 అనాదినిధనం బ్రహ్మ న దేవా నర్షయో విదుః । ఏకస్తద్వేద భగవాన్ ధాతా నారాయణః స్వయమ్ ॥

508 సర్వబ్రహ్మమయో హరిః ॥

509 వేదవిదేవవాహకః ॥

510 ఘ్నన్తం శపన్తం పరుషం వదన్తం యో బ్రాహ్మణం న ప్రణమేద్యథార్హమ్ ॥

[మహాక్రమో మహాకర్మా మహాతేజా మహోరగః । మహాక్రతు]

మహాక్రమః - பெரியபடிகளுடையவன், మహాకర్మా - பெருஞ் செயலுடையவன், మహాతేజాః - மஹத்தான ஒளிபொருந்தியவன், మహోరగః - பெரியனுனதான் உள்ளத்தில் செல்பவன், మహాక్రతుః-மஹத்தான ஆராதநமுற்றவன்,

---

(வி)(அவதாரிகை.) அநந்தரம் இப்படி உத்ஸாஹமடைந்தவர்கள் விஷயத்தில் அவனுக்குண்டான வாத்ஸல்யத்தின் அளவின்மை சொல்லப்படுகிறது:

மஹாக்ரமஃ=ஸர்வத்துக்கும் மேலாய் விளங்கும் தன்னையடையும்படி, ஸகலத்துக்கும் கீழாய் ஆழமான ஸம்ஸாரமென்னும்பாதாளத்திலிருந்து ஜீவர்களைக் கரையேற்றவேண்டி பெரியதான படியைக்கட்டிவைத்திருப்பவன்.

[என்றால்—தாயானவள் எப்படி ஸ்தநந்தயமான பிரஜைக்கு முதலில் முலைகுடிப்பது, அநந்தரம் பசுவின் பால்குடிப்பது அநந்தரம் ஆஹாரந்தருவது, அநந்தரம் போகங்களையிடுவது முதலியகிரமங்களைச் செய்கிறாளோ இப்படியே ஸர்வேசுவரன் ஸுக்ருதியானஒருவனுக்குமுதலில் தமஸ்ஸினிடத்தில் த்வேஷத்தைபோக்கி அநந்தரம் ஆபிமுக்கியத்தைப் பிறப்பித்து, பிறகு அநுவர்த்திக்கச்செய்து அதன்பின் ஞானத்தையும் அதனபின் பக்தியையும் அநந்தரம் விசுவாஸத்தையும் பிறப்பித்து இப்படி [511]படிப்படியாய் தனக்கு ஆள்ப்படுத்திக் கொள்ளுகிறானென்றபடி]

மஹாகர்மா=பூச்சிப்புழுகுபோலிருக்கும் அற்பப்பிராணியையும் மஹத்தான தனது விபவத்தை அநுபவிக்கும்படி உயர்ந்த நிலையில்கொண்டுவைக்கிறபடியால அத்தியாச்சரியகரமான செயல செய்பவன்.

மஹாதேஜாஃ=இப்படி தாமஸாளுக்குண்டான அநாதியான அக்ஞானத்தையும் போக்கும்படி மஹத்தானதேஜஸ் உடையவன்.

(அவதாரிகை.) அதாவதெப்படி?

மஹோரகஃ=மிகவும் பெரியனான தான் மிகவும் அற்பர்களையுங் கிட்டி அவர்கள் கரணங்களிலபுகுந்து அதிலும் அவர்மனதில் புகுந்து அவர்கள் அக்ஞானத்தைப் போக்குமவன்[512].

மஹாக்ருதுஃ=மிகவும் சுலபமாயியற்றககூடிய ஆராதநத்தையுடையவன் [513].

(அ)மஹோரக:—ஸர்ப்பங்களுக்குள் வாசுகியென்னும் ஸாபமானவன்.

---

511 అభ్యాసయోగేన తతో మామిచ్ఛాప్తుం ధనంజయ ॥

512 యో నపి త్రైర్న విభవైర్న వాసోభిర్న భూషణైః । తోష్యతే హ్యుదయేనైవ కస్తమీశన్న పూజయేత్ ॥

513 యత్క్రతోర్హి ॥

[ர்மஹாயஜ்வா மஹாயஜ்ஞோ மஹாஹவிः ॥ ஸ்தவ்ய ஸ்தவப்ரிய]

మహాయజ్వా - பெரியயக்ஞம் செய்தவர்களைப்பெற்றவன், మహాయజ్ఞః- பெரியயக்ஞமுடையவன், మహాహవిః- மகத்தான ஹவிஸ்ஸை யுடையவன், స్తవ్యః - துதிக்கேற்றவன், స్తవప్రియః - துதியென்றால் உகப்பவன்,

(வி) மஹாயஜ்வா=தன்னை ஆராதிப்போர்கள் இதரஆராதகர்களை விட சிறந்தவராதலால் மஹத்தான யாஜகர்களையுடையவன்[514].

மஹாயக்ஞः=அபிகமனம், மதுபர்க்கம் முதலான மஹாயக்ஞங்களுடையவன்[515]. மஹாஹவிः=ஹிம்ஸை முதலியவை யில்லாததாய் மிகவும் ஸாத்விகமான ஹவிஸ்ஸையுடையவன்[516] சுருதியிற்சொல்லுகிறபடியே [517]ஜீவாத்மாவாகிற மஹத்தான ஹவிஸ்ஸையுடையவனென்றுமாம்.

(அவதாரிகை.) இப்படி மாநஸ வியாபார காயிகவியாபாரங்களாலே ஆராதிக்குந் தன்மைசொல்லிற்று. இனிவாசிகவ்யாபாரத்தால் ஆராதிக்கும்படி சொல்லுகிறது.

ஸ்தவ்யः—துதிசெய்தற்கேற்றவன்.

[இதற்குக்காரணம்-மிகவும் மங்களமாய் நித்தியமாய் நிரவதிகமாய் நிரவத்யமான குணங்கள் ஸ்வதஸ்ஸித்தமா யிருக்கப்பெற்று ஆயிரந்திருநாமங்கள் பூண்டிருக்கை. இப்படிக்கெல்லாமிருக்கிற நம்மிறைவனேயன்றோ துதிக்கேற்றவன்? விபரீதகுணங்களான தேவதாந்தரங்களை எவனாகிலுந் துதிக்கலாவது? இதைபாராஹஸ்பத்ய ஸ்ம்ருதியிற்காண்க. 518]

ஸ்தவப்ரியः=எப்படியாகிலும், எந்த பாஷையாலாகிலும், எவனாகிலும், தனக்குத் தேசுண்டாக்கினாலுமாம, இழுக்குண்டாக்கிலுமாம், குணஸங்கீர்த்தனம் பண்ணவேண்டுமென்கிற அபிமானத்தோடே பண்ணப்படும் ஸ்தோத்திரமாய் தன் விஷயமாயிருந்ததாகில் அதைரொம்பவும் உகப்பவன். இந்தவிஷயம் கண்டாகர்ணன் விருத்தாந்தத்தில் ஸ்பஷ்டமாய்த் தெரியவருகிறது

514 తేషామేకాన్తినః శ్రేష్ఠాస్తేచైవానన్యదేవతాః ॥

515 యాః క్రియాస్సంప్రయుక్తాస్స్యురేకాన్తగతబుద్ధిభిః । తాస్సర్వాశ్శిరసా దేవః ప్రతిగృహ్ణాతి వైస్వయమ్ ॥ నతత్రపశుఘాతోభూత్ ॥

516 బ్రహ్మార్పణం బ్రహ్మహవిః ॥

517 ఇదమహమ్మామమృతయోనౌ సూర్యేజ్యోతిషి జుహోమి ॥

518 ఆదరేణయథాస్తౌతి ధనవన్తం ధనేచ్ఛయా । తథా చేద్విశ్వకర్తారం కోనముచ్యేతబన్ధనాత్ ॥

[స్తోత్రంస్తుతస్స్తోతారణప్రియః ॥ పూర్ణఃపూరయితాపుణ్యః]

స్తోత్రమ్ - துதியை நிறைவேற்றுமவன், స్తుతః-துதிக்கப்பட்டவன், స్తోతా-துதிப்பவன், రణప్రియః-போர்உகந்தவன், పూర్ణః-குறைவற்றவன், పూరయితా - குறைதீர்ப்பவன், పుణ్యః - பரிசுத்தமாக்குமவன்,

(வி) ஸ்தோத்ரம்=தனது ஸ்தோத்திரமாகிலும் அதைத்தான் அநுக்கிரஹித்துத் தலைக்கட்டிக்கொள்பவன் இவ்விஷயம் துருவன் செய்த ஸ்தோத்திரத்தில் ஸ்பஷ்டம்.

ஸ்துதஃ=ஆயிரம் படமுடைய ஆதிசேஷனாலும் வேதரூபியான கெருடனாலும் மற்றுமுண்டான நித்தியஸூரிகளாலும் பிரம்மாதிகளாலும் நம்மாலும் யாவராலும் தாரதம்மிய மின்றி அவரவர் காலங்களில் அவரவர் இஷ்டஸித்திக்காக ஸ்தோத்திரம் செய்யப்பட்டவன் 519.

ஸ்தோதா=தன்னைத் துதிப்பவனைத் துதிக்கும் சீலன் 520 இவ்விஷயம் கைலாஸ யாத்திரையில் விளங்கும்.

ரணப்ரியஃ=ஸ்ரீராமாயணம், ஸ்ரீமஹாபாரதம் முதலானவைகளால் ஸ்தோத்திரம் பண்ணப்பட்ட யுத்தமுதலிய ஸ்ரேஷ்டமான திவ்யசேஷ்டிதங்கள் செய்தவன்.

[தனக்கு அன்பரானவர்கள் உகக்கவேண்டுமென்று கக்காயுத்தமே யாகிலும்செய்யுமவனன்றோ? 521]

(அவதாரிகை) அதிக சிலவுசெய்து அதிகமாய் ஆயாஸப்பட்டு ஸத்கரிக்கவேண்டாதே இப்படி ஸ்தோத்திரமாத்திரத்தால் இவன் ஸாத்தியனுகைக்குக் காரணமென் னென்னில்:—

பூர்ணஃ=ஸகல அபீஷ்டங்களுமுண்டாயிருக்கப் பெற்றவன்.

பூரயிதா=இப்படி பூர்ணனாயிருக்கச் செய்தேயும் குறைவாளனைப்போல் ஸ்தோத்திரத்தை அபேக்ஷித்தவனாய் ஸ்தோத்திரிப்பவனது மனோரதத்தைப்பூர்த்திசெய்விக்குமசீலமுடையவன்.

புண்யஃ=பாபிகளைக்கூட புண்ணியத்துக் கேறும்படி பரிசுத்தமாக்குமவன்.

---

519 అశేషదేవేశ నరేశ్వరేశ్వరైస్సదాస్తుతం యచ్చరితం మహాద్భుతమ్ ॥

520 యంస్తువన్ స్తవ్యతామేతి వన్ద్యమానశ్చవన్ద్యతామ్ ॥

521 తతస్స రామం సుగ్రీవ ... మహాబ... । చకార ... ॥ ... రావణమాహవే ॥

[పుణ్యకీర్తిరనామయః ॥ మనోజవస్తీర్థకరో వసురేతా]

పుణ్యకీర్తిః - பரிசுத்திகரமானகீர்த்தியுடையவன், అనామయః - நோய்க்குவிரோதி, మనోజవః - மனமபோல வேகசாலி, తీర్థకరః - தீர்த்தங்களைச் செய்தவன், వసురేతాః - இரணியமே காரணமாகப் பிறந்தவன்,

(வி.) புண்யகீர்த்திः= தன்னுடைய ஸங்கீர்த்தநமும் அப்படியே பரிசுத்திகரமாயிருக்கப்பெற்றவன் 522 இதைப்பற்றியேயன்றோ அவன்விஷயமான ஸூக்திகளைக்கூடப் பரிசுத்திகாமென்கிறது?

அநாமயः=(இப்படி தன் ஸம்பந்தமாகிற திவ்ய ஔஷதங்கொண்டு ஸம்ஸாரமென்கிற மஹத்தான நோயைப்போக்கியருளுகையாலே நோய்க்கு விரோதியானவன். எம்பெருமானை அநுபவிக்கவொட்டாமல் சேதனனுடைய சக்தியைக்கெடுக்கையாலே ஸம்ஸாரத்தை நோயாகவன்றோ சொல்லுகிறது ?

மனோஜவः= கீழ்ச்சொன்னவைகளைச் சீக்கிரமாய்ச் செய்கையாலே மனதைக்காட்டிலும் வேகமானவன் 523.

தீர்த்தகரः= தன்னைப்போலவே ஸ்மரித்தாலும் ஸ்தோத்ரம்செய்தாலும் அவ்வளவுமாத்திரத்தால் ஸகலத்தையும் பரிசுத்தியாக்கச்செய்கிற கங்கை, புஷ்கரம் முதலிய தீர்த்தங்களுக்கும் பரிசுத்தி ஹேதுபூதன். சுருதிஸ்மிருதி முதலிய நல்லாமயங்களைப் பிரவர்த்திப்பிக்கிறவனென்றுமாம் 524; ஸமுத்திரம்போல் அகாதமாய்ப் பகவரியனாயிருக்கிற தன்னிடத்தில பிரவேசிப்பதற்கேற்ற துறைகளைக்கட்டினவனென்றுமாம்.

(அவதாரிகை) அதில் கிருஷ்ணவதாரம் சொல்லுகிறது.

வஸுரேதाः= திவ்யதேஜஸ்ஸே உபாதானகாரணமாய் அவதரித்தவன். வஸுவென்று தேஜஸ்ஸைச் சொல்லுகிறது 525.

(அ) தீர்த்தகர:—சதுர்த்தசவித்தைகளையும் மற்றும்பாஹ்யவித்தைகளையும் படைத்தவன்; ஹயக்கிரீவரூபியாய் மதுகைடபர்களை நிரஸித்து ஸ்ருஷ்டிகாலத்தில பிரம்மாவின்பொருட்டு ஸகல வேதங்களையும் மற்றும் ஸ்மிருதியாதிகளையும் உபதேசித்து, அசுரர்கள் அழிவதற்காக மற்றும்வேதவிருத்த சாஸ்திரங்களையும் உபதேசித்தானென்று புராணக்ஞர்கள்சொல்வார்கள்.

522 నామసంకీర్తనం యస్య సర్వపాపప్రణాశనమ్। ప్రణామో దుఃఖశమనస్తం నమామి హరిం పరమ్ ॥

523 సప్తజన్మకృతం పాపం స్వల్పం వా యది వా బహు । విష్ణోరాలయవిన్యాసప్రారమ్భాదేవ నశ్యతి ॥

524 యో నో జ్ఞానం తీర్థా కృష్ణాక్షు స్తృప్ ॥

525 ఉజ్జహారాత్మనః కేశౌ సితకృష్ణౌ మహామునే ॥

[వసుప్రదః । వసుప్రదో వాసుదేవో వసుర్వసుమనా హవిః ॥

వసుప్రదః - நிதியைத் தந்தவன், వసుప్రదః - தேஜஸ்ஸைத் தந்தவன், వాసుదేవః - வசுதேவன் மைந்தன், వసుః - வஸிப்பவன், వసుమనాః - வசுதேவரிடத்தில் மனமுவந்தவன், హవిః - கொண்டுபோகப் பெற்றவன்,

---

(வி.) வஸுப்ரதঃ=பரமநிதியான தன்னை தேவகீ வஸுதேவர்களுக்குப் புத்திரனாய்த் தந்தவன். வஸுப்ரதঃ=அவர்களுக்கே ஜகத்பிதாவான தனக்கும் பிதாவாகும்படியான மஹாதேஜஸ்ஸைத் தந்தவன்.

வாஸுதேவঃ=வசுதேவன் மைந்தன்.

ஸப்தமசதகம் — ஸம்பூர்ணம்.

ஸ்ரீঃ

அஷ்டமசதகம்.

(அவதாரிகை.) இந்த அவதாரத்துக்கு நிதானமான க்ஷீரஸாகரவாஸத்தைச் சொல்லுகிறது:—

வஸுঃ=க்ஷீரஸாகரத்தில் வஸிப்பவன்[526]. வஸுமநாঃ= தனக்குப்பிராணபதமான லக்ஷ்மியின் அவதாரஸ்தலமான க்ஷீரஸாகரத்தில் இருக்கச்செய்தேயும் வசுதேவனிடத்தில் திருவுள்ளமுடைத்தா யிருந்தவன்.

[தேவதத்தனை தத்தனென்பதுபோலும் ஸத்யபாமையை பாமையென்பதுபோலும் வஸுதேவனை வஸுவென்கிறது என்று மஹாபாஷ்யகாரர் வார்த்தையாகையால் இங்கே வஸு என்று வசுதேவனைச் சொல்லுகிறதென்றுணர்க.]

ஹவிঃ=(இவன் இப்படி தேவகீ வசுதேவர்களிடத்தில் வாஸம்பண்ண ஆசைப்பட்டிருக்கச் செய்தேயும், அவர்கள் இவனுக்குக் கம்ஸனால் என்ன பயமுண்டாகுமோவென்று இவனிடத்தில் உண்டான ப்ரீதியதிசயத்தாலே இவன் ஆண்மையைக் கணிசிக்கமாட்டாமல் யசோதா நந்தர்களிடம் கொண்டுபோகப்பெற்றவன்.

(அ) வஸுப்ரதঃ=சிரேஷ்டமான மோக்ஷத்தைத் தருமவன்.

---

526 ఏష నారాయణః శ్రీమాన్ క్షీరార్ణవనికేతనః । నాగపర్యఙ్కముత్సృజ్య హ్యాగతో మధురాం పురీమ్ ॥

సద్గతిస్సత్కృతిస్సత్తా సద్భూతిస్సత్పరాయణం శూరసేనో యదుశ్రేష్ఠః

సద్గతిః - ஸாதுக்களுக்கு கதியானவன், సత్కృతిః - நற்செய்கையுடையவன், సత్తా - ஸத்தையனவன்; సద్భూతిః - ஸாதுக்களுக்கு ஐசுவரியமானவன், సత్పరాయణం - ஸாதுக்களை தனக்குப்பரமகதியானவன், శూరసేనః - சூரரைச் சேனையாகவுடையவன், యదుశ్రేష్ఠః - யதுகுலதிலகன்,

(வி.) ஸத்கதிः—அவதரிக்கும்பொழுதே அசுரர் செய்த ஆடத்தைப் போக்குகையாலே வசுதேவாதி ஸத்துக்களுக்குக் கதியானவன்[527].

ஸத்க்ருதிः—நற்செய்கையுடையவன்.

[என்றால்—தயிர் வெண்ணெய்களைக் களவுகண்டும் உரலில் கட்டுண்டும் ராஸக்கிரீடைமுதலிய விளையாட்டுகள் ஆடியும், இவற்றையெல்லாம் கண்டும் கேட்டும் போருகிற பிராணிகளினது ஸம்ஸாரபந்தத்தைப் போக்குகையாலே நல்லசெய்கைகள் செய்தவனென்றபடி[528].]

ஸத்தா—ஸத்துக்களுடைய ஸத்தையும் தானேயாயிருப்பவன், அவனில்லாதபோது ஒன்றுந்தரிபாதன்றோ?[529].

ஸத்பூதி:—ஸத்துக்களுக்கு புத்திரன், மித்திரன், பந்து-தூதன், ஸாரதி முதலிய ஸகலவிதமும் தானேயானவன்[530].

ஸத்பராயணம்—ஸத்துக்களுக்குப் பரமகதியானவன்[531].

ஸத்பராயணः—என்று பாடமானால் ஸாதுக்களை தனக்குக் கதியாக நினைத்தவன்[532].

சூரஸேநः—யாதவபாண்டவாதிசூரர்களைப் புவியினது பாரத்தை யொழிப்பதற்கு ஸஹாயமாய்க் கொண்டவன்.

யதுச்ரேஷ்ட:—யாதவ வம்சத்தை உத்தரிக்கத் தோன்றியவன்[533]

(அ.) ஸத்பூதிः—ஸஜாதீய விஜாதீய பேதமின்றிக்கே கேவல ஸத்தா மாத்திரமாயிருக்கச்செய்தே நாநாப்பிரகாரமாய் தோற்றமவன்

சூரஸேநः—ஹநுமான் முதலான சூரரை ஸேநாவீரராயுடையவன்.

527 సన్తస్సన్తోపమద్ధకం ప్రశమం చణ్డమారుతః ॥ 528 జన్మ కర్మ చ మే దివ్యమ్ ॥

529 న తదస్తి వినా యత్ స్యాత్ మయా ॥

530 కృష్ణాశ్రయాః కృష్ణబలాః కృష్ణనాథాశ్చ పాణ్డవాః కృష్ణః పరాయణం తేషామ్ ॥

531 మామేవైష్యసి ॥ 532 మమ ప్రాణాహి పాణ్డవాః ॥

533 అయం స కథ్యతే ప్రాజ్ఞైః పురాణార్థవిశారదైః । గోపాలో యాదవం వంశమ్ మగ్నమభ్యుద్ధరిష్యతి ॥

[సన్నివాసస్సుయామునః భూతావాసో]
[వాసుదేవస్సర్వాసునిలయోఽనలః । దర్పహా]

సన్నివాసః - ஸாதுக்களுக்கிடமானவன், సుయామునః - சோபமானயமுனையின் பரப்பாகத்தையுடையவன், భూతావాసః - பூதங்களுக்கிடமானவன், వాసుదేవః - வாசுதேவரூபன், సర్వాసునిలయః - ஸகலருக்குமுயிரிலில், అనలః - போதாதவன், దర్పహా - செருக்கடக்கியவன்,

(வி) ஸந்நிவாஸ:= யஜ்ஞவஷ்டி காய சிலரையிருக்கச் செய்தேயும் ஸநகாதி ஸாதுக்களுக்கு நிவாஸமிடமானவன்534

ஸுயாமுன:= சோபமான யமுனை ஸம்பந்தத்தையுடையவன் [என்றால — யமுனை ஸம்பந்தமான ஜலக்ரீடை ராஸக்ரீடை முதலிய அழகான வியாபாரங்கள் செய்தருளினவனென்றபடி]

பூதாவாஸ:= தன்னை ஆச்ரயித்திருக்கச் செய்தே புருஷார்த்தங்களையில்போல் ஸகல பூதங்களுக்கும் வாஸபூமியானவன்.

வாஸுதேவ:= வஸுதேவன் மைந்தனாயிருக்கச் செய்தே வியூஹ வாஸுதேவனாய் விளங்குமவன்535.

ஸர்வாஸுநிலய:= ஸகலப் பிராணிகளுக்கும் பிராணதாரகனாயிருப்பவன்536, அநல:= அந்த ஸாதுக்களுக்கேதான் ஸகலகாரியங்களும் செய்தும் திருப்தி பிறவாதவன்537, தனது பக்தவிஷயத்தில் அபராதம்பண்ணச் சகியாதவனென்றுமாம்538.

தர்ப்பஹா= கோவர்த்தனத்தைக் குடையாய்ப் பிடித்தும், பாரிஜாதத்தைப் பறித்தும் பாணன் தோள்களைத் துணித்தும் தேவர்களுக்குண்டான செருக்கையெல்லாம் போக்கடித்தவன்.

(அ.) ஸர்வாஸுநிலய: - ஸகலமான பிராணன்களும் ஜீவரூபியான தன்னிடத்தில வைக்கப்படுமவன்

534 సనకనంద్యాద్యైర్మునిభిః సిద్ధయోగైరకల్మషైః । సద్భిస్సంసేవ్యమానం తత్ర తిష్ఠంతి నాసా ద్రవ్యస్థలాంచనైః ॥

535 మధురాయాం వృత్తః వాసుః ॥

536 యథా సర్వస్య సూర్యేణ తాపమయవాయునా । క్షుభిస్సమే జీతేన జహా స్తేభారతం పురమ్ ॥

537 ఋణం ప్రవృద్ధమివ మే హృదయాన్నాపసర్పతి ॥

538 వ్యాసు మే వధకాలేఽస్మిన్ న క్షంతవ్యో కథంచన యజ్ఞపిష్టకరం హావ్యమ్ పాదానాచ్ఛాదనమ్ ॥

[దర్పదో దృప్తో దుర్ధరో ఽథాపరాజితః ॥]

దర్పదః - கொழுப்பைத்தந்தவன், అదృప్తః-மதமற்றவன், దుర్ధరః-தரிக்கமுடியாதவன், అపరాజితః - பிறரால்ஜயிக்கப்படாதவர்களையுடையவன்,

(வி.) தர்பதஃ=சத்துருக்களைப்போக்கி, ஒருவராலும ஜயிக்கமுடியாத த்வாரகாபுரியை நிருமித்தும், சங்கநிதி, பத்மநிதி, தேவபாரிஜாதம், தேவஸபை முதலியவைகளைப் பறித்துத் தந்ததினால் கிரப்பராளான யாதவாளுக்கு மதுபாநாதிகளைப் பண்ணுவித்து கொழுப்புண்டாக்கினவன்.

அத்ருப்தஃ=அப்படியிருக்கச்செய்தேயும் தான் மதமற்றிருப்பவன்[539]; அதவா "திருப்தஃ" யசோதைப் பிராட்டியினது லாலனாதிகளாலே மதித்துத்திரிபவனென்றுமாம்.

துர்தரஃ=பாலக்கிரீடைகள் செய்யுமிடத்து மதித்தயானைக்குட்டிபோல் யசோதாநந்த கோபர்களால் தரிக்கப்போகாத சேஷ்டை செய்பவன்; அதவா-துராத்மாக்களால் கிரகிக்கமுடியாதவன்.[540]

அபராஜிதஃ=பாரதயுத்தத்தில் வேறு யாதொருபரிகரமுமின்றி கேவலம் தன்னை ஸஹாயமாய்க்கொண்டமாத்திரத்தில், பகைவர்களால் ஜயிக்கப்போகாமல் விளங்கின பாண்டவாளையுடையவன்[541]. பீஷ்மாதிகளும் இப்படியேசொன்னார்கள்[542]. ஆயுர்வேதத்தில் சரகஸம்ஹிதையில் இப்படி சொல்லுகிறது[543]. இன்னும்வைதாண ஸம்ஹிதையில் விஷத்தைப்போக்கும்மந்திரத்தின்பிரபாவம்சொல்லுமிடத்தில்இவ்வர்த்தம்சொல்லுகிறது[544].

539 ఏవం విధాని కర్మాణి కృత్వా గరుడవాహనః । న విస్మయముపాగచ్ఛత్ పారమేష్ఠ్యేన తేజసా ॥

540 దుర్గ్రాహః పాణినా వాయుః దుస్స్పర్శః పాణినా శశీ । దుర్ధరా పృథివీ మూర్ధ్నా దుర్గ్రాహః కేశవో బలాత్ ॥

541 యస్య త్వం పురుషవ్యాఘ్ర సారథ్యముపజగ్మివాన్ । ధ్రువ ఏవ జయస్తస్య న తస్యాస్తి పరాజయః ॥

542 శక్తోఽహం ధనుషైకేన నిహన్తుం సర్వపాణ్డవాన్ । యద్యేషాం న భవేద్గోప్తా విష్ణుః కారణపూరుషః ॥

543 యథాహం నాభిజానామి వాసుదేవే పరాజయమ్ । మాతుశ్చ పాణిగ్రహణం సముద్రస్య చ శోషణమ్ । ఏతేన సత్యవాక్యేన సిధ్యతామగదో హ్యయమ్ ॥

544 రత్నాకర ఇవాక్షోభ్యో హిమవానివ చాచలః ॥ జాతవేదా ఇవాధృష్యో నారాయణ ఇవాజయః ॥

[విశ్వమూర్తిర్మహామూర్తిర్దీప్తమూర్తి]
[రమూర్తిమాన్ । అనేకమూర్తిః]

విశ్వమూర్తిః - ஸகலமுந்தனக்குசரீரமாயிருப்பவன், మహామూర్తిః - பெரியசரீரமுடையவன், దీప్తమూర్తిః - பிரகாசமானதெல்லாம் தன்மூர்த்தியானவன், అమూర్తిమాన్ - சரீரமில்லாதவர்களையுடையவன், అనేకమూర్తిః-அநேகம்சரீரங்களெடுத்தவன,

---

(வி.) (அவதாரிகை.) அதெப்படி துர்பலரான கௌரவர்கள் பலஹீனரான பாண்டவர்களை ஜயிக்காம லிருக்கக்கூடுமென்னில்—ஸமஸ்த பூதங்களும் எம்பெருமானுக்குச் சரீரமாகையால் அதில், தனக்கு இஷ்டமான பாண்டவர்கள் பலஹீனரானாலும் அவர்களை ஜயிப்பதில தனக்கிஷ்ட மில்லாமையாலே தனக்கிஷ்ட மில்லாத விஷயத்தில் தன் சரீரம் பிரவர்த்திக்கமாட்டாதாகையால் ஜயிக்கப்படவில்லை யென்கிற இவ்வர்த்தத்தை யுட்கொண்டு மேலேசொல்லுகிறது.

விச்வமூர்த்திஃ—ஸகலத்தையும் தனக்குச் சரீரமாயுடையவன்[515].

மஹாமூர்த்திஃ—விசுவரூபத்தைக் காட்டினபோது ஜகமெல்லாம் ஆசிரயிக்கும்படி பெரிதாய் விளங்கின திருமேனியுடையவன்[516]

தீப்தமூர்த்திஃ-பிரபஞ்சத்தில் ஏதேனுமொன்று ஏதேனுமொருகுணத்தால் பிகாசித்ததாகில் அதெல்லாம் தனது விசேஷமூர்த்தியாயுடையவன்[547]. அமூர்த்திமாந்—அவ்யக்தம் புருஷன்முதலான மூர்த்திஹீனங்களையும் தனது சொத்தாக உடையவன்[518].

[இங்கே முன்னும் பின்னும் பகவானுக்கு மூர்த்தியிருப்பதாகச் சொல்லுகையாலே இதை மூர்த்தி நிஷேதபரமாக வியாக்கியானம் செயயத்தகாது; மேலும் அமூர்த்திஃ என்றாலே போதுமாயிருக்கையாலே அமூர்த்திமாந் என்றதும் அப்பொழுது சேராது; ஆகையாலே இங்கேசொன்னதே யுக்தம்.]

அநேகமூர்த்திஃ—கிருஷ்ணனாய் அவதரித்திருக்கச்செய்தேயும் வாசுதேவாதி வியூஹமூர்த்திகள் நான்கையும்விடாமையாலும், இன்னும் இவ்வவதாரத்தில் அனேகம் மூர்த்திகளைப்பரிக்கிரஹிக்கையாலும் அனேகமூர்த்தி[519].

(அ.) அமூர்த்திமாந்—கருமமடியாகவந்த சரீரமில்லாதவன்.

---

[545] అహమాత్మా గుడాకేశ సర్వభూతాశయస్థితః ॥

[546] ఇహైకస్థం జగత్ కృత్స్నం పశ్యాద్య సచరాచరమ్ । మమ దేహే గుడాకేశ యచ్చాన్యద్ద్రష్టుమిచ్ఛసి ॥ [547] యద్యద్విభూతిమత్సత్త్వం శ్రీమదూర్జితమేవ వా ॥

[548] భూమిరాపోऽనలో వాయుః ॥ అపరేయమితస్త్వన్యాం ప్రకృతిమ్ ॥ యస్యావ్యక్తం శరీరమ్ ॥ యస్యాత్మా శరీరమ్ ॥

[549] షోడశ స్త్రీసహస్రాణి శతమేకం తతోऽధికమ్ । తావన్తి చక్రే రూపాణి భగవాన్ దేవకీసుతః ॥

[అవ్యక్తశ్శతమూర్తిశ్శతాననః ॥ ఏకో నైకస్సవః]

అవ్యక్తః-மறைந்திருப்பவன், శతమూర్తిః - நூறுசரீரமுடையவன், శతాననః-நூறுதிருமுக மண்டலங்களுடையவன், ఏకః-ஒருவன், నైకః-அநேகன், సః முடிப்பவன், వః-வஸிப்பவன்,

(வி.) அவ்யக்தః=இதைத் தான்மனுஷ்யனாயிருக்கின்றமைகொண்டு மறைப்பவன்550. சதமூர்த்திః=தன்னைக்காண ஆசைப்பட்ட அர்ச்சுனனுக்கு வியக்தமாய் தனது விசுவரூபத்தைக்காட்டினவன். சதாநநః=அனேகம் முகங்கள்கொண்ட ரூபந்தரித்தவன551. ஏகః=கீழ்ச்சொன்ன மஹிமைகளுடன்கூடி தன்னைப்போ லொருவனில்லாமையால் இரண்டுமுதலிய எண்ணிக்கையி லகப்படாமல் ஒருவனாயிருப்பவன்.

[இரண்டுப் பிராம்மணர், மூன்று க்ஷத்திரியர் என்கிறவிடத்தில், பிராம்மணடம் முதலியஜாதிதர்மம் ஒத்திருக்கின்றமை கொண்டு இரண்டு மூன்று என்று எண்ணப்படுவதுபோல பகவானுக்குண்டான ஸர்வேசுவரத்வாதி தர்மங்கள் மற்றொருவ்யக்தியி லுண்டாகில் எண்ணலாகும்; அதில்லாமையாலே ஏகமென்று அத்வைதமாகச் சொல்லுகிறது. பகவானோடுஸமானமான கக்ஷியில் சொல்லும்படி மற்றொருவஸ்து இல்லையன்றோ?552]

(அவதாரிகை) இங்கே ஏகமென்றது, ஈசுவரனைத்தவிர வேறொன்றுங் கிடையாமையால அத்தைப்பற்றச் சொல்லுகிறதென்றும், எல்லாம் அவனுடைய விகாரமாகையாலே அத்தைப்பற்றச் சொல்லுகிறதென்றும் சொல்வது அநுசிதம்-மற்றப்படி கீழ்ச்சொன்னபடி இவனைப்போன்ற மஹிமைசாலி மற்றொருவனும் கிடையாதென்பதே ஸித்தாந்தமென்கிறதுயேல்;—

நைகః=தனக்கு விபூதியாய்க்கொண்டு விஜாதீயமாயிருக்கிற ஸகல பதார்த்தங்களையு முடையனாய் அதினால் அனேகமானவன் 553.

ஸః=இப்படியிந்த ஸித்தாந்தத்தை ஆபால வ்ருத்தமாய் நிச்சயித்துக்கொள்ளச் செய்பவன்.

வ:=பிரஸித்தமாய் ஸகல பூதங்களிலும் வஸிப்பவன்554.

(அ) ஏகః=உண்மையில் ஸஜாதீயமாயாவது விஜாதீயமாயாவது தன்னைவிட வேறு ஒன்றுமில்லாமையால் ஒருவன்

நைகః=மாயையால் அனேகரூபந் தரிக்கையாலே அனேகன்.

550 నాహం ప్రకాశస్సర్వస్య ॥ నాహం వేదైర్నతపసా ॥

551 పశ్య మే పార్థ రూపాణి శతశోథ సహస్రశః ॥

552 ఏక ఇద్రాజా జగతో బభూవ ॥ న తస్య ప్రతిమాస్తి ॥

553 నాన్తోస్తి మమ దివ్యానాం విభూతీనాం పరన్తప ॥

554 వసన్తి త్రభూతాని భూతాత్మన్యఖిలాత్మని । స చ భూతేష్వశేషేషు వకారార్థస్తతో మునే ॥

[కః కింయత్తత్పదమనుత్తమం । లోకబన్ధుర్లోకనాథో మాధవో]

కః-பிரகாசிப்பவன், కిమ్-கேட்கப்படுமவன், యత్-யத்தினம்செய்பவன், తత్-செய்பவன், పదమనుత్తమమ్-மேலானபதவியானவன், లోకబన్ధుః-லோகத்துக்கெல்லாம பந்துவானவன், లోకనాథః-லோகஸ்வாமி, మాధవః-லக்ஷ்மீவல்லபன்,

(வி) கः=மலினபதார்த்தங்களில் தான் வஸித்தபோதிலும் பிரகாசித்தபடியே யிருப்பவன்.

கிம்=தத்வத்தை யறிய விரும்பியவர்களாலே நிருபாதிகமாய்க்கேட்கப்படுமவன்[555]. யத்=அவாளை ரக்ஷிப்பதற்காக யத்தினம் செய்பவன்[556]. தத்=அவர்களுக்கு ஸகல ஞானபக்திகளையும் உண்டுபண்ணுமவன். ஆகையாலன்றோ ஞானப்ரதானார்த்தமாக காயத்ரியை ஜபிக்கிறது[557].

பதம் அநுத்தமம்=அவர்களுக்கு பரமப்ராப்யமானவன்.

(அவதாரிகை.) இப்படி தாரதம்மிய மில்லாமல் யாவரையும் அநுக்கிரஹிப்பதற்குக் காரணமான ஸம்பந்தம் சொல்லுகிறது.

லோகபந்து:=லோகங்களுக்கெல்லாம் தான் ஸ்வஜநமாயிருப்பவன்[558].

(அ-கை.) லோகபந்துவாகைக்கு அஸாதாரண ஸம்பந்தஞ்சொல்லுகிறது.

லோகநாத:—லோகத்துக்கெல்லாம் நாதன்.

அ-கை.) இவன் லோகத்துக்குப் பந்துவாம்பொழுது லக்ஷ்மீஸஹிதனாய்க்கொண்டு மாதாபிதாவா யிருக்கையாலே அத்தைத் தெரிவிக்கிறது:—

மாதவ:=லக்ஷ்மீவல்லபன். அதவா-மதுவென்னும் பெயர்கொண்ட யாதவகுலத்தில் பிறந்தவனென்றுமாம்.

(அவதாரிகை.) கீழ்ச்சொன்ன எம்பெருமானுடைய ஸ்வாமித்வத்துக்கிசைந்து அதில் உத்ஸாகத்தோ டிருக்கும் பக்தாளிடத்தில் அவன் இருக்கும் விசேஷாகாரம் சொல்லுகிறது.

(அ.) கः=ஸுகரூபன். கிம்—ஸகல புருஷார்த்த ரூபனுகையாலே விசாரணைக்குரியவன். யத்—ஸ்வதஸ்ஸிதமானவற்றைச் சொல்லும் சொல்லால் சப்திக்கக்கூடியவன்.

555 సో౽న్వేష్టవ్యః స విజిజ్ఞాసితవ్యః ॥

556 కృష్ణ కృష్ణేతి కృష్ణేతి యో మాం స్మరతి నిత్యశః । జలం భిత్త్వా యథా పద్మం నరకాదుద్ధరామ్యహమ్ ॥ అహం స్మరామి మద్భక్తం నయామి పరమాం గతిమ్ ॥

557 తత్ సవితుర్వరేణియమ్ ॥ ఓమ్ తత్ సత్ ఇతి నిర్దేశః ॥

558 మాతా పితా భ్రాతా నివాసశ్శరణం సుహృత్ గతిర్నారాయణః ॥

[భక్తవత్సలః॥ సువర్ణవర్ణో హేమాంగో వరాంగశ్చందనాంగదీ।]
[వీరహా విషమశ్శూన్యో ఘృతాశీ]

భక్తవత్సలః-பக்தாளிடத்தில் ஆவல்கொண்டவன்; సువర్ణవర్ణః-நிறமுடைய செம்பொன்நிறத்தவன், హేమాంగః - சிலாக்கியமான திருமேனியுடையவன், వరాంగః-உத்கிருஷ்ட அங்கமுடையவன், చందనాంగదీ-உகப்பிக்கும் தோள்வளையுடையவன், వీరహా-வீரரைச்செகுத்தவன், విషమః-வித்தியாஸமானவன், శూన్యః-அற்றவன், ఘృతాశీః-நெய்யில் ஆசையுடையவன்,

(வி.) பக்தவத்ஸலஃ=இப்படி தனது தாஸ்யத்தை ஆசைப்பட்ட பக்தாளைக்கிடைக்கப் பெற்ருணுகில் தனக்கு மற்ெருன்றிருப்பதாக நினையாமல் எலலாவற்றையும மறக்கும்படியானவன்.

ஸுவர்ணவர்ணஃ=கீழ்ச்சொன்ன குணத்துக்கேற்க, பசும்பொன்னுரைத்ததுபோல் பளபளாயமான திருநிறமுடையவன்[559].

ஹேமாங்கஃ=பொன்மேனியன்.

[என்ருல்-கீழ்ச்சொன்ன நிறத்துக் காதாரமாய் நித்தியமாய் சுத்த ஸத்வமயமாய் விளங்கும் திருமேனியுடையவ னென்றபடி.]

வராங்கஃ=இப்படி உபநிஷத்தில் சொல்லப்பட்டதும், தேவப்பிராட்டி மிகவும் உவக்கும்படியானதும் திவ்யசின்னங்களை யெல்லாம் மறைத்துக்கொண்டிருப்பதுமான திவ்யமங்கள விக்கிரஹத்தைப் பரிக்கிரஹித்தவன்[560]. சந்தநாங்கதீ=தோள்வளைமுதலிய திவ்யாபரணங்களணிந்தவன்.

வீரஹா=கேவலம் பேதைக்குழவியா யிருக்கச்செய்தேயும் பூதநாசகடார்ஜ்ஜுநாதிகளான தேவசத்ருக்களை வேர்பிடுங்கலாக ஹதம்பண்ணினவன். விஷமஃ—(இப்படி நல்ல அபிப்பிராயமுடையோரும் கெட்டஅபிப்பிராயமுடையோருமான பிராணிகளுக்கும் முறையே க்ஷேமத்தையும் பயத்தையும் உண்டாக்கும்படி வித்தியாஸமாய் நடக்கையாலே) வைஷம்யமுடையவன்.

சூந்யஃ—மனுஷியனுய் அவதரித்திருக்கச் செய்தேயும் யாதொருதோஷமுமில்லாமல் விளங்குமவன். க்ருதாசீஃ—தனது திருக்கல்யாண குணங்களாலே ஜகத்தை வாழ்விப்பதில் திருவுள்ளமுடையவன். அல்லது ஆயர்பாடியிலுள்ள தயிர் பால் முதலியவைகளில் ஆசைகொண்டவன்.

(அ.) சூந்யஃ=யாதொரு விசேஷமுமில்லாமையாலே சூந்யமென்னும்படி இருப்பவன். க்ருதாசீஃ=பிரார்த்திக்கவேண்டும் விஷயமில்லாதவன்.

[559] యదా పశ్యః పశ్యతే రుక్మవర్ణమ్ ॥ రుక్మాభం స్వప్నధీగమ్యమ్ ॥

[560] ఫుల్లేందీవరపత్రాభం చతుర్బాహుం సరీక్ష్యతమ్ । శ్రీవత్సవక్షసంజాతం తుష్టావానకదుందుభిః ॥

[రచలశ్చలః ॥ అమానీమానదోమాన్యో]
[లోకస్వామీత్రిలోకసుధృత్ । మేధామేధజో]

అచలః- அசைக்கமுடியாதவன், చలః-சலிப்பவன், అమానీ அபி மானமற்றவன், మానదః -வெகுமதிதந்தவன், మాన్యః - வெகுமதிக் கப்படுமவன், లోకస్వామీ -லோகநாதன், త్రిలోకధృత్ - மூன்று லோகத்தையும்தரிப்பவன், సుమేధాః - நல்லமதிப்புடையவன், మేధజః-வேள்வியில்பிறந்தவன்,

---

(வி.) அசல:—துரியோதநன் முதலிய துராத்மாக்களாலே சலிப்பிக்கமுடியாதவன். சல:—தன்னைச் சரணடைந்த பாண்டவாதிகளின் நிமித்தமாகத் தனது ஸத்திய ஸங்கல்பத்தையுங்கைவிடுமவன்.

[இவன்தான், பாண்டவ ரக்ஷணார்த்தமாகப் பாரதயுத்தத்தில் புகுந்து பீஷ்மர்முன்னே தான் ஆயுதமெடுப்பதில்லையென்று பிரதிக்ஞை பண்ணியிருக்கச்செய்தேயும், அர்ச்சுநன்கை சளைக்கக்கண்டு உடனே சக்கிராயுதங் கொண்டு தன் பிரதிக்ஞையைக் கொலைத்துக்கொண்டானன்றோ561.]

அமானீ—பக்தாள் விஷயத்தில் அஹங்காரமற்றிருப்பவன் ஆகவேயன்றோ தூதுசெல்வதில் சிறிதும் வெட்கமின்றி பிரவேசித்தான்?

மாநதः—அர்ச்சுனனுக்கு 'ஸாரதி' என்கிற பகுமானத்தையும், உக்கிரஸேந மஹாராஜனுக்கும் தர்மபுத்திரருக்கும் ஸார்வபவுமன் என்கிற பகுமானத்தையு மளித்தவன். மாந்ய:—அவராலுக்காட்டப்பட்டிருக்கையே தனக்கு பகுமானமாக நினைத்தவன்.

[இப்படியேயன்றோ இவன் வெகுமதிக்கப்பட்டான்? 562]

(அ-கை) இப்படிப்பட்ட காரியங்கள் செய்தவந்தானாரென்னில்:

லோகஸ்வாமீ—ஸகல லோகநாயகன். இப்படி மிகவும் உந்தமயி விளங்குமவன் எப்படி அதிநீசாளுடன் சேர்ந்தானென்றால்:—

த்ரிலோகத்ருக்—மூவுலகத்தையும் தரிப்பதும் போஷிப்பதும் தானாயிருப்பவன்; ஆகையாலென்றபடி.

ஸுமேதா:—தன்னை யாராதிப்பவாளிடத்தில் சோபநமான திருவுள்ளமுடையவன். மேதஜ:=(ஆகையாலே தேவகிப்பிராட்டி புத்திரன் வேண்டுமென்று நோர்த்த விரதமென்கிற) யக்ஞத்தில பிறந்தவன்563.

---

561 తమాత్తచక్రం ప్రణదన్తమున్నైః కృద్ధంమహేన్ద్రావరజం సమీక్ష్య । సర్వాణిభూతాని భృశం వినేదుః క్షయం కురూణామితి చిన్తయిత్వా ॥

562 నసారథే సాత్వతకౌరవాణాం క్రుద్ధస్యముచ్యేతరణేద్య కశ్చిత్ ॥

563 స్తుతోహంయత్త్వయా పూర్వం పుత్రార్థిన్యా తదద్య తే । సఫలం దేవి సఞ్జాతం జాతోహం యత్తవోదరాత్ ॥

[ధన్యస్సత్యమేధాధరాధరః । తేజోవృషోద్యుతిధరస్సర్వశస్త్ర]
[భృతాంవరః । ప్రగ్రహోనిగ్రహోవ్యగ్రః నైకశృంగో]

ధన్యః - செல்வன் సత్యమేధాః - நன்மதியன், ధరాధరః - மலையை த்தரிப்பவன், తేజోవృషః - காந்தியை வருஷிப்பவன், ద్యుతిధరః - காந்தியைத்தரிப்பவன், సర్వశస్త్రభృతాంవరః - ஸகல ஆயுதபாணிகளிலும்சிரேஷ்டமானவன், ప్రగ్రహః - கடிவாளமிடுமவன், నిగ్రహః - நிக்கிரஹிப்பவன், వ్యగ్రః - விரைபவன், నైకశృంగః - பலகொம்புகளுடையவன்,

(வி.) தந்ய = அவளிடத்தில் பிறந்தமையென்கிற தனத்தைப்பெறுகையாலே தந்யனானவன்[564]. ஸத்யமேதாः = இடையரிடத்திலும் வஸுதேவாதிகளிடத்திலும், மேலுக்கு நடகம்செய்யாமையால் தன்னை ஸத்யமாய் அவாளுடன் ஒரு கோர்வையாக நினைத்திருந்தவன். இவந்தான் ஆயர்களைப்பார்த்து இங்ஙனம் அருளிச்செய்தானன்றோ? 565

தராதர = கோவர்த்தநமென்னும் மலையைத்தரித்தவன்[566].

தேஜோவ்ருஷः = ஸுஹ்ருத்துக்களைப் பரிபாலநம் பண்ணுவதென்கிற மஹத்தான தேஜஸ்ஸை வர்ஷிப்பவன். த்யுதிதர: = அதினால்தான் இளம்பருவமாயிருக்கச்செய்தேயும் இந்திரனையும் ஜயிக்கும்படி மனுஷ்யனுக்குத் தகாத மிகுந்த காந்தியை வஹித்தவன்.

ஸர்வசஸ்த்ரப்ருதாம்வர: = நரகாசுரன் ஜராஸந்தன் முதலானவாளுடைய யுத்தங்களில் ஆயுதபாணிகளான யாவர்க்கும்மேலாய் விளங்கினவன்[567]. ப்ரக்ரஹः = அர்ச்சுநனைக் கடிவாளமிட்டாட்டுமவன்.

நிக்ரஹः = அர்ச்சுநனுடைய பவுருஷத்தை யெதிர்பாராமலே தனது ஸாரத்திய வைசித்ரியாலே. சத்துருக்களை நிரஸிக்க வல்லவன்.

(அ.) தேஜோவ்ருஷः = சூரியரூபியாய்க்கொண்டு ஜலத்தை வர்ஷிப்பவன். ப்ரக்ரஹः = பக்தர்கள் ஸமர்ப்பித்த பத்திரபுஷ்பாதிகளை உகந்து அங்கீகரிப்பவன். வ்யக்ரः = அந்தமில்லாதவன்.

[564] జాతోహంయత్తవోదరాత్ ॥ అహంవోభాన్ధవోజాతః ॥

[565] యదివో స్తిమయిప్రీతిశ్శ్లాఘ్యోహంభవతాంయది । తదాత్మబుద్ధిసదృశీబుద్ధిర్వః క్రియతామ్మయి ॥

[566] తతదేతదఖిలంగోష్ఠంత్రాతవ్యమధునామయా । ఇమమద్రిమహంధైర్యాదుత్పాట్యోరుశిలాఘనమ్ । ధారయిష్యామిగోష్ఠస్యపృథుచ్ఛత్రమివాపరమ్ ॥

[567] మనుష్యధర్మశీలస్య లీలాసాజగతః పతేః । అస్త్రాణ్యనేకరూపాణియదరాతిషుముఞ్చతి ॥

[గదాగ్రజః॥ చతుర్మూర్తిశ్చతుర్బాహుశ్చతుర్వ్యూహ]
[శ్చతుర్గతిః ।]

గదాగ్రజః - கதனுக்குமூத்தவன் - చతుర్మూర్తిః - நான்குமூர்த்தியுடையவன், చతుర్బాహుః - நான்குதோள்களுடையவன், చతుర్వ్యూహః - நான்கு வியூஹம வகுத்தவன், చతుర్గతిః - நான்குகதிகளுடையவன்,

---

(வி.) வ்யக்ரஃ = அர்ச்சுனன் வைரிகளை யழிக்கும் விஷயத்தில் யுத்தமென்று ஒருவியாபாரத்தைச்செய்யும் வரையிற் சகியாதவன். இவ்வர்த்தம் பீஷ்மயுத்தத்தில் விளங்குகிறது[568].

நைகச்ருங்கஃ = பலவித உபத்ரவங்கள் செய்பவன்.

[என்றால்-யுத்தத்தில் புத்திஸாமர்த்தியம், ஸாரத்யம் செய்கை, ஆயுதங் கிரஹிக்கிற தில்லையென்றொரு வியாஜம், ஸமயம்வந்தபோது ஆயுதக்கிரஹணஞ்செய்வது என்று இபபடி வெகுசாய் வைரிகளைப்பாதிக்கும்படியான வியாபாரங்கள செய்பவனென்றபடி.]

கதாக்ரஜஃ—வஸுதேவர் பத்தினியான ஸுநாமையின் குமாரன் கதனென்பவனுக்கு முன்பிறந்தவன்.

(அவதாரிகை.) இந்த விபவாவதாரத்திலும் இதற்குக் காரணமான வியூஹத்தை ஞாபகப்படுத்துகிறதுமேல்:—

சதுர்மூர்த்தி:—பலபத்ரன், வாசுதேவன், ப்ரத்யும்நன், அநிருத்தன் என்கிற நான்குமூர்த்திகளுடன் யதுகுலத்தில் அவதரித்தவன்.

சதுர்பாஹுஃ = வியூஹத்துக்கும் மூலமான பரஸ்வரூபத்துடன் தேவகீ கர்ப்பத்தில் உதிக்கையாலே நான்கு திருத்தோள்களுடையவன்.

[தேவகிப் பிராட்டியே யிப்படி சொன்னாளன்றோ? 569]

சதுர்வ்யூஹஃ = இவ்வவதாரத்திலும் தனது குணங்கள் ஆறையும் சேர்த்தும் பிரித்தும் வியவஸ்தைபண்ணுகையால் நான்குவியூஹமுடையவன்.

சதுர்கதிஃ—உபாஸகாளுடைய தாரதம்மியத்துக்குத் தக்கபடி நான்குவிதமான ப்ராப்தியை யுடையவன்.

(அ) காதாக்ரஜ:-நிகதமென்று மந்திரமாய் அதினால் அக்ரஜஃ-முதலில் (சொல்லப்படுகையாலே) உண்டானவனென்கிற பொருளின்பேரில் 'நி' என்பதைக்குறைத்து கதாக்ரஜனென்றிருக்கிறது. சதுர்மூர்த்தி: = வெளுப்பு, சிவப்பு, பொன்னிறம், கருப்பு என்றுநான்குநிறமுள்ள மூர்த்தியுடையவன்.

---

568 యేయాన్తియాన్త్యేవశిని ప్రవీరయేవస్థితాః సత్వరం తేపియాన్తు । భీష్మంరథాత్ పశ్యతపాత్యమానం ద్రోణంచ సంఖ్యేసగణం మయాద్య ॥

569 ఉపసంహర సర్వాత్మన్ రూపమేతచ్చతుర్భుజమ్ । జానాతు మావతారన్తే కంసోయం దితిజన్మజః ॥

[చతురాత్మా చతుర్భావశ్చతుర్వేదవిదేకపాత్ ॥
సమావర్తోఽనివృత్తాత్మా దుర్జయో దురతిక్రమః । దుర్లభో]

చతురాత్మా - நான்குஸ்வரூபமுடையவன், చతుర్భావః - நான்குபாவனைகளுற்றவன், చతుర్వేదవిత్ - நான்மறையோருக்குப் பிரகாசிப்பவன், ఏకపాత్ - ஒருபாதமாயிருப்பவன், సమావర్తః - எங்குமிருக்கப்பெற்றவன், నివృత్తాత్మా-நிவர்த்திக்கப்பட்டமனமுடையவன், దుర్జయః - ஜயிக்கவரியன், దురతిక్రమః- கடக்கவரியன், దుర్లభః-பெறவரியன்,

(வி) சதுராத்மா=அதிகாரி தாரதம்மியத்துக்குத் தக்கபடி பரிக்கிரஹிக்கப்பட்ட ஸ்தூல ஸூக்ஷ்மங்களில் ஜாக்கிரதாதி அவஸ்தாரூபமான தனது நான்கு ஸ்வரூபத்தையும் பிரகாசிப்பிக்குமவன்.

சதுர்ப்பாவः=(இப்படி பதினாறுபிரகாரமான வியூஹங்கள் நான்கிலும் ஜகத்வ்யாபாரத்தைச்செய்தல், சாஸ்திர ப்ரதானம் பண்ணுதல், முதலிய ஸ்தூல ஸூக்ஷ்மவ்யூஹ ப்ரயோஜந ஸமுதாயத்தைப் பிரகாசிப்பிக்கையாலே) நான்கு பாவனைகளுடையவன்.

சதுர்வேதவித் ஏகபாத்=வ்யூஹத்திலும் விபவத்திலும் பிரகாசிப்பிக்கப்பட்ட இந்த மஹாவைபவமானது, மஹாவிபூதியென்கிற ஸமுத்திரத்தின் லேசமாத்திரமென்பதாக, பராவர தத்வங்களை நன்கறிந்த நான்மறையோர்கள் அறியும்படி விளங்குமவன். ஆகவேயன்றோ அவாளு மிப்படி சொன்னார்கள்?570

ஸமாவர்த்தः=இந்த வியூஹவிபவங்களெல்லாம் இவனிடத்தில் எப்போதும் எல்லாவிடத்தும் எல்லாவிதத்திலும் சுழன்றுகொண்டிருக்கப்பெற்றவன்.

நிவ்ருத்தாத்மா=கிருபைக்கு வசப்பட்டு இப்படி இந்த ஜகத்ஸம்பந்தமான வியாபாரததிலிழியுமதொழிய, ஸ்வயம் அவாப்த ஸமஸ்தகாமனாகையாலே இதில் சிறிதும அபேக்ஷையற்றிருப்பவன் 571.

துர்ஜயः=தேவமநுஷ்யாதிகளின் சக்தியைக்கொண்டு ஜயிக்கமுடியாதவன்572. துரதிக்ரமः=இப்படி யெல்லாமிருக்கையாலே இனி தன் திருவடிகளைத்தவிர பூதங்கள் மற்றொருகதியைத் தேடிப்போக விடமில்லாமலிருப்பவன்573 துர்லபः-இந்திரிய ஜயம் பண்ணிதன்னை ஆராதியாதவர்களால் அடைவதற்காகாதவன்.

570 అంశావతీర్ణో బ్రహ్మర్షే యోఽయం యదుకులోద్భవః ॥

571 అవాక్యనాదరః ॥

572 యన్న దర్శితవానేషః కస్తదన్వేష్టుమర్హతి ॥

573 వాసుదేవమనారాధ్య కో మోక్షం సమవాప్నుయాత్ ॥

[దుర్గమో దుర్గో దురావాసో దురారిహా॥ శుభాంగో
లోకసారంగస్సుతంతు స్తంతువర్ధనః]

దుర్గమః - கிட்டவரியன், దుర్గః - புகவரியன், దురావాసః - ஸஹவஸிக்கவரியன், దురారిహా - துஷ்ட சத்துருக்களை கொல்பவன், శుభాంగః - அழகியசரீரமுடையவன், లోకసారంగః - லோகத்தில்ஸாரத்தைக்கைப்பற்றியவன், సుతన్తుః - நல்ல நூலுடையவன், తన్తువర్ధనః-நூலைவளர்ப்பவன்,

(வி) தூர்கம:=கண்ணேய்க்காரர் மத்தியான்னத்தில் சூரியனைப்பார்க்கமாட்டாதாப்போல் எதிரில்லாத தேஜஸ்ஸோடேகூடி விளங்குகையாலே ஒருவராலுங்கிட்ட ப்ரஸக்தியில்லாதபடி விளங்குமவன்.

தூர்க்க:=அவித்யைமுதலிய ஆவரணங்க ளிருக்கையாலே பிரவேசித்துக் கிட்டுவதற்கு முடியாதவன்.

தூராவாஸ:=இப்படியான பின்பு தன் திருவடி வாரத்தில் வஸிப்பதென்பது துர்லபமாம்படி விளங்குமவன்.

(அ-கை) இப்படி துர்லபமாயிருக்கைதான் இவனையடையவேண்டுமென்கிற எண்ணமேயில்லாத பாபிகள் விஷயமென்கைக்காகப் புத்தாவதாரத்தைச் சொல்லுகிறதுமேல்:—

தூராரிஹா=துர்மார்க்கங்களில் சென்று அதனால் தனக்குப் பகைவராயிருப்பவர்களை, வேதமார்க்கத்தைக் கைவிடும்படிசெய்து மற்றும் அனேக உபாயங்களாலே அழிப்பவன் 574.

(அ-கை.) இவன் அவர்களுக்குட்புகுவதுதா னெப்படியென்றால்:—

சுபாங்க:=இவன் ரொம்பவும் நம்பத்தக்கவனென்று மயங்கும்படி அதிமனோஹரமான திவ்யமங்கள விக்கிரஹமுடையவன்.

(அ-கை.) அதாவதெப்படி மயக்குகிறுனென்னில்:—

லோகஸாரங்க:=லோகத்தில் ஸாரமான போகமோக்ஷமார்க்கங்களை விடாமலே மயக்குமவன். ஸுதந்து=சாந்தனயிருப்பதுபோல்தோன்றி, தான்செய்யும் கிருத்திரம மென்னும் வலைநூலை அவர்கள் கடக்கமாட்டாதபடி விளங்குமவன். தந்துவர்த்தந:=இப்படி அவர்களுக்குப் பாவத்தில் ருசியை உண்டுபண்ணி அதைக்கொண்டு ஸம்ஸாரமென்னுங் கயிற்றை விருத்திபண்ணிவிடுமவன் 575.

(அ.) லோகஸாரங்க:=லோகத்தில் ஸாரமான பிரணவத்தால் அறியக்கூடியவன்.

574 మాయామోహేన తే దైత్యాః ప్రకారైర్బహుభిస్తదా । వ్యుత్థాపితా యథా నైషాం త్రయీం కశ్చిదరోచయత్ । హతాశ్చ తే సురాదేవైస్సన్మార్గపరిబన్థినః ॥

575 తానహంద్విషతః క్రూరాన్ సంసారేషునరాధమాన్ ॥

[ఇంద్రకర్మా మహాకర్మా కృతకర్మా కృతాగమః ॥
ఉద్భవస్సుందరస్సుందో రత్ననాభస్సులోచనః ।]

ఇన్ద్రకర్మా - இந்திரனுக்காகச் செயலுற்றவன், మహాకర్మా - நற்செய்கையுடையவன், కృతకర్మా - கருமஞ்செய்தவன், కృతాగమః - ஆகமங்கள் செய்தவன், ఉద్భవః - ஸம்ஸாரத்தின் மீதெழுந்தவன், సున్దరః - அழகன், సున్దః - நனைப்பவன், రత్ననాభః - சிரேஷ்டமான நாபியையுடையவன்; సులోచన - நல்லகண்களுடையவன்,

---

(வி.) இந்த்ரகர்மா=சரணாகதரான இந்திராதிகளுக்காக இவ்விதமான செயல்களைச் செய்பவன். இப்படி ஆச்ரித ரக்ஷணார்த்தமாகவும் துராசாரப் பிராணிகளின் தண்டனைக்காகவும் பரமதயாளுவானபகவான் வஞ்சிக்கத் தகுமாகையால், மஹாகர்மா=மிகுந்த நியாயமானசெயல்செய்பவன்.

க்ருதகர்மா=அவர்களை வஞ்சிக்கவேண்டி தானும் அந்த செயல்களைச் செய்பவன். க்ருதாகம:=அந்தசெயல்கள் நடப்பதற்காக புத்தமதம், ஆர்ஹதமதம் முதலியவைகளை யேற்படுத்தினவன். உத்பவ:=மோக்ஷோபதேசம் பண்ணுமிடத்தில் அப்பொழுதே ஸம்ஸாரத்தினின்றும் கிளம்பினவன்போல விளங்குமவன். ஸுந்தர:=அவர்கள் கண்ணுக்கு மிகவும் ஸுந்தரனாய்த் தோற்றுமவன்.

ஸுந்த:=அதனால் அசுரர் மனதில்மிகவும் ஈரமுண்டாகும்படி செய்பவன். ரத்நநாப:—பண்டிதனுனைமைக் கேற்றபடி திரண்டவயிறும் அழகிய நாபியுமாய் விளங்குமவன். ஸுலோசந:—அப்படியே தன்னிடத்தில் கொஞ்சம் மனந்தாழ்ந்தவனை முழுதும் திருடவல்ல கண்கள்படைத்தவன்[576].

அஷ்டமசதகம்—ஸம்பூர்ணம்.

---

576 తతో దిగమ్బరో ముణ్డః ॥ పునశ్చ రక్తామ్బరధృక్ మాయామోహాహృతేక్షణః ॥

ஸ்ரீ:

நவமசதகம்.

[అర్కో-వాజసనిశ్శృంగీజయంతస్సర్వవిజ్జయీ॥ సువర్ణబిందు
రక్షోభ్యస్సర్వవాగీశ్వరేశ్వరః। మహాహ్రదోమహాగర్తో]

అర్కః- துதிக்கப்பட்டவன், వాజసనిః-அந்நாதிகளை மதிப்பவன், శృంగీ - கொம்புடையவன், జయన్తః-ஜயிப்பவன், సర్వవిజ్జయీ-ஸர்வக்ஞாளையும் ஜயிப்பவன், సువర్ణబిన్దుః - நற்சொற்களாலே மறுப்பவன், అక్షోభ్యః - கலக்கப் போகாதவன், సర్వవాగీశ్వరేశ్వరః-ஸகலமானவாகீசாளுக்குமீசன், మహాహ్రదః - பெரியமடுவானவன், మహాగర్తః-பெரும்பள்ளமானவன்,

(வி) அர்க்க:—"அஹோ, இவர் மஹாத்மா, இவர் மகாதார்மிகர்" என்று அவர்களால் துதிக்கப்பெற்றவன். வாஜஸநி:—நாஸ்திக்கியவாதஞ்செய்து இஹலோக வாழ்வான அன்னம் முதலியவைகளையே பெரிதாயுகந்து அநுபவிப்பவன்.

[பிரதி திநமும் காலையில் தயிருஞ்சோறுமாய்ப் புசிப்பதென்பது சமணருக்கு விரதமன்றோ? ஆகவே சொல்லுகிறதென்றுணர்க.]

ச்ருங்கீ—ஹிம்ஸை செய்யலாகாதெனபதற்கு அடையாளமாகக் கையில் ஒருதோகை தரித்தவன்[577]. ஜயந்த:—ஞானமேதான் ஆத்மாவென்றும் பிரபஞ்சமெல்லாம் மித்திையயென்றும் இபபடி மித்தியாவாதங்கள்செய்து ஆஸ்திக்யவாதிகளை ஜயித்தவன்.

(அ-கை.) எபபடிதான் இவர்களை பிரமாணத்துக்கு விரோதமான வாதங்களால் நம்பவைக்கக்கூடும் என்னில்:—

ஸர்வவித்ஜயீ—ஸர்வஜ்ஞானைக்கூட ஜயிக்கவல்லவன்.

[ஆனபின்பு இவர்களை ஜயிப்பது அரிதல்லவென்றபடி.]

ஸுவர்ணபிந்து:—ரொம்பவும் சாதுரியமான அக்ஷரங்கள் சேர்த்த வாக்சாதுரியததாலே ஆஸ்திக வாதத்தைப் போக்கவல்லவன்.

அக்ஷோப்ய:—கெம்பீர ஹிருதயனுகையாலே கலக்கப்போகாதவன். ஸர்வவாகீச்வரேச்வர:—வாய்படைத்தவர்யாவரையும் அடக்கியாள்பவன்.

மஹாஹ்ரத:—பாபிகளா யிருப்பார் மறுபடி தலையெடுக்காமல் முழுகும்படியாயும், புண்ணியவான்கள் முழுகிமுழுகித் திருப்தியடையும்படியாயும் அதிகெம்பீரமாய் விளங்குகின்ற மடுபோன்றவன்.

மஹாகர்த்த:—இப்படி பாஹ்யமதங்களிலும் குத்ருஷ்டி மதங்களிலும்

(அ.) வாஜஸந:—அந்நார்த்திகளுக்கு அன்னத்தைத் தருமவன்.

ஸுவர்ணபிந்து:—சுவர்ணமயமான அவயவங்களுடையவன்.

577 బర్హి పత్రధరః ॥

[మహాభూతో మహానిధిః ॥ కుముదః
కుందరః కుందః పర్జన్యః పవనోఽనిలః]

మహాభూతః - மகான்களைத்தனக்காகப் பெற்றவன், మహానిధిః - பெரியநிதியானவன், కుముదః - புவியில்மகிழ்பவன், కుందరః-குருக்கத்தியைத்தருமவன், కుందః - குருக்கத்திபோல் நிர்மலஞான ஸ்வரூபன், పర్జన్యః - தாபஹரன், పవనః - பரிசுத்திகரன், అనిలః- பிரேரகரில்லாதவன்,

(வி) பிரவேசித்து ஆத்மநாசந் தேடிக்கொண்டவர்களுக்கு ரௌரவாதிநரகக்குழிகளைத் தருமவன் 578.

(அவதாரிகை.) இப்படி பகவானுடைய ஆக்ஞாரூபமான சாஸ்திரத்தை அதிலங்கநம் செய்யும் அசுரப்பிறவிகளை நிக்கிரஹம்செய்யும்பிரகாரஞ்சொல்லப்பட்டது. இனி தனது தைவீகமான ஸம்பத்துக்களை அநுபவிக்கத்தோன்றிய சாஸ்திர வசியர்களை அநுக்கிரஹிக்கும்படி சொல்லுகிறது.

மஹாபூத:—மஹாத்மாக்களைத் தனது சொத்தாய் மதிப்பவன்579.

மஹாநிதி:—நிதியைப்போல் அவர்களிடத்தில் அதிகப்பிரியமாயிருப்பவன்580. குமுத:—இந்தப்பிரகிருதி மண்டலத்திலேயே அவர்களோடு கலந்து ஸந்தோஷிப்பவன். அதவா அவர்களுக்குமோக்ஷபூமியைத் தருமவனென்றுமாம்.

குந்தர:—குருக்கத்தி மலர்போல் அதிநிர்மலமான பரதத்வஞானத்தை அவர்களுக்குத் தந்தவன்581. குந்த:—கிரமக்கிரமமாய் பூர்வவாஸனையை ஜயித்து மேலே ஞானம்பக்தி முதலியவைகளை அடைந்தோருக்கு மேன்மேலும் பரபக்தி பரக்ஞானாதிகளைத் தருமவன், அதவா:—

குந்தர:-பாவத்தைப் பிளப்பவன். குந்த:-பிளந்தபாவத்தைச்சோதிப்பவன்.

பர்ஜந்ய:—தனது தத்வமறிந்த ஞாநிகளுடைய தாபத்திரயத்தையும் போக்குவதற்காக பர்ஜந்யதேவதைபோல் கடாக்ஷங்களை வர்ஷிப்பவன்.

பவந.—அப்படியே பரிசுத்தியாகச்செய்பவன். அநில:—அவர்களை அநுக்கிரஹிக்கும் விஷயத்தில் ஒருவர் ஏவவேண்டாதவன்582.

(அ.) மஹாபூத:—முக்காலத்தாலும் அளவிடப்போகாதவன்.

குந்த:—பூமியைக்காசியபருக்கு தாநஞ்செய்தவன்.

அநில:—தூங்குந்தன்மையஞன ஜீவனககாட்டிலும் விலக்ஷணனாகையால் தூங்காதவன்.

578 అశ్రద్దధానాః పురుషాః ధర్మస్యాస్య పరన్తప। అప్రాప్య మాం నివర్తన్తే మృత్యుసంసారవర్త్మని ॥

579 మహాత్మానస్తు మాం పార్థ ॥ 580 యేతు ధర్మ్యామృతమిదమ్ ॥

581 దదామి బుద్ధియోగం తమ్ ॥ 582 తదహం భక్త్యుపహృతం ... దదాతి మధుసూదనః ॥

[అమృతాంశోఽమృతవపుస్సర్వజ్ఞస్సర్వతోముఖః ॥ సులభస్సువ్రతస్సిద్ధశ్శత్రుజిచ్ఛత్రుతాపనః । న్యగ్రోధోదుంబరో]

అమృతాంశః - அமுதத்தைபக்ஷிக்கசெய்பவன், అమృతవపుః - அமுதமேனியன், సర్వజ్ఞః - யாவுமறிபவன், సర్వతోముఖః - எங்கும் முகமுடையவன், సులభః - சுகமாய் பெறக்கூடியவன், సువ్రతః - நல்லவிரதம்பூண்டவன், సిద్ధః - ஸித்தயானவன், శత్రుజిచ్ఛత్రుతాపనః - சத்துருக்களை ஜயிக்கவல்லவரின் சத்துருக்களைத் தவிக்கச் செய்பவன், న్యగ్రోధోదుంబరః - கீழ்படிந்துதுதிப்பதாயேர்ப்பட்டவர்களால் அநிஷிலக்ஷணமான உம்ப்ருலகத்தையுடையவன்,

(வி.) அம்ருதாச:=தனது குணாமிருதத்தை அவர்கள் பாநம்பண்ணச் செய்பவன். அம்ருதவபு:=அம்ருதம்போன்ற திருமேனியுடைத்தானவன்.

ஸர்வக்ஞ:=அவர்களால், இது ஆகும், இது ஆகாது, இதைச்சாதிப்பர்கள், இதைச்சாதிக்க மாட்டார்களென்று ஸகலத்தையும் அறிந்துகொள்பவன். ஸர்வதோமுக:=இந்த உபாயத்தால்தான் இவனை ஸாதிக்கக்கூடும்; இதைத்தவிர வேறு உபாயமில்லை யென்கிற நிர்பபந்தமின்றிக்கே ஏதேனும் ஒருவ்யாஜத்தாலே அவர்கள் பிரவேசிக்கும்படியானவன்[583].

ஸுலப:=ஆனதுபற்றியேதான் பெருவிலையுள யிருக்கச்செய்தேயும் சிறிதும் விலையின்றிபெறக் கூடியவன்.

[இப்படியே ஆயிரங்கூனுடையளான ஓர் பெண்பிள்ளை கண்ணனுக்குச்சிறிது சந்தனத்தைத் தந்து தனது இல்லமேற வரவேண்டுமென்று மடிபிடித்து இழுத்தாளன்றோ[584].]

ஸுவ்ரத:=எவ்விதத்தில் புகுந்தோரையும் ஸகல விதத்திலும் பரிபாலிப்பதென்று திடமான விரதம்பூண்டவன்[585].

ஸித்த:=தனது தத்வஸ்திதியை உள்ளபடியே அறிந்தவர்களுக்குச் சிறிது யத்தினங்கொண்டு ஸாதிக்கவேண்டாமல் ஸித்தமாயிருப்பவன்.

(அ-கை.) இப்படி அவன் நேரிலிருந்து ரக்ஷிக்கும்படிசொல்லிற்று' இனிமறைந்து; புருஷாந்தரத்தாலே ரக்ஷிக்கும்படி சொல்லப்படுகிறது.

சத்ருஜித்சத்ருதாபந:=சத்துருக்களை ஜெயிக்கவல்லரான ககுஸ்த புருகுத்ஸாதிகளுக்குத் தனது சக்தியைத் தந்து அவர்கள் மூலமாய் அவர்கள் சத்துருக்களைத் தவிக்கச்செய்பவன்[586]. ந்யக்ரோதோதும்பர:=தான்

[583] ఆర్తో వా యది వా దృప్తః పరేషాం శరణాగతః ॥

[584] వస్త్రే ప్రగృహ్య గోవిన్దం మమ గేహం వ్రజేతి వై ॥ [585] సకృదేవ ప్రపన్నాయ ॥

[586] శతక్రతోర్వృషభరూపధారిణః కకుత్స్థోఽతిరోషసమన్వితో భగవతశ్చరాచరగురోః అమృతస్య తేజసాప్యాయితో దేవాసురసంగ్రామే సమస్తానేవాసురాన్ నిజఘాన ॥

[శ్వత్థశ్చాణూరాంధ్రనిషూదనః॥ సహస్రార్చిస్సప్తజిహ్వస్సప్తైధా]

అశ్వత్థః - அநித்தியமானவர்களுக்குள் நியாமகனாயிருப்பவன், చాణూరాన్ధ్రనిషూదనః - சாணூராந்திரனென்னுமசுரனைச்செகுத்தவன், సహస్రార్చిః - ஆயிரங்கிரணங்களைத் தந்தவன், సప్తజిహ్వః - ஏழுநாக்குகளுடையவன், సప్తైధాః- ஏழுஸமித்துக்களுடையவன்,

---

(வி.) மிகவும் சிரேஷ்டர்களாலே ஸேவிக்கத்தகுந்தவனாயினும், அதிநீசாளான அவர்களால் தனது அநுக்கிரஹத்தை அபேக்ஷித்துப் [587]பிரார்த்திக்கப்படுமவனாய், ஸகல குணங்களாலும் உயர்ந்து லக்ஷ்மீபரி ஜநாதிகளாலேஸமிருத்திபொருந்திய பரமாகாசத்தை உரைவிடமாயுடையவன்.

(அவதாரிகை.) அநந்தரம் அந்தந்த தேவதாமுகத்தாலே ஜகத்தை நியமிக்கிறதென்கிற ப்ராதுர்ப்பாவாந்தரம் சொல்லப்படுகிறது.

அச்வத்தஃ=அநித்தியமான இந்திராதி பதவிகளிலிருக்கும் அதிகாரி புருஷர்களுடைய ஹ்ருதயத்தில் நியாமகனாய் விளங்குமவன். சாணூராந்த்ரநிஷூதனஃ=அந்த இந்திராதிகளுக்கு விரோதியான சாணூராந்திராசுரனை ஹதம்பண்ணினவன்.

ஸஹஸ்ரார்ச்சிஃ=பரிசுத்தமானவைகளும் சோஷிப்பிக்குமவைகளும், தபிக்குமவைகளும், பிரகாசமானவைகளும், தர்மத்திற்கு அத்தியக்ஷமானவைகளுமாய்க்கொண்டு லோகத்திற்கு உபகரிக்கின்ற ஆயிரம் கிரணங்களை சூரியனுக்கு அளித்தவன்[588].

ஸப்தஜிஹ்வஃ—அப்படியே காளி, கராளிமுதலாய் தேவதைகளுக்கு ஹவிஸ்ஸைக்கொண்டு செல்லுமவைகளான ஏழுஜ்வாலைகளோடு அக்கினியில் விளங்குமவன்[589].

ஸப்தைதாஃ=ஏழுஇந்தநங்களுடையவன்.

(அ) அச்வத்தஃ—அச்வத்தவிருக்ஷம்போல் அநித்தியமான ஸம்ஸார ரூபமாய் பிரதிபாஸிப்பவன்.

---

587 అఞ్జలిః పరమాముద్రా క్షిప్రం దేవప్రసాదినీ ॥

588 యదాదిత్యగతం తేజో జగద్భాసయతేఽఖిలమ్ । యచ్చన్ద్రమసి యచ్చాగ్నౌ తత్తేజో విద్ధిమామకమ్ ॥

589 తద్వక్త్రో దేవతానాంచ హుతభుక్ పరమేశ్వరః । మన్త్రపూతం యదాదాయ హుతమాజ్యపురస్సరమ్ । బ్రహ్మాణ్డభువనం సర్వం సన్తర్పయతి సర్వదా ॥

[సప్తవాహనః । అమూర్తిరనఘోఽచింత్యో
భయకృద్భయనాశనః ॥ అణు]

సప్తవాహనః - ஏழுவாஹநமுடையவன், అమూర్తిః - மூர்த்தியில் வேறுபட்டவன், అనఘః - குற்றமற்றவன், అచిన్త్యః-நிரூபிக்கப் போகாதவன், భయకృత్ - பயமுண்டுபண்ணுமவன், భయనాశనః- பயத்தைப்போக்குமவன், అణుః-அணுவானவன்,

---

(வி.) [என்றால்: வைதிக அக்கினிக்கு, ஔபாஸநம், வைசுவதேவம், ஸ்தாலீ பாகம், அஷ்டகை, மாஸிச்சிராத்தம், ஈசாநபலி, ஸர்ப்பபலியென்கிற பாக யக்ஞங்கள் ஏழும், அக்நிஹோத்ரம், தர்சபூர்ணமாஸம், பிண்டபித்ருயக்ஞம், பசுபந்தம், ஆக்ரயணம், சாதுர்மாஸ்யம், ஸௌத்ராமண்யமென்கிற ஹவிர்யக்ஞம் ஏழும், அக்நிஷ்டோமம், அதியக்நிஷ்டோமம், உக்த்யம், ஷோடசம், வாஜபேயம், அதிராத்ரம், ஆப்தோர்யாமமென்கிற ஸோமஸம்ஸ்தங்களேழும், ஸமித்துக்களாகையாலே அவைகளை உடையனென்றபடி. யத்வா, இஷ்டாபூர்த்தாதிகளான கருமங்கள் ஏழையும் ஸமித்தாயுடையவன் என்றவுமாம். யத்வா-அரசுமுதலிய ஏழுவிதகாஷ்டங்களை யுடையவனென்றுமாம்.]

ஸப்தவாஹநः=காயத்திரிமுதலிய வைதிக மந்திரங்களுக்கு அபிமாநிகளான சூரியரதவாஹநங்களேழையும் உடையவன். அதவா, வாயுஸ்கந்தங்களேழையும் அதிஷ்டித்திருப்பவனென்றுமாம். அமூர்திः=இப்படிதான் அதிஷ்டித்திருக்கும் ஸ்தூலமான பௌதிக மூர்த்தியைக்காட்டிலும் தான் வேறுபட்டிருப்பவன்.

அநகः=கருமத்துக்கு வசப்படாமையாலே அந்த பூதசக்ரங்களில் முழுகிக்கிடக்கிற ஜீவனைக்காட்டிலும் விலக்ஷணமானவன்.

அசிந்த்யः=முக்தபுருஷர்களோடும் ஸமமாக எண்ணப்போகாதவன். பயக்ருத்—தனது ஆக்ஞையைக் கடப்போருக்கு பயத்தையுண்டுபண்ணுமவன்.

பயநாசநः=அப்படியே ஆக்ஞையை அநுவர்த்திப்போருக்கு நேரிடும் பயத்தைப்போக்கடிப்பவன்[590].

(அவதாரிகை.) அநந்தரம் அணிமைமுதலியவைகளை அதிஷ்டித்திருக்கும்படி சொல்லுகிறது.

அணுः=அதிஸூக்ஷ்மமான தஹராகாசம், அவ்யக்தம், ஜீவன் இவைகளில் பிரவேசிக்கிற ஸாமர்த்தியமுடையனாகையாலே அணுவாய் விளங்குமவன்.[591]

(அ.) அசிந்த்யः—ஸர்வப்ரமாணங்களுக்கும் விஷயமாகாதவன்.

---

590 భయాత్తపతి సూర్యః ॥ 591 అణోరణీయాన్ ॥

[బృహత్కృశస్స్థూలో గుణభృన్నిర్గుణో మహాన్ । అధృత]

బృహత్ - மஹத்தானவன், కృశః-இளைத்தவன், స్థూలః-பருத்தவன், గుణభృత్ - குணங்களைப்பரித்தவன், నిర్గుణః - குணஹீனன், మహాన్ - பெரியவன், అధృతః-தரிக்கப்பட்டவன்,

---

(வி.) ப்ருஹத்=அதிவிஸ்தாரமான பரமாகாசத்தையும் அற்பபாகத்தில் அடக்கிக்கொள்ளும்படியான பரமமஹத்தாய்விளங்குபவன்[592]. க்ருசஃ=பஞ்ச, காற்று முதலியவைகளைக் காட்டிலும் மிகவும் லேசாயிருக்கையாலே எங்குந்தடையற்றுச் செல்லும்படி இளைத்திருப்பவன்[593]

ஸ்தூல:—தானொரிடத்திலிருந்தபடியே பரிசிக்கும்படியான (அதாவது பூமியிலிருந்தபடியே சந்திரனைத் தொடும்படியான) பிராப்தியென்னும் ஐசுவரியமுடையனாகையாலே பருத்தவன்.

குணப்ருத—தனது ஸங்கல்பத்தாலே ஸகலத்தையும் ஸகலாவஸ்த்தைகளிலும் தனக்குக்குணம்போல் தரித்திருப்பவன். இதுதான் இவனுடைய உத்கிருஷ்டமான ஈசுவரத்தன்மை.

நிர்க்குண:—இப்படி ஸகலத்தையும் பரித்தாலும் அவற்றிற்கு வசப்படாமையால் அதன் குணம் சிறிதும் தன்மீது தட்டாதவன். பரமஸ்வதந்திரனென்றபடி. இதுதான் இவனுடைய உத்கிருஷ்டமான வசித்வம்.

மஹாந=ப்ராகாம்யமென்கிற உத்கிருஷ்ட ஐசுவரியத்தோடு கூடினவன்.

(அவதாரிகை) பிறருடைய சாயையில்புகுந்து அவர் உள்ளத்தை வசீகரிக்கையென்றும், தன்னைத் தியானிப்பவருள்ளத்தில் அதிஷ்டானம் பண்ணுந்திறமையென்றும், ஜீவனுடன்கூடினதும் ஜீவனையொழித்ததுமான சரீரத்தில் பிரவேசிப்பதென்றும்; இஷ்டாபூர்த்தாதி ஸத்கார்யங்களில் அதிஷ்டித்திருக்கையென்றும் நான்குவிதமான அவனுடையதேச்சாவியாபாராதிசயத்தாலே யாதொன்றிலும் கட்டுப்படாமையாலே:—

அத்ருத:=தரிக்கப்படாதவன்.

[இதனால்—இவனது நினைத்தபடியெல்லாம் செய்யவல்லமையென்கிற காமாவஸாயித்வத்தின் அதிசயம் சொல்லப்பட்டது. இவந்தான்

(அ.) க்ருசஃ—திரவ்ய மல்லாமையாலே கிருசனென்கிறது.

---

592 స భూమిం విశ్వతో వృత్వా అత్యతిష్ఠద్దశాఙ్గులమ్ ॥ మహతో మహీయాన్ ॥

593 అణ్వమే యోనిరయోఽవ్యశ్చ యత్ర కామగమో వశీ ॥

[స్వధృతః స్వాస్యః ప్రాగ్వంశో వంశవర్ధనః॥ భారభృత్]
స్వధృతః தானாகவே தரிக்கப்பட்டவன், స్వాస్యః- நல்ல ஆஸனமுடையவன், ప్రాగ్వంశః - முதுவர் முதல்வன், వంశవర్ధనః- வம்சத்தைவளர்ப்பவன், భారభృత్-பாரத்தைப்பரிப்பவன்,

(வி.) பரமபதத்துக்குப் போகத் தகுந்த ஸித்தியில்லாயிருந்தும் வைதிகன் புத்திரர்களைத் தனது ஸங்கல்பமாத்திரத்தாலே பரமபதத் தேறப் போக விட்டதோடு, புநராவர்த்தியில்லாத அங்கினின்றும் மறுபடியும் அவர்களை இந்தபவக்கடலில் வரச்செய்தான். இதனால் இவன் சித்தையும் அசித்தையும் அவற்றின் ஸ்வரூபம் மாறுபடும்படி செய்யவல்லனாயிருந்தும், ஏதோஒரு காரணத்தால் அவைகளை அழியமாற்றாமலிருக்கிறானென்று ஊஹிக்கப்படுகிறது.]

(அவதாரிகை.) மந்திரம், ஓஷதி, தபஸ், ஸமாதி இவைகள் ஸித்திக்கப்பெற்ற பத்தஸம்ஸாரிகளுடைய அணிமாதி ஐசுவரியங்களைக் காட்டிலும் இவன் ஐசுவரியத்துக்குண்டான வேற்றம் சொல்லுகிறதுமேல். —

ஸ்வத்ருதஃ= ஸமாதிமுதலிய உபாதிவசத்தால் வந்ததன்றிக்கே கீழ்ச்சொன்ன ஐசுவரியம் ஸ்வயமாகவே உண்டாயிருக்கப்பெற்றவன். ஸ்வாஸ்யஃ= ஸம்ஸாரதசையில் மழுங்கிக்கிடந்து முக்திதசையில் ஆவிர்ப்பவிக்கின்ற முக்தபுருஷர்களுடைய ஸ்வாபாவிகமான ஐசுவரியம்போலன்றிக்கே எப்போதும் ஆவிர்ப்பவிக்கப்பெற்ற ஐசுவரியமென்னும் நல்ல ஆஸநமுடையவன்[594].

ப்ராக்வம்சஃ= தொன்றுதொட்டு முக்தாளான நித்திய ஸூரிகளுக்கும் உத்பத்தி ஸ்தானமானவன்.

[என்றால்:—ஸர்வமும் ஸகலவிதத்திலும் அவனுடைய இச்சையைப் பின்செல்லுகிறதென்கிற விஷயத்தில் விவாதமில்லாமையாலே நித்தியாளுக்குண்டான அநாதியான ஸ்வரூப ஆவிர்ப்பாவமும் பகவ திச்சாதீநமென்றபடி[595].]

(அவதாரிகை.) அந்த நித்தியஸூரிகளைக் காட்டிலும் இவன் விலக்ஷணனுகைக்கடியான இவனுடைய ஹேதுத்வம் சொல்லப்படும்.

வம்சவர்த்தநஃ= கீழ்ச்சொன்ன தனது ஸந்தாந பூதர்களான நித்திய ஸூரிகளினது வம்சத்தை வளர்ப்பவன்.

பாரப்ருத்= முக்தாளுடைய ஸம்ஸாரபந்தத்தைப் போக்குகையும், அவர்கள் ஸ்வரூபத்தை ஆவிர்ப்பவிக்கச் செய்கையும்,

(அ.) ஸ்வாஸ்யஃ—அழகிய முகமுடையவன்.

594 నైవంభగవతస్స్వాదావిర్భావాత్ ॥

595 తథాష్టగుణమైశ్వర్యం నాథస్వాభావికం పరమ్ । నిరస్తాతిశయం యస్యాస్యత తస్తోష్యాని కింత్వహమ్ ॥

[కథితో యోగీ యోగీశస్సర్వకామదః । ఆశ్రమశ్శ్రమణః]

కథితః-சொல்லப்பட்டவன், యోగీ - ஸம்பவிக்கப்பெற்றவன், యోగీశః - யோகிகட்கீசன், సర్వకామదః - ஸாவகாமங்களையுந் தந்தவன், ఆశ్రమః-இளைப்பாறுமிடமானவன், శ్రమణః-அப்பியஸிக்கச்செய்பவன்,

(வி) தன்னோடு சேர்த்துக்கொள்ளுகையுமென்கிற அவர்களுடைய பாரத்தை வஹிப்பவன். கதிதః—கீழ்ச்சொன்னவைகளும் மேலே சொல்லப்போகிறவைகளுமான குணங்களோடுகூடி விளங்குவதாக ஸகல சாஸ்திரங்களாலும் சொல்லப்பட்டவன்[596].

யோகி—இவையெல்லாம ஸம்பவிக்கக்கூடியவன். சேராதவைகளையெல்லாம சேர்ப்பிக்கை யென்கிற மஹாவைபவமுண்டாயிருக்கப்பெற்றவன்.

யோகீசः—ஸநகாதிகளான யோகிகளுக்கெல்லாம் துரந்தரன்[597].

ஸர்வகாமதः—யோகத்தினின்றும் நழுவினவர்களுக்கும் அணிமாதி ஸகல பலன்களையும் இடையூறாகத் தருமவன்.

ஆச்ரமः—அவர்களை அந்த அணிமாதிகளினின்று மீட்டு நிவ்ருத்தரானபொழுது, ப்ரம்மவித்தை யபேக்ஷமாயுண்டாவதற்கிடமான ஸ்ரீவைஷ்ணவ கிருஹங்களில் அவர்களுக்குப் பிறவியைத் தந்து இளைப்பாறச்செய்பவன்[598]. ச்ரமணः—இப்படி அந்த யோகப்பிரஷ்டர்கள் அணிமாதிபலன்களை அநுபவித்தும், மஹான்

(அ) ச்ரமணः—அவிவேகிகளை சிரமப்படுத்துமவன்.

கதித:—வேதாதிகளாலே இவனொருவனே பரனென்று சொல்லப்பட்டவன்.

யோகீ:—ஞானத்தாலே அடையக்கூடியவன்.

யோகீச:—இதரயோகிகளைப்போல் தனது யோகத்தினின்றும் நழுவாமையாலே யோகீசன்.

ஆச்ரம:—ஸம்ஸாரமென்னும் பெருங்காட்டில் வருந்தியவருக்கு இளைப்பாறுமிடமானவன். ச்ரமண:—அவிவேகிகளை வருத்துமவன்.

596 వేదేషు సపురాణేషు సాఙ్గోపాఙ్గేషు గీయసే ॥
వేదే రామాయణే పుణ్యే భారతే భరతర్షభ ।
ఆదౌ మధ్యే తథాఽన్తే చ విష్ణుస్సర్వత్ర గీయతే ॥

597 సనన్దనాదీన్ అపకల్మషాన్ మునీంశ్చకారభూయోఽతిపవిత్రితంపదమ్ ॥

598 శుచీనాం శ్రీమతాం గేహే యోగభ్రష్టోఽభిజాయతే ॥

[క్షామస్సుపర్ణో వాయువాహనః ॥ ధనుర్ధరో ధనుర్వేదో దండో]

క్షామః - ஸமர்த்தமாக்குமவன், సుపర్ణః - கரைசேர்ப்பவன், వాయువాహనః - வாயுவால் கொண்டுபோகப்படுமவன், ధనుర్ధరః - விற்பிடித்தவன், ధనుర్వేదః - வில்வித்தைகற்பிப்பவன், దండః - தண்டிப்பவன்,

---

(வி.) களின் கிருஹங்களில், பிறந்தும் மிகுந்தபட்ட ஸம்ஸ்காரத்தாலே அந்தஜந்மத்திலும் அநாயாஸமாய் ஸமாதியை அப்பியஸிக்கச் செய்பவன்[599].

க்ஷாம:—இப்படி தனது யோகத்தில் திரும்பின மாத்திரத்திலேயே அவர்கள் யோகப் பிரஷ்டர்களாயிருக்கச்செய்தேயும் துக்கத்தை நிவர்த்தித்துக்கொள்ள சக்தராகச் செய்பவன்[600].

ஸுபர்ண:—இப்படி ஸமாதியிலே நைபுணந்தவர்கள் சுகமாய் தமஸ்ஸினது கரையைச்சேருமபடி கொண்டுவிடுத்துமவன்[601].

வாயுவாஹந:—அவர்கள் தான் பிரபல ஹேதுக்களால் பதிதாளாக ஆய்விட்டால் அவர்களை அதிவேகசாலியான கருடனைக் கொண்டு உத்தரிப்பவன்.

[இப்படியே பரமபாகவதனான வஸுவானவர், பரமர்ஷி சாபத்தால் அதோகதியாய்ப்போக நேரிட, அவருக்குக் கருடனைக்கொண்டு மறுபடியும் உச்சகதியை உண்டாக்குவித்ததாய் ஸ்ரீவிஷ்ணுதத்வத்தில்பிரஸித்தம்[602].]

தனுர்த்தர:—இப்படிப்பட்ட உபாஸகர்களுடைய விரோதிகளைப் போக்கு நிமித்தம் தானே கையும் வில்லுமாய் வருமவன்[603].

தனுர்வேத:—மற்றுமுண்டான சுரேந்திராதிகளும தனுர் வித்தை முதலியவைகளைத் தன்னிடத்தில் பெறும்படி அந்தந்த சாஸ்திரங்களுக்குப் பிரவர்த்தகனானவன்.

தண்ட:—வேததர்மங்களுக்கு ரக்ஷகரான ராஜாக்கள்மூலமாய் தண்டநீதியைக்கொண்டு துஷ்டர்களை நிரஸிப்பவன்.

(அ.) ஸுபர்ண:—ஸம்ஸாரமென்னும் விருக்ஷரூபியானதனக்கு வேதமென்னும் இலைகளுடையவன்.

---

599 తత్ర తం బుద్ధిసంయోగం లభతే పౌర్వదేహికమ్ ॥

600 న హి కల్యాణకృత్ కశ్చిద్ దుర్గతిం తాత గచ్ఛతి ॥

601 స్వపారం భగవాన్ నయతి ॥

602 అథవా పక్షిరాట్ తూర్ణమాగత్యాస్వామినః పదమ్ । నేష్యతి ॥

603 ధార్యతే క్షత్రియైశ్చాపో మహాఽఽర్తత్రశ్చో ధవేదితి ॥

[దమయితాదమః ॥ అపరాజితస్సర్వసహో నియంతా
నియమో యమః ॥ సత్త్వవాన్ సాత్త్వికః]

దమయితా-அடக்கும்சீலன், అదమః - தன்னை யடக்குவாரொருவரில்லாதவன், అపరాజితః பிறரால்ஜயிக்கப்படாதவன், సర్వసహః ஸகலத்தையும்ஸஹிப்பவன், నియంతా - ஆள்பவன், నియమః - கொடுப்பவன், యమః - நியமிப்பவன், సత్త్వవాన్ - ஸத்வமுடையவன், సాత్త్వికః - ஸத்வத்துக்கேற்றவன்,

(வி.) தமயிதா=தானும் அப்படியே ராவணாதிகளை நேரில் எடுத்து விட்டு சிக்ஷிக்குந்தன்மையன். அதம:=தனக்கும இப்படி ஒருவனுண்டாயிருக்கப்பெறாது நிரங்குசமாய் விளங்குமவன்[604].

அபராஜித:—இப்படி ஸாவதோமுகமான தனது ஆக்ஞையைச் செலுத்துமபொழுது ஓரிடத்திலும் ஒருகாலத்திலும் ஒருவராலும் அபஜயமடையாதவன்[605].

ஸர்வஸஹ:—மந்தாதிகாரிகள் ஆராதிக்கும்படியான தேவதாந்தரங்களைத தனது ஆக்ஞைகொண்டு பரிப்பவன்.

நியந்தா=அத்தேவர்களை ஆஸ்ரயித்தோருக்கு அவர்களிடத்தில் சிரத்தையுண்டாகும்படி செய்பவன்[606].

நியம:=அத்தேவர்களைக்கொண்டு அவர்களுக்கு ஜாதி, ஆயுஸ், போகம், முதலியவைகளைத் தருமவன்[607].

யம:=அந்தந்த பலன்களுக்கு நியாமகாளான யமன்முதலானோரையும் அடக்கி ஆள்பவன்[608].

(அவதாரிகை.) இப்படி ரஜஸ்தமஸ்ஸுக்களை அடக்கும்படி சொல்லிற்று; இனிஸத்வத்தை வளர்க்கும்படி சொல்லுகிறது.

ஸத்வவாந்=மோக்ஷகாரணமான ஸத்வத்துக்குத் தானே அதிஷ்டாதாவாயிருக்கையாலே ஸத்வமுடையவன்[609]. ஸாத்விக:=ஸாத்விகமான தர்மம், ஞானம், வைராக்யம், ஐச்வரியம், ரூபம், பலம் இவைகளுக்கு நியாமகனாகையாலே ஸத்வகுணத்துக்கேற்றவன்.

604 భస్తు సర్వస్య జగత్సర్వం న సైవ జనార్దనః । న తు కృత్స్నం జగచ్ఛక్తః కించిత్ కర్తుం జనార్దనే ॥

605 దాశార్హమపరాజితమ్ ॥

606 యో యో యాం యాం తనుం భక్తః శ్రద్ధయార్చితుమిచ్ఛతి ॥

607 లభతే చ తతః కామాన్ మయైవ విహితాన్ హి తాన్ ॥

608 ప్రభవతి సంయమనే మమాపి విష్ణుః ॥

[సత్యస్సత్యధర్మపరాయణః । అభిప్రాయః
ప్రియార్హోఽర్హః ప్రియకృత్ప్రీతివర్ధన ॥]

సత్యః - யதார்த்தமானவன், సత్యధర్మపరాయణః - ஸத்யமான தருமத்தில் பரமப்பிரீதிபண்ணுமவன், అభిప్రాయః - இஷ்டப்பட்டவன், ప్రియార్హః - பிரியத்துக்கேற்றவன், అర్హః - தகுந்தவன், ప్రియకృత్ - பிரியம்செய்பவன், ప్రీతివర్ధనః - பிரீதியைவளாப்

(வி) ஸத்யः—ஸாத்விகசாஸ்திரங்களில் பிரதிபாதிக்கப் படுகையாலே யதார்த்தமான வைபவசாலி. அல்லது பாரதத்திலே[610] சொல்லுகிறபடி, ஸத்யத்தில் பிரதிஷ்டிதனாய் ஸத்தியத்திற்குப் பிரதிஷ்டாபகனுமாயிருக்கையாலே ஸத்யனென்னப்படுமவனென்றுமாம். ஸத்யதர்மபராயணः—ஸாத்விகமான அதிகாரியையும் பலத்தையுமுடையதான தர்மமானது, நிருபாதிகமாய்க்கொண்டு, தனக்கு ரொம்பவும் பிரீதிஹேதுவாயிருக்கப்பெற்றவன்.

அபிப்ராய:—ஸத்திய தர்மத்தில் நிஷ்டையுடைய மஹாத்மாக்களால் நிருபாதிகமாய்விரும்பப்படுமவன். ப்ரியார்ஹ:—இப்படி தனக்கென்று அற்றுத்தீர்ந்தவர்களை ஸ்வயமேரொம்பவும் உகப்பவன். [ஏகபக்தியாயிருப்பாரிடத்தில் எம்பெருமானுக்குத் தனக்குத்தானே பிரீதியுண்டாயிருக்கிறதன்றோ? அர்த்தகாமரிடத்திலும் ஆத்மப்ராப்திகாமாளிடத்திலும், அவாள் தன்னைப் பிரார்த்திருப்பார்களே யென்கிற ஔதாரியத்தாலே பிரீதிபண்ணுகிறானித்தனையேயன்றோ?[611].]

அர்ஹ:—மற்றொன்றையுமறிந்த மாதவனுக்காட்செயவே வேணுமென்று உளங்தெளிந்த அவர்களுக்கும் தானே தகுந்திருப்பவன்[612]. ப்ரியக்ருத்—இதரப் பிரயோஜனத்தை அபேக்ஷித்துத் தன்னை அடைந்தோரையும அவர்களின்ஷைக்குத் தக்கபடி நடந்து அவாகளுக்கும நல்லனாயிருப்பவன். ப்ரீதிவர்த்தன:—அப்படியே அவர்களுக்கு மென்மேலும் குணங்களைக்காட்டித் தன்னிடத்தில் பிரீதியுண்டாகுமபடி செய்துக்கொள்பவன்[613].

[609] మహాన్ప్రభుర్వై పురుషస్సత్త్వస్యైష ప్రవర్తకః ॥

[610] సత్యే ప్రతిష్ఠితః కృష్ణస్సత్యమస్మిన్ప్రతిష్ఠితమ్ । సత్తాసత్తే చ గోవిన్దస్తస్మాత్సత్యస్సతాం స్మృతః ॥

[611] తేషాం జ్ఞానీ నిత్యయుక్త ఏకభక్తిర్విశిష్యతే ॥ ఉదారాస్సర్వ ఏవైతే ॥

[612] ఆస్థితస్స హి యుక్తాత్మా మామేవానుత్తమాం గతిమ్ ॥

[613] భజతాం ప్రీతిపూర్వకమ్ । దదామి బుద్ధియోగం తమ్ ॥

[విహాయసగతిర్జ్యోతిస్సురుచిర్హుతభుగ్విభుః । రవిర్విరోచన]

பவன், విహాయసగతిః - ஆகாசகதியைத்தருமவன், జ్యోతిః - சோதியானவன், సురుచిః - பகலானவன், హుతభుగ్విభుః - சந்திரனால் பூர்ணமான பக்ஷத்தையுடையவன், రవిః - கொண்டாடப்படுமவன், విరోచనః - கூட்டுமவன்,

(வி.) விஹாயஸகதிః = அப்படிப்பட்டவரது பரமாவதியில் நிலைநின்ற மஹான்களுக்கு கதியாகப் பரமாகாசத்தைத் தருமவன்[614].

(அவதாரிகை.) அநந்தரம் அவர்கள் பரமபதத்திற் கெழுந்தருளுவதற்கு ஸோபாநமாய் விளங்கும் அர்ச்சிராதிகதி சொல்லப்படுகிறது. பிரம்மநிஷ்டனான அதிகாரியினது உபாஸநத்துக்கு முகமலர்ந்த பகவான், அவனைப் பரமபத மேறக் கொண்டுசெல்கைக்காக அர்ச்சிராதிகளான சில தேவதைகளை நியமிக்கிறானன்றோ? அந்தகதியில் பிரதமபதமான அர்ச்சிஸ் சொல்லப்படுகிறது.

ஜ்யோதிః = அர்ச்சிஸ் என்கிற முதல்பதத்தை நியமிப்பவன்[615]

ஸுருசிః — அநந்தரம் அஹஸ் என்கிற நற்பகலை நியமிப்பவன்[616].

ஹுதபுக்விபுః = (அமுதமாய் பரிணமிக்கும் ஹுத த்ரவியத்தைப் புசிக்கின்ற சந்திரனுக்குப் பூர்த்தியுண்டுபண்ணும் சுக்கிலபக்ஷாபிமானியானவன்[617].

ரவிః — நித்திரையினின்றும் எழுந்திருக்குங் காலமாகையாலே உத்தராயணத்தில் கொண்டாடப்படுமவன். என்றால்:— ஷண்மாஸாத்மகமான உத்தராயணாபிமானி தேவதையைச் சொன்னபடி.[618]

விரோசந: = அநந்தரம் அங்கங்களின்வழியே ஆதித்யனைக் கொண்டுசேர்க்கும ஸம்வத்ஸராபிமானியானவன[619].

(அ) விபு:— எங்கும் பரந்தவன்.
ரவிலோசந:— சூரியனை நேத்திரமாயுடையவன்.

614 భుక్త్వా చ భోగాన్ విపులాంస్త్వమంతే మత్ప్రసాదతః। మమానుస్మరణం ప్రాప్య మమ లోకే నివత్స్యసి ॥

615 తేఽర్చిషమభిసంభవంతి ॥

616 అర్చిషోఽహః ॥

617 అహ్న ఆపూర్యమాణపక్షః ॥

618 ఆపూర్యమాణపక్షాద్యాన్ షడుదఙ్ఙేతి మాసాన్ ॥

619 మాసేభ్యస్సంవత్సరమ్ ॥ సంవత్సరాదాదిత్యః ॥

[సూర్యస్సవితా రవిలోచనః ॥ అనంతహుత
భుగ్భోక్తా సుఖదో నైకదో౽గ్రజః ॥]

సూర్యః - செய்பவன், సవితా - உண்டுபண்ணுமவன், రవిలో
చనః-சூரியன்வழியே செல்பவன், అనన్తహుతభుగ్భోక్తా-அதிகமஹி
மைபொருந்திய ஹோமபோக்தாவையும் பரிபாலகனையு மு
டையவன், సుఖదః - சுகத்தைத்தருமவன், నైకదః - அநேகந்
தருமவன்,

(வி.) ஸூர்ய:—எங்குந்திரியுந் தன்மையுடைய வாயுலோகாபிமானி யானவன். ஸவிதா—சூரியனுமவன்620.

[ஸம்வத்ஸராபிமானி ஆதித்தியனோடு சேர்ப்பதும் வாயுலோகத்தின் வழியாகத்தானென்று 621ஸூத்திரகாரரும் நிஷ்கர்ஷிக்கையாலே இங்கும் வாயுவைச்சொல்லி மேலே ஆதித்தியனைச் சொல்லுகிறதென்று கண்டு கொள்வது.]

ரவிலோசந:—சூரிய கிரணத்வாரா சந்திரன், மின்னல், வருணன் முதலானோரிடம்கொண்டு நடத்துமவன்622.

அநந்தஹுதபுக்போக்தா—அதிக மஹிமைசாலிகளான, ஹுதபோக்தாவையும் பாலனஞ்செய்பவனையு முடையவன்.

[என்றால்—யாகாதிகளில் ஹோமம்பண்ணப்படும் ஹவிஸ்ஸைப் புசிக்கின்ற இந்திரனையும், ஸகலப் பிரஜைகளையும் பரிபாலிக்கின்ற பிரஜாபதியையுங்கொண்டு சேர்ப்பவனென்றபடி. இதுவேயன்றோ அநந்தரக்ரமம்?623.]

ஸுகத:—அமாநவர் திருக்கைகளாலே பரிசிக்கச்செய்து ஸம்ஸாரத்தை வாஸனையோடு போக்கடித்து ஸ்வப்ராப்தியென்னும் சுகத்தைத்தருமவன்624. நைகத:—பலவுங்கொடுப்போரை யுடையவன்.

[என்றால்—அபரிமிதமான திவ்யமாலை, திவ்யாஞ்சநம், திவ்யவஸ்திரம் தொடக்கமானப் பிரம்மாலங்காரத்தை யெடுத்துக்கொண்டு முக்தனை யெதிர்கொண்டுவரும் திவ்யாப்ஸரஸ்ஸுக்கள் பலருண்டா யிருக்கப்பெற்றவன்625.]

(அ.) நைகஜ:—தர்ம பாலனத்திற்காகப் பல்படியாய் பிறப்பவன்.
அக்ரஜ:—முதலிற் பிறந்தவன்.

620 సంవత్సరాదాదిత్యమ్ ॥ 621 వాయుమబ్దాదవిశేషవిశేషాభ్యామ్ ॥
622 ఆదిత్యాచ్చన్ద్రమసమ్ చన్ద్రమసో విద్యుతమ్ ॥ సవరుణలోకమ్ ॥
623 స ఇన్ద్రలోకమ్ స ప్రజాపతిలోకమ్ ॥
624 తత్పురుషో౽మానవస్స ఏనాన్ బ్రహ్మ గమయతి ॥
625 తం పఞ్చశతాన్యప్సరసాం ప్రతిధావన్తి శతం మాలాహస్తాః శతమాఞ్జనహస్తాః ॥

[అనిర్విణ్ణస్సదామర్షీ లోకాధిష్ఠానమద్భుతః ॥
సనాత్సనాతనతమః కపిలః కపిరవ్యయః]

అగ్రజః - முன்னே விளங்குமவன், అనిర్విణ్ణః - மனவருத்தமற்றவன், సదామర్షీ - எப்போதும் ஸஹிப்பவன், లోకాధిష్ఠానమ్ - லோகத்துக்கெல்லாம் அதிஷ்டானமானவன், అద్భుతః - ஆச்சரியபூதன், సనాత్ - ஸேவிக்கப்படுமவன், సనాతనతమః - என்றும்புதுசானவன், కపిలః - பொற்கந்தவர்ணன், కపిరవ్యయః - நித்தியானந்தத்தை அநுபவிப்பவன்,

(வி.) அக்ரஜ:=இப்படி ஆச்சிராதிகதியாலே சென்றுகிட்டின முக்தர்களுக்கெதிரே, ஸகலஐச்வர்யரூபையானபிராட்டியுடன்கூடி, பரியங்கவித்தையிற் சொன்னபடி பரமபோக்கியமாய் ஸேவைஸாதித்து விளங்குமவன்[626].

அநிர்விண்ண:=இப்படி ஆச்ரிதனை மஹத்தான ஸம்ஸாரமென்னும் பெரும்பள்ளத்தினின்றுங் கரையேற்றித் தன்தாளின்கீழ்ச்சேர்த்து அவனைச் சோகப்படாமலிருக்கக்காண்பதனால், தான்துயர்நீங்கியிருப்பவன்[627].

ஸதாமர்ஷீ=அதுமுதல் ஸர்வகாலமும் அவன் தான்பெற்றபேற்றுக்குப் பதிலாகச்செய்யும் பணிகளையெல்லாம் திருவுள்ளம்பற்றுமவன்[628].

லோகாதிஷ்டானம்—முக்த புருஷர்களுக்குப் போக்கியமான உத்தம லோகங்களுக்கெல்லாம் அதிஷ்டானமானவன்[629].

அத்புத:=அவ்வுலகங்களிலும் எப்போதும் எல்லோரும் எல்லாப் பிரகாரங்களாலும் அநுபவித்தாலும் அப்போதைக்கப்போ புதிதாய்த்தோன்றி அத்தியாச்சரியத்தை உண்டுபண்ணுமவன்.

ஸநாத்=இப்படி அவர்களால் அநுபவிக்கப் படுமவன்.

ஸநாதநதம:=எப்போது முண்டாயிருந்தாலும் அப்போதுதான் தோன்றினதுபோல் எப்போதும் போக்கியமாய் விளங்குமவன்.

கபில:=மின்னல் தொகையின் நடுவில் விளங்குமகாளமேகம்போன்ற திருமேனியோடு விளங்குமவன். கபிரவ்யய:=தானும் அக்ஷயமான ஆநந்தத்தைப் பானம்பண்ணிப்போருமவன்.

நவமசதகம்--ஸம்பூர்ணம்.

(அ.) கபில.—பாடபாகலம் பிங்களவர்ணமாகையாலே தத்ரூபியானவன்.

తం బ్రహ్మాలంకారేణాలంకుర్వన్తి ॥

[626] స ఆగచ్ఛత్యమితౌజసం పర్యఙ్కమ్ ॥ ఉపబృంహణం తస్మిన్ బ్రహ్మాస్తే తమిత్థంవిత్ పాదేనైవాగ్ర ఆరోహతి । తం బ్రహ్మాహ కోఽసీతి ॥ సాయా బ్రహ్మణిచితిర్యా వ్యష్టిః తాంచితింజయతి తాం వ్యష్టింవ్యశ్నుతే ॥

[627] కృతకృత్యస్తదారామో విజ్వరః ప్రముమోద హ ॥

[628] సోఽశ్నుతే సర్వాన్ కామాన్ సహ బ్రహ్మణా విపశ్చితా ॥

[629] అనుత్తమేషూత్తమేషు లోకేషు ॥

ஸ்ரீ:

த ச ம ச த க ம்.

[స్వస్తిదస్స్వస్తికృత్స్వస్తిస్స్వస్తిభుక్స్వస్తిదక్షిణః ॥
అరౌద్రః కుండలీ చక్రీ విక్రమ్యూర్జితశాసనః । శబ్దాతిగ]

ஸ்வஸ்திதஃ-மங்களந்தருமவன், ஸ்வஸ்திக்ருத்-ஆசீர்வதிப்பவன், ஸ்வஸ்தி-மங்களரூபன், ஸ்வஸ்திபுக்-மங்களத்தைப்பாதுகாப்பவன், ஸ்வஸ்திதக்ஷிணஃ-மங்களமே தக்ஷிணையாகக்கொண்டவன், அரௌத்ரஃ-குளிர்ந்தவன், குண்டலீ - குண்டலந்தரித்தவன், சக்ரீ - சக்கிரமுடையவன், விக்ரமீ - பராக்கிரமசாலி, ஊர்ஜிதசாஸநஃ - பெலத்த ஆக்ஞையுடையவன், சப்தாதிகஃ- சொல்லைக்கடந்தவன்,

(வி) ஸ்வஸ்தித:—இப்படி மஹத்தான மங்களத்தைத்தருமவன்.

ஸ்வஸ்தி க்ருத்—தனது திருக்கல்யாணகுணங்களாலே தனது போகத்துக்கு க்ஷேமத்தைச்செய்து கொள்பவன்.

ஸ்வஸ்தி—தானே மஹத்தான மங்களரூபமானவன்.

ஸ்வஸ்தி புக்—இந்த மங்களத்தையெல்லாம பரிபாலிப்பவன்.

ஸ்வஸ்தி தக்ஷிண:—தனது பரிசரியைக்கேற்ற திவ்யசரீரம், திவ்யசக்திமுதலிய மற்றும் மங்களங்களை, தனது திவ்யாத்மஸ்வரூபத்தைத் தருவதென்கிற மஹாயாகத்திற்கு ரித்விக்குக்களாய் விளங்கும் சூரிகளுக்கு தக்ஷிணையாய் வழங்குமவன்.

அரௌத்ர:—பரமைசுவரிய மிருக்கச் செய்தேயும் குணங்களாலே ரொம்பவுங் குளிர்ந்திருந்தகையாலே தணிந்திருப்பவன்.

குண்டலீ—இதற்கேற்க நித்தியமாய் விளங்கும் குண்டலம்முதலான திவ்யபூஷணங்களணிந்தவன். சக்ரீ—அப்படியே அவற்றிற்கேற்ற திவ்யாயுதந்தரித்தவன். விக்ரமீ—காம்பீர்யத்துக்கேற்ற விலாஸம்பொருந்தியவன்; ஊர்ஜிதசாஸநஃ—பிரமமேந்திராதிகளிலே கடக்கப்போகாத திவ்யாக்ஞைசெய்பவன். சப்தாதிகஃ—அனேக நாக்குகளுடன்கூடிய அநந்தனாலும், அநந்த சாகைகளோடுகூடின வேதங்களாலும், ஸாக்ஷாத் ஸரஸ்வதியாலும் இப்படியென்று உதகரித்துச் சொல்லப்போகாத மஹிமை பொருந்தியவன்.

(அ) ஸ்வஸ்திதக்ஷிண:—மங்களத்தைச் சீக்கிரம் அளிப்பதில் தானே வல்லவன். அரௌத்ர:—கருமம, ராகம், கோபம் என்கிற ரவுத்திரங்கள் மூன்றும் அற்றவன்.

சப்தாதிக.—சப்தங்கள் பிரவர்த்திப்பதற்கு ஹேதுவான ஜாதிமுதலிடவைகளில்லாமையாலே சப்தத்தைகடந்தவன்.

[శబ్దసహశ్శిశిరశ్శర్వరీకరః॥అక్రూరః
పేశలో దక్షో దక్షిణః క్షమిణాం వరః]

శబ్దసహః-சப்தத்தைச்சகித்தவன், శిశిరః-சீக்கிரஞ்செல்பவன். శర్వరీకరః - ஸம்ஹாரபன்ஞுமவைகளைக்கையில்கொண்டவன், అక్రూరః-அறுக்காதவன், పేశలః -ரமணீயன், దక్షః - விரைபவன், దక్షిణః- அநுகூலன், క్షమిణాంవరః-பொறுப்பவரில்சிறந்தவன்.

(வி) (அவதாரிகை) அநந்தரம் கஜேந்த்ரமோக்ஷம் சொல்லுகிறது.

சப்தஸஹ:—ஸ்பஷ்டமாய் உச்சரிக்கவுமாட்டாத திர்யக்ஜாதியில் பிறந்தோர்களானாலும் ஆர்த்தியோடு கூப்பிட்டார்களாகில் அந்த சப்தத்தைப் பெரும்பாரமாய்ச் சுமப்பவன்[630].

சிசிர:—ஆர்த்த சப்தம் செவிப்பட்டவுடனே அதித்வரையாய் ஓடிவருமவன்[631]. சர்வரீகர:—சத்ருஹிம்ஸை பண்ணவல்ல பஞ்சாயுதந் தரித்தவன். அக்ரூர:—கஜேந்த்ராழ்வானை விடுவிக்கவேண்டி ஆயுதங்கள் கையில்ஸித்தமாயிருக்கச்செய்தேயும் அவஸரப்பட்டுமுதலையை அறுக்காதவன்.

[இப்படியே, முதலையுடன்கூட கஜேந்த்ராழ்வானைக் கரையிலேற்றி அநந்தரம் விடுவித்ததாகச் சொல்லுகிறது.]

பேசல:—அதிக பரபரப்போடெழுந்தருளும்போது, திருமாலை, திருவாபரணம்,திருபீதாம்பரங்கள் அலைந்து கலைந்திருக்கையாலே, அதிமனோஹரனாய் விளங்கினவன். தக்ஷ:—சீக்கிரம் எழுந்தருளினவன்.

தக்ஷிண:—தானிப்படி விரைந்தோடி எழுந்தருளியும் "என்னப்ரயோஜநம், ஸமயத்தில உதவப்பெறாமல் தூரத்திலிருந்த வென்னைப்பழிக்க வேணடும்" என்பதுபோலே சிலதிருமொழிகளை யருளிச்செய்து, கஜேந்த்ராழ்வானுக்கு அநுகூலமாய் நடந்தவன்[633].

க்ஷமிணாம்வர:—அவரைக்கண்டபின் தன் ஆற்றாமை தீருகையாலே பொறுமையுடையோரில் சிறந்தவன்.

(அ.) சர்வரீகர:—ஸம்ஸாரிகளுக்கு ஆத்மஞானத்தையும் ஞானிகளுக்கு ஸம்ஸாரத்தையும் இரவாகச் செய்பவன்.

630 భక్తిం తస్యానుచిన్త్యేతి ॥

631 శ్రుత్వా చక్రగదాధరః । సాన్నిధ్యం కల్పయామాస తస్మిన్ సరసి ॥

632 గ్రాహగ్రస్తం గజేన్ద్రం చ తం గ్రాహం చ జలాశయాత్ । ఉజ్జహారాప్రమేయాత్మా తరసా మధుసూదనః ॥

633 ప్రీతిమాన్ పుణ్డరీకాక్షః శరణాగతవత్సలః । భజన్ గజరాజానం మధురం మధుసూదనః ॥

[విద్వత్తమో వీతభయః పుణ్యశ్రవణకీర్తనః ॥ ఉత్తారణో దుష్కృతిహా పుణ్యో దుస్స్వప్ననాశనః । వీరహా రక్షణస్సన్తో జీవనం]

విద్వత్తమః-அறிந்தவரிற் சிறந்தவன், వీతభయః-பயத்தைப் போக்குமவன், పుణ్యశ్రవణకీర్తనః - கேட்டாலும் சொன்னாலும் பரிசுத்தமாக்குமவன், ఉత్తారణః-கரையேற்றினவன், దుష్కృతిహా-தீம்பு செய்ததை யழித்தவன், పుణ్యః - பரிசுத்திகரன், దుస్స్వప్ననాశనః - துஸ்வப்நத்தைப் போக்குமவன், వీరహా-வீரனைக் கொன்றவன், రక్షణః-இரக்ஷித்தவன், సన్తః - செவ்வையாக்கினவன், జీవనః-பிழைப்பிப்பவன்,

(வி.) வித்வத்தமः=அவருக்குச் செய்யவேண்டும் சிகித்ஸையில் கைவந்தவன்[634]. வீதபயः=தானெழுந்தருளும்பொழுதுண்டானசப்தம் செவிப்பட்டமாத்திரத்தில் கஜேந்திராழ்வானுக்கு பயம்நீங்கும்படியானவன்.

புண்யச்ரவணகீர்த்தநः=இந்த கஜேந்திரமோக்ஷத்தைக் கேட்டாலும் கீர்த்தநம் செய்தாலும் அவர்கள் பாவமெல்லாம் தொலையும்படியானவன்[635]. உத்தாரணः=கஜேந்திர நக்ரங்களிரண்டையும் கரையிலேற்றினவன்.

துஷ்க்ருதிஹா=அநந்தரம் துஷ்டமான முதலையைச்சக்கிரத்தால் அணித்தவன்[636]. புண்யः=இந்தகீர்த்தியாலே நம்மைக்கூட பரிசுத்தியாகச் செய்பவன். இப்படிப்பட்டவன் தானென்னில்.—துஸ்வப்நநாசநः—துஸ்வப்நங்களையெல்லாம் போக்கடிப்பவன்[637].

வீரஹா=கஜேந்திரனை வருத்திய வீரமான முதலையை நாசப்படுத்தினவன்[638], ரக்ஷணः=அவரைப் பரிசித்தும், ஆலிங்கநம் செய்தும், நல்வார்த்தைசொல்லியும் ரக்ஷித்தவன். ஸந்தः=இப்படி ஆச்ரிதாளை வளர்க்கிறவன். ஆச்ரிதாளுக்கு இஷ்டத்தைத் தருமவனென்றுமாம்.

ஜீவநः=தனது திருக்கைகளால் கொல்லுகையாலே முதலையைக்கூட கந்தர்வனாகும்படி பிழைப்பித்தவன்[639].

(அ.) வீதபய:—ஸம்ஸாரமென்னும் பயம்நீங்கினவன்.
வீரஹா—ஸம்ஸாரிகளுடைய நாலுவித கத்திகளையும் போக்கடித்தவன்.

634 ఏవముక్త్వా కురుశ్రేష్ఠ గజేన్ద్రం మధుసూదనః । స్పర్శయామాస హస్తేన ॥

635 శ్రుతేన హి కురుశ్రేష్ఠ స్మృతేన కథితేన వా । గజేన్ద్రమోక్షణం చైవ సద్యః పాపాత్ ప్రముచ్యతే ॥ 636 స్థలస్థం దారయామాస గ్రాహం చక్రేణ మాధవః ॥

637 యే మాం త్వాం చ సరశ్చైవ ॥ ఇత్యుపక్రమ్య ॥ దుస్స్వప్నో నశ్యతే తేషామ్ ॥

638 మోక్షయామాస నాగేన్ద్రం పాశేభ్యశ్శరణాగతమ్ ॥

639 సహి దేవలశాపేన హూహూర్ గన్ధర్వసత్తమః । గ్రాహత్వమగమత్ కృష్ణాద్ వధం ప్రాప్య దివం గతః ॥

[పర్యవస్థితః ॥ అనంతరూపోఽనంతశ్రీర్జితమన్యుర్భయాపహః ।
చతురశ్రో గభీరాత్మా విదిశో]

పర్యవస్థితః - சுற்றுமிருப்பவன்; అనన్తరూపః - அளவற்றரூபந் தரித்தவன், అనన్తశ్రీః - அளவற்றஐசுவரியமுற்றவன், జితమన్యుః - கோபத்தைஜயித்தவன், భయాపహః - பயத்தைப்போக்கடிக்குமென்றிறன்மைத்துக்கவன், చతురశ్రః - சதிராகச்செய்பவன், గభీరాత్మా - கெம்பீரஸ்வபாவன், విదిశః - திசைகளிலிருக்கும்படியானவன் వ్యాదిశః - ஏராடுப்பவன்,

(வி.) பர்யவஸ்திதః—வாத்ஸல்யாதிசயத்தாலே கஜேந்திராழ்வானைச்சுற்றிச்சுற்றி வருமவன்640.

அநந்தரூபః—இப்படி க்ஷணத்தில் ஸம்பாதிக்கக்கூடிய அநந்த திவ்யரூபங்கள் தரிப்பவன். அநந்தஶ்ரீః—அவர்களுக்குத் தரும்படி அநந்தமான ஐச்வரியமுமுடையவன்641. ஜிதமந்யுः—சரணாகதரான கஜேந்திராழ்வானுக்குப் பகையான நீர்ப்பூச்சியினிடத்திலுண்டான கோபத்தை அநந்தரம் ஜயித்தவன்.

பயாபஹः—இவ்வளவு வாத்ஸல்யமுடையனுகையாலே 'நம்மைக்காக்கும்படியான நாதனொருவனில்லையே' யென்கிற நம்முடையபயத்தையும் போக்கடிப்பவன்642.

சதுரச்ரः—தனது மஹிமைக்குத் தக்கபடி கர்ஜித்த கஜேந்திரனிடத்திறகு திவ்யபூஷண திவ்யாம்பராதிகள் கொலையும்படி ஓடிவந்தானுகிலும், அற்பமான ஓர் நீர்பூச்சியின்மீது சீறினுனுகிலும் செய்தசெயல் யுக்தமாயிருக்கும்படி செய்தவன்.

[ஆச்ரித விஷயத்தில் பரபரப்பும், ஆச்ரிதவிரோதிவிஷயத்தில் அதிக சீத்ரமும் யுக்தமேயன்றோ?]

கபீராத்மா—இப்படி கஜேந்திராழ்வானைப்போல் சரணாகதரல்லாதார் சதுர்முகாதிகளானுலும், அவாளால், தன் இருந்தவிடத்தினின்று சிறிது அசைக்கவும் போகாத கம்பீரஸ்வபாவன்.

விதிசः—அதிவிநயமாய் கத்கதஸ்வரத்தோடுகூடித் துதிசெய்யும் அந்தப்பிரம்மாதிகளின் வாக்குக்கு எட்டாத திக்கிலிருப்பவன். வ்யாதிசः—அவர்களுக்கு இஷ்டமான அந்தந்தப்பிரம்மாதி பதத்தைத்தருமவன்.

(அ) அநந்தரூப:—அநந்தமான பிரபஞ்சரூபமாயிருப்பவன்.

அநந்தஶ்ரீ:—அநந்தமான சக்தியையுடையவன். விதிச:—விவிதமான பலன்களையும் அவ்வவற்றைக் கோரியவருக்கு அளிப்பவன்.

610 స్థితిమార్గే పుండరీకాక్షశ్శరణాగతవత్సలః ॥

641 తతో దివ్యసహస్రాభ్యాం ప్రాహ స్థిరాట్ పరమాసనమ్ । జగామ ॥

642 భయే మహతి మగ్నాంశ్చ త్రాతి నిత్యం జనార్దనః ॥

[వ్యాదిశో దిశః। అనాదిర్భూర్భువో లక్ష్మీస్సు
వీరో రుచిరాంగదః । జననో జనజన్మాదిః]

దిశః - ஆக்ஞாபிப்பவன், అనాదిః - ஆதரிக்கப்படாதவன், భూర్భువః - ஸத்தைப்பெறுறவருக்கிடமானவன், లక్ష్మీః-ஸர்வஸம்பத்துமானவன், సువీరః - நல்வீரன், రుచిరాఙ్గదః - அழகிய அங்கத்தைக் கொடுப்பவன், జననః - பிறப்பிக்குமவன், జనజన్మాదిః- ஜநங்களின் ஜந்மத்துக்கு ஆதியானவன்,

(வி) திசஃ—தேவேந்திரனைப்போல் அவர்களை அந்தரங்கமாக்கிக்கொள்ளாமல மற்றபடி ஆக்ஞாபிப்பவன்[613].

(அவதாரிகை.) இப்படி திர்யக்ஜாதியிற் பிறந்தாலும் பக்தர்களாகில அவர்களுக்கு வசப்பட்டிருப்பவன்; பிரம்மாதிகளுக்கு அற்பபலத்தையே தருகைக்குக் காரணமென்னென்னில்:—

அநாதிஃ—ஸ்வீகரிக்கப்படாதவன்.

[என்றால்:—அவர்கள் அந்யபரராய்க்கொண்டு இவனை ஸ்வாமியாக ஸ்வீகாரமையாலே அற்பபலத்தோடே போக்கிவிடுகிறு னென்றபடி.]

பூர்ப்புவ—அவனுடைய தாஸ்யத்துக்கிசைகையாலே ஆத்மலாபம் உண்டாகப்பெற்றவருக்கு நிலையிடமானவன்[614].

லக்ஷ்மீ -இப்படி அவர்களுக்கு ஸர்வஸம்பத்துமானவன்[615]

ஸுவீர:—அவர்களுக்கு க்ஷீணகதி நேரிடவொட்டாமல் ஸமர்த்திக்க வல்லநல்வீரன். ருசிராங்கத:-அவர்களுக்கு அநுபவயோக்கியமாய் அதிமநோஹரமான தனது அங்கத்தைத்தருமவன்[616].

(அவதாரிகை) அநந்தரம் எம்பெருமானுடைய ஸகல வியாபாரங்களுக்கும் பிரயோஜநம் சொல்லுகிறது:—

ஜநந:—தன்னை அநுபவிப்பதற்கேற்ற கரணங்களுடைய மற்றும் அநேகரை உண்டுபண்ணுமவன். ஜநஜந்மாதி:—அப்படிப்பட்ட அந்த ஜநங்களுடைய ஜந்மத்திற்குப் பயனானவன்[617].

(ஶ) அநாதி:—காரணமில்லாதவன். பூர்ப்புவ:—பூதங்களுக்கு ஆதாரன்.

[613] గజేన్ద్రమోక్షణం ప్రాప్య సర్వే సేన్ద్రపురోగమాః । బ్రహ్మాణమగ్రతః కృత్వా దేవాః పిత్రాలయస్తదా । వవన్దిరే మహాత్మానం ప్రభుం నారాయణం హరిమ్ ॥

[614] నివసిష్యసి మయ్యేవ అత ఊర్ధ్వం న సంశయః ॥

[615] భవద్గతం మే రాజ్యం చ జీవితం చ సుఖాని చ ॥

[616] న తే రూపమ్ ॥ ...భక్తానాం ॥

[617] జన్మన్యపి ఫలాన్తైకా యా గోవిన్దాశ్రయా క్రియా ॥ సుజన్మ దేహమత్యన్తం తద్దేవాశేషజన్తుషు ॥ యదేవ పుణ్యకోద్యాపి విష్ణునామానుకీర్తితే ॥ అద్య జన్మ యథార్థం మే ॥

[భీమో భీమపరాక్రమః ॥ ఆధారనిలయో

ధాతా పుష్పహాసః ప్రజాగరః ।]

భీమః-பயங்கரன், భీమపరాక్రమః-பயங்கரமான பராக்கிரமன், ఆధార నిలయః - ஆதாரமானவர்க்கிடமானவன், ధాతా - தரிப்பவன், పుష్ప హాసః - பூப்போல்மலருமவன், ప్రజాగరః - மிகவும்விழிப்பவன்,

(வி) பீம:—அப்படிப்பட்ட மஹாநுக்கிரஹத்துக்கு ஆளாகாதவர்களுக்கு நரகாதிகளைத் தருகையாலே பயங்கரமானவன்.

[இவன்தான், தனக்கு அடிமையாய் உஜ்ஜீவிக்கையென்கிற தங்கள் ஹிதத்தைத் தேடிக்கொள்ளாத சேதநர்களைச் சத்துருவாக மதிப்பவனென்றே[648]]

பீமபராக்ரம:—மற்றும் லோகத்துக்கு அஹிதம்செய்கின்ற ஹிரண்யாதிகள் விஷயத்தில் பயங்கரமான பராக்கிரமத்தைக் காட்டுமவன்

[இப்படி பயப்படுத்துகைதான், அநுக்கிரஹமே யல்லது நிக்கிரஹமாகமாட்டாது; ஏனெனில்:—பித்தம்பிடித்தவனை விலங்கிட்டு வைப்பது, அவனுக்கும், அவனால் தொந்திரவை அநுபவித்தோருக்கும் ஹிதமேயன்றோ[?]]

ஆதாரநிலய:—தார்மிகர்களா யிருக்கையாலே ஜகத்துக்கெல்லாம் ஆதாரரான பிரஹ்லாத விபீஷணபாண்டவாதிகளுக்கு உறைவிடமானவன்[649]. தாதா—இவனும் தர்மாநுஷ்டானத்துக்கு ஆசாரிய பதத்தை நிர்வஹிப்பவன்[650].

புஷ்பஹாஸ:—இப்படி தன்னை அநுபவிக்கும்படி சந்நிதிக்கப் பெற்றவருக்கு, ஸாயங்காலவேளையில் மலரும் புஷ்பம்போல் தனது வேக்யதையை விளங்கச்செய்பவன்.

ப்ரஜாகர:—விவசாயம்பண்ணுமவன் வயற்றலையில் கிடப்பதுபோல் அவர்களிடத்தில் இரவும் பகலும் விழித்திருப்பவன்[651].

(அ.) ஆதாரநிலய.—பிருதிவிமுதலிய ஆதாரமான பஞ்சபூதங்களுக்கும் ஆதாரமானவன்.

தாதா—ஸம்ஹாரஸமயத்தில் ஸகலப்பிரஜைகளையும் பானம்பண்ணுமவன்

புஷ்பஹாஸ:—பூமலர்வதுபோல் பிரபஞ்சமாய் மலர்பவன்.

648 తానహం ద్విషతః ॥

649 వర్ణాశ్రమాచారపరాః సన్తః శాస్త్రైకతత్పరాః । త్వాం గరే ధారయిష్యన్తి తేషు త్వద్భారమాహితమ్ ॥

650 న మే పార్థాస్తి కర్తవ్యమ్ ॥ ...వర్త ఏవ చ కర్మణి ॥

651 యఏషు సుప్తేషు జాగర్తి కామం కామం పురుషో నిర్మిమాణః ॥

[ఊర్ధ్వగస్సత్పథాచారః ప్రాణదః ప్రణవః పణః ।
ప్రమాణం ప్రాణనిలయః ప్రాణభృత్ ప్రాణజీవనః ।]

ఊర్ధ్వగః - உபரத்திலிருப்பவன், సత్పథాచారః - நல்வழியில் நடத்துமவன், ప్రాణదః - உஜ்ஜீவநத்தைத் தருமவன், ప్రణవః - வணங்குவிப்பவன், పణః - வியவஹரிப்பவன், ప్రమాణమ్ - நம்பத்தகுந்தவன், ప్రాణనిలయః - பிராணிகளுக்கு உறைவிடமானவன், ప్రాణభృత్ - பிராணிகளைப் போஷிப்பவன், ప్రాణజీవనః - பிராணிகளைப் பிழைப்பிப்பவன்,

(வி.) ஊர்த்வக — (அதற்காக இவன் உறங்காமலிருப்பானோவென்னில்) ஸ்வபாவத்தாலே உயர்ந்தவன்[652].

ஸத்பதாசார — இப்படி தான் உத்துங்கஸ்வபாவனாயிருக்கைக்குப் பிரயோஜநமாய் அவர்களை ஸ்வபாவஸித்தமான தனது அடிமையில் பிரவர்த்திக்கச் செய்பவன்[653].

ப்ராணத:— சப்தாதி விஷயங்களென்கிற விஷத்தால் மூர்ச்சையடைந்த ஆத்மகோடிகளுக்கு ஆத்மோஜ்ஜீவநத்தைத் தருமவன்.

ப்ரணவ:— ப்ரணவத்தாலே தனக்கும் சேதநர்களுக்கு முண்டான ஸ்வஸ்வாமிபாவ ஸம்பந்தத்தை அவர்களுக்குத் தெரிவித்து "மாம்நமஸ்குரு" என்று தனது சரணாரவிந்தங்களில் வணங்கச்செய்பவன்[654].

பண:— இப்படி தனது ஸ்வாமித்வத்துக்கும் அவர்கள் சேஷபாவத்துக்கும் தகுந்தபடி வியவஹரிப்பவன். ப்ரமாணம் — இப்படி ஸம்சய விபர்யயங்களற வேதரஹஸ்யமான பரமார்த்தத்தில் விசுவாஸத்தை உண்டுபண்ணுவிக்குமவன்.

ப்ராணநிலய:— ஸகலப் பிராணிகளும் கூண்டுக்குள்ளடங்கும் பக்ஷிகள்போல் தன்னுள்ளொடுங்கும்படியானவன்.

ப்ராணப்ருத் — அவர்களை மாதாவைப்போல் போஷிப்பவன்.

ப்ராணஜீவந:— அவர்களுக்கு அன்னபானாதிகள்போல் ஜீவநஹேதுவாயிருப்பவன். தத்வம் — தயிர்பால்களில் ஸாரமான ஏடுபோல், சித்து அசித்துக்களுள் வியாப்தி முதலியவைகளால் ஸாராம்சமாயிருப்பவன்[655].

(அ.) ப்ரணவ:— பிரணவஸ்வரூபன்.

[652] మహాత్మనా సంశ్రయమభ్యుపేతో నైవావసీదత్యతిదుర్గతోఽపి ॥

[653] అనిత్యమసుఖం లోకమిమం ప్రాప్య భజస్వ మామ్ ॥

[654] ప్రాణాన్ సర్వాన్ పరమాత్మని ప్రణామయతి ఏతస్మాత్ ప్రణవ ఇతి ॥

[655] పరమార్థమశేషస్య జగతః ప్రభవాప్యయమ్ । శరణ్యం శరణం గచ్ఛన్ గోవిన్దం నావసీదతి ॥

[తత్త్వంతత్త్వవిదేకాత్మాజన్మమృత్యుజరాతిగః॥ భూర్భువస్స్వస్తరు
స్తారస్సవితాప్రపితామహః॥యజ్ఞోయజ్ఞపతిర్యజ్వాయజ్ఞాంగో]

తత్త్వమ్- ஸாராம்சமானவன், తత్త్వవిత్-உண்மையறிபவன், ఏకాత్మా-
ஒருவனேசேஷியும்போக்தாவும அபிமானியுமானவன், జన్మమృత్యు
జరాతిగః - பிறப்பிறப்புகளைக் கடந்தவன், భూర్భువస్స్వస్తరుః - பூலோ
கபூவர்லோகஸுவர்லோக வாஸிகளுக்கு விருக்ஷமானவன், తారః-
தாண்டுவிப்பவன், సవితా-பிறப்பிப்பவன், ప్రపితామహఃபிதாமகனுக்
குபிதா, యజ్ఞః - யக்ஞமானவன், యజ్ఞపతిః - யக்ஞங்களுக்குப்பதி,
యజ్వా - யக்ஞம்செய்பவன், యజ్ఞాంగః - யக்ஞத்தை அங்கமா

(வி) தத்வவித்—ஆத்மதத்வத்தை யறிந்தவன்[656].

ஏகாத்மா—சேதநாசேதந வர்க்கங்களெல்லா வற்றிற்கும் தானொருவ
னே சேஷியாயும் போக்தாவாயும் அபிமானியாயும் விளங்குமவன்.

ஜந்மம்ருத்யு ஜராதிகः—இப்படி யிருக்கச் செய்தேயும் அவைகட்குரிய
தர்மமான பிறப்பு இறப்புமூப்புமுதலியவை அற்றவன்.

பூர்புவஸ்வஸ்தருः—பூலோக புவர்லோக ஸுவர்லோகாதிகளில் வஸி
க்கும் பிராணிகோடிகளுக்கு, பக்ஷிகளுக்கிடமாய்த்தளிர்த்த பாரிஜாதவிரு
க்ஷம்போல் ஆச்ரயமானவன்[657].

தாரः—அவர்களை ஸம்ஸாரத்தினின்றும் கரையேற்றுமவன்.

ஸவிதா—ஸகலருக்கும் ஸாக்ஷாத் பிதாவானவன்.

ப்ரபிதாமஹः—பிதாமஹனென்கிற பிரமனுக்கும் பிதாவானவன்.

யக்ஞः—தன்னை ஆராதிக்கையென்கிற ஸம்ருத்தியில்லாதவர்கள்,
அந்தஸம்ருத்தியைக்கோரினால், அவர்களுக்குத்தானே யக்ஞமாமவன்.

யஜ்ஞபதிः—தனது ஆராதநத்துக்குப் பலனைத்தருகையாலே பதியான
வன். யஜ்வா—தனது ஆராதநமான யக்ஞத்தை அநுட்டிக்கச் சக்தியில்
லாதவர்களுக்குப்பதில் தானேஅநுஷ்டிக்கையாலே யஜமானனானவன்[658].

யக்ஞாங்கः — சக்தியுள்ளவர்கள் அநுட்டிக்கும் யக்ஞமும் தனக்கு
சேஷமாகயிருக்கப்பெற்றவன்.

(அ) தத்வம்—அமிருதஸ்வரூபன், ஸத்யஸ்வரூபன். பரமார்த்தம் விசாரிக்
கப் புக்கால் தத்வமென்கிறஒருசொல்லால் மாத்திரம்சொல்லக்கூடியவன்.

ஏகாத்மா—ஒரே ஆத்மாவானவன்.

[656] త్వమేవతత్త్వంహిత్థ ॥

[657] సమాశ్రితాద్ బ్రహ్మతరోరనన్తాన్నిస్సంశయాః పక్వఫలప్రపాతః ॥

[658] తేషాంతుపావనాయాహం నిత్యమేవయుధిష్ఠిర । ఉభేసన్ధ్యేఽనుతిష్ఠామి
హ్యాసన్నంతేషుకీర్తయను ॥

[యజ్ఞవాహనః ॥ యజ్ఞభృద్యజ్ఞకృద్యజ్ఞీయజ్ఞభుగ్యజ్ఞసాధనః
యజ్ఞాంతకృద్యజ్ఞగుహ్యమన్నమన్నాదఏవచ ॥]

யுடையவன், యజ్ఞవాహనః - யக்ஞத்தைநடத்துமவன், యజ్ఞభృత్ - யக்ஞத்தைப்பரிபாலிப்பவன்; యజ్ఞకృత్ - யக்ஞத்தைப்படைத்தவன் యజ్ఞీ - யக்ஞத்துக்கு சேஷியானவன், యజ్ఞభుక్ - யக்ஞத்தைப்புஜிப்பவன், యజ్ఞసాధనః - யக்ஞத்தைச் சாதிப்பவன், యజ్ఞాంతకృత్ - யக்ஞத்துக்கு நிச்சயத்தைச் செய்பவன், యజ్ఞగుహ్యమ్ - யக்ஞரஹஸ்யமானவன், అన్నమ్ - அன்னமானவன், అన్నాదః - அன்னத்தைப் புசிப்ப

(வி) யஜ்ஞவாஹநः—அவர்களுக்கு யக்ஞத்தில பக்தி சிரத்தைகளைத் தந்து நடத்துமவன். யஜ்ஞப்ருத்—அவர்கள் அநுஷ்டிக்கும் யக்ஞத்தில் லோபம் உண்டானால், தன்னை ஸ்மரிப்பதினாலும் தனக்கு பூர்ணாஹுதி பண்ணுவதினாலும் அதை நிறைவேற்றுமவன்[659].

யஜ்ஞக்ருத்—லோகஹிதத்துக்காக யக்ஞத்தை ஆதியில் படைத்தவன்.

யஜ்ஞீ—ஸகல யக்ஞங்களுக்கும் சேஷியானவன்.

யஜ்ஞபுக்—அந்த யக்ஞங்களை புஜிப்பவன்; பரிபாலிப்பவனென்றுமாம். யஜ்ஞஸாதநः—ஞானத்தையுண்டுபண்ணி அவ்வழியாலே தன்னை அடைவிக்கையாலே யக்ஞத்தைஸ்வப்ராப்திக்குஸாதநமாயுடையவன்[660].

யக்ஞாந்தக்ருத்—யக்ஞஞ்செய்வது தன்னுடைய தத்வத்தை அறிகைக்காகவென்கிற ஸித்தாந்தத்தைச் செய்தவன்.

யஜ்ஞகுஹ்யம்—தான் அபேக்ஷையற்றிருக்கச் செய்தேயும் யக்ஞாதிகளில் அபேக்ஷையுடையவன்போல் புரோடாசம் முதலியவைகளைப் புசித்துத் திருப்தியடைவதோடு திருப்தியைச் செய்விக்கிறானென்கிற விஷயம், யக்ஞவிதிமுதலியவைகளை அறிந்தவருக்குத் தவிர மற்றையோருக்குத் தெரியாதபடி ரஹஸ்யமாயிருப்பவன்[661].

அந்நம்—இப்படி அவனை அநுபவிக்கும்படியான சக்தியைச் சம்பாதித்துக்கொண்டவர்க்கு அன்னம்போல் தாரகமாயிருப்பவன்.

அந்நாதः—அவர்களையும் அப்படியே புஜிப்பவன்.

(அ.) யஜ்ஞாந்தக்ருத்—வைஷ்ணவ ருக்கைச்சொல்லி பூர்ணாஹுதியைச் செய்தாலல்லது யக்ஞம் நிறைவேறாமையாலே யக்ஞத்தை நிறைவேற்றுமவன்.

659 ప్రమాదాత్ కుర్వతాంకర్మ ప్రచ్యవత్యధ్వరేషుయత్ । స్మరణాదేవతద్విష్ణోః సంపూర్ణంస్యాదితిశ్రుతిః ॥

660 సర్వంకర్మాఖిలంపార్థజ్ఞానేపరిసమాప్యతే ॥

661 విదుఃకృష్ణంబ్రాహ్మణాస్తత్త్వతోయేతేషాంరాజన్సర్వయజ్ఞాఃసమాప్తాః ॥

[ఆత్మయోనిఃస్వయంజాతో వైఖానస్సామగాయనః।
దేవకీనందనఃస్రష్టాక్షితీశఃపాపనాశనః ॥]

ఆత్మయోనిః - ஆத்மாக்களைக் கலப்பவன், స్వయంజాతః-தானாய்ப்பிறந்தவன், వైఖానః-பெயர்ப்பவன், సామగాయనః - ஸாமகானப்பண்ணுமவன், దేవకీనన్దనః - தேவகியின்மைந்தன், స్రష్టా-ஸிருஷ்டிப்பவன், క్షితీశః-பூமிபாலகன், పాపనాశనః - பாபத்தைநாசஞ்செய்பவன்,

---

(வி.) ஆத்மயோநி:—பாலோடு சர்க்கரையைச் சேர்த்ததுபோல் போக்தாக்களைத் தன்னோடுசேர்த்துக் கொள்பவன்.

ஸ்வயஞ்ஜாத:—ஒருவருடையப் பிரார்த்தனையில்லாமல் தானே அவதரித்தவன்.

வைகாந:—அவதரித்து ஸம்ஸார துக்கத்தைப்பெயர்ப்பவன்.

ஸாமகாயந:— ஸ்வப்ராப்தியாகிற மதுவைப் பாநஞ்செய்து ஹாவு, ஹாவு, ஹாவு, என்றுஸாமகாநம்பண்ணும்முக்தபுருஷர்களை யுடையவன்[662].

தேவகீநந்தந:—இப்படிப்பட்ட வைபவமுடையவந்தான் பராவஸ்த்தையிலெம்பெருமானே வென்னில்-தேவகிதன் சிறுவன்[663]. ஸ்ரஷ்டா—பராவஸ்தையிலிருந்து ஸ்ருஷ்டிக்குமவனும் தானேயானவன்[664].

க்ஷிதீச:—ஸர்வேசனா யிருந்தாலும் ஆர்த்தி விஞ்சியிருக்கையாலே க்ஷிதிபாலகன்,

பாபநாசந:—இங்கு தான் தயிர்வெண்ணெய்களைக் களவுகண்டும், ராஸக்ரீடைசெய்தும் இப்படி பல்படியாகச் செய்தருளும் திவ்யசேஷ்டிதங்களைப் பிரதிபாதிக்கும் கதாம்ருதத்தால் தன தன்பர்களுக்கு உள்ளும் புறம்புமுண்டான பாபங்களை நாசம செய்பவன்.

(அ-கை.) அவதாரத்திலும் தனது பரமை சுவரியத்துக்கு அடையாளமான திவ்யாயுதங்கள் தரிக்கையாலே:—

(அ.) சங்கப்ருத்—பூதாதியான அஹங்காரரூப பாஞ்சஜந்யமென்னும் சங்கந்தரித்தவன்.

---

662 ఏతత్సామ గాయన్నాస్తే ॥

663 యఏవ పృథుదీర్ఘాక్షస్సంబన్ధీ తేజనార్దనః ॥

664 యోఽనన్తరూపోఽఖిలవిశ్వరూపోగర్భేఽపిలోకాన్ వపుషాబిభర్తి ॥

[శంఖభృన్నందకీ చక్రీ శార్ఙ్గధన్వా గదాధరః ॥
రథాంగపాణిరక్షోభ్యస్సర్వ]

శంఖభృత్-சங்கத்தைத் தரித்தவன், నందకీ நந்தகமுடையவன், చక్రీ-சக்கரந் தரித்தவன், శార్ఙ్గధన్వా சார்ங்கமென்னும வில்லுடையவன், గదాధరః கதையைத் தரித்தவன், రథాంగపాణిః ரதாவயவமான சக்கிரத்தைக் கையிற்கொண்டவன், అక్షోభ్యః - கலக்கப்போகாதவன்;

(வி) சங்கப்ருத—தனது திருப்பவளத்தின் வழுத்ததால் பாஞ்சஜந்யத்தைப் பூரிப்பவன்.

நந்தகீ=எம்பெருமானுங்கூட இது நம்மைக் களிக்கச் செய்யுமென்றுப் பிரார்த்திக்கும்படியான நந்தகமென்னும் கட்கத்தை நித்யமாய்த் தரித்திருப்பவன்

சக்ரீ=எப்போதும் காண்பதற்கினியராய், தமது பரிஜனங்களான தேவதைகளுக்கு விரோதிகளாய்வரும் அசுரராக்ஷஸாதிகளின் ரக்தத்தால் கலுஷிதமான ஜ்வாலைகளுடன் விளங்கும திருவாழி யாழ்வானை நித்தியமாய ஏந்தியருளுமவன.

சார்ங்கதன்வா-நாணைப்பூட்டிச் செய்த டங்கார த்வனியாலும் பாணவர்ஷங்களாலும பகைவரை வாட்டும்படியான திருச்சார்ங்கமென்னும் வில்லாண்டவன்.

கதாதரः=எப்புறத்திலும சுழற்றும்பொழுது பிரளயாக்கினிபோல் எங்கும் கொள்ளியை வாரியிறைத்துப் பகைவரையழித்து அதனால் நித்தியமாய் தனக்கு ஸந்தோஷத்தைச் செய்கின்ற கௌமோதகி யென்னும் கதையைத்தரித்தவன்.

ரதாங்கபாணிः=இவைகற்றுக்கேற்ற சக்கிரந்தரித்தவன்.

[இங்கே சக்ரீ என்றபோது ஸ்வஸ்வாமிபாவ ஸம்பந்தஞ் சொல்லிற்று; இங்கு அந்தசக்கிரம் எப்பொழுதும் பிரகாசிக்குமென்பது சொல்லுகிறது; ஆகையால் புநருக்திதோஷமில்லை.]

அக்ஷோப்யः—சரணாகதர்களுக்கு அபயப்ரதானம் பண்ணுவதினுண்டான உத்ஸாஹத்தைத் தனது மஹிமையாலும கலக்கப்போகாமல்விளங்குவன்.

(அ) நந்தகீ—வித்யாமயமான நந்தகமென்னும் கட்கத்தையுடையவன்.
சக்ரீ—மனஸ்தத்வரூபமான சக்கிரந்தரித்தவன்

சார்ங்க தன்வா—இந்திரியாதியான அஹங்காரரூபமான சார்ங்கமென்னும் வில்லுடையவன். கதாதர.—புத்தி தத்வமயமான கௌமோதகி யென்னும் கதையைத்தரித்தவன்.

[ప్రహరణాయుధః॥ సర్వప్రహరణాయుధ ఓం నమ ఇతి॥]

సర్వప్రహరణాయుధః-ஸகல (விரோதிகளையும்) நிரஸிக்கும்படியான ஆயுதங்களைத்தரித்தவன்,

---

(வி.) ஸர்வப்ரஹரணாயுத:—தன்னையே கதியாக நம்பியவர்களினுடைய ஸகல அநிஷ்டங்களையும் வேர்பிடுங்கலாக நாசஞ்செய்ய வல்லவைகளாய், எண்ணிறந்தவைகளாய், அபாரஸாமர்த்தியம் பொருந்தியவைகளாய், தனக்குத்தகுந்தவைகளாய், அளவற்றவைகளாய், ஆபரணங்களோவென்று ஸந்தேஹிக்கும்படி விளங்குமவைகளாய், எப்பொழுதும் எங்கும் எல்லாவிடத்திலும், எப்படி அடைந்தோர்களையும் ஸம்ரக்ஷிப்பதென்கிற தீர்க்கமான ஸத்ரயாகத்தில் தீக்ஷித்தவைகளாய், ஸர்வைசுவரியபாரத்தைத் தாங்குமவைகளான மற்றும் திவ்யாயுதங்களையுடையவன்.

இப்படி ஸகலதோஷங்களுக்கும் எதிர்த்தட்டாய், உபாதி, ஸங்கியை, எல்லை இவைகளைக் கடந்தவைகளாய், உத்துங்க மங்களமாய் விளங்கும் ஸ்வரூபம், ரூபம், குணம், விபவம், சேஷ்டிதம் இவைகளையுடையனாய், நிரங்குசமான ஐசுவரியசாலியாய், ஆபத்ஸகனாய், அர்த்திகளுக்குக் கற்பகமாய், அடிக்கீழமர்ந்தவருக்கு ஜீவநஹேதுவாய் ஸ்ரிய: பதியாய் ஷாட்குண்ய பூர்ணனான புருஷோத்தமனை ஆச்ரயித்தவர்களுக்கு ஸகல ஸம்பத்ஸமுதாயங்களும் ஸித்தம்.

(அ.) ஸர்வப்ரஹரணாயுத:—ஆயுதகோடிகளிற் சேராத விரல்முதலியவைகளையும் ஆயுதமாகவுடையவன்.

వనమాలీ గదీ శార్ఙ్గీ శంఖీ చక్రీ చ నన్దకీ।
శ్రీమాన్నారాయణో విష్ణుర్వాసుదేవోఽభిరక్షతు.

தசமசதகம்—ஸம்பூர்ணம்.

(அவதாரிகை.) அநந்தரம் இந்த ஸஹஸ்ரநாமத்தின் பெருமையை அறிவிக்க வேண்டுமென்கிற அபிப்பிராயத்தால் பீஷ்மரானவர், தர்மபுத்திரரைப் பார்த்துச் சொல்லுகிறார்.

ఇతీదం కీర్తనీయస్య కేశవస్య మహాత్మనః । నామ్నాం
సహస్రం దివ్యానామశేషేణ ప్రకీర్తితం ॥

ఇతి-இந்தப்பிரகாரம், కీర్తనీయస్య - ஸங்கீர்த்தநஞ்செய்யவேண்டிய, మహాత్మనః - மஹாத்துமாவான, కేశవస్య-கேசவனுடைய, దివ్యానాం-திவ்யமான, నామ్నాం - திருநாமங்களுடைய, ఇదం-இந்த, సహస్రం-ஆயிரமும, అశేషేణ-மிகுதியில்லாமல், ప్రకీర్తితం - பரிஷ்காரமாய்ச் சொல்லப்பட்டது,

["கீர்த்தநீயஸ்ய" என்றதனால் இன்றுமுதல் நீர்பகவானைக்கீர்த்தனஞ் செய்ய வடுக்குமென்றதாகிறது. "கேசவஸ்ய மஹாத்மந:" என்றதனால் கீர்த்தநஞ் செய்கைக்குக் காரணஞ்சொன்னபடி. "திவ்யாநாம்" என்றதனால்பரமபதத்திலும் வியவஹரிக்கத்தக்கதென்றதாகிறது. "அசேஷேண" என்றதனால் இனி உமக்கு அறியவேண்டிய பாகம் யாதொன்றுமில்லையென்றதாகிறது]

(அவதாரிகை.) அநந்தரம் அதிகாரி நிர்ணயமும் பல நிர்ணயமுஞ் செய்யப்படும்.

య ఇదం శృణుయాన్నిత్యం యశ్చాపి పరికీర్తయేత్ । నాశుభం
ప్రాప్నుయాత్కించిత్సోఽముత్రేహ చ మానవః ॥

ఇదం - இதை, యః-எவன், నిత్యం-தினந்தோறும், శృణుయాత్-கேட்கிறானோ, యశ్చ - பின்னுமெவன், పరికీర్తయేత్ - எங்குங்கீர்த்தநஞ் செய்கிறானோ, సః అపి-அந்த, మానవః-மனிதனும், అముత్ర-பரலோகத்திலும் ఇహ చ-இங்கும், కించిత్-கொஞ்சமும், అశుభం-அமங்களத்தை, న ప్రాప్నుయాత్ - அடையமாட்டான்,

["இதம்ச்ருணுயாத்" இத்யாதியாலே அவரவர் அதிகாரத்துக்குத் தக்கபடி கேட்போருக்கும் சிந்திப்போருக்கும் இஹலோக பரலோகங்களிலுண்டான அசுபங்கள் போய்விடுமென்று பலஞ்சொல்லிற்று.]

(அவதாரிகை.) அநந்தரம், பிராம்மணாதி நான்குவருணத்தாருக்கும் பகவத்பக்தி திடமாயுண்டாகாதபோது, அவர்கள் பலனைக்கோராமல் இதைக்கேட்டாலும் ஜபித்தாலும் அவர்களுக்கு இதனால் உண்டாகும் பலன் சொல்லுகிறது:—"வேதாந்தக:" என்று தொடங்கி.

వేదాంతగో బ్రాహ్మణస్స్యాత్ క్షత్రియో విజయీ భవేత్ । వైశ్యో
ధనసమృద్ధస్స్యాత్ శూద్రస్సుఖమవాప్నుయాత్ ॥

బ్రాహ్మణః - பிராம்மணன், వేదాన్తగః - வேதாந்தங்களறிந்தவனாக, స్యాత్ - ஆகுவன். క్షత్రియః - க்ஷத்திரியன், విజయీ - ஜயசீலனாக, భవేత్ - ஆகுவன், వైశ్యః - வைசியன், ధనసమృద్ధః - தனத்தால் நிறைந்தவனாக, స్యాత్ - ஆகுவன், శూద్రః - சூத்திரன், సుఖం - சுகத்தை, అవాప్నుయాత్ - அடைவான்,

அநந்தரம் அவ்வருணத்தார்களே பலாபேக்ஷையுடையராகில் அவர்களுக்குண்டாகும் பயன் சொல்லுகிறது. "தர்மார்த்தீ" என்று தொடங்கி.

ధర్మార్థీ ప్రాప్నుయాద్ధర్మమర్థార్థీ చార్థమాప్నుయాత్। కామానవాప్నుయాత్కామీ ప్రజార్థీ చాప్నుయాత్ప్రజాః ॥

ధర్మార్థీ - தருமத்தைக்கோரியவன், ధర్మం - தருமத்தை, ప్రాప్నుయాత్ - பெறுவன், అర్థార్థీ చ - தநத்தைக்கோரியவன், అర్థం - தநத்தை. ఆప్నుయాత్ - அடைவன், కామీ - காமத்தைக்கோரியவன், కామాన్ - காமங்களை, అవాప్నుయాత్ - அடைவன், ప్రజార్థీ చ - மக்களைக்கோரியவனும், ప్రజాః - மக்களை, ఆప్నుయాత్ - பெறுவான்,

(அவதாரிகை.) அநந்தரம் சிலநியமங்களுடன்கூடி ஜபிக்கையென்கிற ஸங்கீர்த்தநஞ்செய்தால் பக்தனுக்கு ஸகல ஸமிருத்தியுமுண்டாகுமென்கிறது. "பக்திமாந்ய:" இத்யாதி நான்கு சுலோகங்களால்.

భక్తిమాన్యస్సదోత్థాయ శుచిస్తద్గతమానసః। సహస్రం వాసుదేవస్య నామ్నామేతత్ప్రకీర్తయేత్ ॥

యః-எவன், భక్తిమాన్ - பக்தியுடையனாய், సదా - எப்பொழுதும், ఉత్థాయ-உத்யுக்தனாய், శుచిః-பரிசுத்தனாய், తద్గతమానసః - அவனிடத்தில்சென்றமனதோடு, వాసుదేవస్య- வாசுதேவனுடைய, ఏతత్ -இந்த, నామ్నాం-திருநாமங்களுடைய, సహస్రం - ஆயிரத்தை, పరికీర్తయేత్ - கீர்த்தநம்பண்ணுவானோ, (அவன்)

యశః ప్రాప్నోతి విపులం యాతి ప్రాధాన్యమేవ చ। అచలాం శ్రియమాప్నోతి శ్రేయః ప్రాప్నోత్యనుత్తమం ॥

192 சுவர்ணமயமான பரலோகத்தில் ரஜோகுணத்தையொழித்த பரிபூர்ணமானப் பிரம்மம் விளங்குகின்றது. அதைத்தான பரிசுத்தராய்க்கொண்டு சோதிக்கெல்லாம் சோதியாய் விளங்கும் ஆத்மஸாக்ஷாத்காரம் கைவந்தவர்கள் அறிவர்கள். அங்கே சூரியன் பிரகாசிக்கமாட்டான்.

193 விஷ்ணுபத்தினியான பூதேவியை. 194 ஸ்ரீதேவி பூதேவியென்கிற இரண்டுபெயர்களும் உனக்குப் பத்தினிகள்.. நித்தியமாய் விளங்கு மிந்த லோகமாதா விஷ்ணுவைவிட்டு க்ஷணமும் பிரியாதவள்.

195 'மது' என்று இந்திரியங்களுக்குப பெயராய் அவைகளை நிரஸிக்கையாலே அவனை மதுசூதனனென்கிறது எங்கேயானால் ஸ்வேச்சா விஹாரம்பணன் சுதந்திரமாய ஸகலத்தையும் வசப்படுத்தி விளங்குகிறானோ.

196 ஜகத்தினது உத்பத்தியையும் ஸம்ஹாரத்தையும் மனதினாலேயே செய்கிறான் எவன், அவனுக்கு சதரூபக்ஷத்தை நிரஸிப்பதில் உத்தியோகிக்க வேண்டியதென்பது எமமாத்திரம்?

197 இந்திரியங்களுக்கெல்லாம் நியாமகனாய் ஸர்வ வ்யாபகனான பரம புருஷன், சார்ங்கமென்னும் விற்பிடித்து கட்கந்தரித்து சுதந்திரனாய் விளங்குகிறான்.

198 பரம புருஷனுடைய கிங்கரனைச் சிந்திக்கிறோம; அவர் தான சுவர்ணமயமான சிறகுகளுடன் கூடியிருப்பதாய் தியானிக்கின்றோம்; அந்த கருடன் நமமை ஏவிக்கொள்ளக்கடவர்.

199 பொன்னொத்த சிறகுடைய அவன் (கிங்கர) புருஷனை தியானிக்கிறோம; ஆகையால் அக்கருடன் எம்மை நன்மையில் சேர்க்கட்டும்.

200 அவனைக் காட்டிலும் பரமாய் வேறொன்று இலது... அந்த பரபரம்மத்தோடு எதிர்க்க எவன்தான் தக்கவன்?

201 பரமபுருஷன கமபீரன்... பெருங்கடல்போல் கலக்கப்போகாதவனை.

202 வைகுண்டமென்னும் பரலோகத்தில் ஜகத்பதியானவர் பெரிய பிராட்டியாருடனும் பக்தர்களான பாகவதாளுடனுங் கூட ஒருவரால் இததன்மையனென்று சிந்திக்கப்போகாத வண்ணம் விளங்குகின்றனர்.

203 மிகவும் கெட்டசெய்கையுடனே யிருந்தாலும்... நல்ல நிச்சயமுடையனன்றோ?

204 எவனை பாதால் இவ்வுலகங்களினின்றும் நற்கதியை யடைவிக்க விரும்புகிறானோ அவனைக்கொண்டு இவந்தானே நற்செய்கையைச் செய்விக்கிறான்.

205யாதொரு அச்சுதனுடைய அநுக்கிரஹத்தாலே நான்பிராணிகளின் சிருஷ்டித் தொழிலுக்குக்கடவனாக ஆனேனோ, எவனுடைய கோபத்தால் உருத்திரன் நாசகனாக ஆயினனோ?

206சேதனனுடைய புத்திக்கு இலைப்பாறுமிடமாய் விளங்கி எனது சிந்தையைத் தெளிவிக்கும் அந்த பரமதேவனை மோக்ஷகாமனை நான்சரணம் புகுகின்றேன்.

207ஸகல கெந்தஸ்வரூபன்; ஸகலரஸ ஸ்வரூபன்.

208இவனிடத்தி னின்றும் பிராணன், மனது, மற்றும் புலன்கள், ஆகாயம், காற்று, தீ, நீர், ஸகலத்துக்கும் ஆதாரமான பூமி இவைகள் உண்டாகின்றன.

209வாராய்அர்ச்சுந! சுபமானகருமத்தைச் செய்தவன் ஒருவனும் துர்க்கதியை அடையமாட்டான் கண்டாய்.

210அவர்கள் எதைக்கொண்டு என்னை அடையக்கூடுமோ அப்படிப்பட்ட புத்தியோகத்தை நான்தருகிறேன்.

211எனது சிந்தையைத் தெளிவிக்கும அத்தேவனை.

212மஹாமஹிமைசாலியாய், ஸகல நியாமகனாய் ஒருவருடைய பிரயத்தனத்தால் ஸாதிக்க முடியாதவனாயவிளங்கும அவனை, ஸகலரக்ஷகனை அவனுடைய கிருபாமாததிரத்தாலே ஸகலசோகமற நீருடைபடிபார்க்கிறான்... அவனுக்கு இந்த (பரம) ஆத்மா தன ஸ்வரூபத்தைப் பிரகாசிப்பிக்கிறான்.

213அவர்களிடத்தில் கருணையாலேயே நான் அவர்களுடைய ஆத்மபாவனையிலிருந்து, ஸ்வயம்பிரகாசமான ஞானமென்னும் விளக்கைக்கொண்டு அக்ஞானத்தாலுண்டாகுமிருளை நாசம்செய்கிறேன்....நான் உன்னை ஸகல பாபங்களினின்றும் விடுவிக்கிறேன்.

214விபீஷணனோடு விரைவில்சேர்ந்துகொண்டார்.

215பிரமத்தை நியாஸமென்பர்கள் மூதறிவுடையோர்.

216யாதொன்றைவிரும்பியவர்பிரமசரியத்தை அநுடடிக்கின்றனரோ.

217ஸ்வயம் பிரகாசரூபனாய் புராணனான புருஷோத்தமனாய் உம்மிடத்தில் எவர்களாலல் இடைவிடாதபக்தியைப் பண்ணுகிறார்களோ; அவர்கள் இவ்வுலகத்திலும் பரலோகத்திலும் எப்போதும் எல்லாபுருஷார்த்தங்களையும் அடைகின்றனர்.

218யாதொருகாரணத்தால் நான்ஒருபொழுதும் கைவிடமாட்டேனோ அந்த அருஞ்செயல்கொண்டே அச்சுதனென்னப்படுகிறேன்... அவனுக்கு நான் நசிப்பதில்லை...ஒருபடியாலும் கைவிடமாட்டேன்.

219'கபிः' என்று வராஹ ச்ரேஷ்டம் என்றும் "வ்ருஷ" என்று தருமம் என்றுஞ் சொல்லப்படுகிறது; ஆகையாலே காசியப ப்ரஜாபதி யானவர் என்னை வ்ருஷாகபியெனறார்.

220இதைக்காட்டிலும் பெரியவன் (பரம) புருஷன். ஜநார்த்தனன் இதைக்காட்டிலும் பெரியவன்.

221புருஷன் தனது புத்திக்கு நேர்ந்தபடி விசாரிக்கப் புக்காலும் அவனுக்கு அவ்வழியே தான விஷயமாய், ஜகத்ப்ரபுவான பரமாத்மா, தனது ஐசுவரியத்தை யெல்லாம் அவன் அனுபவிக்கும்படி செய்து அகில ஸங்துஷடனாய் பிரமமவித்தான அவனைத் தான் அநுஸரித்துக் கிடக்கிறார்.

222அப்படிப் பட்ட மஹாத்மாவைக் கிடைப்பது மிகவும அரிது.

223ஸகலப் பிராணிக ளிடத்தும் நான் ஸமமா யிருக்கிறேன்.

224தாமரைக் கண்ணனை எனதிராமன் பதினாறுவயது நிரம்பாதவன் ...எனக்கு இவன் சொந்தப்பிள்ளை.

225ஒ ராம! உனது தரிசனம் வீணாவதன்று? அப்படியே உனது தோத்திரமும் வீணாவதன்று; அப்படியே மனிதராய்ப்பிறந்து எவர்களானால் உன்னிடத்தில் பக்திபண்ணுகிறார்களோ அவர்கள் நிஷ்ப்பலமாவதே யில்லை.

226புண்டரீகம் என்றால் நித்தியமாய் அழிவின்றி நிர்விகாரமாய் விளங்கும் பரமபதத்தைச் சொல்லுகிறது, அதற்கு நிர்வாஹகனாகையாலே உன்னைப் புண்டரீக னென்கிறது.

227பரமாகாசத்தில் விஸ்தார மாய் விளங்கும் கண்போல்.

228பதினாயிரம் பூர்ண சந்திரர்களுக்கு நிகரான காந்தியைக் கொண்டு பிரபஞ்சத்தை வளர்த்துக் கொண்டு.

229ஆநந்தாதிசயத்தாலே குளிர்ந்த நீர்ததும்பிய கண்களும் மயிர்க்கூச்செறிந்த சரீரமுமாய், எப்பொழுதும் பரமாத்மா வினது கல்யாண குணங்களில் படிந்து அநுபவித் திருப்பவனைக் கண்படைத்தவர் யாவரும்காண வேண்டியது.

230ஸகலமான பூமியும் எவருடைய படத்தில் விளங்கும் மாணிக்கத்தினது சோதியால் சிவந்து காட்டுமோ அவரே, மாலைபோல் வரிசையாய் விளங்கு முலகங்களை யெல்லாம் பரிக்கின்றார்.

231தூய்மையும் செவிக் கினியவையுமான விஷயங்களை இங்கே கேட்கிறேன், ஓ தநஞ்செய ! பாபமானவைகளைச் செவியிற் கொள்வது மில்லை ஆனதுபற்றியே, "என்னை சுசிச்சிரவஸ்" என்கிறது.

232ஜநார்த் தனனைக் கண்ணாரக் கண்டபெயர்கள் அமுதம் பருகுவாரைப்போல் சிறிதும் பரியாப்தி யடைவார்க ளில்லை.

233ஐய! பரமாத்மாவினது ஸ்தாநத்திற்கு இவையாவும நரகங்கள்.

234ஷட் குணங்களும் பிரகாசிக்கும் படியான சரீரமும் ஜ்வலிக்கின்ற அக்கினிப்போல் விளங்கும் தேஜஸ்ஸும், எப்புறத்திலும் கரசரணாதி அவயவங் களுமாய் விளங்கும் தேவனை (என்று தொடங்கி) இதுதான் ஸகலத்துக்கும் ஆசிரயமாய் ஸர்வ வ்யாபகமாய் விளங்கும் பரஸ்வரூப மென்னப்படும். இதின் மூலமாய் மற்றும் மூன்றுண்டு; அது ஞாநம் முதலிய குணங்களாலே பேசப் பட்டிருக்கும்; இதுதான் வியூஹ மென்னும் பெயருடையதென்றும், மோக்ஷ மென்னும் புருஷார்த்தத்தைக கொடுப்பதென்றுமதெரிந்துகொள்; ஞாநம் முதலிய குணங்கள் முக்கியமாயும அநுவர்த்தித்து

மிருக்கப் பெற்று, போக மோக்ஷங்களைச் சாதிக்குமதாய் நாநாவிதமா யுள்ளது விபவ மென்னப் படுமென் றறிந்துக்கொள்.

235ஞானோபதேசம் பண்ணும் கபிலாக்ஷோ அதோக்ஷஜ னென்கிற ஸ்ரீமந்நாராயண ஸ்வரூபன; வித்தியாமூர்த்தியாய், நானகு முகங்களோடு கூடி உலகமடங்கப் பூஜிக்கும்படி விளங்கும் பிரமனோ, பிரபஞ்ச ரூப மாய் பிரகாசிப்பதற்காக அவருடைய அம்சமாய்த் தோன்றியவா.

236திருடரிடத்தினின்றுந் தப்புவித்தமையால ஜநாா்த்தனனென்கிறது.

237யாவ னொருவன் வேதஙகளையும் அவன் பொருட்டுத் தருகிறானோ.

238வேதம் வலலவனும் யானே.

239வேதத்தை யறியாதவன் அப் பெரியனை நினைக்கவும் மாட்ட கில் லான். வேதமயமான சரீரத்தை உதறுகிறான.

240பதினன்கு இடம இரட்டை யிரட்டையாய் ஸமமாயிருக்கப் பெற்ற அவன் நான்கு கடைப்பற்க ளுடையவன்; நான்கு கதியுடையவன்.

241நான்கு தோளக ளோடும கெம்பீரமாய் விளஙகும் அத்திருமேனி யோடுங் கூடி விளங்கி, சக்கரம் முதலிய ஆயுதங் களையும் பூஷணமாகத்தரி த்தவனே.

242சிரத்தையுடன் கூடி அவன் (தருவதை) புசிக்கிறேன்... எக்ஞம், தவம் இவைகளைப் புசிப்பவனே.

243எந்த அச்சுதனுடைய அநுக்கிரஹத்தால் யான் பிராணிகளினதுசிரு ஷ்டிக்கு வலலவனானேனோ; எவனுடைய கோபத்தால் உருத்திரன் அந்த கனாக ஆயினனோ.

244அவன் காட்டிய வழியைக் கொண்டு படைப் பழிப்புகளைச் செய்கி ன்றவ ராயினர்.

245தேவர்களுக்கு இதத்தைக் கோறி அவர்களுடைய உள்ளமாகிற குகைகளில் நிலை பெற்றிருககும்.

246அதிதியின் மைந்தர்க ளனைவர்க்குக் கடைசியாய்த் தோன்றிய அவன், குணத்தால் அவ்வனைவரையும் விஞ்சியவன்...ஓமனிசா் பெருமா னே? அதிதிக்குப் புதல்வர்கள் இந்திரன்முதலானோர் பன்னிருவரே; அவர்க ளுள் கடைசியில் பிறந்தவர் யாரெனில்:— ஸகல லோகங்களுக்கும் அதி ஷ்டாந பூமியான ஸாக்ஷாத் விஷ்ணு.

247பார்ப்பவரைத்தனது காந்தியாலேநல்லசுகமுண்டாகச் செய்கிறான்.

248நீரானது கையில விழுந்த போதே, குறளாயிருந்தவன் நெடியோ னாயினான். அப்படி அவன் பூமியை ஆக்கிரமிக்கும் ஸமயத்தில் சந்திர சூரியர்கள் மார்பினிடையில விளங்கினார்கள்.

249இதை விஷ்ணு வானவா் ஆக்கிரமித்தார்; மூன்று அடியால் அள ந்து கொண்டார். இவன் இந்த பூமியை அளந்து கொண்டான.

250எவனால் க்ஷணகாலத்தில் பலி சக்கிரவர்த்திக்கு இந்திரபதத் துக்கு நிகரான உத்தம பதத்தைத் தந்து தேவர்களையும் யக்ஞாம்சத்தைப் புசிக்கும்படி பண்ணினனோ.

251வாயு இந்திரன் இவர்கள் செயலையும் விஞ்சியசெயல் செய்பவனே.

ஏப் படைத்துக் கொள்பவன்.

நடத்துகிறானே; எவன் ஆத்மாவுக்குள் நியாமகனாய், ஸர்வகாலத்திலும ஸர்வ தேசத்திலுமுள்ளவனாய், ...ஞையோடு ரஞ்சகனாய் உன்னிருதயத்தில் விளங்கு..., அவனோடு உனக்கு விவாதமில்லை யாகில நீ கெங்கைக்கும் ...க்ஷத்திரத்துக்கும போகக்காரணமேன்?

254 மேரு மந்தர மாத்திரமானாலும்;

255 யாவனொருவன் இவாகள் உரங்கும்பொழுது விழித்திருக்கிறானே.

256 நம்மைப பகைக்குங் கொடியராய், நராதமராய், அசுபர்களான அவாகளை நான் ஸம்ஸார மண்டலத்திலே; அதிலும் அசுரப்பிரகிருதிகளான பிறவிகளில் தள்ளிவிடுகிறேன்.

257 ஓ ஹரியே 'மா' என்று வித்தையைச் சொல்லுகிறது; அதற்கு நீர் நாயகனாயிருக்கையால் (தவ) என்று ஸ்வாமியைச் சொல்லி உம்மை மாதவனென்கிறது.

258 மதுபாஹம் ஞானிக்கு நான் மிகவும் பிரியனன்றோ?

259 குணமயமான மாயையால் சூழபபட்டவன்.

260 கண்ணைக்கொண்டே கேட்குமதான பாம்புப்போல் எங்கும் கேள்வியுடையவன்.

261 எங்கும் கண்களுடையனாய் அப்படியே எங்கும் முகமுடையன்... கணணில்லாமல் பார்க்கிறான்; காதில்லாமல் கேட்கிறான்.

262 யாவனொருவன் ஏக காலத்தில் ஸகலத்தையும் பிரத்தியக்ஷமாய் எபபொழுதும் தானே பார்க்கிறானே.

263 தான்நெருங்கின மாத்திரத்தில் கெந்தமானது கலங்கப் பண்ணுகிறது; மனத்தினது உபகாரம் சிறிதும் அபேக்ஷிக்கப் படுகிறதில்லை; அபபடி தான் அந்தபரமேசுவரனும்.

264 இவனுடைய மேலான சக்தியானது பலவிதமாய் ஓதப்படுகிறது; ஞானம், பலம், கிரியை எல்லாம் ஸ்வபாவமா யுண்டானது.. தேஜஸ், பெலம், ஐசுவரியம, மஹாக்ஞானம், நல்வீரியம், சகதி முதலிய குணங்களெல்லாம் ஒருராசியா யிருக்கும்படி யானவன்.

265 ஆறுகுணங்களும் பிரகாசிக்கின்ற திவ்யசரீரமுடையனாய், பிரகாசிக்கும் அக்கினி போன்ற தேஜஸ்ஸை பொருந்தியவன்.

266 புத்தி, மனம், அங்கம், பிரதி அஙகம், இவையாவும் பகவானிடத்திலிருப்பதாக உத்தேசிக்கின்றோம்.

267 ரூபம, வர்ணம் முதலியவை யுண்டா யிருப்பதாகக் குறிக்கும்படியான விசேஷணங்க ளற்றவன்.

268 ஹம்ஸமூர்த்தியான பரமாத்மாவை ஞானயக்ஞத்தைப் புசிப்பவாாக மதிக்கக்கடவன்.

269 சுருக்கத் திரையும் சந்திரனையு மொப்ப பளபளாபமான காந்தி பொருந்தியவன்.

270நல்ல ஸத்வ குணங்களுக்கு
271ஸ்ரீவிஷ்ணு பகவான் தாமொருவர்
பெரும்பாம்பணையில் துயில் கொண்டார்.
272சங்கல்பத்தாலே துயிலகின்ற அவருடைய
ஸம்பந்தமாய் பெரியதாய் எட்டு இதழ்களுடன் கூடிய
மலர் உண்டாயிற்று; அதற்குமேருவே பெரிய தாமரைக்கா
லப் படுகிறது
273பிறவியைத்தரும் பிரக்ருதியில் பிறக்கிறதில்லை யாகையாலே ஸ்வ
யம் ஜ்யோதியான பகவானை அஜனென்கிறது.
274சக்கரம், சங்குகளைத்தரித்தது பயங்கரமாய் விளங்கும் ப்ரம்மத்தின்
மூர்த்தியை.
275தொனியினால் அசுரரை மிரட்டியவன்.
276ஸகலமான தேவர்களுக்கும் ஈசனே! மனிசர் பெருமான்க
ளுக்கெல்லாம் பெருமானை இத்யாதி.
277சுத்த ஸத்வமயமான விரல்வரிசையால் விளங்கு மிரண்டு
திருக்கைகளாலும் பயத்தைப் போக்கித்தந்த வராகையாலே அவ
ரே மேலான அபயஸத்தாநம்.
278அவர் முன்னவர்களுக்கும் குரு.
279பூஜ்யனும பெரியகுருவும.
280மீன்வடிவ மெடுத்து உடனே ரஸாதலத்தில் புகுந்தார்; பிற
கு வேதமூர்த்தியான அந்தபகவான் வேதங்களையெல்லாம் பிரம்ம
னிடத்திற்குக்கொண்டு சேர்த்தார்...ஞானமுதலிய குணங்களெல்
லாம் தனக்குச்சிறகாய்விளங்க, தன்னிடத்திலுண்டான பரத்வம்
தோன்றும்படியான கொம்புகளால் பிரகாசித்து, பிரளயத்தின்
முடிவானஸமயத்தில் ஸகலத்தையும வஹிக்கின்றவரான அவரை
ச்சிந்திக்கக்கடவன். ஸகலப்பிரஜைகளுக்கும் பதியானபகவானு
டைய குணங்களோடு ஸம்பந்தப்பட்டு எங்கும்பரந்தஓடம்போல்
விளங்கும் பூமியை, முதுதுபோல் அதிநிர்மலமான சரீரத்தால்
தாங்கி, மீனவடிவமெடுத்தவர் மவுனமாய் விளங்குகிறாரென்று
சிந்திக்கக்கடவன். 281எங்குங் கண்ணுடையன்; அப்படியே
எங்கும் முகமுடையன்;
282அவன் பூமியெங்கும் வியாபித்து.
283அவனால் இந்தப் பிரகிருதிசக்ரமானது சுழற்றப்படுகிறது.
...ஸகல பூதங்களையும் சுழற்றிக்கொண்டு;... காலசக்ரம், ஜகத்
சக்ரம், யுகசக்ரம இவைதையெல்லாம் கேசவன் தனது ஸங்கல்பத்தா
லே எப்போதும சுழற்றுகிறான்.

284 அவனே இங்ஙனம் அறிந்தவன் இங்கே அமிருதனாகிறான்... இவனையாவர் அறிகின்றனரோ அவர்கள் அமுதமாகிறார்கள்; மற்ற படி இவனையறியாதார் துயரத்தையே அடைகின்றனர்.

285 ஸகலமான நிமிஷங்களும் வித்யுத்புருஷனான பகவானிடத்திலிருந்துண்டாயின.

286 இதின் அமிருதமான அம்சம், ஆகாயத்தில்தனது மஹிமையில்தானே நிலைபெற்றிருக்கப்பெற்றவன்.

287 பிராணத்தினின்றும் வாயுபிறந்தது.

288 இந்தப்புவியையும் ஆகாயத்தையும ஸத்பதவாச்யனானபரம புருஷன் தரிக்கிறான்.

289 ஒருயத்தனஞ்செய்து ஸாதிக்கமுடியாத அவனே ஸர்வ ரக்ஷகனான அவனது அனுக்கிரஹத்தாலேயே யாதொருசோகமு மின்றி பார்க்கிறான்.

290 நாசமுறாதவன்; தாகமற்றவன்; ஸத்தியமான கோரிக்கையுடையவன், ஸத்தியமான ப்ரதிக்ஞையுடையவன்...சாந்தி நிறைந்த அமுதமாமதை.

291 ஸகல ரூபங்களையும் ஸங்கல்பத்தால் படைத்தும் நிர்விகாரனாய்; நாமங்களைசசெய்து தான் அதில் ஸம்பந்தப்படாமல் வேறுப்பிரகாரமா யிருக்கிறான்.

292 எலலே! தனக்கென்றே அற்றுத்தீர்ந்தவர்கள் யாவரையும் பகவானானவர் தாம ரொம்பவும் உவக்கின்றார்; அவர்கள் முறைபடிசெய்யும் பூஜையையும் தலையால் அங்கீகரிக்கிறார்...சபரியால்நன்குபூஜிக்கப்பட்டார்...மாலக்காரராலேபூஜிக்கப்பட்டான்.

293 அதிவிசித்திரமான வாசுதேவனுடைய சக்கிரமானது மாயையால் சுழல்கின்றது இதயாதி.

294 நாராயணனை பொருட்டு சிந்திக்கின்றோம்....நாராயணன் பரப்பிரம்மம்....நாராயணன் ஒருவனே இருந்தான்—அநந்தரம் மறுபடி நாராயணனை....கண்ணுங் காண்பதும நாராயணன்....திவ்யனான தேவன் நாராயணன் ஒருவனே.

295 இஜ்ஜகத்தில் எது சிறிதுண்டோ.

296 இப்பொழுது என்பிறவி பயன்பெற்றது; இரவும் எனக்கு நல்விடிவைத் தந்தது

297 என்னையொழியத் தரிக்கும்படியான பூதம் ஒன்றும் இசச்ராசரத்தில கிடையாது.

298வேதங்களெல்லாம் நாராயண பரங்கள்...ஸகல வேதங்களாலும் யாமொருவனே அறியவேண்டியவன்.

299வாக்கிலிருந்து உண்டானவையெல்லாம் வேதங்கள்...மென்மேலும் யுக்தி விஷயத்தில் வாக்பதியான பிரஹஸ்பதிபோல் நல்ல வாசாலகன்...மறுபடியும் சொல்லவேண்டும்; கேட்டவண்ணமேயிருந்தேனேயாகிலும் அமிருதபானம் செய்வதுபோல் எனக்கு அதில் பர்யாப்தி பிறக்கவில்லை.

300எப்புறத்திலும் அபரிச்சின்னமாய் பிரகாசிக்கின்ற திவ்விய ரூபத்தோடு கூடிய தேவரீரை ஸேவிக்கிறேன்.

301ஆகாசம் பூமி இவற்றின் இடைவெளிகளிலும் மற்றும் திசைகளிலும் நீர் ஒருவரே வியாபித்திருக்கிறீர்.

302(சிபி) யென்று கிரணங்களைச் சொல்லுகிறது அவைகளைக் கொண்டு வியாபித்தவன்.

303பொற்கந்த வர்ணமான இவனுடைய உரோமத்துக்கு சிபிவிஷ்டமென்று பெயர்; ஆனதுபற்றி, அதனால் வியாபிக்கப்பட்ட ஒவ்வொன்றுக்கும் சிபிவிஷ்டமென்பது பெயராகக்கூடவது.

304உனக்கு திவ்விய நேத்திரத்தைத் தருகிறேன்; எனது பாமைசுவரிய போகத்தைப்பார்.

305பற்றியெரிகின்ற பெருந்தீயில் படுவதற்காக விட்டிற் பூச்சிகள் மிகவும் விரைந்தோடிப் புகுவதுபோல.

306ஓ புண்டரீகாக்ஷ! ஸகல ஜகத்துக்கும் தேவரீர் பிரபுவாய் விளங்குகின்றது; ஆதையால் ஓ யாதவர்பெருமானே! அடியேனுக்கருளபுரியல் வேண்டும்.

307அநந்தரம், அந்த புருஷோத்தமன் மறுபடியும் திருவாய் மலர்ந்தருளினார் திவ்வியமாய், அத்தியாச்சரியகரமாய் விசித்திரமாய், மிகவும் ஸம்ருத்தி பொருந்தியதாயிருக்கின்ற அத்திருமொழியை. 308யாவனொருவன் என்னை நித்தியமாய் நினைக்கிறானோ அவன், ஆசையென்னும் நீர் நிறைந்து பயங்கரமாய் கரைகடந்திருக்கின்ற ஸம்ஸார ஸாகரத்தினின்றும் கரையேறுகிறான்...மனமும் நிலைத்து சரீரமும் மிக ஸ்வஸ்த்தமாய் தாதுக்களெல்லாம் ஸமமாயிருக்கையில் எவன் நரன், ஜகத்ரூபனாய பிறப்பில்லாதவனை யென்னைச் சிந்திக்கிறானோ; அவன் அப்படியிருந்து பிறகு சரீரத்தை விடும்பொழுது கேவலம் காஷ்ட பாஷாணங்களுக்குச் சமமாயிருந்தாலும்...என்னுடைய பக்தனாகிய அவனை யானே நினை

ப்பிடுகிறேன்; அதற்குமேல் உத்கிருஷ்டமானகதியையு மடைவிக கிறேன்.

309அவர்கள், உதிக்கின்ற சந்திரன்போன்ற அவரைப்பார்த்து;

310அரக்கர்களெல்லாம் பயந்துதிசைகளைநோக்கிஓடுகின்றனா.

311சந்திரன் மனதினின்று முண்டானான்.

312யாதொருத்த னுடைய காந்தியை உபயோகித்து சூரியன் பிரகாசிக்கின்றானோ.

313ஸகல விதத்தாலும் வக்கரமாயுள்ளது ஸம்ஸாரமார்க்கம். நேராயுள்ளது பிரமத்தின் மார்க்கம்.

314தேவாகளும் சேவரிஷிகளும யாதொருவனை துயர்தீர்க்கும் மருந்தாக அறுதியிடுகின்றனரோ.

315இவன் இந்தலோகமரியாதையைக் கொலையவொட்டாமல் நிலைநிறுத்தும் அணைபோன்றவன்.

316எப்படி பசுமாடுகளாயிரத்துள் கன்றானது தன்தாயை அறியுமோ அப்படி முன்செய்த வினையானது செய்தவனையறியும்; ஆதலின் நல்வினைசெய்தவன் நன்மையையும் தீவினைசெய்தவன் தீமையையும் அடைகிறான்.

317ஓகேசவா! என்னைப்பார்த்து தேவரீர் அருளிச்செய்தவிவை யெல்லாம் ஸதகியமென்றே நினைக்கிறேன்.

318கேசியை நிரஸித்த கேசவன் பூதபவிஷ்யத் வர்த்தமானங்களானபொருள்கள் யாவைக்கும்இறைவன்.

319ஓ ரகுநந்தன! அனைத்துலகங்களுக்கும் தாமொருவரே பரிசுதந்தா. 320காமத்தால் கலங்கியவென்னெஞ்சம் உன்னடிகளில் நிலைக்கவில்லை. 321ஒருவனுய்ப் பலருக்கு யாவனொருவன் இஷ்டங்களை அளிக்கின்றனனோ. 322இராமபிரான் தாமரை யிதழ்போன்ற திருக்கண்களால் ஸகலப்பிராணிகளுக்கும் இனியராய்த் தோற்றும். 323ஐய! மிகவும் அற்புதனை அத்தேவன் இவ்வாறுரைத்து அந்தாததானமடைந்தார். 324உலகத்தில் தாவரமும ஜங்கமுமாய்நான்கண்ட ஒவ்வொன்றையும் அந்தமஹாத்மாவினது திருவயிற்றில் கண்கூடாகக்கண்டேன்.

325உலகமெல்லாம் நாசமுறுமபொழுது இச்சிறுகுழந்தைமாத்திரம எவ்விதத்தால் படுத்து உறங்குகின்றதென்று ஞானதிருஷ்டியால் சிந்தித்தும் இனைவிதமென் றறியமாட்டுகிறிலேன்.

326காயாமலா நிறமும் ஸ்ரீவத்ஸமென்னும மறுவும் கேசே திருமகட்குறைவிடமபோல் அவ்வெனக் செபபொழுதுமபொலிந்து

தோற்றுகின்றனன். ஐய! அவனுடைய சிவந்துகாட்டும் அடியிணைகள் செம்மையாய் மிருதுவாய் சிவந்தொளிரும விரற்களால் அலங்கிருதமாய் ஒன்றுக்கொன்று போலியாய் விளங்காநின்றன.

327வாரீர் பிரம்மரிஷியே, ஆயிரம் யுகங்கள் செல்லுமளவும் யாம் உறங்குகின்றோம்.

328அவன்சரீரத்துள் ஒருநூற்றாண்டுக் கதிகமாய் இருந்தும் அத்தேவனுடைய முடிவை ஒருபடியாலும் காண்கிலேன்...ஓ அரசே! அந்த மஹாத்மாவின் இறுதியையான் அடையகில்லேன்.

329ஸத்துவ குணத்தில் நிலைநின்று ஆங்காரமற்று எந்நாளும் ஆத்மத்தியானத்தில் வல்லவரான ப்ரம்மவித்துக்கள் எப்போதும நம்மையே சிந்தித்தவர்களாய் நம்மை உபாஸிக்கின்றனர்.

330அதில்மற்றொருவன் மாயையால் தகையப்பட்டிருக்கிறான்.

331அதன்பிறகு தாமரையை நிகர்த்த கண்களையுடைய அப்பாலகன் ஸ்ரீவத்ஸமென்கிற மறுவைத்தரித்து மிகவும் காந்திபொருந்தி விளங்குவானாய் செவிக் கினியதானதோர் வார்த்தையை எனக்குறைத்தனன்.

332யாவனொருவன் பூமியை க்ஷத்ரியவர்ஜமாகச் செய்தனனோ.

333பிரம்மேந்திர வருணாதிகள், நழுவுதற்கடியான பிறவியுற்றிருக்கச்செய்தே; யாதொருகாரணத்தால் நீர் நின்ற நிலையைவிட்டு நழுவுவதில்லையோ அதுகொண்டு உம்மை அச்சுதனென்கிறது.

334அவன் கீர்த்திதான் மிகவும் பெரியது...கீர்த்திக்கு முக்கியமான பாத்திரம்.

335ஞாநாகாரனை யான், பிராணனாயிருக்கிறேன். அத்தகைத்த வென்னை ஆயுளென்றும அமுதமென்றும் உபாஸிக்கக் கடவாய்.

336ஓமாமுனியே சுழன்றுவரும் மந்தராசலத்திற்கு ஆதாரமாயினன். 337அப்பகவன் எங்கே நிலைபெற்றிருக்கிறானெனின், தன்மகிமையி லென்றான்.

338சேனாபதிகளுக்குள் யான் கந்தன்.

339உலகத்தையெல்லாம் சூரியன் கிரணங்களால் மூடிக்கொள்வதுபோல யான் மூடிக்கொள்ளுகிறேன்; ஆனதுபற்றியும ஸகலப்பிராணிகளுக்கும யான் நிலையிடமானது பற்றியும வாசுதேவனென்னப்படுகிறது...எங்கும்இவன், எதுவும இவனில் வசிக்கும், என்பதுகொண்டு, முதறிவுடையோா இவனை வாசுதேவ னெனகிறது.

340சேர்த்தும பிரித்தும் ஜகத்பிரபுவானவிஷ்ணு,தான் நினைத்த வண்ணம் விளையாடுகிறான்.

341கர்ப்பம், ஜன்மம், ஜரை, மரணம், முதலிய ஸம்ஸாரத்திலு
ண்டான மஹாபயத்தினின்றும் தாண்டுவிக்கிறானாதுகொண்டு
(தாரன்) என்கிறது.

342வீரனாயிருந்து வைத்தும் மஹத்தான தனது வீரியத்தைக்கண்டு
இறுமாந்திரான்.

343ஜநார்த்தனன் பக்தியைக்கொண்டு விலைக்கு வாங்கப்பட்டபின்பு
ஓர்சையாளாயிருக்கும்.

344ஹிருதய புண்டரீக மென்கிற யாதொரு தகராகாசம், பாபம் நீங்கிய
தாய், பரமபுருஷனுக்கு மேலான வாஸஸ்தானமாகிறதோ.

345அந்த புராணபுருஷன் உள்ளத்தில் வஸிக்கும்பொழுது புருஷன்
உலகைதிற்கெல்லாம் அழகியதான வடிவம் கொண்டுகாட்டுவன்.

346ஸ்ரீவிஷ்ணு பகவான் பக்தர்களைத் தனது சரீரம்போல் ரக்ஷிக்கி
ன்றனர்.

347இலங்கையில் முடிசூட்டி...எல்லே' மனக்கவலை தீர்ந்து மகிழ்ந்
திருந்தார். 348இவரிடத்தில் பாத்சால் வாயுபகவானோடித்திரிகிறான்.
349அவனுக்கு யான்விடுவிக்கு மளவுதான் காலவிளம்பம்; அப்புறம்
கூடிக்கொள்ளுகிறேன்.

350தீமனங்கொண்டு சிந்தித்தாலும் ஹரியானவர், பாபங்களை அகற்று
கின்றனர். 351இரண்டு திருக்கைகளிலும் சங்குசக்கரம்தரித்து தாமரை
யினுட்புறமபோல் ஒளிர்கின்ற திருமகள்கோனைச் சிந்திக்கக்கடவன்.

352ஆத்மாக்களுககும் பிரகிருதிக்குமுண்டான அநாதித்வத்தைப் பிரகா
சிப்பித்துக்கொணடு ப்ரணயகாலத்தில் வேடிக்கையாய் தேவியின் பொ
ருட்டு த்வயத்தை உபதேசிக்கின்ற.

353எவனுடைய வயிற்றினிடையில் 'தாம' என்கிற லோகங்களெல்
லாம் பிரகாசிககின்றனவோ, அதனால் தேவனுக்குத் தாமோதரனென்று
பெயர்...'தாம' என்கிற கயிற்றால் கட்டுண்ணப்படுகையாலே தாமோதர
னென்னப்படுகிறான்.

354நீதேவனோ அசுரனோ!

355விஷ்ணுவைவிட்டுப் பிரியாதவன்.

356ஸர்வ வியாபகனாய் தேவர்களுக்கெல்லாம் ஈச்வரனான விஷ்ணுவா
னவர் பெரிய பிராட்டியாரோடுகூடி விளங்குவதுபோல், இராமபிரான்
ஸீதாதேவியோடுகூடி மிகவும் விளங்கினார்.

357கண்ணும் காணப்படுமதும் நாராயணன்; காதும் கேட்கப்படுமதும்
நாராயணன்.

358மனிதர்களுக்கு விசனமுண்டானபோது நிரம்பவும் துக்கமுற்றவ
ராவர்; உத்ஸவங்களெல்லாவற்றிலும் பிதாவைப்போல் மிகவும் ஸந்தோ
ஷிப்பர். 359கூடவே யிருக்கின்ற (அவனை) தேவர்கள் அறிக்திலர்.

360ஸம்ஸார சக்கரத்தைப் பரிபாலிக்குந் தேவனை.

361அவ்யக்தமென்கிற மூலப்பிரகிருதியும், அக்ஷரமென்கிற முக்தஸ்வ

ரூபமும், பிரகிருதி பரிணாமமானப் பிரபஞ்சமும், தேவர்களுடைய நெஞ்சத்துக்கு சுபாச்ரயமான பரம ரஹஸ்யமும் எல்லாம், பகைவரை வெல்லுகின்ற இராமபிரானே

362ஸ்பஷ்டமாய் இவர் மஹத்தான யோகஸம்பந்நராய் ஸநாதநராய் விளங்குகின்ற பரமாத்துமா. 363அப்பொழுது தசரத சக்கரவர்த்தியைத் தமக்குப பிதாவாக மதித்தார்.

364சோபநமான புருவமும் அகன்று சிவந்த திருக்கண்களுமாய் ஸாக்ஷாத் விஷ்ணுவைபபோல விளங்குந்தான்.

365எவன் இராமனைக்காணவில்லையோ, எவனையாகுல் இராமன் கடாக்ஷிக்கயில்லையோ அவன் உலகத்தில் நிந்திக்கப்படுவதோடு தன்னெஞ்சமும் அவனை வெறுக்கும்.

366இராமன், ர மிகச்செய்பவரில் தலைவர்...குணங்களா லினியரான விராமனை. 367பிரமன் தானாகவே தோன்றி நான்குமுகஙகளோடு கூடியிருந்தாலும். 368இவனது பெரியதானலக்ஷ்மியை ராஜ்யநாசமானது பறிக்கவில்லை. 369யக்ஞசீலருக்கு யாதொன்று கதியோ.

370தபஸ்விகளுக்கு யான் ஏவிக்காரியங் கொள்ளத்தக்க கிங்கரன்.

371உமது வயிற்றிற்பிறந்த குழந்தைகள்போன்ற தபோதநர்கள் உம்மாலெந்நாளும் இரக்ஷிக்கத்தக்கவர்கள்.

372இந்த நாங்கள் எல்லாவிதத்திலும் குறைவற்றவர்; ஏனெனில், எங்களுக்கு இவன் நியந்தாவாக ஆகப்போகிறானன்றோ?

373பிரம்மதண்டமபோல் பிரகாசித்து மின்னல்கொடிபோல் ஜ்வலிக்கின்ற காந்திபொருந்திய இராமபாணங்களை நினைத்து அரக்கர்தலைவன் மிகவும் நொந்துபோனான்.

374உம்மை மதுவென்னும் அசுரனைச் செகுத்த நிர்விகாரனானதேவநாதனென்று யான்மதிக்கிறேன்.

375பிரம்மவித்துக்களிற்றலைவனை...உலகங்களுக்கெல்லாம் நீ மேலான தருமம்.

376தசரதன் புதல்வரான இராமபிரான் தருமாத்மாவும் ஸத்திய ஸந்தரும் பராக்கிரமத்தில் ஈடில்லாதவருமாயிருந்தாராகில், ஓ பாணமே! இந்த ராவணன்புதல்வனை வெல்லுவாய்.

377.ஆறுகள்சூழ்ந்த சமுத்திரம்போல் சாதுக்களா லெப்போதும் சூழப்பட்டிருப்பவர்.

378பூமியானது ஜலத்தோடும், ஆகாயம் காற்றோடும், வாயு தேஜஸ்ஸோடும் என்றால் உறவுசெய்யப்பட்டது, இதைக்கொண்டு எனக்கு வைகுண்டனென்னும் பெயர்வந்தது.

379இராமனையே அடுத்தடுத்துப் பார்த்தவண்ணமாயிருந்த (மிருகங்கள்) ஒன்றையொன்று ஹிம்ஸிக்கவில்லை.

380யானைகள் விழுங்குகளை விட்டுவிட்டன; பசுக்கள் கன்றுகளுக்கு ஊட்டத்தரயில்லை.

421 எவனை இவ்வுலகங்களினின்றும் உத்தரிப்பிக்க நினைப்பிக்கிறானோ அவனைக்கொண்டு இவனை நற்செய்கைகளைச் செய்விக்கிறான். எவனைத்தான் கீழேதள்ளிவிட நினைக்கிறானோ அவனைக்கொண்டு இவன்தானே தீவினைகளைச் செய்விக்கிறான்.

422 அவனுக்குதோஷமுண்டென்பீராகில்நல்லது; இருக்கட்டும்.. மிகவும் துராசாரனாயிருந்தானாகிலும் மற்றொன்றை நாடாமலென்னையே பஜிக்கிறான்யாகன்.

423 தேவர்களில் தலைவர்களாலே அர்ச்சிக்கப்பட்ட அந்தஸர்வரக்ஷகன் என்னை இந்தப்பிராணிகளின் ஹிதாஹிதங்களில் நியமித்தார்.

424 சோழனென்னும் பாவனையோடு வந்தவனை.

425 நிர்விகார ஸ்வரூபனான அந்தபரமாத்மா, எவனுடைய உள்ளத்தில் வஸிக்கின்றாரோ சக்கரத்தால் எதிரியின் வீரியபலங்களை அழிக்கவல்ல அந்தபுருஷ சிரேஷ்டனுடைய கண்வட்டத்தில் நீயல்லது நானும்செல்லத்தகாது காண்; அவன்தான் நமது நியாமியகோடிகளைச்சேராதவிஞாதியன்.

426 ஸ்படிகமணிபோல அதிநிர்மலமான விஷ்ணுவெங்கே, மனிதருள்ளத்தில் மாச்சரியம் முதலிய தோஷமெங்கே.

427 வாஸுதேவனே கதியென்று அதனால் ஸகல கல்மஷங்களையும் போக்கிக்கொண்ட வைஷ்ணவனைக்கண்டு அண்டத்தமரர்கள் மிகவும் பயந்தவர்களாய் தண்டனிட்டு வந்தபடியே திரும்பிச்செல்லுகின்றனர். சூரியன் மைந்தனான இயமனும் ஸகல கல்மஷமு மற்ற விஷ்ணுபக்தனைப்பார்த்துச்சடக்கென வெழுந்து கைகூப்பிக்கொண்டு தண்டன்ஸமர்ப்பித்தான்.

428 பாவமொருவன அவருக்கு வேதங்களை அளித்தனனே.

429 நாற்றிசையும் முகப்படைத்த அந்த பகவான் ஸ்தோத்திரம் பண்ணினர், அனந்தரம் தேவகாரியார்த்தமாய் எழுந்திருந்து நித்திரையைவிட்டெழுந்தார்

430 நக்ஷத்திர தேவதைகளுடன்கூடிய ஆகாசமானது அவனுக்குத் தலையாகவாயிற்று. 431 ஸர்வலோகேசுவரன் ஸகலலோகங்களுக்கும் ஹிதஞ்செய்யத் திருவுளம்பற்றி வானரரூபந்தரித்த ஸகலமான தேவர்களாலும் சூழப்பட்டான். 432 ஸகல ஜனங்களுக்கும் போக்தாவும் பிரபுவும்நானேயன்றோ. 433 எந்த மூன்றாவதுலகத்தில் தேவர்கள் அமிருதபானம் பண்ணுகிறதாக ஓதப்படுகின்றதோ 434 இதற்கு மூன்றாவதான ஆகாயத்தில அமிருதகிரணனான சந்திரன்போல் விளங்குகிறான். ஜனார்த்தனனைப் பார்ப்பவர்கள் அமுதத்தைக்கண்டாற்போல் திருப்தி அடைவதில்லை

435 இராகவன் லோகங்களை ஸத்தியத்தாலும் தீன ஜனங்களை தானத்தாலும், குருக்களை சிசுருஷையாலும், சத்துருக்களை வீரனாகிய தன்கை வில்லாலும ஜயிக்கிறார்.

436 ஓ ராஜன்! தேவரீரிடத்தில் அடியேனுக்கு எப்பொழுதும் பரமஸ்நேகமும் பக்தியும் குடிகொண்டிருக்கிறது ஹேவீர! அடியேனுடைய ஹிருதயம தேவரீரையொழிய மற்றொரு விஷயத்தில் செல்லுகிறதில்லை.

437 தவசிகளுக்கு யான் கையாள். 438 ஹே ஸகே! என் ப்ராணனையும், அதவா உன்னையும், அதற்குமேல் இலக்குமணனையும் விட்டாலும் விடுவேன்; பிரதிக்ஞையை ஒருக்காலும் விடேன்; அதிலும் பிராமணவிஷயத்தில் சொல்லவேண்டுமோ?

439 மூவுலகுமேத்த நின்ற ஆனந்த மூர்த்தியான ஸ்ரீமந்நாராயணன் தனதடியார்கள் வருத்தமுறக்காணவாற்றார்

440 காலவைச் வானரனென்னும், ஆதாரசக்தி என்னும் பெயர்கொண்டு அசரீரியாய் பல்படியும் செல்லவல்லனாய், மூவுலகத்திலும் நிறைந்திருக்கின்ற ஸர்வ வ்யாபகனான பகவான், தத தத் காலங்களில் தன்னிச்சையால் அங்கீகரிக்கின்ற திருமேனிகள் பலவுண்டு.

441 அளவற்ற பெலனும் சக்தியுமுடையனாய் ஸகலபுவனங்களையும் பரிக்கின்ற ஆமைவடிவங்கொண்டவனுக்கு.

442 ஆதாரசக்தியின்மீது நிர்மலமாய் பிரகாசிக்கின்ற திவ்ய மங்கள விக்கிரஹந் தரித்தவனாய், அனேகம் ஜ்வாலைகள் நிறைந்தவனாய், சங்கு சக்கரம் கதை இவைதரித்தவனாய் விளங்கும் அநந்தேசனை (உள்ளத்தில்) இருத்தக்கடவன் 443 பூமியானது நாசமுறுங்காலத்தில் ஜலத்தில் மஹா ஸர்ப்பத்தின்மீது காணப்படுகிறீர். 444 பிரகிருதியில லயமடைந்த அதறகுப் பரம்பொருள் யாவனோ அவன் பரமேசுவரன்.

445 பிரம்மதேஜஸ்ஸான உனக்கு அடியேன் என்று ஆத்மாவைச்சேர்க்கபபட்டவன், இதுதான் மஹோபநிஷத்தினர்த்தமான தேவரஹஸ்யம்.

446 உன்னுடைய உஜ்ஜீவனத்திலும் ஸ்வரூப ஸ்திதியிலும் உனக்கு இச்சை இருந்தாகில ஆத்மாவினது அடிமையும் ஹரியினது உடைமையும ஸ்வபாவமென்று எந்நாளும் சிந்தித்திரு.

447 இவனே ஆனந்தமுறச்செய்கிறான்; ஆனந்த ரூபனான இவனுடைய அற்பாம்சத்தை மற்றபிராணிகளடைந்து ஆனந்த முறுகின்றன.

448 "த்ரிஃ" என்றால மூன்றுவேதங்கள்; என முனிவர்கள்பேச்சு. அவர் மூன்றையும் வியாபிக்கின்றமையால உன்னை திரிவிக்கிரமனென்கிறது.

449 இருக்கு முதலிய சுருதிகள் மூன்றையும் வாய்வழியாய் மொழிகின்றவனை இடைவிடாது சிந்திக்கக்கடவன்.

450 கபிலரைக்கிட்டி, பக்தியால்தலைகுனிந்து அப்பொழுது தோத்திரஞ்செய்தான் அவரும கிருபையோடு இவனைப்பார்த்துச் சொல்லுகிறார்.

451 இப்புவியெல்லாம ஸர்வக்ஞனான எந்த வாஸுதேவனுடையதோ, அவர் கபில ரூபத்தை அடைந்து இப்புவியை எப்பொழுதும தரிக்கிறார்.

452 அப்படியே மூன்று முசுப்புகளுண்டாக வாராஹ ரூபந்தரித்தனர்.

453 ஓர் கொம்பையுடைய வாராஹம் நீர். 454 ஹிரணியாக்ஷனென்னும்பெரிய வசுரன் மாண்டான்.

455 பூர்வத்தில் பூமியானது நஷ்டமாய் குகையில் இருக்க, அதை யான் அடைந்தேனென்று என்னை கோவிந்தனெனகிறது

456 அபராஜிதை என்னும் ஸர்வமயமான பட்டணத்தில் ப்ரம்மம் உறைகின்றது. 457 ஹே அர்ஜுன? யான் க்ருஷ்ண வர்ணமான குந்தா

லியாய் பூமியைப் பிளந்தகினாலும் க்ருஷ்ண வர்ணமாயிருந்ததினாலும் என்னை க்ருஷ்ணனெனகிறது.

458மதஸ்ய, கூர்ம, வராஹாதி அவதாரங்களெல்லாம் இதைக்கொண்டே; ஹேபிராம்மணோத்தம! மற்றப்படி வேறுவிதமல்ல.

459அவர்களிடத்தில்யான். 460ஸாதுக்கள் ஒதுங்கிப்பிழைக்கும் நிழல் மரமும், ஆபந்நர்களுக்குத் தஞ்சமு மானவன். 461ஐசுவரியம், வீரியம், யசஸ், ஸ்ரீ, ஞானம்; வைராக்கியம், இவ்வாறுக்கும் 'பக' என்று பெயர்.

462பூமியை உழுங்காலததில ஸமிருததிக்காக பலராமனைச சிந்திக்கக் கடவன். 463ஹேதாக்ஷாயணி! பூர்வத்தில் நீ அக்கினியாகப் பிறந்தாய் அப்படிப்பட்ட உன்னிடத்தில யான் இபபொழுது அநுக்ரஹம் செய்கிறேன். 464அவ்விருவரும் உருத்திரனோடு சண்டைசெய்யும்பொழுது தேஜோமண்டலங்கள் ஒளிமழுங்கி ப்ரம்மாவும் ஆஸனத்தினின்றும் நழுவினர் 465ஜகத்துக்கெல்லாம் ஆதியாய், ஸர்வசரேஷ்டனாய், அபீஷ்டங்களை அளிக்கவல்லனாய், ஸகலபாபஹரனாய், ஸர்வ வ்யாபகனான, ஸ்ரீமந்நாராயணனை சங்கரன வேண்டிக்கொண்டான. அப்படியே அபீஷ்டதானம் பண்ணவல்ல அத்தேவ தேவன் சினந்தீர்ந்து மிகவும் ப்ரீதியுடன் உருத்திரனோடு கலந்து பரிமாறினர்.

466இந்த தேவர்களால தர்மமானது இப்போது பரிக்ஷிக்கப்பட்டது. 467சங்கரனை அழிக்கவேண்டி நரனான அர்ச்சுனன் ஓர் துரும்பை எடுத்து மந்திரங்களை ஜபித்துப் பிரயோகிக்க, அது ஓர் பெரியகோடாரியாய் விட்டது. அதை உடனே உருத்திரன்மீதெறிய அப்பொழுது கண்டிக்கப்பட்டது. அப்படி கண்டிக்கப்படுகையால் என்னைக்கண்டபரசு என்கிறது.

468ஸகல சாஸ்திரார்த்தங்களையும் தொகுதது இடதுகையில தாங்கி வலதுகையால் அவ்வர்த்தங்களை அங்குள்ளவர்களுக் குபதேசித்தார்.

469பரமார்த்தம் கைவந்தவன். 470யுகத்துக்குத் தகுந்த ஞானமுடையரான ஜனங்களுக்கு அநாயாஸத்தை உண்டுபண்ணிவைக்கைக்காக த்ரிகால க்ஞான வியாஸபகவான் ஒன்றாயிருந்த வேதத்தை நான்குவிதமாய் பிரித்தருளினர்.

471அனந்தரம் மீண்டு மூலகங்களைப்படைத்து ஓமென்னும் சப்தத்தை உச்சரித்து ஸரஸ்வதியை உச்சரித்தார். அதினின்றும் ஸாரஸ்வதன் பிறந்தார். 472வேதாந்தங்களைப் பிரித்தறிந்து அதனால் பரமார்த்த மின்னதென்று துணிந்தவர்கள்

473மமகாரமற்று சாந்தமாயிருப்பவன் என்னிடத்தில் பரபக்தியுண்டாகப் பெறுவான.

474உலகமுழுது மொருவனாய் வியாபித்து மங்களாகாரனாய் விளங்குகிற பரமாத்மாவை யறிந்து மிகவும் சாந்தியை யடைகிறான்...நமதின்னருளால் மிகுந்த சாந்தியையும் சாச்வதமான ஸ்தானத்தையும் அடைவாய்.

475பரதந்திரமான ஆத்மா, போக்தாவாய்க்கொண்டு கட்டுப்படுகிறான.

476யாவனொருவன் பிறப்பிடந்தோறும் தான் அதிஷ்டித்திருக்கிறமோ, எவனிடத்தில இவை எலலாம் சேர்ந்தும் பிரிந்து மிருக்கின்றனவோ;

அந்த ஈசனை. 477பலத்தோடே ஸம்பந்திக்கவேண்டுமென்கிற ஆசையா லன்றோ கர்மங்களைச்செய்து பரமாத்மாவைத் திருப்திசெய்விக்கிறார்கள், அவன்பிரீதியடைந்தால் பலனைத் தரவல்லனாகிறானென்றன்றோ சாஸ்திர மரியாதை?

478தூமம், ராத்திரி, அப்படியே கிருஷ்ணபக்ஷம், ஆறுமாஸகாலமான தக்ஷிணாயநம் இவற்றுள் இறந்த யோகியானவன் சந்திரனுடைய ஒளியை அடைந்து திரும்புகிறான்,

479ஜீவனுடைய சக்தியைச் சூழ்கின்றது யாது; அது எங்கும் பரந்தது.

480ஸம்ஸாரம், மோக்ஷம், ஸ்திதிபந்தம் இவைகட்கு ஹேதுவானவன்.

481ஸ்ரீவத்ஸமென்னும் மறுவை மார்பிலுடையவன்.

482பெரிய பிராட்டியார், நித்தியமாய் ஸ்வேச்சமாய் விளையாடும்படியான கற்பகக்காவானவன். 483பூதேவியும் ஸ்ரீதேவியும் உனக்குப்பத்தினிகள்; விஷ்ணு பத்தினியானவள் இவ்வுலகத்துக்கு ஈசானை.

484உம்மைவிட்டு நீங்கினால் ஸீதையுமில்லை; ஓராகவா! யானுமில்லை; அப்படி இருந்தோமாகில் ஒருமுஹூர்த்தம்; நீரிலிருந்த மீனைக்கரையிலெடுத்துப் போட்டதுபோல். 485ஆதியில் ஆத்மகுணமாயும் விசுகிரஹத்தில் போக்கியதா ரூபமாயும் ஆதாரஸ்வரூபமாயும்; இல்லையென்றால் எப்போதும் தாஸீபாவத்தோடிருக்கும்.

486எவனுக்கு அந்தஜநகராஜன் திருமகளோ அவன் ஹரி; மதிக்கெட்டாதது. 487மகஸ்வியான புருஷன் எப்படி கீர்த்தியை விட்டுப் பிரியானோ, அப்படிபோலாகையால், இவளை விடுவதென்றால் ஆகாது.

488தேவனாயிருக்கும்பொழுது தேவசரீரமெடுத்திருக்குமிவள்.

489எவனிடத்தில் சுவர்ணத்தையும், பசுவையும், அச்வத்தையும், புருஷர்களையும் யான்பெறுவேனோ. 490நீயோ எவ்வுயிர்க்கும் தாய், தேவதேவனான ஹரி தகப்பன்.

491பரமாத்மாவினுடைய சோதிமயமான ஸ்தானத்தை விரும்புகிறார்கள்...பரமஸாத்மியம் கைவந்த தேவர்கள் விரும்புகின்றனர்.

492லோகத்தில் புருஷனுக்கு மிகையாய் உண்டான கீர்த்திகள் அவ்வளவையும் அதிசயித்த கீர்த்தியுண்டாயிருக்கப் பெற்றவன்.

493ஆத்மாவினுடைய புத்திக்குச் செய்விவை யுண்டுபண்ணுகிற அத்தேவனை. 494பிம்பாகிருதி பிம்பாகிருதியாய் எழுந்தருளியிருக்கிறான.

495ஹேபகவந்! அப்படிப்பட்ட யான், சோகமுறுகின்றேனாகையால் மகாத்மாவான தேவரீர் அந்த சோகத்தின் கரையைசேர்ப்பிக்கவேண்டும்.

496அழகியதாய், அருள்புரிந்த திருமுகமும் திருக்கண்களுமுடையதாய், தன் சிந்தைக்கிசைந்ததான விஷ்ணுவின் ப்ரதிமையை பொன் வெள்ளி முதலிய வைகளால் நிருமித்து.

497பூமியில் ஆங்காங்கு ஸகலப் பிராணிகளுக்கும் முக்தியுண்டாக்கு நிமித்தமய அந்தப்பிராணிகள் போக்தும் வரத்துமான ஸ்தானங்களிலெல்லாம் நித்தியமாய் ஸன்னிதி பண்ணுகிறதும்.

498ஸர்வ ஸ்வாமியான அனிருத்தாழ்வான், பூமியில் பாண்டமென்கிற தேச விசேஷத்தில் ஹரார்த்தனனென்கிற திருநாமம்பூண்டு நித்யமாய் சேவையை ஸாதிக்கருளுகிறார்.

499கால சக்கரத்தினுடைய வலியதான அவித்யையென்கிற குடத்தை அதிஷ்டித்து உதறுகின்றது; அப்படிப்பட்ட அதின் பரசாரத்தைபோக்கும் சேவையை தியானிக்கக்கடவன்.

500சித்திர கூடமென்னும் பருவதத்தில் அரக்கரை மாள்வித்த புண்டரீகம்போல் நீண்டகண்களுடையவிராமபிரான் யெழுந்தருளியிருக்கிறார்.

501ஸர்வலோகேசுவரனாய் தேவ தேவனான ஹுருஷோத்தமன் மகததேசத்தில் ஞானிகளால ஆசிரயிக்கபபட்டவராய் எழுந்தருளியிருக்கிறார்.

502பூமண்டலத்தில் நல்லப் பிரதேசமான பராகஜோதிஷ புரத்தில் விசுவேசுவரனென்னுந் திருநாமம் பூண்டு எழுந்தருளியிருக்கும் தேவனைக் கண்டு சேவிக்கு

503ஓ பிராமமண! மதுரைஎன்னும் க்ஷேத்திரத்திலும், காசிபட்டணத்திலும், கேசவஹரனை கேசவன இரண்டுப பிரகாரமாக வெழுந்தருளி இருக்கிறா.

504தம்முடைய ஆக்ஞையை எதிர்பார்த் திருக்கின்ற கதை,சக்கரம்,என்கிற விரண்டு ஆயுதங்களை எவி ஸாதுக்களுக்கு அனுக்ரகம் செய்கின்றதியரை உடனே துணிக்கின்றார்.

505எனது விஸ்தாரத்துக்கு முடிவில்லை...இதுதான் ப்ரம்மமாகையாலே இதற்கு இறுதியின்று.

506பெரிதாயும், பெருக்கச செய்வதாயும் இருக்கையாலே ப்ரம்மமென்று சொலலப்படுகிறது.

507ஆதியந்தமற்ற வேதத்தை தேவர்களும் ரிஷிகளும் அறியார்கள்; மற்றப்படி ஸகலஜகத் கர்த்தாவான ஸ்ரீமந்நாராயணன ஒருவர்தாமே அறிய வல்லவர்.

508ஹரியானவர் ஸகல ப்ரம்மஸ்வரூபம்.

509வேதததை யறிந்தவனும் யானே.

510அழித்தாலும் சபித்தாலும் கொடுமையாய்ப் பேசினாலும் யாவனொருவன் பிராம்மணனைத் தருந்தபடி அருச்சித்து வணங்கவில்லையோ.

511ஓதனஞ்செய! அப்பியாஸ யோகத்தைச் செய்து அனந்தரம் என்னை யடையபபார்.

512யாவனொருவன் திரவியத்தாலாவது விபவங்களாலாவது வஸ்திரங்களாலாவது பூஷணங்களாலாவது ஸந்தோஷப்படாமல் கேவலம் உள்ளம் ஒன்றைக்கொண்டே திருப்தியடைகிறானோ அவனை எவன்தான் பூஜிக்கமாட்டான். 513எதைச் செய்கிறாயோ.

514இவர்களில் ஏகாந்திகள் சிறந்தவர்; அவாகள் தான் எம்பெருமானைத் தவிர மற்றொரு தெய்வத்தை ஒருக்காலும் ஒருபோதும நாடார்.

515 பாமர சாந்தமான ஞானவான்களாலே எந்தெந்த பூஜைகள் செய்யப்படுமோ அவைகளை பகவான் தாமே ஒன்றுவிடாமல தமது சிரஸால் அங்கீகரிக்கிறார்

516 ப்ரமம மயமான உபகரணங்கள் கொண்டு செய்யப்பட்ட ப்ரம்மமயமான ஹவிஸ்ஸை.

517 யான் இக்கன்னை அமிர்தத்துக்குக் காரணமான ஸூரிய பகவானுடைய ஜோதியில் ஹோமம செய்கிறேன்.

518 ரத்னத்தைக் கோரியவன தனிகனை எவ்வளவு ஆதரவுடன் துதிசெய்கிறானோ அப்படி ஸகல ஜகத்கர்த்தாவைத் துதிசெய்தானாகில் எவன்தான் ஸம்ஸார பந்தத்தினின்றும விடுபடான?

519 ஸமஸ்தமான தேவர்களாலும், ராஜாக்களாலும் மற்றுமுண்டான ஈசுவரர்களாலும் எபபொழுதும் துதிசெய்யப்பட்ட அத்யத்புதமான அவனசரிதத்தை.

520 யாதொருவனை ஸ்தோத்திரஞ்செய்தவன் தான்பிறரால் துதிசெய்யப்படுவனோ, அப்படியே வணங்கினவன் பிறரால்வணங்கப்படுவனே.

521 அனந்தராம ராகவன்யுத்தத்தில் இராவணனைக்கொன்று அதனால் சுக்ரீவனையும மஹாபலவானான அங்கதனையும் மிகவுமுகக்குமபடி செய்தார்.

522 பக்தியோடு நாமஸங்கீர்த்தனம் செய்வதும் அவன் குணங்களிலாழ்ங்காற்படுவதும ஓ மைத்ரேய! ஸகல பாபங்களுக்கும நாசகமாம்; எதுபோலெனனில் - அக்னியானது பற்பலசெடிகொடிகளுக்கும் நாசக மாமாப்போலே.

523 எழுஜன்மமாய் ஸம்பாதிக்கப்பட்ட பாபம் கொஞ்சமாகிலுமாம் அதிகமாகிலுமாம் விஷ்ணுவினது திவ்யாலயத்தில் ஓரடியிட்ட மாத்திரத்தில் நசித்துப்போகிறது.

524 யோகம் க்ஞானம், அப்படியே சாங்கியம்.

525 ஓ மஹாமுனியே வெளுப்பும் கறுப்புமான தன்னிரண்டு கேசங்களை எடுத்தார.

526 பாற்கடலில் உறைகின்ற ஸ்ரீமந்நாராயணனே அரவணையை விட்டு இம்மதுரைமாநகரத்தில் வந்து கண்ணனாய் அவதரித்திருக்கிறார். 527 சாதுக்களுக்கு அதிகஸந்தோஷகரனுய் துஷ்டர்களான சண்டமாருதத்திறகுச் சாநிகரனுகிய.

528 எனது பிறப்பும செய்கையும திவ்யமானவைகள்.

529 என்னையொழிய தரித்திருப்ப தொன்றில்லை.

530பாண்டவர்கள் கண்ணனையடுத்து, கண்ணனால் பலமுடைய ராய் அவனையே தமக்கிறைவனாக நமபியவாகள்; அன்னவர்களு க்கு அந்த க்ருஷ்ணனே பரம ஸாதனமாய் விளங்குகிறார்.

531என்னையே யடைவாய். 532எனக்குப் பிராணனன்றோ ,பாண்டவாகள் ?

533புராணங்கட்குப் பொருள்கூற வல்லரான பெரியோர்களால் "ஆதிபுருஷன்கோபாலனாய்வந்து அவதரித்து எதுவம்சத்தை உத்தரிக்கப்போகிறார்" என்று சொலலப்பட்டவன் இவனே.

534யோகம் கைப் புகுதுகையாலே பரிசுத்தரான ஸநந்தனாதி மாமுனிவாகளால் மூக்குநுனியில் நோக்கததைவைத்து அங்கிருந்து எப்போதும் சிந்திக்கப்படுமவனே.

535அற்புதமான மாயங்கள் செய்கின்ற மதுரை மன்னர்க்கு.

536பாரதபட்டணம் சூரிய னிலலாமலிருந்து சூரியனைப்பெற்றதுபோலவும், காற்றில்லாமலிருந்து காற்றை யடைந்ததுபோல வும, கண்ணனைப்பெற்று களிப்புற்றிருநதது.

537கடன் மென்மேலெனப் பெருகினாறபோல் என்னுள்ளத்தினின்றும் குறை நீங்கவில்லையே.

538கொலையுண்ணும்படி நேரிட்டபொழுது என்னுடைய பொறுமைக்கு ஆளாகாதவாகள் இருவர்; அவர்கள்தானாரென்னில்-எக்ருத்துக்கு இடுக்கண் செய்பவனும பாண்டவாகளை விரோதிப்பவனும்; அவாகளைக்கொன்றல்லது தீரேன்.

539இவ்விதமான கருமங்களைச்செய்தும் அந்தபகவான் பரஞ்சோதி ஸ்வரூபனான தம்முடைய பெருமையை நோக்கிச்சிறிதும் கொர்வம் அடைந்திலர்,

540காற்றைக் கையால் பிடிக்கமுடியாது. சந்திரனைப்பரிசிக்கவும் முடியாது;இப்படியே கேசவனை நம் பலத்தால் க்ரஹிக்கமுடியாது. 541ஹேபுருஷோத்தம ! நீர் எவனுக்கு ஸாரதியாய்விளங்குகிறீரோ அவனுக்கு ஒருக்காலும் தோல்விகிடையாது.

542காரணபுருஷரான விஷ்ணுவானவர் இப்பாண்டவர்களுக்குக் காவலாகாதபக்ஷத்தில் இவர்களனைவரையும் ஒரேபாணத்தால் முடிக்கவல்லேன்,

543வாசுதேவன் தோல்வியடையக் கண்டிலேன்; எதுபோலெனில்-என்மாதாவினது பாணிக்ரஹணத்தையும், ஸமுத்திரத்தி

னது சோஷணத்தையும் காணுதாப்போலே ஸத்யமான இவ் வாய்மொழிகொண்டு இந்நோய் தீரக்கடவது.

544கலக்க வொண்ணுக் கடல்போலும அசைக்க வொண்ணுத இமயமலைபோலும், அணுக வொண்ணுத அக்னிபோலும ஜெயிக்கவொண்ணுத நாராயணன்போலும.

545ஓ அர்ஜுன ஸகலபிராணிகளுக்கும் யான் அந்தராத்மா.

546ஹே அர்ஜுனு ? சராசராத்மகமான ஸகல ப்ரபஞ்சத்தையும் எனது சரீரத்தில் ஏகதேசத்தில் இருக்கப்பார், இன்னும் ஏதேனும ஆச்சரியம்பார்க்க வேணுமாகிலும் பார.

547சிறப்புடையதும், பெலனுடையதும், வைபவமுடையதுமானப் பிராணி ஏதேதுண்டோ.

548புவி, நீர், தீ, கால், ..இது அபரா ப்ரகிருதி; இதைக்காட்டிலும் வேருன ப்ரகிருதியை ... எவனுக்கு அவ்யக்தம் சரீரமோ...எவனுக்கு ஆத்மா சரீரமோ.

549பதினாறாயிரத்து ஒருநூறு கோபிகைகளுக்குத் தக்கப்படி தேவகீஸுதனுன பகவான். தாமும அத்தனை ரூபங்களை பரிக்ரஹித்தார்.

550நான் அனைவர்க்கும் பிரகாசிப்பவன் அசலன்...யான் வேதங்களாலும் தவத்தாலும் ஆகேன்.

551நூறும் ஆயிரமுமான என்னுருவங்களைப்பார்.

552ஜகத்துக்கெல்லாம் ஒருவனே ராஜாவாக விளங்குகிருன்..

553ஓ அர்ஜுன! திவ்யமான என்வைபவங்களுக்கு முடிவில்லை.

554ஸகலப் பிராணிகளையும் சரீரமாகக்கொண்டு அவைகளுக்கு அந்தராத்மாவான பரமபுருஷனிடத்தில் ஸகலபூதங்களும் வஸிக்கின்றன; அவனும் ஸகலப்பிராணிகளிலும் வஸிக்கிருன் ஆகையால் ஓமுநியே! அவனே 'வ' காரத்துக்குப் பொருளாகக்கடவது.

555அவனைத் தேடியறியவேண்டும்; விசாரித்தறியவேணடும்.

556க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ணவென்று யாவனொருவன் நம்மை நித்தியமாய் சிந்திக்கிருன்; அவனை நீரைப்பிளந்து வெளிப்படுகின்ற கமலத்தைப்போல் நரகத்தினின்றும் உத்தரிப்பிக்கின்ரேம்...என் பக்தனை நான் ஸ்மரித்து பரகதியை யடைவிப்பிக்கிறேன்.

557சூரியனுடைய தத் என்னும் ஒளியை, ... ப்ரம்மத்துக்கு ஓம், தத், ஸத் என்று பெயர்.

558தாய், தந்தை, உடன்பிறவி, உறைவிடம், புகலிடம்,தோழமை, கதி, எல்லாம் நாராயணன்.

559எப்பொழுதுஅபிராக்ஞனுய் பொன்னிறமேனியனைப் பார்க்கிருனே ...ஸ்வப்னத்திற்போல புத்திக்கு விஷயமாகின்ற பொன்னிறத்தனை.

560மலர்ந்த கருநெய்தலினிதழ்போன்ற நிறத்தனாய், நான்கு தோளு டையனாய் ஸ்ரீவத்ஸமென்னும் மறுவுடன்தோன்றிய அன்னவனை வசுதேவர் கண்டு தோத்திரஞ்செய்தார்.

561சக்கரத்தைக் கையிலெடுத்து கெம்பீரமாகக் கர்ஜித்துக் கொண்டு கோபாவிஷ்டனாய் விளங்குகிற இந்திரன்தம்பியைக்கண்டு இனி கௌரவர் கள் முடிந்தார்களென நினைத்து ஸகலப்பிராணிகளும் சொல்லிக்கொண் டன. 562கோபாவிஷ்டனான பாண்டவஸாரதிக்கு முகப்பட்டவன் ஒரு வனும் மீளான்.

563அம்ம! பூர்வத்தில் நீஎன்னை புத்திரன்வேண்டுமென இரந்தாயன்றோ? அதை நிறைவேற்றுவதற்காகவே இப்பொழுது நானுனக்குப் புத்திரனாய் பிறந்தேன். 564உன்வயிற்றினின்றும் யான்பிறந்தேன ... உங்களுக்கு யான்பந்துவானேன்.

565என்னிடத்தி லுங்களுக்கு ப்ரீதியுண்டாய் உங்களுக்கு யான் கொண் டாடத்தக்கவனா யிருந்தேனேயாகில், அப்பொழுது யானுங்களை மதித்திரு க்கிறபடி நீங்களும் என்னை மதித்திருக்கவேண்டும்.

566இப்பொழுது இவ்வாயர்பாடியெல்லாம் மழையால் காக்கத்தக்கதா யிருக்கிறது: ஆகையா லிப்பொழுது யான் தைரியமாய் இதற்குப்பெரிய தோர் குடைபிடித்தது போல இம்மலையை எடுத்துத் தாங்குகிறேன்.

567சத்துருக்களிடத்தில் நானாவிதமான அஸ்திரங்களைப் பிரயோகிப்ப தானது, மானிடரைபபோல் விளையாடுகின்ற அநங்கஜனகநாதனுடைய ஒரு வித விளையாட்டு 568ஹேவீர ? எவரெவர் செல்லுகின்றாகளோ அவர் களும், இன்னமிங்கே நிற்பவரும், யாவரும் செல்லட்டும் ; அஸஹாயனாய் யாதொருவனே இப்பொழுது இந்தபீஷ்மரையும் துரோணரையும் அவ ரினத்துடன்சேர்த்து இப்போர்க்களத்தில் வீழ்த்துகிறேன்பார்.

569ஹே ஸர்வாத்மந் ? சதுர்புஜாகாரமான இந்ததிருமேனியை மறைத் துக் கொள்ளவேண்டும். 570ஹேப்ரும்மரிஷியே ? எதுகுலத்தில் தோன் றிய விதுதான் எம்பெருமானுடைய அம்சாவதாரம்.

571மௌனமாய் ஒருவரையும் கணிசியாமால் விளங்குகிறான்.

572இவன் தன்னைத் தானே காட்டானாகில் இவனைக்காண்பதற்கு யாரா ல்முடியும். 573வாஸுதேவனை ஆராதிக்காமல் எவன்மோக்ஷத்தையடைய மாட்டுவன்? 574அவ்வசுரர்களை மாயையைக்கொண்டு அநேகப்பிரகா ரங்களாலே மோஹிப்பிக்க, அதனால் அவர்களில் ஒருவனாகிலும் வேத மார்க்கத்தை விரும்பாமல் விரோதிகளானார்கள்; ஆனபின்பு சாதுமார்க் கத்தை அழிக்கத்தோன்றிய அவர்கள் தேவர்களால் ஜயிக்கப்பட்டார்கள்.

575ஸன்மார்க்கத்தைப் பகைக்கின்ற அக்கொடிய நராதமர்களை யான் ஸம்ஸாரங்களில் தள்ளுகிறேன்.

576அனந்தரம் திகம்பரனையும், மொட்டையனையும்; மேலும் சிவந்த ஆடையுடுத்து கண்வட்டத்தில் அகப்பட்டவர்களைத்தனது மாயையாலமய க்கவல்லவன். 577மயில்தோகையைக் கையில தரித்த.

578பகைவனை வெல்லுகின்ற ஓ அர்ஜுனா ! இத்தருமத்தில் சிரத்தை பண்ணாத புருஷாதமர்கள் என்னையடையாமல் திரும்பி எமனுள்ள ஸம்ஸார மார்க்கத்தில் விழுகிறார்கள். 579ஹே பார்த்த! மஹாத்மாக்களோ என்னை (அடைகினறார்கள்,) 580தருமத்தினின்றும் நீங்காததும் அழிவற்றதுமா ன விதை எவர்களானல்.

581அப்படிப்பட்ட புத்தியோகத்தைத் தருகிறேன். 582மதுசூதனனைச் சிந்தித்தமாத்திரத்தில் அவர் இவன் கோருத அப்படிப்பட்ட புருஷார்த்த தத்தையும் தருகிறார். 583அவன் அடிகொதித்திருக்கிலுமாம், ஆறியிருக் கிலுமாம், பகைவரிடத்தினினறும வந்து சரணஅடைந்தானன்றே.

584கோவிந்தனை வஸ்திரத்தைப்பிடித்திழுத்து நம் வீட்டேறவருவாயென் பாள். 585ஒரோதடவை நம்மைச்சரணடைந்தவனுக்கு.

586இந்திரன் காளைவடிவமெடுக்க அவன்மீது ககுஸ்தராஜன் கடுஞ்சினம் கொண்டு சராசரநாதனான அச்சுத பகவானுடைய தேஜஸ்ஸால் அதிக திட முற்றவனய் தேவாசுரயுத்தத்தில் அசுரர்களனைவரையும முடித்தான்.

587கைகூப்புதலென்பது உடனே தேவனை வழிப்படுத்தவல்லதோ ரடையாளம். 588சூரியனிடத்திலிருந்து உலகமெங்கும் பிரகாசிக்கச் செய்வதும், சந்திரனிடததிலுள்ளதும் அக்கினியிடத்திலுள்ளதுமான அந்த தேஜஸ்ஸு எனதென்றறிக.

589அக்கினியை முகமாக உடைய அத்தேவர்களுக்குள் ஹோமத்திரவி யத்தைப் புசிப்பவன் பரமேசுவரன். மந்திரத்தால் பரிசுத்தமான நெய்முத லிய ஹோமத்திரவியததைக்கொண்டு பிரம்மாண்டமான ஸகலலோகங்களு க்கும் எப்போதும் திருப்தியுண்டாகச்செய்கிறார்.

590பயததைத் தருமவனும் பயத்தைப்போக்கடிப்பவனும் கிருஷ்ணன்.

591அணுவுக் கணுவானவன். 592அவன் லீலா விபூதி முழுதும் வியா பித்து, பத்து அங்குலமாக நிற்கிறான்... மஹத்துக்கு மஹத்தானவன்.

593ஒருவர புத்தியாலே இவ்வளவென்று மதிக்க முடியாமல் ஒருவருக் கடங்காமல் சுதந்திரனய் யாதொரு தேச விசேஷத்தில் யதேச்சமாய் விஹ ரிக்கிறானே. 594பகவானுக்கிங்ஙனமல்ல, எப்பொழுதும ஆவிர்ப்பவித திருகையாலே. 595ஹே நாத ? என்மடங்கு ஐசுவரியமும ஸஹஜமாய் இருக்கபபெற்று தனக்கு மேற்பட்ட ஓ ரதிசயமின்றிக்கே விளங்குகிற பரவஸ்துவை நானென்னவென்று துதிக்கப்போகிறேன்.

596புராணங்களுடன்கூடிய வேதங்களில் நீர ஸாங்கோபாங்கமாய் கீர் த்தனம செய்யப்படுகிறீர் . ஓ அர்ஜுனா ? புண்ணியமான வேதத்திலும், இராமாயணததிலும், பாரதத்திலும், முதல்துடங்கி கடைசி பரியந்தம் எங் கும் விஷ்ணுவானவர் [illegible] பண்ணப்படுகிறார்.., சொற்களுக்குப் பொ

ருளை. 597அப கல்மஷரான ஸனந்தனாதி மஹரிஷிகளை மிகவும் பரிசுத் தாகளாகச்செய்தான

598யோகத்தினின்றும் நழுவியவன் பரிசுத்தமான ஸ்ரீமான்கள் க்ரஹத் திம்பிறக்கிறான 599அவ்விடத்தில முன்தேகத்திலுண்டான புத்தியோ கத்தையேயடைகிறான. 600ஐய? நன்மைசெய்தவன் ஒருவனும் தாக்கதி யடைகிறதில்லை 601தானிருக்குங் கரையை பகவான் சேர்பபிக்கிறார்.

602அனந்தரம் பக்ஷிராஜன் விரைவில ஓடிவந்து தம்மிறைவன பதங் களைச் சேர்ப்பிக்கிறார். 603தீனஸ்வரம் செவிப்படலாகாதென்று அரசர் விறபிடித்திருபபது.

604இஜ்ஜக முழுதும் சாம்பலாகும்படி ஜ்ஞாத்தனன் மனிதனாலே சிந் திககவலலன்; அவனிடத்திலோ இதெலலாம ஒன்று கூடினாலும சிறிதும் செய்யமாட்டா. 605ஒருவராலும் ஜயிக்கமுடியாத கண்ணனை.

606எநதெந்த பக்தன் எந்தெந்த சரீரத்தைச்சிரத்தையோடருச்சிக்க விரு ம்புகிறானோ. 607அதுதேவர் வழியே நமமாலளிககபபட்ட தனது இஷ் டத்தைபபெறுகிறான. 608என்னையு மடக்கவல்லவன் விஷ்ணு.

609ஸ்வயம பிரபுவான இந்த மகா புருஷன் ஸத்வகுணத்துக்கு பிரவர்த் தகா. 610கிருஷ்ணன் ஸத்தியததில நிலை நின்றவா; ஸச்சியம் இவரிடத் தில் நிலைபெறறது, ஸதத்தையும் ஸத்தையும் கோவிந்தனே; ஆகையால் ஸாதுக்களால ஸத்தியனென மதிக்கப்பட்டார்.

611அவர்களுள் ஞானியானவன் நித்தியமாய் நம்மையே நாடி நம்மிட த்தில ஏக பக்தியாயிருக்கையாலே சிறந்தவன்; இவர்கள் யாவரும் உதா ரர்கள். 612என்னையே உத்தமகெதி என்றடைந்த ஆத்மா எனக்கு ரொம்பவும் தகுந்தவன்.

613பரீதியோடு நம்மை பஜிப்பவருக்கு அப்படிப்பட்ட புத்தியோகத் தைத் தருகிறேன். 614விஸ்தாரமான போகங்களை அனுபவித்து இறுதி யில நமதருளால நம்மையே ஸ்மரித்திருந்து பிறகு நமதுலகத்தில வந்து வஸிக்கபபெறுவாய். 615அவர்கள் ஆச்சிராதிமார்க்கத்தை யடையத்தக்க வர்களாகின்றனர்.

616அர்ச்சிஸ்ஸைக்கடந்தால் தினாபிமானிதேவதை. 617தினாபிமானி யினின்றும சுக்ல பக்ஷாபிமானி 618சுகலபக்ஷாபிமானி யிடத்தினின்று ஷண்மாஸாத்மகமான உத்தராயணாபிமானியை யடைகிறான்.

619மாஸங்களினின்றும ஸம்வத்ஸரத்தை. ஸம்வத்ஸரந்தான் இந்த ஆ தித்தியன். 620ஸம்வத்ஸரத்தினின்றும் சூரியனை 621ஸம்வத்ஸராபி மானியிடத்தினின்றும் வாயுவை அடைகிறான். எதனாலெனில் முதலில் பொதுவாகச்சொல்லி பிறகு சிறபபித்துச்சொல்லுகையாலே.

622ஆதித்தியனிடத்தினின்றும் சந்திரனை ; சந்திரனிடத்திலிருந்து மின் னலுக்கபிமானியை , அவன் வருணலோகத்தை.

623அவன் இந்திரலோகத்தை ; அவன் பிரஜாபதிலோகத்தை.

624அந்தபுருஷன்தான் அமானவர்; அவர்தான் இவர்களை ப்ரம்மத்தோடு சேர்ப்பிக்கிறார்.

625அவனை ஐநூறு அப்ஸரஸ்திரீகளும், மாலையும்கையுமான மற்றும அனேகஸ்திரீகளும், சிலபெண்டுகளும், எதிர்கொண்டுவருகின்றனர்; அவனை ப்ரம்மாலங்காரத்தால் அலங்கரிக்கின்றனர்.

626அவன் அபார தேஜஸ்ஸானபரியங்கத்தைக் கிட்டுகிறான்; பெரிய பிராட்டியாரும் மற்றும் தேவிமார்களும் புடைசூழ அதில் பரமபுருஷன் வீற்றிருக்கிறார்; அந்தபரியங்கத்தின்மீது கீழ்ச்சொன்ன முக்தபுருஷன் தன்னடியிட்டுஏறுகிறான் அவனை பரப்ரம்மமாய் பரமபுருஷன் நீயாரென்கிறார்...பிரம்மத்தினிடத்தில எந்த சைதந்யமோ, எந்தவிசேஷமோ அந்த சைதந்யத்தையும், அந்தவிசேஷத்தையும் அடைகின்றான்.

627அப்பொழுது இராமபிரான் தாமசெய்ய வேண்டுவதைச் செய்தவர் மனதில கவலைதீர்ந்து களித்திருந்தார்; எல்லே !

628ஸர்வஜ்ஞமான பரப்ரம்மத்தோடுகூடி அவன் சகல அபீஷ்டங்களையும் அனுபவிக்கிறான். 629உத்தமமான லோகங்களில் 630அவன் பக்தியைச்சிந்தித்து. 631கஜேந்திரனுடைய சத்தத்தைக் கேட்டுசக்கரமும கதையுமாய் அம்மடுவில வந்து ஸன்னிதிபண்ணினா

632முதலையால் பிடியுண்ட கஜேந்திரனையும் அம்முதலையையும் நீராழியினின்று அதிவேகமாய் அதிகபலசாலியான அம்மதுசூதனன் கரையிலெடுத்தார்.

633புண்டரீகாக்ஷனை மதுசூதனன், சரணாகத வத்ஸலனாகையாலே கஜேந்திராழ்வானிடததில் பிரீதியுக்தராய் அவனைப்பார்த்து மதுரமாய் ஸம்பாஷித்தருளினா.

634ஓ அர்ச்சுந ? மதுசூதனன் இவ்வாறுரைத்துத் தம்திருக்கையால் பரிசித்தார். 635ஓ அர்ச்சுந ? கஜேந்திரமோக்ஷத்தைக்கேட்டாலும், நினைத்தாலும், சொன்னாலும் உடனே பாவத்தினின்றும் விடுபடுகிறான்

636கரையில்வந்த முதலையை மதுசூதனன் சக்கரத்தால் பிளந்துவிட்டார். 637எவர்கள் என்னையும் உன்னையுமஇம்மடுவையும் நினைக்கிறார்களோ அவர்களுக்கு துஸ்வப்நம் ஒழிந்துபோகும்.

638சரணாகதனான கஜேந்திராழ்வானை பிரகிருதி பந்தத்தினின்றும மீள்வித்தார். 639அவன்தான தேவலர் சாபத்தால் முதலையாய்ப்பிறந்த "ஹூஹூ" என்னும் கந்தருவனாகையாலே ஸ்ரீகிருஷ்ணனால் சொல்லப்பட்டவுடன் சுவர்க்கத்தை அடைந்தனன். 640பிரீதியுடன் கூடிய அப்புண்டரீகாக்ஷன் சரணாகதனிடத்தில் வாத்ஸல்லியமுடையவன்.

641அநந்தரம் திவ்யமான சரீரமெடுத்து அந்த கஜேந்திராழ்வான் பரமபதமேற வெழுந்தருளினார்.

642மஹத்தான பயத்தில் மூழ்கினோரை ஸ்ரீஜநார்த்தனன் எப்போதும கைவிடாது காப்பாற்றுகின்றார்.

643கஜேந்திர மோக்ஷத்தைக்கண்டு இந்திராதிகளான ஸகல தேவர்களும் பிரமனை முன்னிட்டு தேவர்கள் அப்பொழுது கைகூப்பிக்கொண்டு ஸர்வ வியாபகனாய் மஹாத்மாவான ஸ்ரீமந்நாராயணனைத் தண்டனிட்டார்கள்.

644இனிமேல் என்னிடத்தில் வஸிக்கப்போகிறாய்; ஸந்தேஹமில்லை. 645எனது ராஜ்யம், சுகம், ஜீவிதம எல்லாம உம்மைச்சேர்ந்தது. 646உனக்கென்று வடிவில்லை,..பக்தாளுக்கு.

647ஜநமமெடுத்ததற்கு அது ஒன்றுதான் ஸபலமானசெயல்; எது; எது கோவிந்தனைக் குறித்துச்செய்யப்பட்டதோ' அது. விஷ்ணுவின திருநாமத்தைச சொன்னபோதே மயிர்கூச்செறியும படியானது எதுவோ அதுவே ஸகல ஜந்துக்களிலும்நற்பிறவி யுற்றது. இப்பொழுது நான் என் பிறவிபபன் பெறறது.

648பகைக்கின்ற அக்கொடியரை யான.

649வர்ணாச்ரமாசாரங்களில் நிரதராய், சாஸ்த்திரத்தில் நிஷ்டையுடையரான ஸத்துக்கள, ஓபூமியே; உன்னைத்தரிக்கப் போகின்றனர், அப்பொழுது பாரம் அவர்மீது நிறகும.

650பார்த்த? நான் செய்யவேண்டுவதொனறுமில்லை.

651ஏகதபுருஷன் இவர்கள் உரங்கும்பொழுதும் இவர்களுக்கிஷ்டத்தை யளிப்பதற்க் காகத்தான் விழித்திருக்கிறானே.

652மஹாத்மவை ஆதாரமாயடைந்தவன் மஹத்தான கெடுதியை அடைநதிருக்க போதிலும அழிவுறுகிறதில்லை.

653இவ்வுலக வாழ்க்கை அநித்தியமும் அசுகமுமென்பதாக நினைத்து என்னைப்பணிநதிரு.

654ஸகலப் பிராணங்களையும் பரமாத்மாவான தன்னிடத்தில் பிரணமம பண்ணுவிக்கிறானதுபறறி ப்ரணவமென்கிறது.

655பரமார்த்தமாய் ஸகல ஜகத்துக்கும் உற்பத்தி ஸ்தானமும லயஸ்ததானமும் ஸர்வரக்ஷகனுமான கோவிநதனைச் சரணடைநதபின் வருந்துவதில்லை.

656உன்னைநீயே அறிவாய். 657பிரமமமென்னும் விருக்ஷத்தை அடுததால் ஸம்சயமில்லாமல பக்குவமானபலம விழுகிறது.

658ஓ யுதிஷ்டிர! அவர்களெல்லாரும் பரிசுத்தராவதற்காக யான் நிதநியமாய் இரண்டுஸந்தியிலும் கருமத்தை அநுட்டிக்கிறேன்; அந்தவிபதம எனக்கு ஒருநாளும்கைவிடத்தகாதது.

659ஸாவதானமில்லாமல் கருமஞ்செய்பவருக்கு யாகத்தில்வழுவுதலுண்டாகுமாகில் அது விஷ்ணுவை ஸ்மரித்த மாத்திரத்தில் நீங்கி யாகம பரிபூர்ண மாகுமென்று சுருதி.

660ஓ அர்ச்சுந! ஸகலகருமங்களும ஞானத்தைக் கொண்டு முடிவுபெறுகின்றன.

661 எந்தப்பிராம்மணர்கள் கண்ணனை உள்ளபடியே அறிகின்றார்களோ ஓராஜந்! அவர்கள் எல்லாயக்ஞங்களையும செய்துமுடித்தனர்.

662இந்தஸாமத்தைப் பாடிக்கொண்டிருக்கிறான்.

663யாவரொருவர் இதோ விசாலமாய் நீண்டதிருக்கண்களோடேகூடி உனக்குச் சுற்றமாய் விளங்குகிறாரோ, இவர்தான் ஜநார்த்தனன்; ஓயுதிஷ்டிர! இவர் தான் முக்காலத்திலு முண்டான ஸகலபதார்த்தமும்

664யாவனொருவன் அளவிறந்த ரூபத்தோடு விசுவாகாரனாய்தன்னுடைய கர்ப்பத்தில் ஸகலலோகங்களையும் பரிக்கிறானோ.

ப்ரமாணார்த்த ஸங்கிரஹம்.

சம்பூர்ணம்,